1984
27 ஆக 1984
2764

Issued 7-7-1984

# தமிழ் நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES

## பணித்துறை வெளியீடு—OFFICIAL REPORT

திங்கட்கிழமை 1984 பிப்ரவரி 20- தொகுதி LVII எண். 2

**Monday 20th February 1984—Volume LVII No. 2**

சட்டமன்றப் பேரவைத் துறை, சென்னை-600009

Legislative Assembly Department, Fort St. George,
Madras-600009

விலை: ரூ. 3-50 காசுகள்]

[Price Rs. 3–50 paise

T. N. L. A. Debates

OFFICIAL REPORT

VOL: LVII NO: 2 and 3

FEB: 20 and 21 1984

C

D

V211, 31 N84

N84.57.2 & 3

136215

2759



1984, பிப்ரவரி 20, திங்கட்கிழமை

மாசி 8, ருத்ரோத்காரி-திருவள்ளுவர் ஆண்டு 2015

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்ட மன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9—00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"இணர்ஊழ்ந்தும் நாறா மலரணையர் கற்றது
உணர விரித்துரையா தார்."

தாம் கற்ற நூற் பொருளைப் பிறர் உணருமாறு விரித்துரைக்க இயலாதவர், கொத்தாக மலர்ந்து இருந்தபோதிலும் மணம் வீசாத மலரைப் போன்றவர்.

தமிழ்நாடு ஆவணக்காப்பக நூலகம்
136215
சென்னை-600 008.

## 1. வினாக்கள் விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

### திருப்புவனம் புதூரிலுள்ள ஊரணியை ஆக்கிரமிப்புச் செய்துள்ளதை அகற்றும் திட்டம்.

*81—வினா எண். 17064—திரு. க. பாரமலை; மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரைத் தொகுதி திடுப்புவனம் புதூரில் மாரியம்மன் கோவிலுக்குப் பின்புறம் உள்ள ஊரணியைத் தனி நபர்கள் ஆக்கிரமித்து விவசாயம் செய்து வருவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில் அந்த ஆக்கிரமிப்பை அகற்ற அரசு எடுத்திருக்கும் நடவடிக்கையின் விவரம் யாது?

மாண்புமிகு திரு. எஸ். டி சோமசுந்தரம் : (அ) ஆம். (ஆ) இந்நிலம் திரு. பி. காயாம்புத்தேவர் என்பவர் ஒருவரின் அனுபவத்தில் முப்பது ஆண்டுகளாக ருந்து வருகிறது. அந்த ஆக்கிரமிப்பை அகற்ற வேண்டும் என்று வருவாய்த் துறை அதிகாரிகள் நடவடிக்கை எடுத்தார்கள். ஆனால், அவர் மாவட்ட நீதி மன்றத்திற்கு சென்று தடை உத்திரவு வாங்கியிருக்கிறார்கள்.

[1984 பிப்ரவரி 20

திரு. க. பாரமலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிற அந்த நிலம் இன்னொரு நிலம். என்னுடைய கிராமத்திலே அரசு எடுத்துக் கொள்ள வேண்டிய வகையில் 2 நிலங்கள் இருக்கின்றன. நான் மாரியம்மன் கோவிலுக்கு தெற்கு புறம் உள்ள நிலத்தைப் பற்றி கேட்டிருந்தேன். ஆனால் ஊரினுடைய கடைசிப் பகுதியில் இருக்கிற நிலத்தைப் பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். நான் பணிவோடு கேட்டுக் கொள்வதெல்லாம், மீண்டும் இது பற்றி விசாரித்து, மாரியம்மன் கோவிலுக்கு தென்புறம் உள்ள நிலம் சம்பந்தமாக தெரிவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ஏற்கனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 79-ஆம் ஆண்டு அந்த வழியாகச் செல்கிற போது, பொது மக்கள் அவரிடமே விண்ணப்பத்தைக் கொடுத்தார்கள், அவரும் அந்த இடத்தைப் பார்வையிட்டார்கள். சென்ற ஆண்டும் நம்முடைய ஆதிதிராவிட நலத்துறை அமைச்சர் அவர்கள், அதே இடத்தைப் பார்வையிட்டு ஸ்தலத்திலேயே அதிகாரிகளிடத்தில் அந்த ஆக்கிரமிப்பை வெளியேற்றச் சொல்லி உத்தரவிட்டு வந்தார்கள். ஆகவே, அது குறித்து மீண்டும் விசாரித்து, ஆக்கிரமிப்பை அகற்ற தக்க நடவடிக்கையை அரசு எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதை மீண்டும் கேள்வியாகக் கேட்டால் நான் விடையைச் சேகரித்துத் தர முயற்சி எடுக்கிறேன். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கேள்வியில் மாரியம்மன் கோவிலுக்கு பின்புறம் உள்ள நிலத்திலே ஆக்கிரமிப்பு என்று போட்டிருந்ததால், அதற்கான பதிலைக் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே, கிழக்கிலே, வடக்கிலே, தெற்கிலே என்று எல்லையை குறிப்பிட்டுக் கேட்டிருந்தால் கூட இந்தச் சங்கடம் ஏற்பட்டிருக்காது. அது பற்றி பாதகம் இல்லை அதிலே தனி நபர்கள் என்று சொல்வதைவிட நபர்களுடைய பெயர்களையே கூடக் குறிப்பிட்டுக் கேட்டு விடலாம். அப்படி நபர்களுடைய பெயர்களைச் சொல்லிக் கேட்டிருந்தாலும், அந்தச் சங்கடம் வந்திருக்காது என்பதையும் அவர்கள் கேட்டதற்குரிய நடவடிக்கை எடுக்கிறோம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க. பாரமலை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். நன்றி. மீண்டும் அதை கேள்வியாகக் கேட்கும்படி சொல்லியிருக்கிறார்கள். குறுகிய கால வினாவாக கேட்கிறேன். அதற்கு அனுமதிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்த நிலம் ஊருக்கு கிழக்கே இருக்கிறது நான் குறிப்பிட்ட இடம் மாரியம்மன் கோவிலுக்கு பின்புறம் உள்ள இடம். ஆகவே அதை நான் மீண்டும் கேள்வியாகக் கேட்கிறேன். பதில் வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.



1984 பிப்ரவரி 20]

திரு. எல். இளையபெருமாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிற போது, அரசாங்க நிலத்தை ஆக்கிரமிப்பிலிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தால் கோர்ட்டுக்குப் போகிறார்கள் என்று சொன்னார்கள். அப்படிக் கோர்ட்டுக்குப் போக வசதியுள்ளவர்கள் கோர்ட்டிக்குப் போய் ஸ்டே ஆர்டர் வாங்கி விடுகிறார்கள். ஆனால் ஆயிரக்கணக்கான ஆதிதிராவிட மக்கள், பின் தங்கிய மக்கள், பொருளாதாரத்தில் நலிந்த மக்கள் கோர்ட்டுக்குப் போக முடியாத நிலைமையில் இருக்கிற காரணத்தால், பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள்,

ஆகவே, தமிழ்நாடு முழுவதும் இருக்கின்ற அரசு நிலங்களிலே எந்தெந்த பகுதியில் அரசாங்கத்திற்காக நிச்சயமாக எடுக்கப் பெற வேண்டும் என்பதை நிச்சயம் செய்ய வேண்டும். இப்போது அரசாங்கத்தின் கணக்கில் 1898 ஆம் ஆண்டு கணக்கின் அடிப்படையில் தான் நிலங்களின் பிரிவு இருக்கிறது—இது அரசாங்க நிலம். இது பாரஸ்ட் நிலம். இது நீர் பிடிப்பு நிலம் என்று—ஆகவே, அரசாங்கத்திற்குத் தேவையான, இது எடுக்கப்படத்தான் வேண்டும் என்ற நிலைமையில் இருக்கும் நிலங்களையும், எடுக்காவிட்டாலும் பரவாயில்லை என்கிற வகையில் உள்ள நிலங்களையும்; பிரித்து வகை செய்வதோடு, 20 ஆண்டுகள், 30 ஆண்டுகள் அதை அனுபவித்து வரும் நிலமற்ற ஆதிதிராவிடர்களுக்கு, ஏழை எளியவர்களுக்கு அந்த நிலங்களை கொடுக்க வேண்டிய வகையிலும் முடிவு செய்தற்கு, ஒரு கமிஷனை ஏற்படுத்தி, அதற்கு ரவின்யூ பிரிவில் ஒரு ஐ. ஏ. எஸ். அதிகாரியைப் போட்டு, எதெது அரசாங்கத்திற்கு தேவை, எதெது தேவையற்றது, எதெது ஏழை எளியவர்களுக்கு கொடுக்க வேண்டியது என்று நிர்ணயம் செய்யும் வகையில் ஏற்பாடு செய்ய அரசு முன் வருமா? ஏனெனில் தஞ்சை, தென் ஆற்காடு போன்ற மாவட்டங்களில் இப்படி அரசாங்க நிலத்தை பன்னெடுங்காலமாக உபயோகித்துக் கொண்டும், அதைப் பட்டா செய்ய வழி இல்லாமல், நிறைய ஆதிதிராவிட மக்கள் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய வேதனையைப் போக்கும் வகையில் இப்படி ஒரு வழி செய்ய அரசு முயற்சி எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, அரசு நிலங்களை ஆக்கிரமித்து இருக்கிறார்கள் என்பதற்காக அதை அகற்றுவதற்காக அரசு நடவடிக்கை எடுப்பதில்லை. அப்படி எடுத்திருந்தால் எவ்வளவோ பேர்களை அகற்றியிருக்க முடியும். ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட இடம் அரசுக்கோ பொது மக்களுக்கோ அல்ல சமுதாயத்திற்கோ தேவைப்படுகிற நிலமாக இருந்தால், அந்த நிலத்திலிருந்து ஆக்கிரமிப்பை அகற்றுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கிறது. ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட நிலம் அரசுக்கோ அல்லது பொது மக்களுக்கோ தேவையில்லை என்றால் ஆக்கிரமிப்பை சரிசெய்து அவர்களுக்கே பட்டா கொடுத்து விடுகிறோம் குறிப்பாக

ஆக்கிரமிப்பு பணக்காரர்கள் நிலம் உள்ளவர்கள் செய்திருக்கிறார்கள் என்றால், அவர்களை அகற்றுவதற்கு அரசு நடவடிக்கை எடுத்து கொள்கிறது. ஆதிதிராவிடர்கள். பொருளாதாரத்தில் பின்தங்கியவர்கள் நிலங்களை ஆக்கிரமிப்புச் செய்திருந்தால் அதிலே அரசாங்கம் கவனமாகவும் அனுதாபத்துடனும் பார்க்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### 1982—83—ல் திரைப்படத் துறையின் மூலம் தமிழக அரசுக்குக் கிடைத்த வருவாய்

82—*வினா எண் 18555 திரு. சி. சிவப்பிரகாசம்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் திரைப்படத் துறையின் மூலம் 1982—83-ல் தமிழக அரசுக்கு கிடைக்கும் வருவாய் எவ்வளவு?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: ரூ. 35.98 கோடி.

திரு. சி. சிவப்பிரகாசம்: தலைவர் அவர்களே, திரைப்படத் துறையின் வருவாய் விவரத்தை அமைச்சர் அவர்கள் கூறினார்கள். ஒவ்வொரு மாவட்டத்திலேயும், குறிப்பாக சேலம் மாவட்டத்திலே எவ்வளவு வருவாய் கிடைத்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன். அந்த வருவாயைக் கொண்டு திரைப்படத் துறையை வளர்ப்பதற்கான முயற்சிகள் எடுக்கப் படுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்; தலைவர் அவர்களே, மாவட்ட வாரியாக எவ்வளவு வருவாய் என்ற கணக்கு இப்போது என்னிடத்திலே இல்லை. ஆனால் அந்த வருவாயைத் திரைப்படத்துறை வளர்ச்சிக்காக அரசு செலவு செய்வதில்லை. திரைப்படத் துறைத் தொழில் வியாபார நோக்கத்திலே செய்யக் கூடிய தொழில் ஆகும். வணிக நோக்கத்தோடு அந்தத் தொழிலை செய்யக் கூடியவர்கள் அதன் வளர்ச்சியில் ஈடுபட்டுக் கொள்வார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்,

திரு. ஜி. கே. சுப்பிரமணியன்: தலைவர் அவர்களே, இப்போது நகரப்புறங்களில் மாத்திரம் அல்லது கிராமப் புறங்களிலேயும் வீடியோ கேசட்டுகள் வைத்துக் கொண்டு அனுமதியில்லாமல் திரைப்படத் தியேட்டர்களில் கூட அவ்வளவு வரிசை கிடையாது. அந்த அளவிற்கு அதிகமாக வசூல் செய்து பால் உணர்வைத் தூண்டக்கூடிய நீலப் படங்களைக் காட்டிக் கொண்டிருக்கிறார்கள். அதனால் உரிமம் பெற்றத் திரைப்படக் காரர்கள், அரங்குக்காரர்கள் பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே அப்படிப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுமா?





மாண்புமிகு திரு. எஸ். டி சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, வீடியோக்கள் போடுவதால் அனுமதிப் பெற்ற திரைப்பட அரங்குகளுக்கு வருவாய் குறைகிறது. அனுமதி பெற்ற திரைப்பட அரங்குதாரர்களுக்கு வருவாய் குறைகிறபோது அரசுடைய வருவாய் பாதிக்கும். அதை அரசு கவனமாக எடுத்துக் கொண்டு வீடியோக்கள் போடுவதை தடுத்து நிறுத்தும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் சொன்னபடி அனுமதிக்கப்பட்ட திரைப்படங்கள் தணிக்கை செய்யப்பட்டு காட்டப்படுகிறது. தணிக்கை செய்தால்கூட அதிலே சில தவறுகள் வருகின்றன என்பதுதான் இந்த அரசினுடைய எண்ணம். தணிக்கையிலே அதிகமான சலுகைகள் கொடுக்கிறார்கள், அனுமதி இல்லாமல் போட்டால் எவ்வளவு மோசமாக இருக்கக்கூடிய நிலைமை இருக்கிறது என்பதை அரசு ஏற்றுக் கொள்கிறது. அந்த வீடியோக்களை அரசு அனுமதிக்காது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. உ. சுப்பிரமணியன்: தலைவர் அவர்களே, திரைப்படத் துறையில் வரிவிதிப்பு முறையில் மாற்றம் செய்த காரணத்தினால் கூடுதலாக வருவாய் வந்திருக்கிறதா அல்லது குறைவாக வந்திருக்கிறதா? குறைந்திருந்தால் அதை நிவர்த்தி செய்வதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: இந்த வரி விதிப்பினால் அரசுக்கு அதிகமாக வருவாய் வந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். 1982—83 ஆம் ஆண்டு 4.85 கோடி ரூபாய் உபரியாக வந்திருக்கிறது. அப்படி உபரியாக வந்திருப்பதில் நடைமுறையில் 4.6 கோடி ரூபாய் இணக்கவரி அதிகமாக உள்ள இடங்களில் அதிகமாக வருவாய் வந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் கே. சமரசம்: தலைவர் அவர்களே, வரிச் சீர்திருத்தம் என்ற முறையில் கம்பவுண்டிங் டாக்ஸ் மூலம் சினிமாக் கொட்டகைகள், தியேட்டர்கள் மூலமாக அதிகமான வருவாய் வந்திருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிக்கிறார்கள். இந்த வரி விதிப்பு முறையை கிராமப் புறங்களில் விஸ்தரித் ஊராட்சிகள், ஒன்றியங்கள், திருக்கிறார்களா? அப்படி விஸ்தரிப்பதற்கு ஏதாவது எண்ணம் அரசுக்கு உண்டா?

(முற்பகல் 9-10)

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு இணக்க முறை வரி செலக்ஷன் கிரேடு தேர்வு நிலை நகராட்சிகளுக்கும், முதல் கிரேடு, இரண்டாவது கிரேடு தேர்வு நிலை பஞ்சாயத்துகளுக்கும் இருக்கிறது. அதே போல் ஊராட்சிகளுக்கும் இருக்கிறது

என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்- மாநகராட்சிகளுக்கும், ஸ்பெசல் கிரேடுகளுக்கும் இன்னும் கொண்டு வரப்படவில்லை. மாநகராட்சிகளையும் ஸ்பெசல் கிரேடுகளையும் தவிர மற்ற எல்லா இடங்களிலும் இன்றைக்கு இணக்க முறை இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சி. சிவப்பிரகாசம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சினிமா தியேட்டர் உரிமையாளர்கள் உரிமங்களைப் புதுப்பிக்கின்ற போது அவர்களுக்கு பல சிக்கல்கள் ஏற்படுகின்றன. எலக்ட்டிரிகல் சர்ட்டிபிகேட், பி. டபுள்யூ. டி. சர்ட்டிபிகேட் என்று ஒவ்வொரு சர்ட்டிபிகேட் வாங்குவதற்கும் அவர்களுக்கு சிரமம் ஏற்பட்டு அதனால் உரிமங்கள் பெறுவதற்கு காலதாமதம் ஏற்படுகிறது. இந்தக் காலதாமதத்தை போக்கும் வகையில் ஒவ்வொரு மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திலும் இதற்கு என்று தனியாக ஒரு துறையை ஏற்படுத்தி அமுல் செய்ய அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்களுடைய உரிமங்களை புதுப்பிப்பதில் சங்கடம் எதுவும் ஏற்படவில்லை. அவர்கள் எப்படி எப்படி அந்த சினிமா தியேட்டர்களை வைக்க வேண்டுமோ அந்த விதிமுறைகளின்படி முறையாக வைத்தால் உரிமங்களைப் புதுப்பிப்பதில் எந்தவிதமான சங்கடமும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### இனாம் ஒழிப்புச் சட்டத்தை திருநெல்வேலி மாவட்டத்தில் அமல்படுத்தும் திட்டம்.

*83—வினா எண். 20622—திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்:

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இனாம் ஒழிப்புச் சட்டம் திருநெல்வேலி மாவட்டத்தில் சில கிராமங்களில் அமுலாகவில்லை என்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், இது பற்றிய விபரம் என்ன?

(இ) அமுலாக்க அரசு என்ன நடவடிக்கை எடுக்க உத்தேசித்துள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்; (அ—இ) ஆம், திருநெல்வேலி மாவட்டம் அம்பாசமுத்திரம் வட்டத்தில் இனாம் ஒழிப்புச் சட்டத்தின் கீழ் கட்டுக்குத்தகை பொட்டல் புதூர் மற்றும் இனாம் பொட்டல் புதூர் என்ற 2 இனாம் கிராமங்களில் மட்டும் நிலவரித் திட்டம் அமுலாக்கப்படவில்லை. மற்ற இடங்களில் எல்லாம் அமுலாக்கப்பட்டிருக்கிறது.



திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குச் சரியான தகவல் வந்து சேரவில்லை என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன். நான் கேட்டது இனாம் சிவந்திபுரம், இனாம் கோடாரம் குளம், திருவாடுதுறை ஆதினத்திற்கு சொந்தமானது, 1965-லே இந்த இனாம் ஒழிப்புச்சட்டம் அறிவிக்கபட்டிருக்கிறது. 19 ஆண்டு காலம் ஆகியிருக்கிறது. இதுவரை இனாம் ஒழிப்பு அமுலாக்கப்படவில்லை அரசினுடைய கவனத்திற்கு பல தடவை நானே கொண்டு வந்து இருக்கிறேன். சென்ற தடவை கூட அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வந்து இருக்கிறேன். அரசாங்கம் எவ்வளவு சீக்கிரம் தலையிட முடியுமோ அவ்வளவு சீக்கிரம் தலையிட்டு அமுல் செய்யப்படும் என்று 2 ஆண்டுகளுக்கு முன்பு சொல்லியிருக்கிறார்கள். ஆகவே அரசு அதில் தலையிட்டு அவைகளை—சிவந்திபுரத்தையும் கோடாரங் குளத்தையும் இனாம் கிராமங்கள் என்று அறிவித்து இதை அமுலுக்கு கொண்டு வருவதற்கு அரசு ஏதாவது நடவடிக்கை எடுக்க முன்வருமா? இதே போன்று பல கிராமங்கள் இருக்கின்றன. அவைகளையும் அமுலுக்குக் கொண்டு வர அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருவாய்த்துறை அதிகாரிகள் இதிலே கவனமாகப் பார்த்து எனக்கு தகவல் அனுப்பியிருக்கிறார்கள். தகவலில் தவறுகள் இருந்தால் அவைகளைச் சொன்னால் நான் வருவாய்த் துறை அதிகாரிகளுக்கு மீண்டும் அனுப்பி சரியான தகவல்களை வாங்கித் தருவதற்கு தயாராக இருக்கிறேன் அதே போல் எந்த எந்த கிராமங்களில் அதை அமுலுக்குக் கொண்டு வரவேண்டும் என்று நீங்கள் அவைகளைப் பற்றிச் சொன்னால் அதை நான் தனியாக வருவாய்த் துறை அதிகாரிகளுக்கு அனுப்பி அது பற்றியும் நடவடிக்கை எடுப்பதற்கு தயாராக இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்பாசமுத்திரம் தாலுக்கா இனாம் சிவந்திபுரம், இனாம் கோடாரம் குளம், திருவாடுதுறை, ஆதினத்திற்குச் சொந்தமானது. இனாம்ஒழிப்பு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று காங்கிரஸ் ஆட்சிக்காலத்திலும் சொல்லப்பட்டது. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி காலத்திலும் சொல்லப்பட்டது. அப்பொழுதும் அமுல் நடத்தப்படவில்லை. அதற்குப் பிறகு நான் சட்டமன்ற உறுப்பினராக வந்த பிறகு 1977 சட்டமன்றத்திலும் சரி, 1980-ம் வருட சட்டமன்றத்திலும் சரி, தொடர்ந்து சொல்லிக் கொண்டு வருகிறேன். ஆனால், அரசாங்க அதிகாரிகள் சுப்ரீம் கோர்ட்டிலே இருக்கிற தாவாவில், இதில் தலையிட முடியாது என்று சொல்கிறார்கள். அப்படியில்லாமல், இந்த இரண்டு கிராமங்களையும் உடனடியாக இனாம் ஒழிப்பின் கீழ் கொண்டு வர அரசாங்கம் துரிதமாக உத்தரவிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, அரசு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்கும்.

திரு. என். வரதராஜன்: பேரவைத் தலைவர் அவர்களே, நீண்ட காலத்திற்கு முன்னால் இனாம் ஒழிப்புச் சட்டம் அமுலுக்கு வந்தது. ஆனால் இன்னும் தமிழ் நாட்டினுடைய பல பகுதிகளிலே இனாம் ஒழிந்தது என்ற பெயர் இருக்கிறதே தவிர, இனாம்தாரர்களிடத்திலே, நிலச்சுவான்தாரர்களிடத்திலே நிலம் குவிந்திருக்கிறது என்ற உணர்வு விவசாயிகளிடத்திலேயும் மக்களிடத்திலேயும் இருக்கிறது. எனவே, இதைப் பற்றி அரசு மீண்டும் தீவிரமாகக் கவனித்து, இனாம் பகுதியிலே இருக்கிற விவசாயிகளுக்கு உதவி செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, இனாம் நிலங்களை விவசாயம் செய்கிற அந்த விவசாயிகளுக்கு உதவி செய்வதற்கு அரசு என்றைக்கும் தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதை மீண்டும் பரிசீலனை செய்வதற்கு அரசு தயாராக இருக்கிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன். அதற்கு முன்னால் மாண்புமிகு உறுப்பினர்கள் இனாம் ஒழிப்புச் சட்டத்தின்கீழ் எடுக்கப்பட வேண்டிய இப்படிப்பட்ட நிலங்கள் எந்த, எந்த கிராமத்திலே இருக்கின்றன என்பதைப் பற்றிய விவரங்களைக் கொடுத்தால், அவற்றை வைத்துக் கொண்டு நடவடிக்கை எடுப்பதற்கு உதவியாக இருக்கும்.

திரு. சோ. அழகர்சாமி: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த இனாம் ஒழிப்புச் சட்டம் சம்பந்தமாக பார்ட் இனாம், ஹோல் இனாம் என்று சொல்லக்கூடிய முறையிலே சில இடங்களிலே, இனாம் நிலங்களிலே சாகுபடி செய்யக்கூடிய விவசாயிகள் நீண்டகாலமாக, சாகுபடி செய்து வந்தாலும்கூட ரெவின்யூ அதிகாரிகள் சரியாகப் பதியாததன் காரணமாக, நிலச்சுவான்தாரர்களோ, இனாம்தாரர்களோ, இவர்தான் சாகுபடி செய்கிறார் என்று காட்டி, விவசாயிகளுக்குப் பலன் கிடைக்காமல் செய்கிறார்கள். உதாரணமாக, திருநெல்வேலி மாவட்டத்தில் விளார்குளம் கிராமத்தில் இம்முறையினால் நூற்றுக்கணக்கான விவசாயிகள் பட்டாவே பெறமுடியாமல் இருக்கிறார்களே, ஆகவே, ரெவின்யூ அதிகாரிகள் சரியாகப் பதியாததால், இனாம் சட்டத்தைச் சரியாக அமுல் நடத்தவில்லையென்பதை உணர்ந்து, அதற்கு வேண்டிய தீவிர நடவடிக்கைகளை அரசு எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, தீவிரமாக அரசு நடவடிக்கை எடுக்கும்.



## தமிழகத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள வறட்சி நிவாரணப் பணிகள்

*84—(* வினா எண். 21380)—திரு. எம். எஸ். மாணிக்கம்: திரு. மா. சின்னராசு: திரு. செ. செம்மலை: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) இப்பொழுது மழை பெய்துள்ளதால் வறட்சி நிவாரணப் பணிகள் நிறுத்தப்பட்டு விட்டனவா?*

*(ஆ) மழை இல்லாத பகுதிகள் எதிலாவது தொடர்ந்து வறட்சிப் பணிகள் நடைபெறுகின்றனவா?*

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் பரவலாகப் பல இடங்களில் மழை பெய்துள்ளது; பரவலாக மழை பெய்துள்ளதால், வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட இடங்களுக்கு அரசு தக்க நடவடிக்கை எடுத்து, மக்களுக்கு உதவி செய்து வருகிறது. ஆனால் பரவலாக மழை பெய்யாத எந்த மாவட்டத்திலாவது அல்லது எந்த வட்டத்திலாவது அல்லது எந்த கிராமத்திலாவது குடி நீர்ப் பஞ்சம் ஏற்பட்டாலும் அதையும் அரசு கவனித்துப் பஞ்சத்தைப் போக்க ஏற்பாடு செய்யும்.

திரு. எம். எஸ். மாணிக்கம்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி கடந்த ஆண்டு அக்டோபர் மாதம் போடப்பட்ட கேள்வியாகும். எனவே, அப்பொழுது பருவ மழைப் பொய்த்து விட்ட காரணத்தினால், திருநெல்வேலி, கன்னியாகுமரி போன்ற மாவட்டங்களிலே தொடர்ந்து நடந்த வறட்சி நிவாரணப் பணிகள் நிறுத்தப்பட்டுள்ளன. அப்படி, நிறுத்தப்படாமல் அங்கே ஆரம்பிக்கப்பட்ட வறட்சி நிவாரணப் பணிகள் தொடர்ந்து நடைபெற அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி அப்பொழுது போடப்பட்டிருந்தாலும் தமிழக மாவட்டங்களில் பருவகாலம் மாறிக்கொண்டு வருவதைப் பார்த்து, பருவகால மாற்றத்திற்கு ஏற்றவாறு அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதையும் நான் முதலிலே சொல்லியபடி மழை அதிகமாகப் பெய்து மக்கள் அவதிப்படும்போது, வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வெள்ளப் பாதுகாப்பும், வறட்சி ஏற்படும் இடங்களில் வறட்சியிலிருந்து பாதுகாப்பும் அளிப்பது என்ற வகையில் அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

திரு. மா. சின்னராசு: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி இப்பொழுதும் பொருத்தமுடையதாக இருக்கிறது, கோவை மாவட்டத்தில் பொள்ளாச்சி தெற்குப்பகுதியிலும், ஒத்தைக்கால் மண்டபம் பகுதியிலும், பல்லடத்தில் ஒரு பகுதியிலும் மிகக் கடுமையான குடிநீர் பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது

மாவட்ட வளர்ச்சி மன்றத்திலே இதுபற்றி மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக, அரசுக்குத் தீர்மானம் அனுப்பி வைத்திருக்கிறோம். ஆகவே, தொடர்ந்து அங்கு மழை பெய்யாத காரணத்தினால், அந்தப் பகுதிகளுக்குக் குடிநீர் வழங்க ஒரு சிறப்புத் திட்டத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வகுத்துத் தருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-20)

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவரவர்களே, மேற்குத் தொடர்ச்சி மலையில் பாலக்காட்டுக் கணவாய் வழியாக தென்மேற்குப் பருவக் காற்று மழை பெய்யும்பொழுது பாலக்காட்டுக் கணவாய் வழியாக உள்ள நிலங்களில் அதிக மழை பெய்து அவை நன்றாக, செம்மையாக இருந்த இடம்தான். ஆனால், மூன்றாண்டுகளாக மேற்குத் தொடர்ச்சி மலைச்சாரலில் இருந்து வரும் தென் மேற்குப் பருவக் காற்று மழை தமிழகத்தில் பொய்த்து விட்டிருக்கிறது. தொடர்ந்து இந்த ஆண்டும் தென் மேற்குப் பருவக் காற்று மழை தமிழகத்திற்குத் தேவையானதாக இல்லை என்பதால் அந்தப் பகுதி வறட்சியால் இன்றைக்குப் பாதிக்கப்பட்டிருக்கிறது என்பதைப் பற்றி மாவட்ட ஆட்சித் தலைவரின் அறிக்கை வந்திருக்கிறது. அதை இந்த அரசு பரிசீலித்து, வேண்டிய நிவாரணப் பணிகளை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மா. சின்னராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வறட்சி நிவாரணப் பணியில் சிலயிடங்களில் நில ஆர்ஜிதம் செய்வதற்கு நில உடைமையாளர்கள் சம்மதம் கொடுத்து, அந்த நிலம் நில ஆர்ஜிதத்திற்கு உள்ளாக்கப்பட்டும் கூட அதற்குக் கொடுக்கப்பட வேண்டிய விலை அந்த நில உடைமையாளர்களுக்குக் கொடுக்கப்படவில்லை. அப்படி ஓரிரு இடங்களில் குட்டைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அவைகளுக்கு உரிய விலையை உடனடியாகக் கொடுப்பதற்கு அரசு தகுந்த ஏற்பாடுகளைச் செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நிலம் எங்கெங்கே ஆர்ஜிதம் செய்யப்பட்டிருக்கிறதோ அங்கெல்லாம் அவர்களுக்கு உடனடியாகப் பணம் கொடுக்க வேண்டுமென்று அரசு உத்தரவு போட்டிருக்கிறது. அப்படி ஏதேனும் விடப்பட்டிருந்தால் அரசு கவனித்து உடனடியாக நடவடிக்கை எடுக்கும்.

திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வறட்சி, வெள்ளம் போன்ற இயற்கைச் சீற்றங்களினால் ஏற்படும் நிலைமைகளைச் சமாளிப்பதில் மாநில அரசின் பங்கைவிட மைய அரசின் பங்கு அதிகம் என்ற அடிப்படையில்



பார்க்கும்பொழுது, தற்பொழுது வழங்கப்பட்டு வருகின்ற மைய அரசின் உதவித் தொகை குறைவு என்பதை அரசு உணர்ந்திருக்கிறதா? அதுவும், அந்த உதவி காலாகாலத்தில் கிடைக்கவில்லை என்பதும் உண்மையா? அப்படியிருப்பின், இப்படிப்பட்ட இயற்கைச் சீற்றங்களைச் சமாளிப்பதற்குக் கூடுதல் உதவித் தொகை கிடைக்கவும். அதுவும் காலாகாலத்தில் கிடைக்கவும் மைய அரசை நமது அரசு வற்புறுத்துமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ், டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவரவர்களே, வற்புறுத்தும்.

திரு. சு. பாலன்: மாண்புமிகு அவைத் தலைவரவர்களே, தற்போது பெருமழையின் காரணமாகச் சென்னையிலும், மற்றப் பகுதிகளிலேயும் ஏற்பட்ட நிலைமைகளைக் குறித்துப் பார்க்கும்பொழுது அவர்களுடைய வீடு, வாசல் பழுது அடைந்திருப்பதால் அவர்களுக்கு அளிக்கப்படும் நிவாரணம் எப்பொழுது கிடைக்கும்? எவ்வளவு தொகை கொடுக்கப்படும்? ஏனென்றால், போன மாதம் ஏற்பட்ட வெள்ளத்திற்காக அவர்களுக்கு ஐம்பது ரூபாய் தான் கொடுக்கப்பட்டது. இது போதாது, ஆகவே, அமைச்சரவர்கள் எவ்வளவு கொடுக்க இருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவரவர்களே, சென்னையில் ஏற்பட்ட நிலவரங்களைப் பார்த்து, அரசு அதிகாரிகளுக்கு என்னென்ன செய்ய வேண்டுமென்று உத்தரவுபிறப்பிக்க வேண்டுமென்றுதான் நேற்று 14 அமைச்சர்கள் 14 இடங்களுக்குச் சென்று காலை முதல், மாலை வரையில் சுற்றிப் பார்த்திருக்கிறார்கள், நடவடிக்கை விரைவில் எடுக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. செ. சிவசாமி: பேரவைத் தலைவரவர்களே, கடந்த மூன்றாண்டுகளாகத் தென் மேற்குப் பருவ மழை தவறி விட்டது. நான்காவது ஆண்டாக இந்த ஆண்டும் தவறி விட்டது என்று அமைச்சரவர்கள் ஒத்துக் கொண்டிருக்கிறார்கள். உண்மையில் எங்கும் மழை பெய்தாலும் வயல்களுக்குத் தண்ணீர் வரவில்லை. இராமநாதபுரம் மாவட்டத்தில், திருப்பத்தூர், சிவகங்கை, பரமக்குடி போன்ற இடங்களில் தண்ணீர் இல்லாத நிலைமை இருக்கிறது. இந்தச் சூழ்நிலையில் அங்கு வறட்சி நிவாரணப் பணிகள் தொடர்ந்து செய்யப்படுமா? வைகையிலே தண்ணீர் விடப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்களே சொன்னார்கள், மழை பெய்யவில்லை என்று. மழை பெய்யவில்லையென்றால் வைகைக்கு எப்படித் தண்ணீர் வரும் என்று எனக்குத் தெரியவில்லை, ஆனால், ஒன்றைத் தெரிவித்துக்கொள்கிறேன். இராமநாதபுரம் மாவட்டத்தில் சில பகுதிகளில் மழை பெய்தும்,

சில பகுதிகளில் மழை இல்லாமலும் இருப்பது அரசின் கவனத்திற்கு வந்திருக்கிறது. மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்ன இடங்கள் மழை பெய்யாத இடங்கள் என்றுதான் அரசின் கவனத்திற்கு வந்திருக்கிறது. அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அரசு எடுக்கும்.

திரு. வேடசந்தூர் வி.பி.பாலசுப்பிரமணியன்: தலைவர் அவர்களே, வறட்சிக் காலங்களில் தனிப்பட்ட விவசாயிகள் சொந்தமாகக் கிணறுகள் வெட்ட அரசு உதவி பெறுவதில் பல்வேறு சிக்கல்கள் இருக்கின்றன. அரசாங்க உதவி கொடுப்பதில், விவசாயக் கிணறுகள் 600 அல்லது 900 அடிக்குள் விவசாயக் கிணறுகள் இருக்கக்கூடாது என்று விதி இருக்கிறது. மாநிலத்தின் நிலத்தடி நீர்த்துறை டார்க் ஏரியா, கறுப்புப்பகுதிக்கு இந்தக் கடன் கொடுக்க முடியாது என்று சொல்லி இருக்கிறார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலையில் வசதியானவர்கள் மட்டும் கிணறுகள் வெட்டும் சூழ்நிலையும், பணம் இல்லாதவர்கள் கிணறு வெட்ட அரசாங்கக் கடன் பெற முடியாத சூழ்நிலையும் ஏற்படுகிறது. ஆகவே இந்த இரண்டு முறைகளையும் தளர்த்த அரசாங்கம் பரிசீலிக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ்.டி.சோமசுந்தரம்: மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் யோசனையை அரசாங்கம் அனுதாபத்தோடு பரிசீலிக்கும்.

விவசாயிகளுக்கு மானிய விலையில் விதைகள் அளிக்கும் திட்டம்

85— (*வினா எண்.18669) திரு. தி. அன்பழகன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

தமிழக விவசாயிகள் வறட்சியால் பாதிக்கப்பட்டிருப்பதால் எல்லா விவசாயிகளுக்கும் மானிய விலையில் விதைகளை அளிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: வறட்சியால் பாதிக்கப்பட்ட சிறு விவசாயிகளுக்கும் மற்றும் மிகச் சிறிய விவசாயிகளுக்கும் முறையே 25, 33 1/3 விழுக்காடு வீதத்தில் மானியம் அளித்து விதைகள் விநியோகிக்கப்பட்டன. இதற்காக 1983-84-ஆம் ஆண்டுக்கு அரசு ரூ 50 இலட்சத்தை வேளாண்மை இயக்குநருக்கும், ரூ. 3C இலட்சத்தை எண்ணெய் வித்து இயக்குநருக்கும் ஒதுக்கியது.

திரு. தி.அன்புழகன்: தலைவர் அவர்களே,இயற்கைச் சீற்றத்தினால், வறட்சி வெள்ளம் போன்றவைகளால் பாதிக்கப்படுகிற எந்த விவசாயியாக இருந்தாலும் காலத்தில் பயிர் செய்ய விதைகள் கிடைப்பதில்லை, எனவே பருவத்திலே பயிர் செய்ய முடியாமல் போய் விடுகிறது. ஆகவே பெரிய விவசாயி, சிறிய விவசாயி என்று பாராமல் அனைவருக்குமே மானிய விலையில் விதைகள் வழங்குவதற்கு அரசாங்கம் ஆவன செய்ய முன்வருமா





மாண்புமிகு டாக்டர், கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, அனைவரையும் ஒரே கணிப்பில் வைத்துப் பார்ப்பது முறையற்றது. பாதிக்கப்படுகிறவர்கள் மிகச் சிறு விவசாயிகள், சிறு விவசாயிகள். ஆகவே அவர்கள்பால்தான், அரசாங்கம் அக்கறையோடு நடவடிக்கைகள் மேற்கொள்ள முடியும்.

திரு. தி. அன்பழகன்: தலைவர் அவர்களே, சிலயிடங்களில் விதைகள் வழங்குவது, உரிய காலத்தில் வழங்காத காரணத்தால், தாமதமாக வழங்கப்படுகிற காரணத்தால் சிக்கல்கள் ஏற்படுகின்றன, ஆகவே இந்தக் குறையைப் போக்குவதற்கு அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு டாக்டர். கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, உரிய காலத்தில் வழங்குவதுதான் சிறந்தது. அப்படிப்பட்ட நிலைமை இருக்குமானால் அதை அரசின் கவனத்திற்கு கொண்டு வந்தால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. ஏ. சி. சண்முகம்: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப்போன்று விவசாயிகளுக்கு விதைகள் உரங்கள் போன்றவற்றிற்கு மானியம் கொடுக்கப்பட்டு வருகிறது. ஆனால் விதைகள் உரங்கள் வழங்குவதில் கொடுக்கக்கூடிய மானியம் ஒரு சிலயிடங்களில் நேரடியாக விவசாயிகளைச் சென்றடைவதில்லை. ஆகவே மாற்று யோசனையாக மானியம் தருவதை நிறுத்திவிட்டு அதற்குப் பதிலாக விலையைக் குறைத்துக் கொடுத்து நேரடியாக விவசாயிகள் அந்த நன்மையை அடைவதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கைகள் எடுப்பார்களா?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, ஒட்டு மொத்தமாக விலையைக் குறைப்பதற்கு வழி இல்லை. பாதிக்கப்படுகிற நேரத்தில் பாதிக்கப்படக் கூடியவர்களுக்கு அரசு உதவுகிறது.

திரு. பெ. சு. திருவேங்கடம்: தலைவர் அவர்களே, ஏற்கனவே ஆளும் கட்சி வரிசையில் இருக்கிற இரண்டு சட்டமன்ற உறுப்பினர்கள் கூறியதுபோல் சிறு விவசாயிகளுக்கு மானிய விலையில் விதைகள் தருகிறபோது தானாகவே அங்கு அதிகமான ஊழல்கள் வந்து விடுகின்றன. கிடைக்கவேண்டிய உதவி சிறு விவசாயிகளுக்கு கிடைக்கமுடியாத ஒரு சூழ்நிலை ஏற்படுகிறது. ஆகவே அதைத் தவிர்ப்பதற்காக குறைந்த மானியமானாலும் எல்லா விவசாயிகளுக்கும் விதைகள் என்றால் இந்த விலை என்றளவில் நிர்ணயித்தால் ஊழல் இருக்காது, எல்லோருக்கும் கிடைக்கவும் கிடைக்குமே,ஆகவே இதை பரிசீலனை செய்து தக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, பசிக்கக்கூடியவர்களுக்கு உணவு தர முடியுமே தவிர அஜீரணத்தில் இருப்புவர்களுக்கு உணவு தருவது நல்லதல்ல,

திரு, உ. சுப்பிரமணியன்: தலைவர் அவர்களே, மழை பெய்யாமல் தரிசாகக் கிடக்கக்கூடிய பகுதியில், பின்னால் மழைபெய்துமுளைத்துப்போகிற அந்தப் பகுதியில்உள்ளவிவசாயி களுக்கு, சிறு விவசாயிகள் பெரிய விவசாயிகள் என்ற பாகுபாடு இல்லாமல் அனைத்து விவசாயிகளுக்கும் குறைந்த விலையில் விதைகள் கொடுத்துதவ அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே. அனைத்து விவசாயிகளுக்கும் என்ற அளவுகோல் சரியற்றது; முறையற்றது, நியாயமற்றது.

### கோவை வேளாண்மை பொறியியல் துறையிலுள்ள கிணற்றிற்குத் துளைபோடும் இயந்திரம்

(68*வினா எண். 19114) திரு எம். ஆறுமுகம்: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவையில் உள்ள வேளாண்மை பொறியியல் துறை நிர்வாகத்தில் இயங்கும் கிணற்றிற்கு போர் போடும் இயந்திரம் பழுதடைந்துள்ளது என்பதை அரசு அறியுமா?

(ஆ) இதனால் விவசாயிகளின் தோட்டக் கிணறுகளை போர் போட முடியாமல் அவதியுறுவது அரசு அறியுமா?

(இ) ஆம் என்றால் அதன் விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: (அ) பழுதாக இல்லை.

(ஆ) மற்றும் (இ) இக்கேள்விகளுக்கு இடமில்லை.

திரு எம். ஆறுமுகம்: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்லக்கூடிய நேரத்தில் போர் போடும் இயந்திரம் பழுதடையவில்லை என்று குறப்பிட்டார்கள். என்னுடைய தொகுதியில் 'ஸைட் போர்' போடுவதற்கு இயந்திரம் வேண்டுமென்று சொல்லி விவசாயிகள் மனு செய்து இரண்டு ஆண்டுகளுக்கு மேல் ஆகிறது. பழுதடைந்துள்ளது இயந்திரம் எனவே கொடுக்கமுடியாது என்று என்னிடத்தில் சொல்லியிருக்கிறார்கள், ஆனால் அமைச்சர் அவர்கள் இயந்திரம் பழுதாக இல்லை என்று சொல்லியிருக்கிறார்கள். எனவே அமைச்சர் அவர்களுக்கு வந்திருக்கக்கூடிய தகவல் தவறாக இருக்கும் என்று கருதுகிறேன். அப்படியிருந்தாலும் கூட, உடனடியாக விவசாயிகளுக்கு 'ஸைட் போர்' போடுவதற்கு இயந்திரம் வேண்டும் என்று கேட்கக்கூடிய நேரத்தில் அதை உடனடியாக வழங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?



மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருப்பது, கிணறுகளுக்கு துளை போடுகின்ற கருவி, இந்த மாநிலத்திலே மொத்தத்தில் நான்குதான் இருக்கின்றன. ஆகவே, அந்தக் கருவிக்காக விண்ணப்பம் செய்கின்ற விவசாயப் பெருங்குடி மக்களுக்கு, வரிசைக் கிரமத்தில் வழங்கப்படுகின்றபோது, அவர்களுக்கு அது வந்துசேருவதிலே காலதாமதம் ஏற்படக்கூடும். ஹாமர் டிரில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதுபோல் பழுதடைந்து இருந்தது. அது இப்போது சரி செய்யப்பட்டிருக்கிறது. இது அனைத்து விவசாயிகளுக்கும் உடனடியாக கொடுக்கக்கூடிய அளவில், நம்மிடம் கருவிகள் இல்லை என்பதுதான் குறை.

(முற்பகல் 9.30)

திரு. எம். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நானே வேளாண்மை பொறியியற் அலுவலகத்திற்குச் சென்று, போர் போடுவதற்கு இயந்திரம் வேண்டுமென்று நேரடியாகச் சொல்லியிருக்கிறேன். சில விவசாயிகள் மனு போட்டிருக்கிறார்கள், அது இரண்டாண்டுகளுக்கு மேலாகிறது, ஏன் கொடுக்கவில்லை என்று கேட்ட நேரத்தில், அந்த இயந்திரம் பழுதடைந்திருக்கிறது என்று சொன்னார்கள். எனவே, இப்படிப்பட்ட நிலைமை இருக்கக்கூடிய சூழ்நிலையில், கோவை மாவட்டத்தில் கடுமையான வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கக்கூடிய இந்த நேரத்தில். 200 அடி, 300 அடி தோண்டினாலும், தண்ணீர் இல்லாத இந்த காலகட்டத்தில், வேளாண்மை பொறியியற்துறை ஏற்கனவே விண்ணப்பித்துள்ளவர்களுக்கு அந்த இயந்திரத்தை முறையாக விநியோகிப்பதற்கு, அரசு துரித நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, கோவை மாவட்டத்தில் இரண்டு ஹாமர் டிரில்களும், ஒரு துளைக் கருவியும்தான் இருக்கிறது. ஆகவே, அவைகளைப் பயன்படுத்தி மாவட்டம் முழுவதிலும் இருக்கக்கூடிய விவசாயிகளுக்கு வசதி செய்ய வேண்டியிருக்கிறது. எனவே. அங்குள்ள அனைத்து விவசாயிகளுக்கும் எந்த அளவுக்கு அனுதாபம் காட்ட வேண்டுமோ, அந்த அளவுக்கு அனுதாபம் காட்டி செயல் படுத்தப்படும்.

திரு வேடசந்தூர் வி.பி.பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கிணறுகளுக்கு சைடில் துளை போடுவதற்கு விவசாயிகள் இந்தத் துறையை அணுகுகின்றபோது அவர்களை அதற்கான முனையை வாங்கித் தரவேண்டும் என்று சொல்வதோடு, அதற்கான டீசலையும் வாங்கித் தரவேண்டும் என்று சொல்லப்படுகிறது. ஒரு 100, 200 அடி துளை போடுவதற்கு, இந்த முனையை ஆயிரம் ரூபாய் கொடுத்து வாங்கவேண்டியிருப்பதால் சிரமமாகயிருக்கிறது என்று சொல்லப்படுகிறது. ஆகவே, தனிப்பட்டவர்களுக்கு அடிக்கு இவ்வளவு என்று நிர்ணயிப்பதுபோல், விவசாயிகளுக்கும் இப்படி வேளாண்மை பொறியியற் துறை நிர்ணயிப்பதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய ஆலோசனையை அரசு பரிசீலிக்கும்.

### தமிழ்நாட்டில் பழம் காய்கறிகளைப் பதப்படுத்தும் நிலையங்கள் ஏற்படுத்தும் திட்டம்

87— (*வினாஎண் 20544)—திரு ஏ. எம்.சேதுராமன், திரு பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் உலக வங்கி உதவியுடன் பழம், காய்கறிகள் பதப்படுத்திக் கெடாமலிருக்க நவீன வசதியுடன் கூடிய நிலையங் கள் ஏற்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: ஆம்.

திரு பெ. சு. திருவேங்கடம்; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்தெந்த மாவட்டங்களில், எந்தெந்த இடங்களில் இதைக் கட்டுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, 17 இடங்களில் தாம்பரம், திருவண்ணாமலை, வேலூர், விழுப்புரம் கடலூர், சேலம், ஓசூர், கோவை, மேட்டுப்பாளையம், ஈரோடு, திருச்சி‘ தஞ்சை, மதுரை, விருதுநகர், தூத்துக்குடி, நெல்லை, நாகர்கோயில்.

திரு பெ. சு. திருவேங்கடம்: பேரவைத் தலைவர் அவர்களே, எந்தெந்த இடங்களில் என்று அறிவித்தார்கள். ஒவ்வொரு இடத்திலும் கட்டுவதற்கு எவ்வளவு பணம் செலவாகின்றது? இந்த 17 இடங்களிலும் கட்டஆகும் மொத்தச் செலவு எவ்வளவு? இவைகளைக் கட்டி முடிக்க எத்தனை ஆண்டுகள் ஆகும் என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, இந்த 17 இடங்களில் கட்டுவதற்கு ஆகும் மொத்த செலவு 893.82 இலட்சம். இதற்கு உலக வங்கியின் உதவியைப் பெற யிருக்கிறோம். மைய அரசிற்கு நாம் கருத்துருவை அனுப்பியிருக் கிறோம். பணம் கிடைத்தவுடன், இந்த வேலை ஆரம்பிக்கப்படும்.

·திரு சோ. அழகர்சாமி: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்பு மிகு அமைச்சர் அவர்கள் பல ஊர்களைச் சொன்னார்கள். அதிலே எங்கள் பகுதியும் இருக்கிறது. தக்காளிப்பழம் சில நேரங்களில் அதிகமாக உற்பத்தியாவதால், சில நேரங்களில் அழுகிப்போய் குப்பையிலே போடவேண்டிய சூழ்நிலை ஏற்படு





கிறது. தக்காளிப் பழத்திலிருந்து ஜாம் செய்யக்கூடிய சூழ்நிலை இருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆகவே, அந்தப் பகுதியில் இந்த தக்காளிப் பழங்களை பதப்படுத்தக்கூடிய ஒரு நிலையத்தை அமைக்க அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட சேமிப்பு கிடங்குகள் கட்டுவதன் நோக்கமே அது தான். அழுகும் பொருள்களை சேமித்து வைக்கும் வசதியில்லாத காரணத்தினால், அவசர காலத்தில் குறைந்த விலையில் விற்று, அதிக நஷ்டம் ஏற்படுகின்ற காரணத்தினால், மாண்புமிகு உறுப் பினர் அவர்கள் கூறுவதுபோல், அந்தத் தக்காளிப் பழங்களை சேமித்து வைப்பதற்கு உரிய நிலையத்தை ஏற்படுத்துகின்ற நடவடிக்கையும் இதிலே அடங்கும்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களின் பதிலில், மதுரை சேர்க்கப்பட்டிருக்கிறது. மதுரை மாவட்டத்தைப் பொறுத்த அளவில், கொடைக்கானல் ரோடில் நிறைய மலைவாழைப் பழங்கள், சிறுமலைப்பழங்கள், மற்றும் திராட்சை போன்றவை கள் இருக்கின்றன. அந்த மாதிரியான இடங்களுக்கு முக்கியத் துவம் கொடுத்து, இம்மாதிரியான நிலையங்கள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, அதைப்போன்ற இடங்களில் உரிய முக்கியத்துவம் சிறப்பான முக்கியத்துவம் நிச்சயமாக வழங்கப்படும்.

டாக்டர் கே. பி. இராமலிங்கம்: பேரவைத் தலைவர் அவர்களே, பழங்களைப் பதப்படுத்தும் கூடம் ஒன்று சேலம் மாவட்டத்திலே அமைக்கப்படுவது பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப் பிட்டார்கள். கொல்லிமலைப் பகுதியில் அன்னாசிப் பழங்கள் நிறையக் கிடைப்பதால் அவற்றை பதப்படுத்துகின்ற வகையிலே சேலம் மாவட்டத்திலே அமைய இருக்கின்ற பழங்கள் பதப் படுத்தும் கூடத்தை கொல்லிமலைப் பகுதியில் அமைப்பதற்கு அரசு முயற்சி செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, பணம் வந்து சேர்ந்ததற்குப் பிறகுதான் மற்ற காரியங்களைச் செய்யவேண்டி இருக்கிறது. ஆனால் சேலம் மாவட்டத்திலே அத்தகைய ஒரு கூடத்தினை அமைக்கின்ற கருத்துரு அரசினிடத் தில் இருக்கின்றது.

திரு.ஜே. ஹேமச்சந்திரன்: தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் பேச்சிப்பாறை அருகில் அரசின் வேளாண்மைப் பண்ணை இருக்கின்றது. அங்கே அன்னாசிப் பழம் அதிகமாக உற்பத்தி செய்யப்படுகின்றது. எனவே அங்கே உற்பத்தி செய்யக் கூடிய அந்தப் பழங்களைப் பதப்படுத்துவதற்கு உரிய வகை யிலே அங்கே கூடம் அமைக்கின்ற நடவடிக்கையினை அரசு எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, அதற்காகத்தான் நாகர்கோவிலை நான் குறிப்பிட்டேன்,

நிலக்கடலை சாகுபடிக்கான மேம்பாட்டுத் திட்டம்

88 —(*வினா எண். 20679)—திரு. சி. கணேசன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நிலக்கடலை சாகுபடியின் மேம்பாட்டிற்கு அரசிடம் ஏதேனும் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதில் மத்திய அரசின் பங்கென்ன?

மாண்புமிகு டாக்டர் கா.காளிமுத்து: (அ) நிலக்கடலை சாகுபடியின் மேம்பாட்டிற்கு மாநில அரசு எண்ணெய் வித்துக்கள் அதிகரிப்புத் திட்டம் என்ற ஒரு திட்டத்தைச் செயல்படுத்தி வருகின்றது. மைய அரசினால் மானியம் பெறும் தீவிர நிலக்கடலை அபிவிருத்தித் திட்டம், புதிய நீர்ப்பாசன வசதியுள்ள இடங்களில் நிலக்கடலை சாகுபடி செய்யும் திட்டம், ஆகிய இரண்டு திட்டங்களும் நடைமுறையில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

(ஆ) மைய அரசின் மானியம் பெறும் 2 திட்டங்களில், சில இனங்களின் கீழ் 100 சதவீத மானியமும், சில இனங்களின் கீழ் 50 சதவீதம் மானியமும் ஆண்டுதோறும் பெறப்படுகின்றன.

திரு. சி. கணேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மணிலாப்பயறு என்பதைப் பொறுத்தவரையில் தேசிய அளவிலே நாம் பயிரிடுகிறோம். தமிழகத்தில் கிட்டத்தட்ட 9 இலட்சம் ஹெக்டேர் பரப்பிலே நாம் மணிலாப்பயறு உற்பத்தி செய்கிறோம். இதிலே ஒரு ஏக்கருக்கு 100 கிலோ, 200 கிலோ தான் மகசூல் கிடைக்கின்றது என்று சொல்கிறார்கள். ஆகவே மணிலாப் பயிரினை உற்பத்தி செய்கின்ற விவசாயிகள் உற்பத்தி ஆகுமோ, ஆகாதோ என்பதைப்பற்றி சரியாக அறியாத நிலைமையில் செலவிடவேண்டிய நிலைமை இருக்கின்றது. எனவே அவர்களுக்கு நல்ல உரம், நல்ல விதை, நல்ல பாதுகாப்பு ஆகிய அனைத்தையும் பெறுகின்ற வகையில் ஆராய்ந்து தெரிந்துகொள்கின்ற வகையில் ஒரு குழுவினை அமைக்க அரசிடம் ஏதாவது திட்டம் இருக்கின்றதா.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, நான் குறிப்பிட்ட அரசினுடைய திட்டங்கள் எல்லாம் நிலக்கடலையினை மேம்படுத்த வேண்டும் என்பதற்காகத்தான். அதற்காகத்தான் வேளாண்மைத் துறையில் எண்ணெய் வித்துக்கள் துறை என்று தனியாக ஒரு துறையையே நாம் ஏற்படுத்தி இருக்கிறோம். எனவே இப்படிப்பட்ட நல்ல மேம்பாட்டினைப் பெறுவதற்காகத்தான் செங்கற்பட்டு, வட ஆற்காடு, தென் ஆற்காடு போன்ற பகுதிகளில் ஆனந்த் பாணியிலே சில முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறோம். அந்த முயற்சிகள் மூலம் நல்ல பலன் கிடைத்திருக்கின்றன என்பதைத்தான் கிடைத்திருக்கின்ற புள்ளிவிவரங்கள் நமக்கு எடுத்துக் காட்டுகின்றன.



திரு. சி. கணேசன்: தலைவர் அவர்களே, தோட்டக் கலையிலே காய்கறிகளைப் பயிரிடுகின்ற வகையிலே ஆர்வம் காட்டுகின்ற வகையிலே இந்திய சுற்றுலாத்துறை பொருட்காட்சியின் மூலம் நடத்தப்பட்ட கண்காட்சியிலே நமது மாண்புமிகு அமைச்சர் அவர்களின் துணைவியார் அவர்கள் முதல் பரிசினைப் பெற்றிருக்கிறார்கள். அதற்காக நான் பாராட்டுகிறேன். அதாவது தமிழகத்திலே உள்ள எல்லா பெண்மணிகளையும் ஊக்குவிக்கின்ற வகையில் தன்னுடைய துணைவியாரையே இவ்வாறு ஊக்குவித்து செயல்படுத்தி இருக்கிறார்கள் என்பதற்காகப் பாராட்டுகிறேன். அதற்காக மிகவும் பெருமைப்பட்டுக் கொள்கிறேன். ஆனால் அதே நேரத்தில் மணிலாப் பயிர் மேம்பாட்டிற்காக நான் கேட்கின்ற நான்கு கோரிக்கைகளையும். அரசு நிறைவேற்றித் தருமா என்று அறிய விரும்புகிறேன். ஒன்று மணிலாப் பயிர் விதைகளை 50 சதவீதம் மானியத்திலே வழங்கவேண்டும்; இரண்டாவது முழு மின்சக்தியினை மானியமாக தரவேண்டும்; மூன்றாவதாக சிறு விவசாயிகளுக்கு அடி உரம், ஜிப்ஸம் ஆகியவை 50 சதவீத மானியத்தில் கிடைக்க வேண்டும்; நான்காவதாக அவர்களுடைய உற்பத்திப் பொருளை கிராம கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் கொள்முதல் செய்யவேண்டும், இவை அத்தனையும் செய்வதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பாராட்டுக்களை வழங்கிவிட்டு அதற்குப் பிறகு கோரிக்கைகளை வைக்கிறார்கள்; அவர்கள் பாராட்டாவிட்டாலும் அவர்களுடைய கோரிக்கைகளைப் பரிசீலிப்பேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. தி. கா. நல்லப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எண்ணெய் வித்துக்களை அதிகரிக்கவேண்டும் என்ற நோக்கத்தோடு அரசு மானியம் கொடுத்து எண்ணெய் உற்பத்தியினை ஊக்கப்படுத்துகின்றது என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

குறிப்பாக இந்த நிலக்கடலையைப் பொறுத்தவரையில் கடுமையான நோய் வருடா வருடம் வருகின்றது. அதனால் பெருத்த சேரழிவு ஆண்டு தோறும் ஏற்படுகின்றது. எனவே அந்த நோய் ஏற்படுவதற்கு முன்பாகவே அதாவது கம்பளிப் பூச்சி போன்றவை வருவதற்கு முன்பாகவே தடுப்பதற்கான மருந்தை அரசே தெளித்து விவசாயிக்கு பாதுகாப்பு கொடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9.40)

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருந்து தெளிப்பு போன்றவைகளுக்கு ஒட்டு மொத்த மானியத்தை வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். உரிய மருந்துகளை குறைந்த விலையில் கொடுப்பதற்கு

நடவடிக்கை எடுத்திருக்கிறோம். நோயே வராமல் தடுக்க ஏற்பாடு செய்தாலும், வந்திருக்கிற நோயை கட்டுப்படுத்துவது தான் அரசினுடைய நோக்கம். அந்த வகையிலே உரிய நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொண்டிருக்கிறது.

திரு. ரா. கிருஷ்ணன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, இதில் ஜே.எல். 24 விதை போதிய அளவிற்கு கிடைக்கவில்லை என்று சொல்லப்படுகிறது. ஆகவே அந்த விதை பரவலாக விவசாயிகளுக்கு கிடைப்பதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முழுமையாக கிடைக்கத்தக்க அளவிற்கு நம்மிடம் வசதி வாய்ப்புகள் இல்லை. எந்த வகையிலே அதிகமாக பெருக்கவேண்டுமோ அந்த வகையில் பெருக்குவதற்கு நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறோம்.

திரு. ப. பொன்னுரங்கம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, எண்ணெய் வித்துக்களில் ஒரு பிரிவிற்கு 100 சதவீதம் சப்சிடி என்றும், இன்னொரு பிரிவிற்கு 50 சதவீதம் சப்சிடி என்றும் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இரண்டொரு நாட்களுக்கு முன்னதாக மத்திய சர்க்கார் எண்ணெய் வித்துக்களுடைய அவசியத்தை முன்னிட்டு மாநில அரசு கேட்டுக்கொண்டிருப்பதாக ஒரு செய்தி வந்தது. அதிலே கூட 183 கோடி ரூபாய் தனியாக ஒதுக்கியிருப்பதாக சொல்லப்படுகிறது. இந்த காலக் கட்டத்திலே 50 சதவீதம் சப்சிடி என்பதை 100 சதவீதம் மானியமாக மத்திய அரசிடம் வாங்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு சில இனங்களில் 100 சதவீதம் வரையில் என்று சொல்லி இருப்பது சான்றிதழ் திட்டத்தில் விதைகள் கொள்முதல் செய்தல் போன்றவைகளுக்கு 100 சதவீதம் மானியம் கொடுக்கிறது. ஒட்டுமொத்த மருந்து தெளித்தல், செயல் விளக்க பாத்தி போடுதல், மினி கிட் வழங்குதல் இப்படிப்பட்ட சில இனங்களுக்கு 50 சதவீதம் கொடுக்கிறது. முழுமையாக மானியத்தை கேட்பது நம்முடைய உரிமை என்றாலும் எந்த அளவிற்கு விவசாயிகளை உற்சாகப் படுத்துவதற்கு பயன்பட முடியுமோ அந்த அளவிலே தான் பயன்பட முடியும்.

திரு. கே. ஆர். சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு அதிகமாக மழை பெய்ததால் வட ஆற்காடு மாவட்டத்தில் நிலக்கடலை பயிர் செய்ததில் விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு இந்த ஆண்டிலே விதைகளை இலவசமாக வழங்குவதற்கு அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, மானிய விலையில் வழங்குவதற்கு அரசு பரிசீலிக்கும்.

### 1980–81-ம் ஆண்டுக்கான தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் குடிநீர் வடிகால் வாரியம் மேற்கொண்ட திட்டங்கள்.

(89—வினா எண் 5150)—திரு. சு. முத்துக்கிருஷ்ணன்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) குடிநீர் வடிகால் வாரியம் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ள 1980–81-ம் ஆண்டுக்கான பணிகள் முடிவுபெற காலம் போதாது என்பது பற்றி அரசுக்கு முறையீடு வந்துள்ளதா?

(ஆ) தேவைக்கு ஏற்ப கூடுதலான பணிக்காலம் அனுமதிக்கும் உத்தேசம் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) மற்றும் (ஆ): தன்னிறைவு திட்டம் முதல் கட்டத்தின் கீழ் 1980–81-ல் நிறைவேற்றப்பட வேண்டிய குடிநீர்த் திட்டங்களின் இலக்கு முழுவதும் செய்து முடிக்கப்படவில்லை. இருந்த போதிலும் 1980–81-ம் ஆண்டில் தன்னிறைவுத் திட்டத்தில் எடுத்துக் கொள்ளப்பட்ட குடிநீர்த் திட்டங்களைச் செய்து முடிப்பதற்குப் போதுமான காலம் தரப்பட்டுள்ளது.

### பொறியியல் தொழிலில் ஈடுபட்டுள்ள ஒப்பந்தத் தொழிலாளர் பணி நிலைமைகள் குறித்து ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட குழு.

90–(*வினா எண் 14380)—திரு. இரா. கருப்பையா: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொறியியல் தொழிலில் ஈடுபட்டுள்ள ஒப்பந்தத் தொழிலாளர்கள் நிலைமை குறித்து ஆய்வு செய்ய குழு அமைக்கப்பட்டுள்ளதா?

(ஆ) குழுவில் அங்கம் பெறும் உறுப்பினர்களின் விவரம் என்ன?

(இ) இந்தக் குழுவின் பரிந்துரைகள் யாவை?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ—இ): ஒரு விவர அறிக்கை ** அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

---

305-ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பெற்றுள்ளது.

திரு. இரா. கருப்பையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பொறியியல் தொழிலில் ஒப்பந்தத் தொழிலாளர்களாக பணி புரியக் கூடியவர்கள் குறைந்த பட்சம் ஐ.டி.ஐ. போன்ற தொழில் பயிற்சி பெற்று பணி புரியக் கூடியவர்களாக இருக்கிறார்கள். அவர்களுக்கு வேலை உத்தரவாதமோ அல்லது குறைந்தபட்ச சம்பளமோ எதுவும் இல்லாத நிலையில் உள்ளது. ஈ.எஸ்.ஐ. போன்ற மருத்துவ வசதிகள் கூட அவர்களுக்கு இல்லாமல் இருக்கிறது. அவர்கள் நிரந்தரமாக தொழில் புரிந்தாலும் ஒப்பந்தத் தொழிலாளர்கள் என்ற பெயரிலே அவர்கள் இருப்பதால் நிரந்தரத் தொழிலாளர்கள் பெறக்கூடிய சலுகைகளை பெறமுடியாத நிலையில் இருக்கிறார்கள். இந்த வகையில் சுமார் ஒரு லட்சம் தொழிலாளர்கள் இருந்து வருகிறார்கள். இதற்காக 1977, 79, 81, 84 ஆம் ஆண்டுகளில் குழுவை அமைத்து அந்த குழு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற முறையில் பரிந்துரை கூறியிருக்கிறார்கள். இந்தத் தொழிலாளர்களுக்கு 1977 ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட குழு செய்திருக்கிற சிபார்சு அடிப்படையில் பணி நியமனம், ஊதிய விகிதாச்சாரங்கள் நிர்ணயிக்க வேண்டுமென்று தொழிலாளர் நலத்துறை ஆணையாளர் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள்; ஏழு ஆண்டுகள் ஆகியும் இந்தத் தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச ஊதியம், மற்ற வேலை நிலைமைகளை ஒழுங்கு படுத்துவதற்கான நிலைமைகள் இல்லை. ஆகவே அரசு ஒரு சட்டத்தை இயற்றி அவர்களுக்கு அந்தக் கூலியை நிர்ணயித்துக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1981 ஆம் ஆண்டு முடிந்த குழு மாநில அளவில் ஆராய்வது நல்லது என்று பரிந்துரை செய்து இருக்கிறது. அதோடு விட்டு இருந்தால் காரியங்கள் விரைவில் முடிந்து இருக்கும். அதற்குப் பின்னால் இந்தக் குழுவை விரிவாக்க வேண்டும் என்று பல இடத்திலிருந்து கோரிக்கை வந்தது. இப்போது நடப்பது ஜனநாயக ஆட்சி என்பதால் அதைப் பரிசீலனை செய்யவேண்டும் என்று கருதி, இப்போது மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்லிய கோரிக்கையையும் ஏற்று இந்தக் குழுவை விரிவாக்குவதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. இரா. கருப்பையா: தலைவர் அவர்களே, ஜனநாயகத்திற்கு மதிப்புக் கொடுத்து இந்தக் குழுவை விரிவாக்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். 1977 ஆம் ஆண்டில் முடிந்த குழுவும் மாநில அளவில் அமைக்கப்பட்ட குழுதான் என்பது அமைச்சருக்குத் தெரியும். 7 ஆண்டுகள் ஆகியும் இன்னும் அதன் மீது ஒரு முடிவு எடுக்கவில்லையே அதற்குக் காரணம் என்ன? மற்ற இன்ஜினீரிங் தொழிற்சாலைகளில் உள்ள தொழிலாளர்களுக்கு இருக்கக்கூடிய குறைந்த பட்ச ஊதியம்,





இ.எஸ்.ஐ. சலுகை இந்தத் தொழிலாளர்களுக்கும், குழு போட்டு அவர்கள் அறிக்கை அளிப்பதற்கு முன்பே, அதை நேரடியாக அவர்களுக்குக் கொடுப்பதற்கான முறையில் விரைவான நடவடிக்கைகளை அரசு எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது ஒப்பந்தத் தொழிலாளர்களைப் பொறுத்த விஷயம். அதற்காக அமைக்கப்பட்ட குழுவின் பரிந்துரைகளின்மீது அரசு நடவடிகை எடுப்பதைப் பொறுத்ததாகும். இந்தக் குழு பிராட் பேஸ்ட்டாக இருக்கவேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர்கள் கருதுகிற காரணத்தால், அதை பிராட் பேஸ்ட்டாக இருக்கவேண்டும் என்பதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர்களின் உணர்வை அறிந்து விரைவில் இந்தக் குழுவை அமைக்க ஏற்பாடு செய்யப்படும்.

திரு. ரா. உமாநாத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் குழுவே அந்த கான்ட்ராக்ட் லேபரை ரெகுலேஷன் செய்வதற்காக எந்தெந்தத் தொழில் நிரந்தரமானது, எந்தெந்தத் தொழில் நிரந்தரம் இல்லாத தொழில் என்பதை ஐடென்டிபை செய்வதற்கு என்று கருதுகிறேன். இவர்களுடைய பிரச்னை என்னவென்றால், இன்றைக்கு இருக்கக் கூடிய சட்டங்களின்படி இவர்களுக்கு கிடைக்கவேண்டிய சலுகைகள் கிடைக்காமல் இருக்கின்றன. பொதுத்துறையிலே உள்ள நிறுவனங்களில் இவர்களின் நிலைமை ரொம்ப ஒர்ஸ்ட்டாக இருக்கிறது. அது சென்ட்டிரல் கவர்ன்மென்ட்டாக இருந்தாலும் சரி, ஸ்டேட் கவர்ன்மென்ட்டாக இருந்தாலும் சரி இந்த நிலைமைதான் இருக்கிறது. பிரின்சிபிள் எம்பிளாயர் என்ற பொசிஷனில் உள்ள பி.எச்.இ.எல். என்ற நிறுவனங்களில்கூட இவர்களை அங்கீகரிப்பது இல்லை. ஆகவே, இந்த ஒப்பந்தத் தொழிலாளர்களுக்கு சேப்டியும் இல்லாமல், ஆக்குபேஷன் வேஜும் இல்லாமல் வேதனை பட்டுக் கொண்டு இருக்கிறார்கள். நேற்றுகூட நெய்வேலியில் 6 பேர் இறந்து இருக்கிறார்கள். ஆகவே, இப்போது இருக்கும் சட்டப்படி அவர்களுக்குக் கொடுக்கவேண்டிய சலுகைகளை என்போர்ஸ் செய்வதற்கு போதுமான நடவடிக்கை எடுக்கப்படுமா? What are the additional measures taken to enforce this Act and protect the lives of people working?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே, பொது நிறுவனங்களைப் பற்றிச் சொன்னார்கள். பொது நிறுவனங்களைச் சேர்ந்த தொழிலதிபர்களின் கூட்டத்தை வழக்கமாக நான் கூட்டி விவாதிப்பது வழக்கம். இந்தக் கூட்டத்தொடர் முடிந்த பிறகு அப்படிப்பட்ட ஒரு கூட்டத்தைக் கூட்ட இருக்கிறேன். அந்த நேரத்தில் மாண்புமிகு திரு. உமாநாத் அவர்கள் சொன்ன கருத்துக்களை மனதில் கொண்டு நடவடிக்கைகளை அங்கே எடுக்கிறேன் என்று சொல்லிக் கொள்கிறேன். இந்தச் சட்டத்தின் பெயரே கான்ட்ராக்ட் லேபர் ரெகுலேஷன் அண்ட் அபாலிஷன் ஆக்ட் என்பதாகும். இவர்களை ரெகுலேட் செய்வதற்கும், அபாலிஷ் செய்வதற்கும்

அந்தக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் தான் அரசு முடிவு எடுக்கும். எல்லாவற்றிற்கும் மேலே அந்தச் சட்டத்திலே ஒரு சில லகுனா இருக்கின்றது. கான்ட்ராக்ட் லேபரை அபாலிஷ் செய்து விட்டோம் என்று சொன்னால் அவர்களுக்கு பதிலாக யாரை வேண்டுமானாலும் வேலைக்கு எடுத்துக் கொள்ளும் உரிமை முதலாளிக்கு வந்து விடுகிறது. என்னுடைய ஞாபகம் சரியாக இருக்குமானால் செக்ஷன் 10-ஐ அமெண்ட் செய்து, 100 கான்ட்ராக்ட் லேபர் ஒரு நிறுவனத்தில் இருந் தார்கள் என்றால், அவர்களை அபாலிஷ் செய்த பிறகு அதே நபர்களைத்தான் ரெகுலராக எடுத்துக் கொள்வதற்கு அந்த எம்ப்ளாயர் முன்வரவேண்டும் என்று சட்டம் கொண்டுவர வேண்டும் என்று மத்திய அரசுக்கு எழுதியிருக்கிறோம், அதை அடிக்கடி வலியுறுத்தியும் வருகிறோம். இதிலே இந்த அரசு ரொம்ப உறுதியோடு இருக்கிறது. வேலை போன பிறகு அவர்கள் தெருவில் நிற்கக்கூடாது என்பதால் அந்தச் சட்டத்தை மாற்றவேண்டும் என்று இந்த அரசு மத்திய அரசை வற்புறுத்தி வருகிறது என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்,

(முற்பகல் 9-50)

திரு. கு. ரமணி: தலைவரவர்களே, 3 குழுக்களை அமைத்தும்' 1969—ல் கான்ட்ராக்ட் லேபர் ரெகுலேஷன் அன்ட் அபாலிஷன் ஆக்ட் பிறப்பிக்கப்பட்டு மத்திய சர்க்காரால் நிறைவேற்றப் பட்டு 15 வருஷம் ஆகியும்—14 ஆண்டுகள் முடிந்து விட்டன— இன்றைக்கும் நாம் குழுவை அமைக்கும் ப்ராஸஸில்தான் நிற்கிறோம். ஏற்கெனவே நிறைவேற்றியிருக்கிற சட்டத்தின்படி, தொழிலாளர்களுடைய சர்வீஸ் கன்டிஷன்படி 450 நாள் வேலை செய்திருந்தால் அவர்களை நிரந்தரப்படுத்த வேண்டும். அதையே இன்னும் சரியாக அமுல்படுத்த முடியவில்லை. அப்படி இருக்கும்போது எவ்வாறு இந்த இ.எஸ்.ஐ. சட்டத்தை அமுலாக்கப் போகிறீர்கள் என்று தெரியவில்லை. இப்படி குழுவை அமைத்துக் கொண்டு போவது பிரச்னையைத் தீர்க்காது. ஒரு எஃபக்டிவான, உறுதியான நடவடிக்கை எடுக்க வேண்டும். அதற்கு 3 மாதத் திற்குள் அல்லது 6 மாத காலத்திற்குள்ளாகவாவது எஃபக்டிவான முறையில் ஒரு சட்டத்தைக் கொண்டுவந்து நிறைவேற்றி, ஒவ்வொரு தொழிலாளிக்கும் குறைந்தபட்ச கூலி போன்றவை களுக்கு உத்தரவாதம் கொடுக்கும் முறைக்கு அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவரவர்களே, குழுக்கள் அமைத்து, செயல்படுத்துவதுதான் சட்டம். குழுக்கள் அமைத்து, அவர்கள் பரிந்துரை அளித்து, அந்த பரிந்துரை களை அரசு பரிசீலனை செய்யும். இடையிலே ரெகுலேட் செய்ய வேண்டுமென்றால் சப்பந்தப்பட்ட அதிகாரிகள் அதைப் பார்த்து செய்வார்கள். அவர்கள் ஒழுங்காகச் செயல்படவில்லை என்றால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்துக் களை மனதிற்கொண்டு, அவர்கள் ஒழுங்காக செயல்பட வேண்டு மென்று அறிவிப்பு கொடுக்கப்படும்.



பாலவிளை குடிநீர் திட்டம்.

91—*வினா எண் 16870—திரு. டி. மணி: மாண்புமிகு தொழி லாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேல்புரம் ஊராட்சி ஒன்றியத்தின்கீழ் விளவங்கோடு ஊராட்சியில் உள்ள பாலவிளை குடிநீர்த் திட்டத்தின் மூலம் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) ஆம்,

(ஆ) மேல்புறம் ஊராட்சி ஒன்றியம் பாலவிளை கிராமத் திற்கு ஏழு பொதுக் குழாய்கள் வழியாக பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்படுகிறது. தற்பொழுது குடிநீர் பற்றாக்குறை பிரச்சனை இல்லை.

திரு. டி. மணி: மாண்புமிகு அமைச்சரவர்கள் இந்த பாலவிளை குடிநீர்த் திட்டம் அமுலாக்கப்பட்டு வருகிறது என்று சொன்னார்கள். 1982-ல் கேட்கப்பட்ட கேள்வி இது. இடையிலே இத்திட்டம் செயலுக்கு வந்திருக்கிறது. ஆனால் இப்போது அமைச்சரவர்கள் தந்திருக்கிற தகவல் சரியான தகவல் அல்ல. இரண்டு மாதங்களுக்கு முன்னாலிருந்தே இத்திட்டம் செயல் படவில்லை. மோட்டார் ஸ்டாட்டர் என்று செ ல்லப்படுகின்ற கருவியில் பழுது ஏற்பட்டிருப்பதால், இப்படிப்பட்ட சில காரியங் களினால், தண்ணீர் விநியோகம் முடக்கப்பட்டிருக்கிறது. இது பற்றி அதிகாரிகளோடு தொடர்பு கொண்டும் இதுவரையில் அது சீர்செய்யப்படவில்லை. அதை விரைவாக சீர்செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்தை ஏற்று சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்பு கொள்கிறேன்.

அரசு ரப்பர் தோட்டத் தொழிலாளர்களுக்கான வருங்கால வைப்புத் திட்டம்.

92—*வினா எண் 17033—திரு.ஜே. ஹேமச்சந்திரன்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு ரப்பர் தோட்டங்களில் வருங்கால வைப்பு நிதி (Provident fund) திட்டம் அமுல் படுத்தப்பட்டுள்ளதா?

(ஆ) அது யாரால் பராமரிக்கப்படுகிறது?

(இ) 1982 டிசம்பர் வரை பயன்பெற்றத் தொழிலாளர்கள், பயன்பெறாத தொழிலாளர்கள், எண்ணிக்கை எவ்வளவு?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்; (அ) ஆம்.

(ஆ) கணக்கு அலுவலர் (நிதி) தமிழ்நாடு அரசு தொழிற்சாலை தொழிலாளர் வருங்கால வைப்புநிதி கருவூலம் மற்றும் கணக்குத்துறை, சென்னை–9, என்பவரால் கருவூலக் கணக்குத்துறை இயக்குநரின் மேற்பார்வையில் பராமரிக்கப் படுகிறது.

(இ) 1982 டிசம்பர் வரை பயன்பெற்ற தொழிலாளர்களின் எண்ணிக்கை 12,648; பயன் பெறாதவர்களின் எண்ணிக்கை இல்லை.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: தலைவரவர்களே, அரசு இரப்பர் தோட்டங்களில், குறிப்பாக கீரிப்பாறை, மணலோடை போன்ற இடங்களிலும் அங்கே இருக்கிற ஃபாக்டரிகளிலும் வேலை செய்யக்கூடிய தொழிலாளர்களுக்கு இன்னும் பிராவிடன்ட் ஃபண்டு நிதி அமுலாக்கப்படவில்லை என்பதை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவந்திருக்கிறார்களா? அவர்களுக்கு உடனடியாக இத்திட்டத்தை அமுல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவரவர்களே, வருங்கால வைப்பு நிதியைப் பொறுத்தமட்டில் மேற்குறிப்பிட்ட இரப்பர் தோட்டங்களில் பணியாளர் பயன்பெறும் வைப்பு நிதித் திட்டத்தை செயல்படுத்த ஆரம்பித்து விட்டார்கள். எப்படி இருந்தாலும் இதைப் பொறுத்தவரை, தமிழக அரசு ஆணையர் மற்றும் செயலாளர், வன–மீனளத்துறை அவர்களால் சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு ஒன்று (ரிட் பெட்டிஷன்) தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கு உயர்நீதி மன்றத்தில் நிலுவையில் இருப்பதால் இதுபற்றி பின்னால் விரிவாகப் பேசலாம் என்று நான் கருதுகிறேன்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரப்பர் தோட்டங்களில் வேலை செய்யும் தொழிலாளர்களிடமிருந்து பிடிக்கப்படும் பி.எப். தொகைக்கான கணக்கு சரியாக வைக்கப்படவில்லை என்பதன் காரணமாக வசூலிக்கப்பட்ட பணம் முழுவதும் தரப்படவில்லை. ஆக அந்தத் தொழிலாளர்களின் பி.எப். கணக்கு ஒழுங்காக வைக்கப்படாததன் காரணத்தினாலே இந்தத் தொழிலாளர்கள் வேலையை விட்டுப் போகும்போது அவர்களுக்கு கிடைக்கக்கூடிய பி.எப். கிடைக்காமல் இருக்கிறது. கணக்கை சரியாகப் பார்த்து வாங்கமுடியாத பிரச்சினை இருக்கிறது. ஆக அவர்களுக்கு எவ்வளவு பி.எப். பணம் பிடிக்கப்படுகிறது, எவ்வளவு வட்டி போடப்படுகிறது என்பதைச் சுட்டிக்காட்டக்கூடிய அளவிற்கு பாஸ் புக் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்?





மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவரவர்களே, சட்டப் பிரகாரம், என்ன அறிவிப்புகள் அவர்களுக்குத் தர வேண்டுமோ, அதைச் செய்வதற்கு ஏற்பாடு செய்யப்படும்.

**ஆழ்குழாய்க் கிணறு வெட்டுவதற்கான மத்திய அரசின் நிதி உதவி.**

93— (*வினா எண் 17863)—திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்:

மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆழ்குழாய்க் கிணறு வெட்டுவதற்காக மத்திய அரசு மாநில அரசிற்கு உதவித் தொகை அளித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அப்பணம் முழுமையும் செலவு செய்யப் பட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) மற்றும் (ஆ): ஆம்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசிடமிருந்து ஆழ்குழாய்க் கிணறுகள் வெட்டுவதற்காக பணம் ஒதுக்கியதாகத் தெரிகிறது. எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது? மத்திய அரசிடமிருந்தும், மாநில அரசிடமிருந்தும், ஆழ்குழாய்க் கிணறுகளுக்காக எவ்வளவு பணம் செலவழிக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவரவர்களே, மத்திய அரசு, அந்தக் கிராமக் குடிநீர்த் திட்டம் வறட்சி நிவாரணப்பணி பிரச்னைகள், குடிதண்ணீர் வசதி அளிக்க, துளைக் கிணறுகள் போடுவதற்கு, அரசு வறட்சி நிவாரணப் பணித் திட்டத்தின்கீழ், 1982–83-ல் ரூ.12.22 கோடி, 1983–84-ல் ரூ.7.94 கோடி ஆக ரூ. 20.16 கோடி வழங்கியிருக்கிறது.

துரிதப்படுத்தப்பட்ட ஆக்சலரேடட் ஸ்கீம்—அந்தத் திட்டத்தின் கீழ் 1982–83-ல் ரூ. 8.56 கோடியும், 1983–84-ல் 6.94 கோடியும், ஆக ரூ. 15.50 கோடி கொடுத்திருக்கிறது. இத்துடன் 348 திட்டங்கள் ஊக்குவிக்கும் திட்டங்களின் கீழ் நிறைவேற்றப்படும். அதற்காக ரூ. 4 கோடி கொடுக்கப் பட்டிருக்கிறது.

திரு. வே. இராஜசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசினுடைய பணம் ஆழ் துளைக் கிணறுகளுக்காக சென்னை நகரத்திற்காக எவ்வளவு செலவழிக்கப் பட்டிருக்கிறது? சென்னை நகரில் ஆழ்துளைக் கிணறுகள் தோண்டப்பட்டுள்ளனவா, எத்தனை கிணறுகள்? எந்தெந்தப் பகுதிகளில் தோண்டப்பட்டுள்ளது, இவைகளில் எவ்வளவு உபயோகப்படுத்தக்கூடிய நிலையில் இருக்கிறது என்பதனை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவரவர்களே, சென்னை நகரில் எத்தனை ஆழ் துளைக் கிணறுகள் போடப் பட்டுள்ளன, எவ்வளவு மார்க்—2 பம்புகள் போடப்பட்டுள்ளன? எவ்வளவு லாரிகள் ஓட்டப்பட்டுள்ளன? எவ்வளவு டாங்குகள் போடப்பட்டுள்ளன? போன்ற தகவல்களுக்கு எல்லாம் ஒரு தனிக் கேள்வி போட்டால் விவரமாக பதில் தருகிறேன்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: தலைவரவர்களே, இந்த ஆழ் துளைக் கிணறுகள் போடுவதன் மூலமாக, போர்கள் போடுவதன் மூலமாக ஓரளவு குடிதண்ணீர் பிரச்சினை தீர்க்கப் பட்டிருப்பதற்காக என்னுடைய பாராட்டைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆழ் துளைக் கிணறுகள் போடுவதற்காக தனித்தனியாக செலவழிக்கப்படுகிறதே, அவைகளை எல்லாம் மாற்றி அமைத்து, ஒரு காம்ப்ரஹென்சிவ் ஸ்கீம்—என்ற அடிப் படையிலே ஒரு இணைப்புத் திட்டமாக, பல கிராமங்களை இணைத்து குடிதண்ணீர் பிரச்சினையை தீர்க்கமுடியுமா? தெரிவிக்கப்பட்ட இந்தத் திட்டங்களை அமல் நடத்துவதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவரவர்களே, சோர்ஸ், தண்ணீர் கிடைக்கும் இடத்தைப் பொறுத்தும், எவ்வளவு தண்ணீர் கிடைக்கிறது என்பதைப் பொறுத்தும், மக்கள் தொகையைப் பொறுத்தும், கிராமங்கள் இருக்கக் கூடிய நெருக்கடியான இடத்தைப் பொறுத்தும், தனித்தனியான திட்டம், காம்ப்ரஹென்சிவ் ஸ்கீம் என்ற அளவிலே போடப் பட்டிருக்கிறது. அதைச் சீரமைத்துச் செயல்படுத்திக் கொண்டு வருகிறது. ஆனால் சிலஇடங்களில் இருக்கின்ற எதிர்ப்பின் காரணமாக, குறிப்பாக இராமநாதபுரம் மாவட்டத்திலே, ஏன் இந்த ஊரிலிருந்து அடுத்த ஊருக்கு போகும்படியாகக் கொடுக்கப் பட்டிருக்கிறது என்று சொல்கிறார்கள். ரொம்ப கஷ்டமான பிரச்சினை தான். இப்படிப்பட்ட செபரேட் காம்ப்ரஹென்சிவ் ஸ்கீம் போடப்பட்டாலும் அதைப் பற்றி அரசு பரிசீலனை செய்துகொண்டிருக்கிறது. குறிப்பாக இராமநாதபுரம் மாவட்டத் திலே இருக்கக்கூடிய உறுப்பினர்கள், காம்ப்ரஹென்சிவ் ஸ்கீம்—திட்டத்திற்கு ஒத்துழைப்பு, தெரிவிக்கக்கூடிய வகையில், மக்களைத் தயார் செய்து, பக்குவப்படுத்த வேண்டுமென்று அரசின் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-00)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. எல். இளையபெருமாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லு கின்ற பதிலில் சென்னை நகரத்தைப் பொறுத்தவரையில் இந்தக் குடிநீர்ப் பிரச்சனை காரணமாக லட்சக்கணக்கான ரூபாய்கள் செலவழிக்கப்பட்டு இருப்பதாகச் சொன்னார்கள். அவ்வாறு குடிநீருக்காக போடப்பட்ட குழாய்கள், டாங்குகள், கைப்பம்புகள், தற்போது உபயோகப்படுத்தப் படாமல் கேட்பாரற்று கிடக்கின்றன. அவைகள் எல்லாம் வீணாகப் போகக்கூடிய நிலைமையில் இருக்கின்றன. எனவே இவைகளை எல்லாம் எடுத்து, அரசின் சார்பிலே ஏலம் போட்டு, அரசுக்கு வருவாய் வரக்கூடிய வகையில் அரசாங்கம் உடனடியாக ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.



136215

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் இராஜசேகரன் அவர்களும், இளையபெருமாள் அவர்களும் சென்னை நகரிலேயிருந்து தேர்ந் தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு நிரம்ப தகவல் களைக் கொடுக்கவேண்டும் என்று தான் நான் ஆசைப்படுகிறேன். எல்லாவிதமான தகவல்களையும், எத்தனை குழாய்கள் போடப் பட்டன, எவ்வளவு லாரிகள் ஓட்டப்பட்டன, எவ்வளவு தொகை செலவழிக்கப்பட்டது, போன்ற விவரங்களைத் தருவதற்கு, ஒரு அவசர கால வினாவாகப் போட்டால்கூட (குறுக்கீடு) தனிக்கேள்வி யாக போட்டால் கூட பதில் தர தயாராக இருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மூலக்கேள்விக்கும், உறுப்பினர் இளையபெருமாள் கேட்ட கேள்விக்கும் சம்பந்தம் இல்லை.

### சென்னையிலுள்ள விம்கோ தொழிற்சாலை நிறுவனம்.

94—(*வினா எண். 20119)—திரு. கே. எம். தங்கமணி : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை விம்கோ தொழிற்சாலை (WIMCO LIMITED) நிறுவனத்தினர் அடிக்கடி தொழிற்சாலையை மூடி வருவதன் காரணமாக அரசு தலையிட வேண்டி மேற்படி தொழிற்சங்கத் தலைவரிடமிருந்து அரசுக்கு மனு அனுப்பப் பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) சென்னை யிலுள்ள விம்கோ தொழிற்சாலை நிர்வாகம் தங்கள் நிறுவனத்தை மூடிவிடுவதாக இதுவரை எந்தவித முன்னறிவிப்பும் கொடுக்க வில்லை. மூடுதல் குறித்து நேரடியாக எந்தவித தொழிற் தகராறும் இந்த துறை முன் எந்த ஒரு தொழிற்சங்கத்தின் மூலமும் எழுப்பப்படவில்லை.

(ஆ) இந்த வினாவுக்கு இடமில்லை.

### 1982—83 ஆம் நிதியாண்டில் கோ—ஆப்டெக்ஸ் நிறுவனம் விற்பனை செய்த துணிகளின் மதிப்பு.

95—(* வினா எண் 18453)—திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : மாண்புமிகு கைத்தறி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோ–ஆப்டெக்ஸ் நிறுவனம் 1982–83 நிதி ஆண்டில் விற்பனை செய்த துணிகளின் மதிப்பு என்ன?

(ஆ) மேலும் விற்பனையைப் பெருக்க சிறப்புத் திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : (அ) ரூ. 79.79 கோடி.

(ஆ) கோ–ஆப்டெக்சின் விற்பனையை மேலும் பெருக்க—

1. புதிய விற்பனை நிலையங்கள் தொடங்கப்படும்.

2. இதுவரை நவீனப்படுத்தாத விற்பனை நிலையங்களை நவீனப்படுத்தப்படும்.

3. பாலியஸ்டர் எம்பிராய்டரி சேலைகளிலும், ஜனதா சேலைகளிலும் புதுப்புது ரகங்கள் அவ்வப்போது அறிமுகப் படுத்தப்படும்.

4. பண்டிகை காலங்களில் முக்கிய நகரங்களில் கைத்தறி கண்காட்சிகள் நடத்தவும் மற்றும் சிற்றூர்களில் தற்காலிக விற்பனை நிலையங்கள் திறக்கப்படும்.

5. அகில இந்திய கைத்தறி வாரவிழாவின் போது கைத்தறி கண்காட்சி நடத்துதல் போன்ற பல திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அவைகளும் அமுல் படுத்தப் படும்.

**கோவை, தேவாங்க கைத்தறி நெசவாளர் சங்கம் விடுத்துள்ள கோரிக்கை.**

96—(*வினா எண் 21095)—திரு. கு. ரமணி: மாண்புமிகு கைத்தறி—மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டத்தில் பல கோடி மதிப்புள்ள கைத்தறித் துணிகள் தேங்கிக் கிடப்பதை விற்பனை செய்ய இருபது சதம் கழிவுத்தொகையை நிரந்தரமாக அனுமதிக்க தேவாங்க கைத்தறி நெசவாளர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : (அ) ஆம்.

(ஆ) 20% கழிவுத் தொகை நிரந்தரமாக வழங்க இயலாது. அவ்வப்பொழுது அரசு வழங்கி வரும் சிறப்புத் தள்ளுபடிகளை பயன்படுத்தி இச்சங்கமும் பிற சங்கங்களும் தங்களிடம் தேங்கியிருக்கும் சரக்குகளை கணிசமான அளவில் குறைத்து வருகிறது. 20 சதம் சிறப்புத் தள்ளுபடித் தொகையை நிரந்தரமாக்க இயலாது.



திரு. கு. ரமணி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கோவை மாவட்டத்தில் உள்ள அந்தக் கைத்தறி நெசவாளர்கள், துணித் தேக்கத்தினால் பல்லாயிரக்கணக்கான நெசவாளர்கள் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள், அதனால்தான் அரசுக்கு இந்தக் கோரிக்கை முன் வைக்கப்பட்டு இருக்கிறது. நிரந்தரமாக அந்தத் தள்ளுபடி செய்வதை அனுமதிக்க முடியாது என்று சொன்னால், தேங்கிக்கிடக்கின்ற அந்தத் துணிகள் முழுவதையும் அரசே விலைக்கு வாங்கி அவர்களை அந்தக் கஷ்டப்படக்கூடிய நிலையில் இருந்து விடுவிக்க அரசு முன்வருமா என்று நான் அறிய விரும்புகிறேன்? மறுபடியும் அவர்களுடைய தறிகள் இயங்க அரசு ஏற்பாடு செய்யுமா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறப்புத் தள்ளுபடி காலத்தை ஏற்கனவே அது 30 நாட்களாக இருந்ததை தற்போது 60 நாட்களாக உயர்த்தியிருக்கிறோம். எனவே இது பல பிரதம சங்கங்களுக்கு அவர்களுடைய விற்பனையை அதிகரிக்க உதவியாக இருக்கிறது. சிறப்புத் தள்ளுபடி என்கிறபோது அந்தச் சிறப்புத் தள்ளுபடியிலே வருகின்ற அந்தப் பணத்தை அரசாங்கம் கொடுக்க வேண்டும். உதாரணத்திற்கு சென்ற ஆண்டு 20 சதவீதம் சிறப்புத் தள்ளுபடி மூலமாக தமிழ்நாடு அரசு கொடுத்தது சுமார் 15 கோடி ரூபாய் ஆகும். ஆனாலும் கோவாப்டெக்ஸ் என்கிற தலைமைச் சங்கத்தில் சுமார் 60 கோடி ரூபாய் அளவிற்கு தற்போது தேக்கம் இருக்கிறது. எனவே, ஏற்கெனவே இயங்கிக் கொண்டிருக்கிற விற்பனை நிலையங்கள் மூலமாகவும், அவற்றை விரிவுபடுத்தியும், புதிய விற்பனை நிலையங்களை திறந்தும், பிரதம சங்கங்களுக்கு தேவையான உதவிகளைச் செய்தும் கோவாப்டெக்ஸ் நிறுவனம் தகுந்த நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்தையும் கோவாப்டெக்ஸ் தலைமைச் சங்கம் பின் பற்றி வருகிறது, அப்படியும் விற்பனை செய்ய இயலாமல் தேங்கிக் கிடக்கும் துணிகளை – அந்தப் பகுதி பிரச்னை பற்றி – விற்பனை செய்வதற்கு கோவாப்டெக்ஸ் நிறுவனம் தகுந்த நடவடிக்கை எடுக்கும்.

திரு. ஆ. வெள்ளைச்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முந்தைய கேள்விக்கு அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறபோது, 79 கோடியே 79 லட்சத்திற்கு கடந்த ஆண்டு விற்பனை ஆகியிருப்பதாகச் சொன்னார்கள். இருந்தபோதிலும் தேக்கம் என்பது கைத்தறி துணி விற்பனையில் ஒரு பிரச்னையாகவே இருக்கிறது. இந்தப் பிரச்னையை தீர்க்கிற வகையில் அனைத்து பள்ளிக் குழந்தைகளுக்கும், கைத்தறி துணியிலேயே சீருடையாக பயன்படுத்த வேண்டும் என்று ஆலோசனை வழங்கி இதற்கு நிரந்தர தீர்வு காண வழி வகை செய்யப்படுமா என்று அறியவிரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆண்டுக்காண்டு கோவாப்டெக்ஸினுடைய மொத்த விற்பனை கூடிக் கொண்டே வந்திருக்கிறது, ஏறத்தாழ சென்ற ஆண்டு 80 கோடி, 81–82–ல் 70 கோடி, 80–81–ல் 48 கோடி, 79–80ல் 36 கோடி என்ற வகையில் ஒவ்வொரு ஆண்டும் வளர்ந்து வந்திருக்கிறது. வருகிற ஆண்டு இந்த விற்பனையின் டார்ஜெட்டை 100 கோடியாக நிர்ணயித்து, இன்னும் 100 கடைகளை, விற்பனை நிலையங்களை திறக்க, இந்த ஆண்டே நடவடிக்கையை அரசு எடுத்துக் கொண்டிருக்கிறது, சீருடையாக கைத்தறியை வைக்க வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டதை, தயவுசெய்து மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்களிடத்திலே கேட்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் தேங்கிக் கிடக்கின்ற துணிகளையெல்லாம் கோவாப்டெக்ஸ் மைய நிறுவனத்தின் மூலம் விற்றுத் தீர்த்துக் கொள்ள முடியுமேதவிர, அரசே விலைக்கு வாங்கி தொழிலாளர்களுக்கு உதவி செய்ய இயலாது என்று கூறினார்கள். ஆனால், பிரதம சங்கங்களி லிருந்து விற்பனைக்காக வாங்கியிருக்கும்படியான ஏராளமான துணிகளுக்கு கொடுக்க வேண்டிய பணத்தையே கொடுக்காமல் இருக்கிறார்களே; போன தீபாவளியின் போது கூட ஏராளமான அளவுக்கு துணிகள் விற்றும் அவர்களுக்கு கொடுக்க வேண்டிய பணத்தை கொடுக்காமல் இருக்கின்ற காரணத்தால், பல பிரதம சங்கங்கள் வேலை செய்ய முடியாமல் இருக்கிறதே, அவர்களுக்கு கொடுக்க வேண்டிய பணத்தை முழுவதுமாக கொடுப்பதற்காவது, உடனடியாக ஏற்பாடு செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறியவிரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: தலைவரவர்களே அரசு பரிசீலிக்கும்.

திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவாப்டெக்ஸ் நிறுவனமாகட்டும், பிரதம சங்கங்களிலாகட்டும், கைத்தறித் துணியின் தேக்கத்திற்கு மிக முக்கியக் காரணம், அங்கே தயாரிக்கப்படும் தயாரிப்புகள் மிக பழைய தயாரிப்புகளாகவும், மக்கள் விரும்பி வாங்க முடியாத தயாரிப்புகளாகவும் இருக்கிற காரணத்தால் தான் இப்படிப்பட்ட தேக்கம் ஏற்படுகிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விற்பனையை அதிகரிக்க எவ்வளவோ நடவடிக்கைகளை எடுத்தாலும் மக்கள் விரும்பி வாங்க முடியாத தயாரிப்புகளை கூட்டுறவு சங்கங்கள் தயாரிப்பதினால், இப்படிப்பட்ட தேக்கத்தை தவிர்க்க முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிறதே. தேக்கத்தை தவிர்க்க வேண்டுமென்றால், மக்கள் விரும்பி வாங்கக்கூடிய புதிய ரகங்களை தயாரிப்பதற்கும் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அதற்கு பயிற்சி அளிக்கவும், போதிய நடவடிக்கை களை எடுக்கவும் அரசு முன் வர வேண்டும். அதற்கு முயற்சி களை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்?



மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் போல, இந்தப் பிரச்னையை ஏற்கெனவே கோவாப்டெக்ஸ் நிறுவனம் மேற்கொண்டிருக்கிறது. பிரதம சங்கங்களுக்கு உதவுவதற்காக பல வடிவமைப்பு நிலையங்கள், டிசைன்ஸ் சென்டர்கள் போன்றவற்றின், மூலமாக மக்களுடைய தேவைக்கேற்ப, ரசனைக்கேற்ப குறைந்த விலையில் அப்-டு-டேட்டாக, மற்ற ஆலைகளிலிருந்து வருகின்ற துணிகளோடு போட்டி போடுகின்ற அளவுக்கு நவீன வகையில் துணிகளை உருவாக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இந்த வடிவமைப்பு நிலையங்கள், மாதிரி வடிவமைப்பு செய்து, கலர், டிசைன் போன்றவைகளில் தக்கவாறு மாற்றம் கொண்டு வர உதவியாக இருந்து வருகிறது. இவற்றை பிரதம சங்கங்கள் தேவைக்கேற்ப பயன்படுத்திக்கொள்ளவேண்டும் என்று இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 10–10)

திரு. இரெ. இராசமாணிக்கம்: தலைவர் அவர்களே, தேங்கிக் கிடக்கிற கைத்தறித் துணிகளை 10 கோடி ரூபாய்க்கு துணிகளை வாங்கி ஏழைகளுக்கு புத்தாண்டு தினத்தன்று வழங்குவதாக அறிவிக்கப்பட்டது. 10 கோடி ரூபாய்க்கு துணி வாங்குகிறபோது அது கோ–ஆப்டெக்ஸ் நிறுவனத்திலிருந்து வாங்கப்பட்டதா? அல்லது வெளி மாநிலங்களிலிருந்து வாங்கப்பட்டதா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: தலைவரவர்களே, நிலமற்ற விவசாயிகளுக்கு வயதான முதியோர்க்கு எல்லாம் வழங்கப்படுகிற வேட்டி, சேலைகள் கோ–ஆப்டெக்ஸ் நிறுவனத்திடமிருந்து கைத்தறித் துறையின் மூலமாக வாங்கி விநியோகம் செய்யப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி: தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியிலே அதிகமான துணி தேக்கம், தறிகள் பாதிக்கப் பட்டிருக்கின்றன. மேலும் விற்பனையைப் பெருக்க சிறப்புத் திட்டம் ஏதாவது அரசின் பரிசீலனையில் உள்ளதா என்று கேள்வி இருக்கிறது. அதிகமான துணிகளை விற்பனை செய்வதற்காக பலவிதமான கண்காட்சிகள், பலவிதமான ரிபேட்கள் கொடுக்கின்ற ஏற்பாடுகளைச் செய்கிறார்கள். இப்படிப்பட்ட அதிகமான செலவுகளைக் குறைத்து கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் 35 சதவீதம் லாபம் வைக்கிறது, பிரைமரி சங்கங்கள் 12 சதவீதம் லாபம் வைக்கின்றன, அதனால் 100 ரூபாய் அடக்க விலையாகும் துணியை 150 ரூபாய்க்கு விற்கக்கூடிய நிலைமை இருக்கிறது. இதனால் துணிகளை அதிகமாக வாங்கக் கூடியவர்கள்கூட குறைத்து வாங்குகிறார்கள். ஆகவே கோ–ஆப்டெக்ஸ் 35 சதவீதம் லாபம் வைக்காமல் 15 சதவீதம் லாபம் வைக்கக்கூடிய அளவுக்கு அதன்மூலம் துணிகளை அதிகமாக விற்பனை செய்யக்கூடிய ஏற்பாடுகளை அமைச்சர் அவர்கள் செய்வார்களா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: தலைவர் அவர்களே, லாபத்தினுடைய சதவீதத்தை குறைப்பது அந்த நிறுவனத்தினுடைய எஸ்டாபிளிஸ்மெண்ட் செலவுகள், ஏறத்தாழ 610 விற்பனை நிலையங்கள் தமிழ்நாடு முழுவதும் வெளிநாடுகளில் சிங்கப்பூர் உள்பட பல விற்பனை நிலையங்களில் பணியாற்றும் பணியாளர்களுக்கு அந்த இடங்களுக்குக் கொடுக்கவேண்டிய வாடகை போன்ற பல்வேறு செலவினங்களுக்கு பணம் தேவைப்படுகிறது. ஒரு நிறுவனம் தொடர்ந்து நட்டத்தில் இயங்கிவர முடியாது. அப்படி இயங்கிக் கொண்டிருந்தால் மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகர்சாமி அவர்களே பின்னாலே ஒரு கேள்வியைப் போடலாம். ஆகவே அதற்கேற்ப நடவடிக்கை எடுக்கப்படும்.

**குழந்தைகள் சத்துணவுத் திட்டத்திற்காகத் தேர்வு செய்யப்பட்ட பால சேவிகாக்கள்.**

97—(* வினா எண். 16884)— திரு. என். பழனிவேல்: மாண்புமிகு சத்துணவுத் திட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குழந்தைகள் சத்துணவுத் திட்டத்திற்கு (2-5 வயது) பாலசேவிகா வேலைக்கு ஆள் எடுக்கப்பட்டபொழுது, நேர்முகத் தேர்வில் கலந்துகொண்டவர்கள் எவ்வளவு பேர்?

(ஆ) அவர்களில் எவ்வளவு பேர்களுக்கு வேலை போடப்பட்டுள்ளது?

(இ) அவர்களுக்கு மாதச் சம்பளம் எவ்வளவு?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராசன்: (அ) குழந்தைகள் சத்துணவுத் திட்டத்திற்கு (2–5 வயது) பாலசேவிகா வேலைக்கு ஆள் எடுக்கப்பட்டபொழுது நகர்ப்புறங்களில் 15,592 பேர்களும், கிராமப்புறங்களில் 93,982 பேர்களும் ஆக மொத்தம் 79,574 பேர்கள் நேர்முகத் தேர்வில் கலந்துக் கொண்டனர்.

(ஆ) அவர்களில் நகர்ப்புறங்களில் 4,907 பேருக்கும் கிராமப்புறங்களில் 23,013 பேருக்கும் ஆக மொத்தம் 27,920 பேர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்பட்டது.

(இ) இவர்களுக்கு மாதம் ரூ. 175 வீதம் மதிப்பூதியம் வழங்கப்படுகின்றது.

**தஞ்சை மாவட்டத்தில் இயங்கிடும் கால்நடை கிளை நிலையங்கள்.**

98— (* வினா எண். 17361)—திரு. இரெ. இராசமாணிக்கம் மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டத்தில் இயங்கிவரும் கால்நடை கிளை மருத்துவமனைகள் அனைத்தும் சொந்தக் கட்டிடத்தில் இயங்கி வருகின்றனவா?



மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: தலைவரவாகளே, ஆக்கூர் கால்நடை கிளை நிலையம் கால்நடைப் பராமரிப்புத் துறையின் சொந்தக் கட்டிடத்திலும், தலைஞாயிறு கால்நடை கிளை நிலையம் யூனியனிடம் இருந்து பெற்ற வாடகையில்லாக் கட்டிடத்திலும் இயங்கி வருகின்றன. இதர 99 கிளை நிலையங்கள் இலவசக் கட்டிடங்களிலும், வாடகைக் கட்டிடங்களிலும் செயல்பட்டு வருகின்றன.

திரு. இரெ. இராசமாணிக்கம்: தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்திலே இயங்கிவருகிற கால்நடை கிளை நிலையங்களில் பெரும் பகுதி வாடகையில்லாமல் கிராமப் புற பகுதியில் உள்ளவர்களால் கொடுக்கப்பட்டு இருக்கிற கட்டடங்களில் நடத்தப்படுகின்றன. அவைகள் வசதியில்லாத கட்டடங்களில் இயங்கி வருகின்றன. அந்தக் கட்டடங்களை அரசின் சார்பிலே சொந்தக் கட்டடங்களாக கட்டிக் கொடுக்க அரசு ஏற்பாடு செய்யுமா? அந்த கிளை நிலையங்களில் பெரும்பகுதியான இடங்களிலே பணியாளர்கள் இல்லாமல் அவைகள் மூடப்பட்டிருக்கின்றன. அதற்கு என்ன காரணம் என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: தலைவர் அவர்களே, 50 கிளை நிலையங்கள் இலவசக் கட்டடங்களிலும், 49 கிளை நிலையங்கள் வாடகைக் கட்டடங்களிலும் இயங்கி வருகின்றன. சொந்தக் கட்டடங்கள் அமைக்கப்படுமா என்று கேட்கிறார்கள். கிராமப்புறங்களில் சொந்தக் கட்டடங்கள் கொடுத்தாலும் சரியான முறையிலே அமைக்கவில்லை என்று அவர்கள் குறிப்பிடுகிறார்கள். புதிய கிளை நிலையங்கள் ஆரம்பிக்கிற போது கட்டடங்கள் கட்டுவதற்கு வரைமுறை கிடையாது. கிளை நிலையங்கள் கட்டுவதற்கு, நிரந்தரக் கட்டடங்கள் கட்டுவதற்கு ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் கட்டடம் கட்டுவதற்கு சாத்தியக்கூறுகள் உள்ளன. அதுசம்பந்தமாக தஞ்சை மாவட்ட ஊரக வளர்ச்சி திட்ட அலுவலர் கால்நடை கிளை நிலையங்களுக்கு நிலையான கட்டடங்கள் கட்டுவதற்கு தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு பிரேரணை அனுப்பி இருக்கிறார்கள், என்று கால்நடை பராமரிப்பு துறை இயக்குநர் தெரிவித்து இருக்கிறார்கள். மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து பதில் கடிதம் வந்த பிறகு மாண்புமிகு உறுப்பினருக்கு தெரிவிக்கப்படும்.

திரு. இரெ. இராசமாணிக்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஆரம்பத்தில் கேட்டது பல இடங்களில் பணியாளர்கள் இல்லாமல் கிளை மருத்துவ மனைகள் மூடி வைக்கப்பட்டு இருக்கின்றன. பணியாளர்கள் பற்றாக்குறை என்று சொல்கிறார்கள். அது உண்மையா? மூடிவைக்கப் பட்டுள்ளவைகள் அனைத்தும் உடனடியாக இயங்குவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், எந்த இடங்களில் கால்நடை கிளை நிலையங்கள் மூடப்பட்டு இருக்கின்றன என்ற விவரத்தை கொடுப்பார்களானால் அதற்கு வேண்டிய நடவடிக்கையை அரசு எடுக்கும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய ஊரில் உள்ள பழையபள்ளி கிளை நிலையமான மருத்துவ மனை மூடிவைக்கப்பட்டு இருக்கிறது மாவட்ட ஆட்சித் தலைவருக்கும் இது சம்பந்தமாக மனு எழுதியிருக்கிறோம் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திருமதி. கோமதி சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி மூடி வைக்கப்பட்டுள்ள கிளை நிலையம் செயல்படுத்துவதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். எஸ். மாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிடுகிறபோது ஐ.ஆர்.டி.பி. திட்டத்தின் கீழ் கட்டிடங்கள் கட்டுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாக சொன்னார்கள். எனவே அதே என்.ஆர்.ஈ.பி. திட்டத்தின் மூலமும் அந்த மாதிரி கிளை நிலையங்களை கட்டி முடிப்பதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு உத்தரவிட்டு அந்த திட்டம் நிறைவேறுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி. கோமதி சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவருக்கு பிரேரணை அனுப்பப்பட்டுள்ளது. தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து கடிதம் வந்தவுடன் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### பெண்கள் வேலை வாய்ப்பு அபிவிருத்தி கார்ப்பரேஷன் அமைக்கும் திட்டம்.

99—(* வினா எண். 18310)—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெண்கள் வேலைவாய்ப்பு அபிவிருத்தி கார்ப்பரேஷன் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?



(ஆ) ஆம் எனில், அதன் விவரமென்ன?

(இ) எப்பொழுது துவக்கப்படும்?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: (அ) தமிழ்நாடு பெண்கள் முன்னேற்றத்திற்கான கழகம் அமைப்பதற்கான ஆணையை அரசு 3-10-83 அன்று பிறப்பித்துள்ளது.

(ஆ) இக்கழகம் பெண்களின் முன்னேற்றத்திற்காக முனைந்து செயல்படும். இது ஒரு பொது நிறுவனமாக பதிவு செய்யப்படும். இதன் அலுவலகம் சென்னையில் இருக்கும். இக்கழகத்தின் அனுமதிக்கப்பட்ட மூலதனம் ரூ. 1கோடி ஆக இருக்கும். கம்பெனிகள் பதிவாளரிடம் பதிவு செய்யப்படும் வரை இக்கழகத்தின் முன்னோடிப் பணிகளைக் கவனிக்க அரசு சிறப்பு அலுவலர் ஒருவரை நியமித்துள்ளது.

(இ) இக்கழகம் 9-12-1983-லிருந்து செயல்படத் தொடங்கியிருக்கிறது.

திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கழகம் 9-12-83-லிருந்து செயல்படுகிறது என்றும் சென்னையைத் தலைநகரமாகக் கொண்டு இயங்குகிறது என்றும் அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். இந்தக் கழகத்தில் பெண்களுக்கு எந்தெந்த தகுதியின் அடிப்படையில் உதவிகள் செய்யப்படுகிறது என்பதை அமைச்சரவர்கள் தெரிவிப்பார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பெண்களின் பொருளாதார முன்னேற்றத்தை குறிக்கோளாகக் கொண்டு இந்த திட்டம் ஆரம்பிக்கப்பட்டு இருக்கிறது.

திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொருளாதார முன்னேற்றத்தைக் கொண்டுவருவதற்காகத்தான் கார்ப்பரேஷன் ஆரம்பிக்கப்படும். பெண்களுக்கு உதவி செய்வது. பொருளாதாரம் முன்னேற வேண்டுமென்பதை தாங்கள் ஒத்துக்கொள்கிறேன். எந்த தகுதியினுடைய அடிப்படையில் அவர்களுக்கு கடனாக தரப்போகிறீர்களா? அல்லது வேறு ஏதாவது தொழில் செய்வதற்கு உதவி செய்யப்போகிறீர்களா? அல்லது விண்ணப்பம் போட வேண்டும் என்றால் அவர்களுக்கு என்ன தகுதி ஏதாவது நிர்ணயம் செய்து இருக்கிறீர்களா? என்பதையும் இதுவரையில் யாராவது உதவியைப் பெற்று இருக்கிறார்களா? என்பதையும் நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலை வாய்ப்பு மகளிர் மேம்பாட்டுக் கழகம் செயல்படுகிறபோது அதற்கு வேண்டிய தகுதி மற்றவைகள் பற்றிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ரா. உமாநாத்: மாண்புமிகு பேரவைத் தலைவரர்களே, பெண்கள் வேலைவாய்ப்பு அபிவிருத்தி கார்ப்பரேஷன் அமைப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். தாய் குலத்திற்கு இப்போது இருக்கிற வேலை வாய்ப்பின் மீதே பெரும் படையெடுப்பு நடக்கிறது என்பதை நான் கூறிக் கொள்கிறேன். பெண்கள் என்ற ஒரே காரணத்தினால், பல்வேறு பெருத்த சகாய நிதி அவர்களுக்கு கொடுக்க வேண்டும் என்ற காரணத்தினால், அதனால் எக்ஸ்ட்ரா செலவு ஆகிறது என்ற காரணத்தினால் பல்வேறு பெண் தொழிலாளர்கள் இன்றைக்கு பல தொழில்களில் ஈடுபட்டுக்கொண்டு இருப்பவர்களை வீட்டுக்கு அனுப்பப்படுகிறார்கள். நான் ஒரு செய்தியைச் சொன்னால் உங்களுக்கே அது அதிர்ச்சியாக இருக்கும். மதுரா கோட்ஸ் என்ற நிறுவனத்தில் முன்பு 2 ஆயிரம் பெண் தொழிலாளர்கள் இருந்தார்கள். இப்போது அங்கே 2 பெண் தொழிலாளர்கள் தான் இருக்கிறார்கள். தாய்மையின் காரணமாக அவர்களுக்கு சகாய நிதி கொடுக்கவேண்டுமென்ற காரணத்தால் முதலாளிகள் இப்படி செய்து இருக்கிறார்கள். ஆகவே நான் கேட்க விரும்புகிறேன். தாய்மைப்பேறு அடைவதே குற்றம் என்கின்ற வகையில் வேலையில் இருக்கின்றவர்களையே வெளியே அனுப்புகின்ற நிலைமையை, வேலைவாய்ப்பு அபிவிருத்தி என்ற பெயரால் அமைந்திருக்கும் இந்தக் கார்ப்பரேஷன் தடுப்பதற்கு சீரியசாகக் கவனித்து நடவடிக்கை எடுக்குமா?

(முற்பகல் 10-20)

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்களுடைய உணர்வுகளை அரசு பரிசீலனை செய்யும்.

### தஞ்சை மாவட்டத்திலுள்ள கால்நடைகளுக்குக் குறைந்த விலையில் வைக்கோல் விநியோகம் செய்யும் திட்டம்.

100—(*வினா எண். 18352)—திரு.பொ. உத்திராபதி: மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டத்தில் கடும் வறட்சி ஏற்பட்டுள்ளதால், கால்நடைகளுக்கு வேண்டிய வைக்கோல் குறைந்த விலையில் கிடைக்கச் செய்ய அரசிடம் திட்டம் உண்டா?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : தலைவரவர்களே, தஞ்சாவூர் மாவட்டத்தில் ஒரத்தநாடு மற்றும் திருத்துறைப்பூண்டி ஆகிய இரண்டு வட்டங்களில்தான் வைக்கோல் பற்றாக் குறை இருந்தது. இதர வட்டங்களில் வைக்கோல் பற்றாக்குறை ஏற்படவில்லை. தஞ்சாவூர் மாவட்டத்தில் பெரும்பாலான பகுதிகள் வறட்சியால் பாதிக்கப்படவில்லை. எனவே, அந்த மாவட்டத்தில் 1983-84 ஆம் ஆண்டு வறட்சித் துயர் தணிப்புப் பணியின்கீழ் வைக்கோல் விநியோகம் செய்யப்படவில்லை.



மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. தகவல் கோரல்.

### மதுரையில் இந்தி அழிப்பு நடவடிக்கையில் ஈடுபட்ட சிலர் கைதாகியிருப்பது.

திரு. அ. ரகுமான்கான்: பாயின்ட் ஆஃப் ஆர்டர் சார். மாண்புமிகு மன்றத்தினுடைய தலைவரவர்களே, இன்றைக்கு விடியற்காலம் ஐந்து மணி அளவில் அடியார் அவர்களும், அவரைச் சேர்ந்த பலரும் மதுரையில் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். தற்பொழுது முதலமைச்சரவர்கள் சபையில் இல்லை. அவர் வந்த பிறகு எழுப்பலாம் என்று சொன்னால் அப்பொழுது எழுப்பத் தயார். அல்லது இதுகுறித்து தகவல் ஏதேனும் இருந்தால் அரசாங்கம் அறிவிக்குமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது போன்று தினசரி நடக்கும் காரியங்கள் பாயின்ட் ஆப் ஆர்டரில் வராது.

திரு. துரைமுருகன்; தலைவரவர்களே, அடியார் கைது செய்யப்பட்டார் என்றால் அது சாதாரணமாக அல்ல. ஒரு இரயில்வே நிலையத்தில் இந்தி எழுத்துக்களை அழிக்கப் போகும்பொழுது கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். இது அரசியல் கட்சி நடத்தும் போராட்டம். அதுகுறித்து அரசாங்கத்திற்குச் செய்தி வந்திருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இவற்றை வரைமுறையோடு கொண்டு வரவேண்டும். கேள்வி நேரம் முடிந்தவுடன் கொண்டு வந்தால் எப்படி பதில் சொல்ல முடியும்? கவன ஈர்ப்புத் தீர்மானமாகக் கொண்டு வருவதற்கோ அல்லது ஒத்திவைப்புத் தீர்மானமாகக் கொண்டு வருவதற்கோ வாய்ப்பா இல்லை? அப்படிக் கொண்டு வரலாம். அவ்வாறு செய்தால் மறுப்பதற்கு ஒன்றுமில்லை.

## 3. அறிக்கைகள் அளித்தல்.

### பொது நிறுவனங்கள் குழு.

திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

இந்தியத் தணிக்கை துறைத் தலைவரின் 1971-72 ஆம் ஆண்டு அறிக்கையின் (சிவில்) மீது பொது நிறுவனங்கள் குழு (1977-78) அளித்த இரண்டாம் அறிக்கையில் உள்ள பரிந்துரைகள் குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை பற்றிய பொது நிறுவனங்கள் குழுவின் முப்பத்தோராவது அறிக்கையையும்,

தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் 1971-72 முதல் 1976-77 வரையிலான ஆண்டு கணக்குகள் குறித்த தணிக்கை அறிக்கை மீதான பொது நிறுவனங்கள் குழுவின் முப்பத்தி இரண்டாவது அறிக்கையையும் நான் பேரவைக்கு அளிக்கின்றேன்.

## 4. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

### (அ) தொலைக் காட்சியில் வீடியோ கேசட் ரெக்கார்டர்கள் மூலம் (காணொலிச் சுருள் பேழை) திரைப்படங்கள் காட்டுதல் (முறைப்படுத்துதல்) சட்ட முன்வடிவு 1984.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்: ''தமிழ்நாடு 1984-ஆம் ஆண்டு தொலைக்காட்சியில் வீடியோ கேசட் ரெக்கார்டர்கள் மூலம் (காணொலிச் சுருள் பேழை) திரைப்படங்கள் காட்டுதல் (முறைப்படுத்துதல்) சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

### (ஆ) பச்சையப்பன் பொறுப்புக் கழகம் (நிருவாகத்தை எடுத்துக் கொள்ளுதல்) திருத்தச் சட்ட முன்வடிவு 1984.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்: ''1984 ஆம் ஆண்டு பச்சையப்பன் பொறுப்புக் கழகம் (நிருவாகத்தை எடுத்துக்கொள்ளுதல்) திருத்தச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.''

**திரு. ப. பொன்னுரங்கம்:** தலைவர் அவர்களே, இந்த பச்சையப்பா ட்ரஸ்ட் என்பதிலே 1983-ஆம் ஆண்டு டிசம்பரிலே இருந்து தனி அதிகாரிகள் நியமிக்கப்பட்டு நிர்வகித்து வரு கிறார்கள். அவ்வாறு தனி அதிகாரிகள் நியமிப்பதற்காகச் சொல்லப்பட்ட காரணம் என்னவென்றால் எலெக்ட் ஆன கமிட்டி மெம்பர்களுக்குள் தகராறு என்ற அந்தக் காரணத்தை முன்னிட்டு அதனைக் கலைத்துவிட்டு தனி அதிகாரிகளை நியமித் திருக்கிறீர்கள்.. தகராறு அங்கே மட்டும்தான் வருகின்றதா? இங்கே சட்டீச்சபையிலே கூடத்தான் வருகின்றது. அதற்காகச் சட்டசபையைக் கலைத்து விடமுடியுமா? எனவே தகராறு ஒன்றையே காரணம் காட்டி எலக்டட் பாடியினைக் கலைத்தது சரியல்ல. இப்போது மூன்றாண்டு காலமாக அது தனி





அதிகாரிகளின் நிர்வாகத்தில் இருந்து வருகின்றது. ஆனால் இப்போதாவது அது நன்றாக இருக்கின்றதா? அங்கே என்ன நடக்கின்றது? 18 ரூபாய் வாடகையைக் கொடுத்துவிட்டு 500 ரூபாய் மதிப்புள்ள வீட்டிலே குடியிருக்கிறார்கள். 20 இலட்சம் ரூபாய்க்கு செக் கொடுத்தால் அதனை......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதிலே உள்ள விஷயங்கள் அனைத்தையும் இப்போதே பேசிவிட வேண்டும் என்றில்லை. சட்டமுன்வடிவின் ஆய்வுநிலையிலே பேசிக்கொள்ளலாம்.

**திரு. ப. பொன்னுரங்கம்:** தலைவர் அவர்களே, இப்போது அதிகாரிகள் நியமிக்கப்பட்டதற்குப் பிறகும் பெரிய ஊழல் நடக்கின்றது.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, தனிப்பட்ட சிலராலே தேர்ந்தெடுக்கப்பட்டு அதன்படி சில பேரைக்கொண்ட ஒரு கமிட்டியாலே நிர்வகிக்கப்பட்டு வந்த ட்ரஸ்ட் இன்றைக்கு சர்க்கார் அதிகாரிகளின் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவரப்பட்டிருக்கின்றது. ஆகவே இவ்வாறு அரசின் கீழ் கொண்டுவரப்பட்ட ஒன்றை தனிப்பட்ட சிலராலே நடத்தப்படுகின்ற நிர்வாகத்தோடு ஒப்பிட்டுப் பார்த்து அரசைக் குறை கூற முயற்சி செய்வதை விட ஏதாவது தவறு இருந்தால் எடுத்துச்சொல்லலாம். அவ்வாறு நிர்வாகத்திலே தவறுகள் இருந்தால் அதுபற்றிக் குறிப்பிட்டு அதன்படி தவறுகளைத் திருத்திக் கொள்கின்ற வகையில் முயற்சி செய்வதுதான் சரியானகொள்கையாகும். அரசே அதனை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்ற கோரிக்கையினை ஆசிரியர்கள் சங்கங்கள் நிறைவேற்றி அதற்காக அவர்கள் பேசிக்கொண்டு வருகின்ற இந்தச் சந்தர்ப்பத்தில் அதனை அரசின் கட்டுப்பாட்டிலிருந்து எடுத்துவிட்டு சிலரிடத்திலே தரவேண்டும் என்பதுபோல் பேசுவது இதற்கு முன்னாலே நடைபெற்ற ஊழலைத் திரும்ப நடத்துவதற்குரிய முயற்சியினை எடுக்கிறார்களோ என்ற சந்தேகத்தை எங்களுக்கு ஏற்படுத்துகின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ப. பொன்னுரங்கம்:** தலைவர் அவர்களே, எந்த பர்ப்பஸுக்காக அங்கே இவ்வாறு செய்யப்பட்டதோ அந்தக் காரியத்தையே இவர்களும் செய்கிறார்கள்......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதுபற்றி எல்லாம் ஆய்விலே பேசிக்கொள்ளுங்கள். இப்போது வேண்டாம்.

பேரவை முன்னுள்ள கேள்வி—''1984 ஆம் ஆண்டு பச்சையப்பன் பொறுப்புக் கழகம்(நிருவாகத்தை எடுத்துக்கொள்ளுதல்) திருத்தச் சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்கவேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

[1984 பிப்ரவரி 20

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்டமுன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கின்றது.

(இ) பயணிப் பேருந்துகள். ஒப்பந்தப் பேருந்துகள் (கையகப் படுத்தல்) திருத்தச் சட்டமுன்வடிவு 1984

மாண்புமிகு திரு. கு. முத்துசாமி: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு பயணிப் பேருந்துகள், ஒப்பந்தப் பேருந்துகள் (கையகப்படுத்தல்) திருத்தச் சட்டமுன் வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்''.

திரு. ப. பொன்னுரங்கம்: தலைவர் அவர்களே, இச்சட்டமுன் வடிவை நான் அறிமுக நிலையிலே எதிர்க்கிறேன். இச்சட்டம் பேருந்துகளைத் தேசிய மயமாக்குகின்ற கொள்கைக்கு விரோத மானது. இதுபற்றி அரசியல் அமைப்பு பிரிவு 39 பி. அன்ட் சி. க்ளியராகச் சொல்கின்றது.

Ar icle 39 of the Constitution :

"39. Certain principles of polcy to be followed b, the St te'. The State shall, in particular, direct its policy tcwards securir.g---

.. .. .. .. ..

(b) that the ownership and control of the material resou.ces of the community are so distributed as best to subserve the common good;

(c) that the operation cf the economic sys'em does not result in the concentration of wealth and means of production to the common detriment".

ஆகவே இது பொது நோக்கத்தையே அழிக்கின்றது. எக்ஸம்ஷன் கொடுக்கின்றது. அதாவது 5 பஸ் வைத்துக்கொள்ள லாம் என்று சொல்வது தேசியமயக் கொள்கை அல்ல. 1973-ஆம் ஆண்டு கலைஞர் கருணாநிதி அவர்கள் அறிவித்த கொள்கை இதுவல்ல. ஊட்டியிலே உள்ள பேருந்துகளை 1973-லே தேசிய மயமாக்கினார்கள். படிப்படியாக பல மாவட்டங்களிலும் ஏற் படுத்தப்படும் என்ற வகையிலே செய்யப்பட்டது. ஆனால் இப்போது எக்ஸம்ஷன் கொடுப்பது என்பதிலேதான் பல தவறுகளும், முறைகேடுகளும் நடப்பதற்கு ஏதுவாக இருக் கின்றது......



1984 பிப்ரவரி 20]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சட்டமுன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறும்போது முழு விவரங்களையும் சொல்லுங்கள். இப்பொழுது இது போதும்.

பேரவை முன்னுள்ள கேள்வி: ''தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு பயணிப் பேருந்துகள், ஒப்பந்தப் பேருந்துகள் (கையகப்படுத்தல்) திருத்தச் சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.''

(முற்பகல் 10-30)

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. கு. முத்துசாமி: இச் சட்டமுன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்; இச்சட்டமுன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

### 5. ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம்—விவாதம் (தொடர்ச்சி.)

*திரு. பி. முகமது இஸ்மாயில்; மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது நடைபெற்றுக் கொண்டிருக்கிற விவாதத்தில் பங்கு பெற்று என்னுடைய சில கருத்துக்களை அவை முன் வைக்க நான் விழை கிறேன். ஆளுநர் அவர்கள் உரையில் தமிழக அரசுக்குத் தேவை யான நிதி உதவியைச் செய்வதற்கு மத்திய அரசு காலம் கடத்து கிறது அல்லது தவறி விடுகிறது என்ற குற்றச்சாட்டு சூசகமாக குறிப்பிடப்பட்டிருக்கிறது. மத்திய அரசு தகுந்த சமயத்தில், தகுதியான உதவியைத் தர மறுப்பதற்குக் காரணம், இந்த மாநில அரசு நம்முடைய கோரிக்கைகளை வலியுறுத்துவதற்கு தவறுவதும் தேவைப்பட்டால் போராடுவதற்குத் தவறுவதும் தான் என்று நான் கருதுகிறேன். இந்த மாநிலத்தை ஆளுகின்ற கட்சி, மத்தியிலே ஆளுகின்ற கட்சியோடு புதிதாக உறவு ஏற் படுத்துவதற்கு முயற்சி செய்கின்றதன் காரணம க, முழுமையாக நம்முடைய தேவையைப் பூர்த்தி செய்வதற்கு நிதியுதவியைப் பெறுவதற்கான போர்க் குணத்தை இழந்திருக்கிறது. எனவே, நம்முடைய அரசு ஒன்று மன்றாடிப் பெறுங்கள் அல்லது மண்டி யிட்டாவது பெறுங்கள் என்று நான் சொல்லிக்கொள்ள விரும்பு கிறேன்.

சென்ற ஆண்டு ஏற்பட்ட வறட்சியின்பொழுது வறட்சி நிவாரணப் பணிக்காக நாம் ரூ.217 கோடிக்கான திட்டத்தைத் தயாரித்தோம். மத்திய அரசு இதுவரையில் ரூ. 78 கோடி மட்டும் அனுமதித்திருப்பதாகவும் அதில் ஏறத்தாழ ரூ. 38 கோடி நாம் திருப்பிச் செலுத்தவேண்டிய கடனாகத் தந்திருப்பதாக வும் தகவல் வந்திருக்கிறது.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அதேபோல இந்த ஆண்டு ஆரம்பத்தில் திருச்சி, தஞ்சாவூர், புதுக்கோட்டை. தென் ஆற்காடு மாவட்டங்களில் ஏற்பட்ட வெள்ளப் பாதிப்பின் காரணமாக, நிவாரணப் பணிக்கு ரூ. 128 கோடிக்கான திட்டத்தை மத்திய அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறோம். இதுவரையில் ரூ. 5 கோடிமட்டும் அனுமதிக்கப்பட்டிருக்கிறது. ரூ. 128 கோடி கேட்டு மைய அரசு எந்த அளவுக்கு பண உதவி தரப் போகிறது என்பதை நம்மால் இப்பொழுது பூரணமாக அறிந்துக்கொள்ள முடிய வில்லை. வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகின்றபொழுது துரித நிவாரணம் தருவதற்குக்கடமைப்பட்டிருக்கிற மத்திய அரசாங்கம் மெத்தனமானப் போக்கில் நடந்து கொண்டது. அவர்கள் அனுப் பிய நிபுணர் குழுவின் அறிக்கையை மத்திய அரசு எதிர்பார்த்துக் கொண்டிருப்பதாகச் செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. இதற்கிடைப்பட்ட வேளையில் மாண்புமிகு மத்திய அமைச்சர் வெங்கட்டராமன் அவர்கள் ஹெலிகாப்டரில் பறந்து வெள்ளத் தால் பாதிக்கப்பட்ட இடங்களைப் பார்த்ததாகக் செய்திகள் வந்தன. அவர் பார்வையிட்டதனால் ஏற்பட்ட விளைவு என்ன என்பதை நம்மால் புரிந்து கொள்ள முடியவில்லை. சொகுசுப் பயணம் செய்வதற்காக அமைச்சருக்கு அது உதவியதே தவிர அவர் ஏதோ ரிப்போர்ட் சமர்ப்பித்ததாகவோ, அது சம்பந்த மான நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொண்டதாகவோ தெரியவில்லை. மத்திய அரசு அனுப்பியிருக்கும் நிபுணர் குழு இனிமேல்தான் தனது அறிக்கையினை சமர்ப்பிக்க இருக்கிறது. அந்த அறிக்கை வந்த பிறகு சிறிது காலம் கிடப்பில் கிடத்திவிட்டு பிறகு மத்திய சர்க்கார் சிறிது தொகை தரும் என்று நான் எண்ணுகிறேன். எனவே நான் அரசாங்கத்தைக் கேட்டுக்கொள் வது நாம் மத்திய அரசைக் குறை கூறுவதை நிறுத்திவிட்டு நம்முடைய நியாயமான உரிமைகளைப் போராடிப்பெற நம் முடைய அரசு தன்னை தயார் படுத்திக்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இங்கே எனக்கு முன்னர் பேசிய மாண்புமிகு உறுப்பினர் - தமிழகத்திற்குப் பல திட்டங்களைப் போட்டு மத்திய அரசுக்கு அனுப்பினால் தகுந்த சமயத்தில் உதவி வந்து சேரவில்லை யென்று சொன்னார்.

Dr. K. SOWRIRAJAN : I am on a point of order. He is casting aspersions on a Central Minister.



மாண்புமிகு உறுப்பினர் இஸ்மாயில் அவர்கள், மைய அமைச்சர் திரு. வெங்கட்டராமன் அவர்கள் சொகுசுப் பயணத்திற்காக வந்தது மாதிரி இருக்கிறதே தவிர, அவரது பயணத்தால் எந்த விதமான பயனும் ஏற்படவில்லையென்கிற மாதிரி சொல்கிறார். திரு. வெங்கட்டராமன் வந்ததால்தான் இராணுவம் முழு அள வோடு வெள்ள நிவாரண நடவடிக்கையிலே ஈடுபட்டதை அவர் களுக்கு நான் சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இதெல்லாம் பாயின்ட் ஆப் ஆர்டரிலே வராது. மற்ற உறுப்பினர்கள் பேசும்பொழுது பதில் சொல்லலாம்.

Dr K. SOWRIRAJAN : He is casting aspersions o" a C.ntral Minister.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நாம் எற்லோரும் அதைத்தான் செய்கிறோம்.

*திரு பி. முகமது இஸ்மாயில்: இங்கே வெள்ளத்தால் பாதிக்கப் பட்டிருக்கிறார்களா என்ற உண்மையை நேரில் கண்டுதான் தெரிந்துகொள்ள வேண்டுமென்ற நிலை இருப்பதாக நான் உணர வில்லை. மாநில அரசு தெரிவித்துள்ளதை வைத்தே தெரிந்துக் கொண்டிருக்கலாம். இந்த மாநிலத்தை ஆளுகின்ற அரசாங்கம் வெள்ளத்தால் மக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று தருகிற தகவல்களை ஏற்றுக்கொண்டு அவர்கள் என்னென்ன உதவிகளை நாடுகிறார்கள் என்று பார்த்து அதைத்தருவதற்கு கடமைப்பட்டிருக்கிற மத்திய அரசாங்கம், அமைச்சர் அவர்கள் சென்று பார்த்தால்தான் நிலைமைகள் தெரியும் என்று அமைச்சர் அவர்களை அனுப்பி அவர்களும் வந்து பார்த்தார்கள். அதனால் என்ன நன்மை ஏற்பட்டது? நிதியுதவி அளிக்கப்பட்டதா என்று உறுப்பினர் அவர்களைக் கேட்க விரும்புகிறேன்.

இந்த மாநிலத்திலே நிறைவேற்றப்படுகிற மத்திய சர்க்கார் திட்டங்களுக்கு காலா காலத்தில் போதிய உதவி வராத காரணத் தால் திட்டங்கள் தாமதப்படுகின்றன. குறிப்பாக கரூர்- திண்டுக்கல்-மதுரை—தூத்துக்குடி அகல ரயில் பாதைத் திட்டம் பலகாலமாக பேசப்பட்டு வந்தத் திட்டம். இப்போது அந்தத் திட்டத்திற்கு உருவம் கொடுத்திருக்கிறார்கள். நடப்பு நிதி ஆண்டிலே வெறும் 4கோடிரூபாய் ஒதுக்கியிருப்பதாகச் செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. இதற்கு ஆகும் மொத்தத் திட்டச் செலவு 42 கோடி ரூபாய். ஆகவே இன்னும் அதிகமாக பணம் ஒதுக்கினால்தான் நாம் சீக்கிரமாக இந்தத் திட்டத்தில் பூரண மாக முடிவு காண முடியும். இந்தத் திட்டத்தை வேகமாக செயல்படுத்துவதற்கு இன்னும் அதிக நிதி வரும் நிதியாண்டிலா வது ஒதுக்கித்தர வேண்டுமென்று மத்திய அரசை வலியுறுத்தும் படி இந்த அரசை கேட்டுக்கொள்கிறேன். இதன் தொடர்பாக புல அன்பர்கள் எனக்கு முன்னால் பேசியவர்கள் கோரிக்கைத்

தந்திருக்கிறார்கள். மதுரை–இராமநாதபுரம் சேம்பர் ஆப் காமர்ஸ்ஸை சார்ந்தவர்கள் ஜனவரித் திங்கள் 7-ம் தேதி இதற்காக ஊர்வலங்கள், உண்ணாவிரதங்கள் மதுரை மாநகரில் ஏற்பாடு செய்து அதில் அனைத்துக்கட்சியைச் சேர்ந்தவர்களும், எம்.எல்.ஏ., எம்.பி.-க்களும் கலந்துகொண்டு இந்தத் திட்டத்தை வலியுறுத்தி இருக்கிறார்கள். ஆகவே இந்தத் திட்டத்தை வேகமாகச் செயல்படுத்துவதற்கு மத்திய அரசை இந்த அரசு வலியுறுத்த வேண்டும்.

கன்னியாகுமரி நகரியத்தை ஒரு சுற்றுலா மையமாக உருவாக்குவதற்கான திட்டங்கள் நம்முடைய அரசாங்கத்திலே இருக்கின்றன. வருகிற சுற்றுலாப் பயணிகளுக்கு போதிய வசதிகள் இல்லாத நிலை இருந்து வருகிறது. பஸ் போக்குவரத்து இருந்தாலும் ரெயில் போக்குவரத்து மிகக் குறைவாக இருப்பதால் அதிகமான சுற்றுலாப் பயணிகளை நம்மால் ஈர்க்க முடியவில்லை. கரூர் திண்டுக்கல்-மதுரை-தூத்துக்குடி அகல ரயில் பாதை ஏற்பட்டால் கன்னியாகுமரிக்கு நேரடியாக ரெயில் இணைப்பு ஏற்படும். அதன் வாயிலாக சென்னையிலிருந்து தெற்கே செல்லும் எல்லா ரெயில்களும் தென் கோடியான கன்னியாகுமரிக்கு செல்லமுடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதோடு திருவனந்தபுரம் வரையில் வருகிற ரெயில்கள் அத்தோடு தடுத்து நிறுத்தப்பட்டு விடுகின்றன. அண்மையில் கூட சென்ற மாதம் ஜனவரி திங்கள் 26-ம் தேதி அஸ்ஸாம் மாநிலத்திலிருந்து விவேகானந்தா எக்ஸ்ப்ரஸ் என்று ஒரு ரயில் திருவனந்தபுரம் வந்து அதிலேயிருந்து கன்னியாகுமரி வரை விடப்படும் என்று பத்திரிக்கை செய்தியில் சொல்லப்பட்டிருக்கிறது. இது ஏதோ காரணங்களால் தடுத்து நிறுத்தப்பட்டிருக்கிறது. இந்த நாட்டின் தென்கோடி திருவனந்தபுரம் என்று கேரளாவிலே வாழ்கிற சில அன்பர்கள் நினைத்துக் கொண்டிருக்கலாம். ஆனால் அது கன்னியாகுமரி வரையில் நீண்டு இருக்கிறது என்பதை எடுத்துக் காட்டி வடக்கேயிருந்து வருகிற ரெயில்கள் கன்னியாகுமரி வரையில் வருவதற்கான ஏற்பாட்டினை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். திருவனந்தபுரம் வரையில் வருகிற ரெயில்கள் அங்கேயே தடுத்து நிறுத்தப்படுவதற்குக் காரணம் அங்கே இருக்கிற அன்பர்கள் ரெயில் நிர்வாகத்திலே அதிகமான ஆதிக்கத்தை செலுத்துவதற்கு சாத்தியம் படைத்தவர்கள். அவர்கள் தங்களுடைய செல்வாக்கைப் பயன்படுத்தி இதைச் செய்து கொண்டிருக்கிறார்கள். இந்த அரசாங்கம் இந்த மாநிலத்தின் நன்மையைக் கருதி வடக்கேயிருந்து வருகிற எல்லா ரெயில்களையும் கன்னியாகுமரி வரையில் வருவதற்கான ஏற்பாட்டைச் செய்ய மத்திய அரசை வலியுறுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

தெலுங்கு-கங்கைத் திட்டம் இரண்டு, மூன்று ஆண்டுகளில் நிறைவேறும் என்று இந்த மாநில மக்களுக்கு சொல்லப்பட்டது. நம்முடைய மாநில சர்க்கார் இதற்கான முன்தொகை 30 கோடி



ரூபாயை வழங்கியது. ஏறத்தாழ 700 கோடி ரூபாய் செலவாகும் இந்தத் திட்டத்திற்கு மத்திய அரசு உதவி செய்யவேண்டுமென்று ஆந்திர மாநில அரசும், தமிழக அரசும் வலியுறுத்தியும் கூட மத்திய அரசாங்கம் நிதியுதவி செய்ய முடியாது என்று முடிவாக சொல்லி விட்டது. அதுமட்டுமல்லாமல் அந்தத் திட்டம் உடனடியாக நடைபெறுவதற்கு முடியாமல் தடைகள் விதிக்கப்பட்டிருக்கின்றன. டெக்னிக்கல் இன்பர்மேஷன்கள் குறித்து நிபுணர்கள் கமிட்டி அரசாங்கத்திற்கு சில தகவல்களை சேகரித்துக் கொண்டிருக்கிறது. எழுப்பப்பட்ட பல பிரச்னைகளுக்கு பதில் வந்தும் கூட இன்னும் சில பிரச்னைகளை எழுப்பிக் கொண்டிருக்கிற காரணத்தால் தெலுங்கு-கங்கைத்திட்டம் அடுத்த ஐந்தாண்டுத் திட்டத்திலே சேர்க்கப்படாத நிலை ஏற்படும். ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே கொண்டு சென்று விடுவார்களோ என்ற ஐயப்பாடு எங்களுக்கு ஏற்படுகிறது. எனவே வெகு வேகமாக அந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு மத்திய அரசை இந்த அரசாங்கம் வலியுறுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-40)

இந்தத் திட்டம் அமல்படுத்தப்படும் என்று மாநில மக்களுக்கு 1976-ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 15-ஆம் தேதி உறுதி தரப்பட்டது. அந்த உறுதியைத் தந்தவர் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள். 7 ஆண்டுகள் ஆகியும் அந்தத் திட்டத்திற்கான எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. ஆந்திர மாநிலத்திலும். கருநாடக மாநிலத்திலும் இந்திரா காங்கிரஸ் ஆட்சி நடைபெற்றபோது இந்தத் திட்டத்தைப் பற்றி ஒன்றும் நடவடிக்கை எடுக்கவில்லை. அந்த ஆட்சிகள் மாறியபிறகு தான் இந்தத் திட்டம் உருப்பெற்று அறிவிக்கப்பட்டு இருக்கிறது. ஆகவே, இதை வேகமாக அமல்படுத்தவேண்டும் என்றும் இந்த சென்னை நகர மக்களின் குடிநீர் தேவையை இந்த அரசு தீர்த்து வைக்க முன்வரவேண்டும் என்றும் கேட்டு கொள்கிறேன்.

இந்த மாநிலத்தில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் திட்டம் நிறைவேற்றப்படாத பல நகராட்சிகள் இருக்கின்றன. அப்படிப்பட்ட நகராட்சிகளுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் திட்டத்தை உருவாக்குவதற்காக ஏறத்தாழ 149 கோடி ரூபாய் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளதாக ஆளுநர் உரையில் குறிப்பிடப்பட்டு இருக்கிறது. உலக வங்கி தரும் நிதி உதவியை வைத்துக்கொண்டு இதுவரையில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் திட்டம் நிறைவேறாத நகராட்சிகளுக்கு குடிநீர் திட்டத்தைக் கொண்டு வர உறுதியான வேலைகள் நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டு இருக்கிறது. இது தொடர்பாக அரசாங்கம் முன் வந்து, என்னுடைய தொகுதியான பத்மநாபபுரம் நகராட்சிப் பகுதியில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் திட்டம் இதுவரையில் நிறைவேற்றப்படாமல் இருப்பதால், அங்கே பாதுகாக்கப்பட்ட குடிநீர் திட்டம் கொண்டுவருவதற்கு அரசு

முன்வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இதுநாள் வரையில் அந்த நகரசபை இந்தத் திட்டத்தை நிறைவேற்றாததற்குக் காரணம் நிதிப்பற்றாக்குறைதான். குறைந்த வருமானம் உள்ள நகராட்சிகளுக்குக் கடன் கொடுத்தால் அவை திருப்பித் தருவதற்கு இயலாது என்பதால் அதற்கு அரசாங்கம் நிதிதரவும் தயங்குகிறது. ஆகவே, நலிந்த நிலையில் உள்ள நகராட்சிகளுக்கு அரசாங்கம் மானியமாக நிதி உதவி அளித்து, அந்தத் திட்டத்தை விரைவில் நிறைவேற்ற முன்வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பத்மநாபபுரம் நகராட்சியைப் பொறுத்தவரையில், இந்த ஆண்டு ஏறத்தாழ 47¼ லட்ச ரூபாய் செலவில் ஒரு குடிநீர் திட்டத்திற்கு உருவம் கொடுத்து இருப்பதாகச் செய்திகள் வந்திருக்கின்றன. அந்தத் திட்டத்தை நிறைவேற்ற இந்த அரசாங்கம் உடனடியாக முன்வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சென்ற ஆண்டு பட்ஜெட் கூட்டத்தில் குடும்பத்திற்கு ஒருவருக்கு வேலை தரப்படும் என்று வாக்குறுதித் தரப்பட்டது. இதற்காக 15 கோடி ரூபாயும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்று நிதிநிலை அறிக்கையிலும் தகவல் தரப்பட்டது. ஆளுநர் அவர்கள் உரையிலே அதைப் பற்றி எந்தவிதமான குறிப்பையும் காணோம். இதுவரையில் எத்தனை பேருக்கு வேலைவாய்ப்பு வழங்கப்பட்டது? இந்தத் திட்டத்தினால் எத்தனை பேருக்கு நன்மை ஏற்பட்டது என்கிற தகவல் எதுவும் இந்த ஆளுநர் உரையில் இடம் பெறவில்லை. இந்த உறுதிமொழி நிறைவேற்றுவதற்கான ஆணை கூட சென்ற ஆண்டு நவம்பர் மாதத்தில் தான் அரசால் வழங்கப்பட்டது என்பதை நான் அறிவேன். எனவே இதுவரையில் எத்தனை பேருக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டது என்ற விவரம் இந்த மன்றத்தில் தெரிவிக்கப்படவில்லை. இது வெறும் கண் துடைப்புத் திட்டமாக இல்லாமல், இந்தத் திட்டத்தினால் வேலை கிடைக்கும் என்று நம்பிக்கொண்டு இருந்த லட்சோப லட்சம் மக்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்தவேண்டும் என்று வலியுறுத்திக்கூற விரும்புகிறேன்.

வறுமைக்கோட்டிற்குக் கீழே உள்ள வேலையில்லாமல் இருக்கும் நபர்களுக்கு வேலை கொடுக்கப்படும் என்று ஆளுநர் உரையில் சுட்டிக்காட்டப்பட்டு இருக்கிறது. இது எந்தக் காலக் கட்டத்தில் நிறைவேற்றப்படும் என்பது தெரிவிக்கப்படவில்லை. எந்த அளவிற்குக் கொடுக்கப்படும் என்பதும் தெரிவிக்கப்படவில்லை. இதுகுறித்து நாட்டிற்குத் தகவல் தந்துஇருப்பதால், தகுந்த திட்டங்களைத் தீட்டி இதை நிறைவேற்றவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். பகட்டான வாக்குறுதிகளைத் தந்துமட்டும் தேச மக்களைத் திசைத் திருப்ப வேண்டாம் என்று நான் கேட்டுக்கொண்டு, நீங்கள் அறிவித்த திட்டங்கள் குறித்து மக்கள் நம்பிக்கை கொண்டு இருப்பதால், அவற்றை நிறைவேற்ற உறுதியான திட்டங்களை உருவாக்க முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.





வேலையின்மை நாளுக்கு நாள் உயர்ந்து கொண்டே வருகிறது. சென்ற 1979-80ஆம் ஆண்டில் இருந்த புள்ளி விவரங்கள்படி 10 லட்சம் நபர்கள் வேலை தேடித் தரும் ஸ்தாபனங்களில் பதிவு செய்து இருப்பதாக தகவல் வந்திருக்கிறது அதற்கு அடுத்த ஆண்டு 11 லட்சம் பேர்கள் என்று இருக்கிறது. 1982-83 ஆம் ஆண்டில் அது 14 இலட்சமாக உயர்ந்திருக்கிறது என்று புள்ளிவிவரங்கள் காட்டுகின்றன. வேலையின்மைப் பிரச்சனையை நீக்குவதற்கு உரிய கவனம் செலுத்தப்படாத நிலைமையில் எவ்வாறு அதிகமாக வேலைவாய்ப்பை ஏற்படுத்த முடியும் என்பது புரியவில்லை. இப்போது இருக்கிற வேலை வாய்ப்புகளை கூட நாம் இழந்துவிடுகிற சூழ்நிலையில் இருக்கிறோம். இந்த மாநிலத்தில் இருக்கிற பல மில்கள் கதவடைப்பு செய்திருக்கின்றன. பல மில்களில் தொடர்ந்து வேலை நிறுத்தம் செய்யப்படுகிறது. குறிப்பாக மேட்டூர் நகரத்தில் பீயர்ட்ஸல் (Be..dsol) நிறுவனம் கதவடைப்பு செய்திருக்கிறது. அதைப் போன்று மேட்டூர் டெக்ஸ்டைல் கார்ப்பரேஷன் ஒன்று இருக்கிறது. இதுவும் தனியார் நிறுவனம் தான். இந்த நிறுவனத்தை இன்னொரு தனியார் நிறுவனமான மதுரை ருக்மணி இன்வெஸ்ட்மென்ட்ஸ் நிறுவனம் விலைக்கு வாங்கியிருக்கிறது. அவர்கள் விலைக்கு வாங்கிய பிறகு போதிய பஞ்சு வாங்காத காரணத்தாலும் இருக்கிற இயந்திரங்களுக்கு உதிரிப்பாகங்கள் வாங்கத் தவறிய காரணத்தாலும் அங்கே பணி புரிகிற தொழிலாளர்கள் வேலையிலிருந்து பிரித்து விடப்படக்கூடிய ஒரு பெரிய அபாயம் வந்திருக்கிறது. அந்த நிறுவனத்தில் ஏறத்தாழ 2,800 தொழிலாளர்கள் வேலை செய்து வருகிறார்கள். முதலாளிகள் காட்டுகின்ற உதாசீனம் காரணமாக அந்தத் தொழிலாளர்களுக்கு வேலை இல்லாமல், நிறுவனம் மூடப்படக்கூடிய அபாயத்தை எட்டிக்கொண்டிருக்கிறது. அரசு அதை கவனத்தில் கொண்டு, ஆக்கப்பூர்வமான நடவடிக்கை எடுத்து, அந்த 2,800 தொழிலாளர்களும் தொடர்ந்து வேலையில் நீடிப்பதற்கான ஒரு சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போன்று பழனி தாலுகாவில் நெய்க்காரன்பட்டி இராஜரத்தினம் மில்லில் சென்ற 5 மாதங்களாக வேலையின்மை காரணமாக பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. அங்கும் கதவடைப்பு செய்யும் சூழ்நிலை உருவாகிக் கொண்டிருக்கிறது, அரசு அதையும் கவனித்து தகுந்த ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது போலீசுக்கு ஆள் எடுப்பதாக செய்தி வெளிவந்தது. 18-த்தேதி வேலைக்கு ஆள் எடுப்பதாக செய்தி வந்து, ஆயிரக்கணக்கானவர்கள் தேர்வுக்குச் சென்றிருக்கிறார்கள். அதேநேரத்தில் 1980-ல் ஏறத்தாழ 12,000 சிப்பாய்கள் வேண்டுமென்று கேட்டு. அதற்குத் தேர்வும் நடைபெற்றது நமக்குத் தெரியும். அதில் ஒரு பகுதி பேருக்கு மட்டுமே இன்றைதினம் வேலை கொடுக்கப்பட்டிருக்கிறது. எஞ்சியுள்ளவர்களுக்கு

நீங்கள் வேலைக்கு ரிப்போர்ட் செய்யுங்கள் என்று அவர்களுக்கு தகவல் வந்து, அவர்கள் சென்றிருக்கிறார்கள்; ஆனால் அவர்களுக்கு இன்னும் வேலை கொடுக்கவில்லை, அவர்களுக்கு வேலை கொடுக்க மறுக்கப்பட்டிருக்கிறது. இந்தச் சூழ்நிலையில் மேலும் புதிதாக பப்ளிசுக்கு ஆள் எடுக்கும் செய்தி வெளி வந்திருக்கிறது. தேர்வு செய்யப்பட்டும் வேலை கிடைக்காதவர்கள் ஏற்கெனவே உயர்நீதிமன்றத்திற்குப் போயிருக்கிறார்கள். நீதிமன்றத்திலும் அவர்களுக்கு வேலை கொடுக்க வேண்டுமென்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே தேர்வுக் குழுவால் தேர்வு செய்யப்பட்டு, நீதிமன்றத்திலும் வேலை கொடுக்க வேண்டுமென்று சொன்ன நபர்களுக்கு வேலை கொடுக்கப்படாத சூழ்நிலையில் புதிதாக ஆள் எடுப்பது சரியல்ல. அவர்களுக்கு வேலை கொடுத்த பிறகு மீண்டும் ஆள் எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வேலைக்கு தேர்வு செய்யப்பட்டுவிட்டதால் எப்படியும் வேலை கிடைத்துவிடும் என்ற நம்பிக்கையில் அவர்கள் எல்லாம் இருந்தார்கள். அதனால் அவர்கள் வேலை வாய்ப்பு தேடித்தரும் நிறுவனத்தில் தங்களுடைய கார்டை புதுப்பிக்க தவறிவிட்டார்கள். ஏறத்தாழ நான்கு ஆண்டுகள் கழிந்துவிட்டன. கார்டை பதிவு செய்து, புதுப்பிக்கத் தவறியதால், இப்போது வேலை இல்லை என்று சொல்லும்போது அவர்கள் தங்களுடைய பதிவு சீனியாரிட்டியை இழந்துவிடுகின்ற காரணத்தால் மீண்டும் புதிதாகப் பதிவு செய்ய வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. அதேநேரத்தில் அவர்களுடைய வயது வரம்பையும் தாண்டிவிடுகிறார்கள். அதனால் தங்களுடைய வாழ்நாளில் வேலைவாய்ப்பு இல்லாத ஒரு அபாயகரமான நிலையில் இருந்துகொண்டிருக்கிறார்கள். ஆகவே, அரசாங்கம் அவர்கள் பிரச்சினையை மனிதாபிமானத்தோடு பரிசீலித்து, வேலை கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போன்று அரசாங்கத்தில் ஏற்கெனவே தற்காலிகமாக டைப்பிஸ்ட்ஸ், ஸ்டேனோ—டைப்பிஸ்ட்ஸ் வேலையில் சுமார் 5,000 பேர்கள் இருக்கிறார்கள். இப்போது 4-வது குரூப் பணிகளுக்கு தேர்வு நடைபெற்றிருக்கிறது. இந்த நிலையில் அவர்களுடைய வேலைக்கு உத்தரவாதம் அளிக்கப்படுமா என்பது சந்தேகமாக இருக்கிறது. ஏற்கெனவே முதலமைச்சர் அவர்கள் அவர்களுடைய வேலைக்கு உத்தரவாதம் தரப்படும் என்று வாக்குறுதி தந்திருந்தாலும் அவர்கள் பொதுத் தேர்வில் பங்குகொள்ள வேண்டியிருப்பதால் அந்த வாக்குறுதிப்படி வேலை கிடைக்குமா என்பது சந்தேகமாக இருக்கிறது. ஆகவே, ஏற்கெனவே வேலையில் சேர்ந்து, வேலை செய்து வருகின்றவர்களுக்கு நிரந்தரமாக வேலை அளிக்க வேண்டுமென்று கேட்டு, நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.



(முற்பகல் 10-50)

திரு. எஸ். ஆண்டித்தேவர்: மாண்புமிகு மன்றத்தினுடைய மாற்றுத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்கள் நிகழ்த்திய உரையின் மீது, அகில இந்திய பார்வார்டு பிளாக் கட்சியின் சார்பாக, இங்கு பங்கேற்றுப் பேசுவதற்காக வாய்ப்பு அளித்தமைக்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆளுநர் உரையின் மீது எதிர்க்கட்சி என்ற முறையில், இருக்கின்ற நன்மைகளைப் பாராட்டியும், எடுத்துரைக்க வேண்டிய கருத்துக்களில், தவறு நிகழ்ந்த இடத்தில் சுட்டிக் காட்டியும், அங்கே குறைபாடுகள் இருக்குமானால், அதை அரசு திருத்தி அமைத்துக்கொள்ளும்படி கேட்டு என்னுடைய கருத்துக்களை தெரிவிக்க விரும்புகிறேன்.

ஆளுநர் உரையில், பெரிய மாவட்டங்களைப் பிரித்து, அதிலே பல்வேறு அரசியல் கட்சித்தலைவர்களுடைய பெயரை வைத்திருக்கிறது. குறிப்பாக இராமநாதபுரம் மாவட்டத்தை மூன்றாகப் பிரித்து, எங்களுடைய தலைவர்-தேசியத் தலைவர் பசும்பொன் இராமலிங்கத் தேவர் அவர்களுடைய பெயரை இந்த அரசு மாவட்டப் பெயராக சூட்டி அமைத்ததற்காக, எங்களது இயக்கத்தின் சார்பாக நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அப்படித் தேசிய தலைவர்களை பாராட்டி பெயர் வைக்கும்பொழுது, எதிர்க்கட்சியில் உள்ள அரசியல் தலைவர்கள் பல்வேறு கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். அண்ணா பெயரை வைத்தால் அண்ணா வழி வந்தவர்கள் என்றும், பெரியார் பெயரை வைத்தால் பெரியார் வழி வந்தவர்கள் என்றும், ஏன் அண்ணா பிறந்த ஊரான காஞ்சிபுரத்தை, தலைநகராகக் கொண்டு அண்ணா மாவட்டம் அமைக்கப்படவில்லை என்று கேட்கிறார்கள். பெரிய தேசியத் தலைவர்கள் இந்தியாவிற்கு செய்த பெரும்பணிகளுக்காக பாராட்டப்படக் கூடிய வகையில் தமிழகத்தில் இன்றைக்கு அவர்களின் பெயர் சூட்டப்பட்டிருக்கிறது. மற்ற மாநிலத்தைச் சேர்ந்தவர்களுக்கு ஏன் பெயரைச் சூட்டவில்லை என்று சொல்கிறார்கள். அண்ணா பெயரை திண்டுக்கல்லிற்கு வைத்தால், ஏன் காஞ்சிபுரத்திற்கு வைக்கவில்லை என்று கேட்கிறார்கள். எங்களுடைய தலைவரின் பெயரை வைத்ததற்காக மறுபடியும் மறுபடியும் நான் நன்றி சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அரசுப் பணியாளர்களின் நீண்டநாளைய கோரிக்கையாக இருந்த, ஓய்வுபெறும்போது ரூ. 10,000 கொடுப்பதை இந்த அரசு இந்த ஆண்டு தெரிவித்திருக்கிறது. ரூ. 10,000 அளிப்பது பாராட்டுதற்குரியது. அரசுப் பணியாளர்களே பாராட்டும்போது, எதிர்க்கட்சிகள் எதிரிகளாக மாறி, அரசு 5,000 தான் தருகிறார்கள் என்று சொல்கிறார்கள். அதற்கு முன்னால் ரூ.10,000-மானது அவர்களுடைய தொகையிலிருந்து பிடித்தம் செய்து அளிப்பதாக இருந்தது. ஆனால் இப்போது

அவர்களுடைய தொகையிலிருந்து ரூ. 5000தான் பிடித்தம் செய்யப்படுகிறது. அரசு ஊழியர்கள் ஒய்வுபெறும்போது ரூ.10,000 அளிப்பதை இந்த அரசு நிறைவேற்றியதற்காக பாராட்டாமல் இருக்கமுடியாது. அதேபோல கட்டிடத் தொழிலாளர்கள், பணியில் ஈடுபடுகின்றபோது உயிரிழந்தால் ரூ.10,000 கொடுக்கப்படுகிறது என்பதையும் பாராட்டாமல் இருக்கமுடியாது. அதற்காகவும், இந்த அரசிற்கு நான் என்னுடைய பாராட்டுதலை தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல உள்ளாட்சித் தேர்தலை வருகின்ற ஏப்ரல் மாதம் 19 ஆம் தேதி நடத்தப்போவதாக அறிவித்திருக்கிறார்கள். அது நடக்கவேண்டுமென்று எண்ணுகிற வகையில் தேர்தலை நடத்த வேண்டும். மற்றவர்களே புலி வருகிறது, புலி வருகிறது என்பதைப்போல் ஆண்டுக்கு ஒரு முறை தேதியை அறிவித்து, இந்த அரசு உள்ளாட்சித் தேர்தலைத் தள்ளிப் போடக்கூடாது என்று எங்களுடைய இயக்கத்தின் சார்பாக நான் அமைச்சர் அவர்கள் இங்கே இருக்கின்ற காரணத்தாலே அதைத் தெளிவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே போன்று வறட்சி நிவாரப்பணி; ஏற்கலவே மத்திய அரசிடமிருந்து உதவி பெற்று நடைபெற்றது. அதிலே குழாய்க் கிணறுகள் வெட்டப்பட்டது என்று சொன்னாலும் கூட, பல்வேறு தவறுகள் நேர்ந்திருப்பதைச் சுட்டிக்காட்டாமல் இருக்கமுடியாது. அரசினுடைய உதவி பெற்று குழாய்கள் அதிகமாக அமைக்கப்பட்டிருக்கின்றன. குழாய்கள் 150 அடி போடுவது என்று சொல்லி, 50 அடிக்குத்தான் போட்டு கணக்கு காட்டியிருக்கிறார்கள். 150 அடிக்கு அதிகாரிகள் பணம் வாங்கியிருக்கிறார்கள். அதுபோன்று குளங்களில் கிணறுகள் வெட்ட ரூ. 40,000, ரூ.50,000 செலவு செய்யப்பட்டு வெட்டப்பட்டது. ஆக அந்தப் பயன் யாருக்கு என்று தெரியவில்லை. அது நீர்ப்பாசனத்திற்குப் பயன்படுமா என்றால் முடியாது. அப்படி ஏறக்குறைய 400 லட்சம் ரூபாய் வரையில் செலவழித்ததாக சொல்லப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட இனங்களில் செலவழிக்கப்பட்டிருக்கிறது. அது மட்டுமல்ல. சாலை அமைப்பது போன்ற பணிகளில் ஈடுபட்டவர்களுக்கு இன்னும், என். ஆர்.டி.பி. ஸ்கீமிலே ஈடுபட்டு வேலை செய்தவர்களுக்கு அரிசி கொடுத்ததாகவும், அதுபோக பணம் கொடுத்ததாகவும் சொல்லப்படுகிறது. வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் செய்யப்பட்ட வேலைகளுக்கும் செலவு செய்யப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. இது மத்திய அரசிடம் இருந்து பணம் பெறுவதற்காக வேண்டுமானால் அந்த முறையை நாம் அமுல்படுத்தினோம் என்று சொன்னாலும், உண்மையிலே என்ன நடந்தது என்றால், அது பலருக்குத் தெரிந்து இருக்கும்-கான்ட்ராக்டர்கள் பணத்தைக் கொடுத்து விட்டு, உண்மையில் அரிசியைக் கொடுக்காமல், அந்த அரிசியை அதிக விலைக்கு விற்று லாபத்தை பெறக்கூடிய அளவிலேதான்



அவர்கள் செய்தார்கள். எனவே அப்படிப்பட்ட நிலையை மாற்றுவதற்கு இந்த அரசு முயற்சி செய்ய வேண்டும். மத்திய அரசிடம் மானியமாக பணத்தைப் பெறுவதற்கு நாம் இப்படிப்பட்ட முறையை அணுகவேண்டும். எந்த முறையைச் செய்தாலும் வேலை செய்தவர்களுக்கு அரிசி வழங்கப்படவில்லை என்ற இந்த உண்மையை ஏற்று, அதற்கு மாற்று வழிகளைக் கண்டுபிடிக்கவேண்டும்.

அடுத்து, கிராமங்களுக்கு குடிநீர் வழங்குவதற்காக அதிகமான அக்கறை காட்டப்பட்டதாக இங்கே கூறப்பட்டிருக்கிறது. ஆனால் அரசு அதிகாரிகள், நிதியை அரசாங்கம் ஒதுக்கினாலும், வாட்டர் போர்டில் உள்ள அதிகாரிகள் கிராமத்திலே எங்கே குழாய்கள் போடவேண்டுமோ, அங்கே போடாமல் 2, 3 பர்லாங்குகள் தள்ளி, அங்கே தான் தண்ணீர் இருக்கிறது என்று சொல்லி குழாய்களைப் போட்டுவிடுகிறார்கள். கிராமத்திலே உள்ள பெண்கள், தங்கள் வேலை முடித்து விட்டு, இரவு நேரங்களில் தண்ணீர் எடுக்கவேண்டும் என்று போனால், அங்கே லைட் இருக்காது. தனியாகத்தான் குடும்பப் பெண்கள் தண்ணீர் எடுக்கச் செல்லவேண்டும். இதுபோன்ற இடங்களில் குழாய்களை அமைத்துவிடுகிறார்கள்.

அடுத்து, மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளைப் பற்றி நான் ஏற்கனவே இந்த மன்றத்தில் பல்வேறு சந்தர்ப்பங்களில் சொல்லியிருக்கிறேன். 75 ஆயிரம் ரூபாய் செலவு செய்து என்னுடைய தொகுதியிலே, 10, 12 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டப்பட்டு அவைகள் 12 ஆண்டுக்காலமாக இயங்காமல் இருக்கின்றன. ஏன் இயங்கவில்லை என்று கேட்டால், மின் இணைப்புக் கொடுக்கவில்லை என்று சொல்கிறார்கள் அல்லது மின் இணைப்புக் கொடுத்தாலும் ஷாக் அடிக்கிறது என்று சொல்கிறார்கள். நாம் எவ்வளவு ரூபாய் போட்டு அவைகளைக் கட்டினாலும், அவைகள், நீண்ட காலமாக இயங்காமல் இருக்கிறது. மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் இயங்கவில்லை என்று நான் மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் போய்ச் சொன்னால், அதிகாரிகள் தவறான தகவலைக் கொடுக்கிறார்கள். இப்போது அது இயங்கிக் கொண்டிருக்கிறது என்று சொல்லுகிறார்கள், எனவே, அதிகாரிகள் தவறான தகவல்களை அரசுக்கு கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே அதிகமாக நாம் பணம் போட்டு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளைக் கட்டும்போது அது மக்களுக்கு பயன்படக்கூடிய வகையில் செய்யவேண்டும்.

உதாரணமாக, என்னுடைய உசிலம்பட்டித் தொகுதியில் புதிதாக மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி கட்டினார்கள். அதை டெஸ்ட் பண்ணுவதற்காக தண்ணீர் விட்டால் புதிதாக கட்டிய அந்தத் தொட்டி ஒழுகுகிறது. இதை நான் நேரிலேயே பார்த்து விட்டு வந்து இருக்கிறேன். அதை உபயோகப்படுத்த முடியுமா என்று தெரியவில்லை. அதுமட்டுமல்ல, அதிகாரிகள் தவறுதலாக அந்தத் தொட்டியைக் கட்டியிருக்கிறார்கள். 25 ஆயிரம்

காலன் தண்ணீர் கெப்பாசிட்டி அளவில் இருக்கவேண்டும் என்று அந்தத் தொட்டி கட்ட ஆரம்பித்து இப்போது அது 4 ஆயிரம் காலன் அளவு தண்ணீர் தான் கொள்முதல் செய்யக்கூடிய அளவில் அதைக் கட்டியிருக்கிறார்கள். அதிகாரிகளை மற்ற என்ஜினியர்களைக் கேட்டால், தேவையான அளவிற்கு அந்தப் பகுதிக்குக் கொடுக்கக்கூடிய நிலைமையில்லை என்று சொல்கிறார்கள். ஆகவே அரசாங்கம் எவ்வளவுதான் பணம் ஒதுக்கினாலும் அதிகாரிகள் செய்கின்ற தவறுகளின் காரணமாக மக்களுக்குக் கிடைக்க வேண்டிய நன்மைகள் கிடைக்காமல் போய்விடுகிறது.

அடுத்து, தஞ்சையில் ஏற்பட்ட வெள்ளத்தின் காரணமாக அந்த மாவட்டத்தில் உள்ள மக்களுக்கு, விவசாயிகளுக்கு ஏற்பட்ட துயரங்களைத் துடைப்பதற்கு தமிழகஅரசு உடனடியாக நிவாரண வேலைகளைச் செய்தது. ஆனால் மத்திய அரசிடமிருந்து கேட்ட தொகை கிடைத்ததா என்று சொன்னால் நிவாரணக் குழுவின் அறிக்கை இன்னும் சமர்ப்பிக்கப்படவில்லை என்று சொல்கின்ற நிலைமைகள் இருக்கின்றன. அந்தப் பகுதியில் பெய்த மழையின்காரணமாக விவசாயிகளும், விவசாயமும் பெரிதும் பாதிக்கப்பட்டு இருக்கிறது. இப்போது பெய்த மழையின் காரணமாக மிஞ்சி இருந்த அந்தப் பயிர்களும் பாதிக்கப்பட்டு, அவர்கள் அறுவடை செய்ய முடியாமல் தவித்துக் கொண்டு இருக்கிறார்கள். அங்கே நிவாரண நிதியாக 250 ரூபாய் கொடுத்ததாகச் சொன்னார்கள். அந்த நிவாரண நிதி சரியான அளவிலே பாதிக்கப்பட்டவர்களுக்குப் போய்ச்சேரவில்லை என்ற குற்றச்சாட்டு பல்வேறு முனைகளிலிருந்து இன்றைக்கு வந்து கொண்டிருக்கிறது. அதிகாரிகள் தவறான முறையில் அதை வழங்கியிருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். இதற்கு இதுவரையில் அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்று தெரியவில்லை. தவறு செய்த அதிகாரிகள்மீது அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறதா? இதுவரையிலும் எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றுதான் குற்றச்சாட்டுகள் வந்து கொண்டிருக்கின்றன.

(முற்பகல் 11-00)

அரசு அதிகமான தொகையை ஒதுக்கியிருந்தாலும்கூட, கிராம மக்களுக்கு முறையாக அது போய்ச் சேருவதில்லை. அதுபோலவே பயிர் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு கொடுக்க வேண்டிய மானியத்தை, அவர்களுக்கு சரிவர கிடைப்பதற்காக வழியைச் சரி செய்யவேண்டும், அது மட்டும் அல்ல இப்போது பெய்த பெரு மழையின் காரணமாக என்னுடைய பகுதியில் வைகை ஆற்றுப் பாசனத்தில் விவசாயம் செய்திருந்தபோதே புகையான் என்னும் நோயினால் பாதிக்கப்பட்டிருந்த பயிர்கள் அப்படியே நீரில் மூழ்கி அறுவடை செய்ய முடியாத நிலைமைக்கு ஆளாக்கப் பட்டன. ஒரு படி நெல்லை கூட வீட்டிற்கு எடுத்துக் கொண்டு போக முடியாத நிலையில் அந்தப் பகுதி விவசாயப் பெருமக்கள்



இருக்கிறார்கள். ஆகவே அந்தப்பகுதி விவசாயப் பெருங்குடி மக்களுக்கு, வரிவசூல் செய்வதிலிருந்து வரி வசூல் செய்வதற்கு முன் வருவதோடு, இப்போது கூட்டுறவுச் சங்கங்களில் வாங்கப் பட்ட கடன்களை வசூல் செய்வதற்கு ஜப்தி நடவடிக்கையை மேற்கொண்டு வருகிறார்கள் என்று தெரிகிறது.

ஆனால் இயற்கையின் காரணமாக பாதிக்கப்பட்டிருக்கின்ற அந்தப் பகுதி மக்களுக்கு, இந்த ஜப்தி நடவடிக்கையையும் தள்ளி போட வேண்டும் என்று நான் அரசை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து எந்த இயற்கை பாதிப்பு ஏற்பட்டாலும் இப்போது நிவாரணப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. சாதாரணமாக தீ விபத்து என்பது எப்போதாவது கிராமப்பகுதியில் குடிசைகளில் ஏற்படும். அப்படி தீ விபத்து ஏற்பட்டால் உடனடியாக அவர்களுக்கு 200 ரூபாயும், 5 படி அரிசியும் கொடுக்கிறார்களே தவிர, அவர்கள் கடனாகக் கேட்கிறார்களே, 3,000, அல்லது 4,000 வேண்டும், வீட்டுக்கு மேற்கூரை வேய்ந்துக் கொள்ள என்று அதைக் கொடுப்பதே இல்லை. கேட்டால் 2 ஆண்டுகள் ஆகியும் இதற்காக இன்னும் நிதி ஒதுக்கப்படவில்லை, கூட்டுறவுச் சங்கங்களிலும் போதிய நிதி இல்லை என்று சொல்கிறார்கள். ஆனால் அரசு ஊழியர்களுக்கும், மற்றவர்களுக்கும் பல்வேறு இடங்களில் பல்வேறு வீடுகளைக் கட்டுவதற்கு 40,000, 50,000 என்று கொடுத்து உதவுகிற இந்த அரசு, கிராமப் பகுதியில் இருக்கும் மக்களுக்கு, தான் இருக்கிற ஒரு சிறு வீட்டிற்கு கூரை வேய்வதற்காக 3,000 கேட்டால் கூட, அதில் இல்லை என்று பதில் சொல்வதற்கு மூன்று ஆண்டுகளை எடுத்துக் கொண்டால், எந்த அளவுக்கு கிராமப் பகுதி மக்களுக்கு இதில் நியாயம் கிடைக்கும் என்பதைத்தான் நான் இந்த நேரத்தில் சுட்டிக் காட்டி கேட்க விரும்புகிறேன்.

அடுத்தாற்போல் இந்த அரசு ஸ்ரீலங்கா பிரச்சனையில் முனைப்போடு நின்று மத்திய அரசை வலியுறுத்தி, அங்கேயிருந்து வந்த அகதிகளுக்கு உதவி செய்வதற்கு பல்வேறு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தாலும் கூட, இதில் நான் கேள்விப்படுவது என்னவென்றால் 1964 ஆம் ஆண்டு சிரிமாவோ பண்டாரநாயகா அவர்களுடைய ஒப்பந்தத்தின் கீழ், அங்கேயிருந்து அகதிகளாக வருகிறவர்களுக்கு மட்டும் தான், நமது அரசு சலுகைகள் கிடைக்கும் என்றும மற்றவர்களுக்கு சலுகைகளைச் செய்ய முடியாது என்றும் சொல்கிறார்கள். அப்படி இல்லாமல், ஈழத் தமிழர்கள், ஒப்பந்தத்தின் கீழ் வந்தவர்கள் என்ற பாகுபாடின்றி இலங்கையிலிருந்து யார் வந்திருந்தாலும், அகதி முகாமில் இருப்பவர்களுக்கு, எவ்வித பாரபட்சமும் இன்றி இதில் உதவி செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேத்தாற்போல் கிராமப்புற விவசாயிகளுக்கு கொடுக்கப்பட வேண்டி அளிக்கப்படும், உரம், விதை, வித்துக்கள், பூச்சி மருந்துகள் போன்றவற்றிற்காக 4.4 லட்சம் ரூபாயை செலவிட்டிருப்பதாக இந்த அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கிறது, கிராமப்பகுதியிலேயிருந்து வருகிற என்னைப் போன்றவர்களுக்குத் தெரியும் உண்மை. பூச்சி கொல்லி மருந்துகள் போன்றவைதான் கொடுக்கப்படுகின்றன. ஆனால் அங்குள்ள அரசு அதிகாரிகள் சில பெயர்களை பதிவேட்டில் எழுதிக் கொண்டு—யாராவது கருப்பன், சுப்பன் என்பது போன்ற பெயர்களை—அவர்களுக்கு கொடுத்ததாக, விநியோகம் செய்ததாகச் சொல்லி, வெளிக் கடைகளிலே மருந்தை விற்று விடுகிறார்கள். 12 ரூபாய்க்கு கூட்டுறவுச் சங்க கடையிலே கிடைக்கிற அந்த மருந்து வெளியிலே 20 ரூபாய்க்கு கிடைக்கின்றன என்ற காரணத்தால். அங்கே கடையிலேயே விற்று விடுகிறார்கள். இதனால் அங்குள்ள நியாயமான விவசாயிகளுக்கு, விவசாயம் செய்துக் கொண்டிருப்பவர்களுக்கு, மானிய விலையில் அது கிடைப்பதில்லை.

அதேபோன்று மானிய விலையில் கிடைக்கிற கடலை போன்ற வித்துக்களை, அங்கேயுள்ளவர்களே சில பெயர்களைப் போட்டு விநியோகித்ததாக எழுதிவிட்டு, பொது மார்க்கெட்டிலே விற்று அந்த லாபத்தை எடுத்துக் கொள்கிறார்கள் பாவம், கிராமப்புற விவசாயிகளுக்கு, கடலை போன்ற விதை வித்துக்கள் ஊராட்சி ஒன்றிய சங்கங்களில் வந்திருக்கிறதா இல்லையா என்ற அறிவிப்புக் கூட கொடுப்பது இல்லை இப்படி ஊழல்கள் அங்கே நடந்துக் கொண்டிருக்கிறது. அந்த ஊழலை செய்கிற அதிகாரிகள் இந்த அரசுக்கு வருகின்ற நல்ல பெயர்களை தடுத்துவிடுகிறார்கள். நாம் லஞ்ச லாவண்யங்களை ஒட்டு மொத்தமாக ஒழித்து விட்டோம் என்று சொல்லாவிட்டாலும், இதுபோன்ற பல்வேறுபட்ட பிரச்னைகளில் கவனம் செலுத்தி, ஏழை எளிய விவசாயிகளுக்கு உரம், விதைகள், பூச்சி மருந்துகள் போன்றவை, மானிய விலையில் கிடைக்கவாவது அரசு நடவடிக்கை எடுக்கலாமே, இப்படிப்பட்ட ஊழல்களைச் செய்கிற அதிகாரிகளை கண்டு பிடித்து அவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுப்பதன் மூலம், அதைப் பத்திரிகைகளிலே பிரசுரிப்பதன் மூலம் மற்ற அதிகாரிகளாவது திருந்தி நல்ல முறையில் பணிகளைச் செய்யும் அளவிற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்,

இன்றைக்குத் தொழிலாளர் பிரச்னை நாட்டிலே மிகக் கடுமையாக இருக்கிறது. தொழிலாளர் விரோத சர்க்கார் என்ற அளவிற்கு தமிழக சர்க்காருக்கு ஒரு பெயர் வந்துவிடக்கூடாது என்ற நல்ல எண்ணத்தில் சொல்கிறேன். பல்வேறு ஆலைகள் மூடப்பட்டிருக்கின்றன. தொழிலாளர்கள் பெருமக்கள் தெருவிலே நின்றுக் கொண்டிருக்கிறார்கள். நம்முடைய தொழிலாளர் நல அமைச்சர் அவர்களும், தமிழக அரசும் இதில் நேரிடையாக இறங்கி மூடிக்கிடக்கின்ற ஆலைகளைத் திறப்பதற்கு முனைப்பாக நடவடிக்கை எடுத்துக் கொள்ளாவிட்டால்,



தொழிலாளர் விரோத கொள்கை கொண்ட அரசு என்ற பெயர் உங்களுக்கு வந்து விடுமோ என்ற அச்சத்தால்தான் நான் இதை சொல்கிறேன்,

இப்படிப்பட்ட பிரச்னைகள் என்று மட்டும் அல்ல, காவிரி நீர் பிரச்னையையும் இந்த அரசு தொடர்ந்து பேசி வருகிறது. ஆனால் மைய அரசை, இதிலே ஈடுபடுத்தி இதிலே நடுநிலை வகித்து, தமிழக அரசுக்கு கிடைக்க வேண்டிய முறையான தண்ணீரை பெற்றுத் தரச் செய்யக் கூடிய அளவிற்கு வலியுறுத்துவதற்கு அரசு முன்வர வேண்டும். அப்படி மைய அரசை கண்டிக்கத் தயங்குகிற காரணத்தால்தான் நாம் பெற வேண்டிய உரிமைகளைப் பெற முடியவில்லை. மேற்கு நோக்கிப் பாய்கின்ற நதிகளை கிழக்கு நோக்கித் திருப்பினால் கடலில் வீணாகப் போகிற தண்ணீர் தமிழக மக்களுக்குக் கிடைக்குமானால் தமிழக மக்கள் வளமோடு வாழமுடியும் என்ற நிலையிருந்தும் மத்திய அரசோடு பேசி இந்த அரசு முனைப்போடு நடவடிக்கை எடுக்கவில்லை என்பதுதான்.

மாணவர்கள் பிரச்சினையை எடுத்துக்கொண்டால் மதுரையிலே இன்னும் தொடர்ந்து மாணவர்கள் போராடிக் கொண்டிருக்கிறார்கள். மதுரை மருத்துவக் கல்லூரி மாணவர்களை போலீசார் மிருகத்தனமாகத் தாக்கியிருக்கிறார்கள் என்ற செய்தி தெரிந்தும் உண்மையான நிலை என்ன என்பதைக் கண்டறிவதற்காக நாம் நீதி விசாரணை போட்டு இருக்கிறோம், நீதிபதிகள் பின்னாலே அதைச் சொல்ல இருந்தாலும், மேலெழுந்தவாரியாகப் பார்த்து அரசு முனைப்போடு நடவடிக்கை எடுக்கவேண்டும். மாணவர்கள் முதல் நாள் என்ன நடந்தது என்பதை டீனுக்கு சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் நடவடிக்கை எடுக்கிறேன் என்று சொல்லியிருப்பார்களானால் மாவட்ட ஆட்சித் தலைவரைச் சந்தித்துப் பேசுகிறேன். போலீஸ் அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கச் சொல்கிறேன் என்று சொல்லியிருப்பார்களானால் இந்தப் போராட்டமே வந்திருக்காது. ஆனால் அவர்கள், வெளியிலே நடக்கிற சம்பவத்தை வெளியிலே ஏதாவது செய்து கொள்ளுங்கள் என்று சொன்னதால்தான் மாணவர்கள் போராட்டத்திலே ஈடுபட்டார்கள். அதற்குப் பிறகு போலீசார் தாக்கினார்கள் என்ற நிலைமையெல்லாம் வந்தது. மாணவர்கள் கல்லூரிக்கு திரும்பக் கூடிய முறையிலே அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்த மருத்துவ அதிகாரிமீது நடவடிக்கை எடுக்கப்பட்டாலே மாணவர்கள் வேலைக்குத் திரும்பிவிடுவார்கள் என்ற நிலைமை இருக்கிறது. இதைசெய்து விட்ட பிறகு அதற்கு மேலும் நீதி விசாரணையில் யார் தவறு செய்தார்கள் என்று வருகிறதோ அவர்கள் மீது அரசு கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும், அதற்கு அரசாங்கம் உத்திரவாதம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து கல்வி முறையிலே மாற்றம் கொண்டுவரவேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். வேலைவாய்ப்பை மட்டுமே நோக்கமாகக் கொண்ட கல்வி முறை இல்லாமல் கல்வி முறையில் கவனம் செலுத்தி அந்தத் திட்டத்தை விட்டு விட்டு தொழில் கல்வி பயில்கின்ற முறையிலே மாற்றத்தைக் கொண்டுவர தகுந்த நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

முதலமைச்சரின் சத்துணவுத் திட்டத்தின்கீழ் பணியாற்றுகின்ற பெண்களை அறுவை சிகிச்சைக்கு ஆள்களைக் கொண்டுவரவேண்டுமென்று வற்புறுத்துகிறார்கள். மதுரை மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளர் ஒரு உத்தரவை அனுப்பியிருக்கிறார். ஒரு உத்திரவை நான் பத்திரிகையிலே பார்த்தேன். அமைச்சர் சொன்னார், அறுவை சிகிச்சைக்கு ஆள் கொண்டுவருகிற வேலைக்கு அவர்களை அனுமதிக்கக் கூடாது என்றும் அப்படி சொல்கிற அதிகாரிகள்மீது நடவடிக்கை எடுப்பேன் என்றும் சொன்னார். முதலமைச்சரின் சத்துணவுத் திட்டத்துறை செயலாளரைப் பார்த்து நான் சொன்னேன். அவர் சொன்னார், தாங்கள் ஜி.ஓ.போட்டு இருக்கிறோம். அவர்களை அப்படி வேலை வாங்கக் கூடாது என்று, சொல்லப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். இருந்தாலும் மதுரை மாவட்டத்திலே அப்படி அவர்கள் அந்தப் பணியிலே ஈடுபடவேண்டுமென்று வற்புறுத்தப்படுகிறது. மாதத்திற்கு ஒரு முறை ஆட்களைக் கொண்டுவரவேண்டும் என்று சொன்னால் அந்த அமைப்பாளர்கள் என்ன செய்வார்கள், அவர்கள் திருமணமாகாத பெண்கள். அவர்களை நம்பி யார் அறுவை சிகிச்சைக்கு வருவார்கள். அவர்கள் கொண்டு வராவிட்டால் வேலையில்லை என்று சொல்கிறார்கள். அவர்களுக்கு ஊதியமோ 175 ரூபாய் தான். அந்த சர்டிபிகேட், போலி சர்டிபிகேட் வழங்குகிறவர்கள் 150 ரூபாய் கேட்கிறார்கள் என்று சொல்கிறார்கள். அவர்களுக்குக் கொடுக்கிற இந்த குறைந்த ஊதியத்திலே அவர்களை இப்படிக் கொடுமைப்படுத்தினால் அவர்கள் அமைப்பாளர்களாக இருக்கமுடியுமா? அதன் காரணமாகத்தான் அரிசித் திருட்டு. எண்ணெய் திருட்டு முதலிய காரியங்கள் நடக்கின்றன. மதிய உணவுத் திட்டத்தின் மூலம் ஏழைக் குழந்தைகள் பயனடைகிறார்கள். அதிலே தவறுகள் நடப்பதற்கு அரசு அதிகாரிகளோ அல்லது அரசோ காரணமாக இருக்கக்கூடாது. ஆகவே அது திருத்தப்படவேண்டும். இப்படிப் பல்வேறு பிரச்சினைகளைச் சொல்வதற்கு அனுமதித்ததற்காக நான் மாற்றுத் தலைவர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொண்டு உரையை முடித்துக் கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

(மு.பகல் 11-10)

திரு. சேலம் மு. ஆறுமுகம்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இன்றையதினம் ஆளுநர் உரையில் பேசிய அனைத்து மாண்புமிகு எதிர்கட்சி உறுப்பினர்களும் கடந்த 37 ஆண்டுகளில்



நாடு சுதந்திரம் அடைந்த பிறகு எந்த ஒரு ஆட்சிக்கும் ஏற்படாத சொல்லிற்கு அரிய சோதனையையும் அதனால் இந்த நாட்டு மக்களுக்கு ஏற்பட்ட வேதனையையும் போக்க சாதனைக்குரிய ஆட்சி நடத்தக்கூடிய சரித்திர நாயகராக தமிழகத்தின் தலை நாயகராகிய புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியில் ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள், நகராட்சிகள் தேர்தல்கள் நிச்சயமாக திட்டமிட்ட பிரகாரம் நடந்தே தீரும் என்று ஆளுநர் உரையில் அறிவித்த பிறகு தேர்தல் வருமா? அதனால் இந்த மாநிலத்தில் ஒரு மாறுதல் ஏற்படுமா? அந்த மாறுதல் நமக்கு ஆறுதல் தருமா? ஆகவே யார் யாரோடு சேர்ந்தால் என்பதிலே இன்றைக்கு எதிர் கட்சிகள் ஆர்வம் காட்டுகிறார்களே தவிர ஆளுநர் உரையைப் பற்றி அவர்கள் அலசி ஆராய்ந்து இந்த அரசு செய்த நல்ல சாதனைகளை அவர்கள் சிந்திக்க மறுக்கிறார்கள். சிந்திக்க மறுப்பதோடு மட்டும் அல்ல அவர்களுடைய வாடிக்கையே இந்த அரசின் நல்ல காரியங்களை நிந்திப்பதை நாம் கடந்த காலத்திலிருந்து பார்த்துக் கொண்டு இருக்கிறோம். இன்றையதினம் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சியில் இலங்கைத் தமிழர் பிரச்சினையில் உலகத்தின் மிக உயர்ந்த நீதிமன்றமான உச்ச நீதி மன்றமான ஐ.நா. சபைக்கு கொண்டு சென்று மாபெரும் வெற்றியை மத்திய அரசோடு சேர்ந்து இந்த நாட்டில் கண்டவர் புரட்சித் தலைவர் அவர்கள், ஐ.நா. சபைக்குச் சென்று வெற்றியைக் கண்டவர் இங்கே அமைச்சராக அமைதியாக உட்கார்ந்துகொண்டு இருக்கிறார். ஆனால் இலங்கைப் பிரச்சினையை வைத்து இந்த ஆட்சியை அகற்றிவிடலாம் என்று அவ்வாவரத்தில் நின்று கொண்டு இங்கே ஆர்பரிக்கிறார்கள் சில அரசியல்வாதிகள். நான் அவர்களுக்கு சொல்லிக்கொள்வேன் இந்த அரசு எத்தனையோ சோதனைகளை வென்று இருக்கிறது என்பதை இன்றைக்கு நீங்கள் சிறிது நேரம் என்னுடைய வார்த்தையை செவிமடுத்தால் நிச்சயமாக தெரிந்துகொள்ளமுடியும்.

இங்கே நம்முடைய மார்க்கிஸ்டு தோழர்கள் இந்த ஆட்சியை தொழிலாளர் நலவிரோத ஆட்சி என்றும் முதலாளித்துவ ஆட்சி என்றும் அவர்கள் திரும்ப திரும்ப சொல்லிக்கொண்டே இருக்கிறார்கள், மார்க்கிஸ்டு கம்யூனிஸ்டு கட்சி தோழர்களும், இந்திய கம்யூனிஸ்டு கட்சி தோழர்களும் சிந்தித்துப் பார்க்க வேண்டும். கடந்த காலத்தில் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின் மீது அடுக்கடுக்கான ஊழல்களை பட்டியல் போட்டு மத்திய அரசுக்கு கொடுத்து அந்த ஆட்சியை டிஸ்மிஸ் செய்ய வேண்டும் என்று போராடினார்கள். ஆனால் அப்படிப்பட்டவர்களோடு இன்று கூடிக்கொண்டு அன்றைக்கு அண்ணாமலை நகரில் நீதியைக் கொன்றவர்களுடன் இன்றைக்கு கை கோர்த்துக் கொண்டு அண்ணா நகரின் வீதிகளில் உலா வருகிறார்கள். நீங்கள் உலா வருவதைக் கண்டு தமிழக மக்கள் விலா நோக உங்களைப் பார்த்து சிரிக்கிறார்கள். ஒரு கொள்கை வேண்டாமா? வோட்டு வேண்டும். வோட்டின் மூலம் பல சீட்டுகள் வேண்டும்

என்பதற்காக கொள்கையை லட்சியங்களை அடகு வைக்கலாமா? என்று மார்க்கிஸ்டு கம்யூனிஸ்டு கட்சி தோழர்களை கேட்டுக் கொள்கிறேன்.

மேற்கு வங்கத்தில் உங்கள் ஆட்சி நடக்கிறது. திரிபுராவில் உங்கள் ஆட்சி நடக்கிறது. தமிழ் மாநிலத்தில் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியில் ஏற்பட்ட தொழிலாளர் நலச் சட்டங்களை எண்ணிப் பாருங்கள். மார்க்கிஸ்டு கம்யூனிஸ்டு கட்சியின் வேலை எல்லாம் எங்கு ஆலைகள் மூடிக் கிடக்கின்றன, அதனால் எங்கெங்கே தொழிலாளர்கள் வாடிக்கிடக்கிறார்கள் என்பதை தேடி கண்டுபிடிப்பதே உங்களுடைய தொழிலாக இருந்து கொண்டிருக்கிறது.

இந்த ஆட்சியில் கைத்தறி நெசவாளர்களுக்கு பாதுகாப்புச் சட்டம் தொழிற்நிறுவனங்களில் தற்காலிக வேலை நீக்கத்தின் போது தொழிலாளர்களுக்கு அலவன்ஸ் கொடுக்கவேண்டும் என்ற சட்டம். 24 மாதங்களில் 16 மாதங்கள் 480 நாட்கள் வேலை செய்தால் அந்த தொழிலாளர்களை நிரந்தரமாக்க வேண்டும் என்ற சட்டம். அத்தியாவசிய தொழிற் நிறுவனங்களில் கதவடைப்பு செய்வதை தடுத்து நிறுத்தி தொழிற்தகராறு சட்டம் 10(பி) கொண்டு வந்தது. உடல் உழைப்பு தொழிலாளர்களுக்கு (மேனுவல் லேபரர்ஸ்) என்று சொல்லக்கூடிய கைவண்டி இழுப்போர், மூட்டை சுமப்போர், ஓட்டல் தொழிலாளர்களுக்கு பாதுகாப்புச் சட்டம் கொண்டு வந்தது. தமிழ்நாட்டில் கடலில் மீன் பிடிக்கச்செல்லும் மீனவர்கள், பனை ஏறும் தொழிலாளர்கள் விபத்தில் இறந்தால் அரசு உதவித் தொகை தருகிறது. கட்டிடத் தொழில்ாளர்கள் விபத்தில் இறந்தால் ரூ. 10,000 உதவித் தொகை வழங்குவதற்கு சட்டம். அரசு ஊழியர்கள் ஓய்வுபெறும்போது 10 ஆயிரம் ரூபாய் வழங்கும் திட்டம். இந்தியாவிற்கே முன்னோடித் திட்டம். இப்படிப்பட்ட திட்டங்களை கொண்டு வந்த மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களைப் பார்த்து அன்றைக்கு என்ன கேட்டார்கள் தெரியுமா நடிகர் நாடாளமுடியுமா? என்று கேட்டார்கள். இன்றைக்கு இந்த மாநிலமே வியக்கக்கூடிய அளவுக்கு தமிழ் மாநிலத்தை டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் ஆண்டு கொண்டு இருக்கிறார்கள். நடிகர் நாடாளமுடியுமா என்று கேட்டவர்களுக்கு ஆள முடியும் என்பதை இன்றைக்கு நடைமுறைப்படுத்திக் கொண்டு இருக்கிறார்கள். ஆனால் நாடாளமுடியுமா என்று கேட்டவர்களுடைய நா தான் இன்று ஆட முடியவில்லை என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

தமிழ்நாட்டில் இன்று வேளாண்மைத் துறையில் கடைபிடித்து வரும் நடவடிக்கைகளை இன்று உலக நாடுகள் பாராட்டுகின்றன. வேளாண்மைத் துறையில் இன்றைக்கு பிலிப்பைன்ஸ் நாடும் அமெரிக்க நாடும் முன்னேறிய நாடு என்ற நிலைமை மாறி தற்போது தமிழகம் வேளாண்மைத் துறையில் மிக வேகமாக முன்னேறி வருவதை நாம் இன்றையதினம் பார்க்கமுடியும்



அதுமட்டுமல்ல, மரியாதைக்குரிய மாண்புமிகு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் க்வனத்திற்கு ஒருசில புள்ளி விவரங்களை நான் எடுத்து வைக்க விரும்புகிறேன். தயவுசெய்து அவற்றை அவர்கள் கூர்ந்து கவ்னிக்க வேண்டுமென்று அவர்களை வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இன்றைக்கு எந்த மாநிலத்தில் வேலை நிறுத்தங்கள் குறைவு என்றால் அது தமிழகத்திலேதான், புரட்சித் தலைவர் ஆட்சிலேதான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். சிம்சன் பிரச்னையில் உழைக்கும் மக்களுக்குப் புரட்சித் தலைவர் வாக்குறுதி அளித்தார். எக்காரணம் கொண்டும் 'இந்த அரசு உழைக்கும் மக்களுக்கு எதிரான நிலையை எடுக்காது; உழைக்கும் மக்களின் உரிமையைக் காக்கும்; உழைக்கும் மக்கள் என்னை நம்பலாம் என்று புரட்சித் தலைவர் அறிவித்தார். இப்படிக் கூறுவதால் சில ஆலைகளில் பிரச்னைகளே இல்லை என்று நான் கூறவில்லை. ஒரு சில பிரச்னைகள் இருக்கின்றன. அவைகளைப் பேசித் தீர்ப்போம் என்று தான் கூறுகிறோம்,

ஆனால், எந்த மாநிலத்தில் இத்தகைய பிரச்னைகள் மிக மிகக் குறைவு என்றால் அது தமிழகத்தில்தான்—புரட்சித் தலைவர் ஆட்சியில்தான்,

மாண்புமிகு மார்க்சிஸ்ட் சகோதரர்களுக்கு ஒரு புள்ளி விவரத்தைக் கூற விரும்புகிறேன். அவர்கள் இதைக் கூர்ந்து கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவர்களுக்கு இந்தப் புள்ளி விவரங்களைக் கூற காரணம், நீங்கள் போயும் போயும் கலைஞர் கருணாநிதிக்கு மீண்டும் முடிசூட்டக் கிளம்பி விட்டீர்கள். இனி எந்தச் சூழ்நிலையிலும் அவர்கள் வருங்காலத்தின் வாரிசுகளாக ஆகவே முடியாது. அப்படிப்பட்டவர்களோடு சேர்ந்து கொண்டு இந்த அரசை நீங்கள் எதிர்ப்பது தான் வேடிக்கையாக இருக்கிறது. எனவே இந்தப் பட்டியலை வெளியிட வேண்டிய நிர்ப்பந்த நிலையை உருவாக்கியிருக்கிறீர்கள்.

1977ஆம் ஆண்டு நடைபெற்ற வேலை நிறுத்தங்கள் 206; ஈடுபட்ட தொழிலாளர்கள் 1,15,200 பேர். 1978-ஆம் ஆண்டு நடைபெற்ற வேலை நிறுத்தங்கள் 172; பங்கு கொண்ட தொழிலாளர்கள் 1,56,367 பேர். 1979ஆம் ஆண்டு நடந்த வேலை நிறுத்தங்கள் 146; வேலை நிறுத்தம் செய்த தொழிலாளர்களின் எண்ணிக்கை 3,84,515 பேர். 1980ஆம் ஆண்டு நடைபெற்ற வேலைநிறுத்தங்கள் 78; பங்கு பெற்ற தொழிலாளர்கள் 68,411 பேர். ஏற்பட்ட மனித உழைப்பு நாட்கள் இழப்பு, தோராயமாக 15 இலட்சமாகும், 1981-ம் ஆண்டும், 1982ஆம் ஆண்டும் நடைபெற்ற வேலைநிறுத்தங்களின் எண்ணிக்கை சரியாகக் கிடைக்கவில்லை. ஆனால், ஏற்பட்ட மனித உழைப்பு நாட்கள் இழப்பு முறையே

11 இலட்சம், 5 இலட்சம் ஆகும். இதிலிருந்தே நூற்றுக்கும் மேற்பட்ட இலட்சோபலட்ச ஆலைத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்து வீதிக்கு வந்ததைத் தெரிந்து கொள்ளலாம். இப்படி நூற்றுக்கணக்கான வேலை நிறுத்தங்கள் ஆண்டுதோறும் நடைபெறுவது தமிழகத்தில் அல்ல, மேற்கு வங்கத்தில்—மார்க்சிஸ்ட் கட்சி ஆளும் மாநிலத்தில்தான்.

இப்படி ஒரு அவல நிலை இங்கே ஏற்பட்டிருந்தால் என்ன கூறியிருப்பீர்கள்?

மார்க்சிஸ்ட் சகோதரர்களுக்கு இன்னொரு புள்ளி விவரத்.தயும் கூற விரும்புகிறேன். இதனையும் நினைவில் நிறுத்திக்கொள்வது அவர்களுக்குத் துணையாக இருக்கும்.

1977ஆம் ஆண்டு மூடப்பட்ட ஆலைகள் 191; வேலை இழந்து வீதிக்கு வந்த தொழிலாளர்கள் 1,36,354 பேர். 1978ஆம் ஆண்டு மூடப்பட்ட ஆலைகள் 199; வேலையிழந்து வீட்டுக்குப் போனவர்கள் 98,198 பேர். 1979ஆம் ஆண்டு மூடப்பட்ட ஆலைகள் 144: வேலையிழந்து வெளியேற்றப்பட்ட தொழிலாளர்கள் 49,310 பேர். 1980-ஆம் ஆண்டு மூடப்பட்ட ஆலைகள் 130; வேலையில்லை என்று விரட்டப்பட்ட தொழிலாளர்கள் 85,358 பேர், 1981ஆம் ஆண்டு மூடப்பட்ட ஆலைகளின் எண்ணிக்கை 200—க்கும் அதிகம்; வேலையிழந்த தொழிலாளர்கள் 1,50,000 பேர். 1982ஆம் ஆண்டு மூடப்பட்ட ஆலைகளின் எண்ணிக்கை 300-ஐக் கடந்தது. வேலையிழந்து, வேதனைக்கு ஆளான தொழிலாளர்களின் எண்ணிக்கை இரண்டு இலட்சத்தைத் தாண்டியது. இப்படி நூற்றுக்கணக்கான ஆலைகள் மூடப்படுவது தமிழகத்தில் அல்ல; மேற்கு வங்கத்தில் மார்க்சிஸ்ட் கட்சி ஆளும் மாநிலத்தில்.

இப்படி ஒவ்வொரு ஆண்டும் இலட்சக்கணக்கான தொழிலாளர்கள் வேலையிழந்து வீதிகளுக்குத் துரத்தப்படுவது புரட்சித் தலைவர் ஆட்சியில் அல்ல; மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கூட்டணி ஆட்சியில்தான்.

மேற்கு வங்கத்தில் 1983ஆம் ஆண்டு மூடப்பட்ட ஆலைகளின் எண்ணிக்கை கிடைக்கவில்லை. ஆனால் சென்ற ஆண்டும் தினசரி ஒரு ஆலை வீதம் மூடப்பட்டு வந்தது; இலட்சக்கணக்கான தொழிலாளர்கள் மேலும் வேலையிழந்து வேதனைக்கு ஆளாகி இருக்கிறார்கள், இன்று மேற்கு வங்கத்தில் சணல் ஆலைகளெல்லாம் மூடப்பட்டு விட்டன. இப்போது என்ஜினியரிங் ஆலைகள் மூடப்பட்டு வருகின்றன. இப்படி ஒரு நாளைக்கு ஒரு ஆலை வீதம் இங்கே மூடப்பட்டிருந்தால் இலட்சோபலட்சம் தொழிலாளர்கள் வேலையிழந்து வீட்டிற்குப் போயிருந்தால் நம்முடைய மார்க்சிஸ்ட் சகோதரர்கள் என்ன சொல்லியிருப்பார்கள்?



புரட்சித் தலைவர் அரசு முதலாளித்துவ அரசு என்று முத்திரை குத்தியிருப்பார்கள்; தொழிலாளர் விரோத அரசு என்று துந்துபி முழக்கியிருப்பார்கள். இன்றைக்கு எந்த மாநிலத்தில் கதவடைப்புகள் மிக மிகக் குறைவு என்றால் அது தமிழகத்தில்தான்; தானைத் தலைவர் தமிழகத்தின் தன் நாயகர் புரட்சித் தலைவர் ஆட்சியில்தான் என்பதை நான் இந்த மன்றத்திற்குக் கூற விரும்புகிறேன்.

(முற்பகல் 11-20)

மதுரை மாவட்டம், பாண்டியராஜபுரத்திலுள்ள சர்க்கரை ஆலையை புரட்சித் தலைவர் அவர்கள் நாட்டுடைமையாக்கினார்கள். இதைப்பார்த்து மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சகோதரர்கள் பாராட்டியது உண்டா? வரவேற்றதுண்டா? அவர்கள் நெஞ்சைத் தொட்டுப் பார்த்துக்கொள்ளட்டும். 1973-74 முதல் 1981-82 வரையிலான காலத்திலே தனி நபர் வருமானம் அரசு ஊழியர்கள், தொழிலாளர்கள் போன்றோருக்கு கிடைப்பதைப் பொறுத்தவரையில் மிகச் சாதகமான நிலைமையிலேதான் உயர்ந்திருக்கின்றது, ரூபாய் மதிப்பிலே மாற்றங்கள் ஏற்பட்ட நிலைமையிலும் தனி நபர் வருமானம் என்பது நன்கு உயர்ந்திருக்கின்றது. அதுபற்றி புள்ளிவிவரங்களுடன் நான் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன், தமிழ்நாட்டிலே தலா வருமானத்திலிருந்த மாற்றம் 73 சதவிதம் என்ற அளவில் தான் இருக்கின்றது. இதே காலத்தில் அதாவது 1973-74-முதல் 1981-82 வரையிலான இடைக் காலத்தில் அரசு ஊழியர்களின் ஊதியத்தைப் பொறுத்தவரையில் 116 சதவீதத்திற்குக் குறையாமல் உயர்ந்திருக்கின்றது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். புரட்சித் தலைவர் அவர்கள் அனைத்து தரப்பு மக்களாலும் போற்றப்படுவதற்கான ஆதாரம் இதுதான்.

புரட்சித் தலைவர் அவர்கள் நினைத்ததைச் செய்து முடிப்பவர். அவர் வெற்றித் திருமகன், அவர் 4½ கோடி மக்களின் நம்பிக்கை நட்சத்திரம். முத்தமிழ்நாட்டின் முதல்வர். முழங்கிடும் முத்தமிழின் முழு மதி. விண்ணிலே ஒரு நிலா. தமிழ் மண்ணிலே புரட்சித் தலைவரின் வெற்றி உலா. அலைகள் ஓய்வதில்லை. புரட்சித் தலைவரின் வெற்றி அலைகள் ஓய்வதில்லை. அந்த அலைகள் ஓயப்போவதும் இல்லை என்று கூறிக்கொண்டு பேச வாய்ப்பளித்தற்கு நன்றி கூறி மேதகு ஆளுநர் அவர்களின் உரையினை ஆட்சிக் கட்சி சார்பிலே வரவேற்று என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

*திரு. கே. அழகர்சாமி: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே எங்களுடைய உறுப்பினர்கள் பல விவரங்களைச் சொல்லியிருக்கிறார்கள். அதோடு மேலும் சில விவரங்களை நான் சொல்ல விரும்புகிறேன்.

[திரு. சோ. அழகர்சாமி] [1984 பிப்ரவர் 20

ஆளுநர் உரையிலே முதலாவதாக அடுத்தடுத்து இரண்டாண்டுகளாக மழை பொய்த்ததன் விளைவாக மக்கள் அடைந்த சொல்லொணாத் துயரமும், தொல்லையும் ஆண்டு முடிவில் தான் முழுமையாகத் தெரிய வந்தது என்றும், வறுமையை ஒழிக்கவும், வேலை வாய்ப்புக்களை உருவாக்கவும் வருங்காலத்தில் அரசு மேற் கொள்ள இருக்கும் நடவடிக்கைகளையும் எடுத்துக் கூறியுள்ளேன் என்று கடைசியிலும் குறிப்பிட்டிருக்கிறார்கள். அப்படி வறுமையை ஒழித்து வேலை வாய்ப்புக்களை உருவாக்குகின்ற வகையிலே அரசு எடுத்து வரும் நடவடிக்கைகள் தான் என்ன என்பதைப் பற்றி நீங்கள் விவரமாகச் சொல்லி இருக்கிறீர்களா என்றால் இல்லை.

இங்கே பேசிய அனைத்து உறுப்பினர்களுக்கும் முக்கியமான ஒன்றை மட்டும் மிக அழுத்தந்திருத்தமாக மிக மகிழ்ச்சியோடு சொல்லி கொண்டு வருகிறார்கள். அதுதான் சத்துணவுத் திட்டம். இது நல்ல திட்டம்தான். கடந்த காலங்களில் எத்தனையோ பெரிய மனிதர்களும், இராஜாக்களும் சத்திரங்களைக் கட்டி வைத்து சோறு போட்டார்கள். அது ஒரு பெரிய தர்மம் தான். ஆகவே அந்த தர்மம் தர்மமாகத் தான் இருக்கின்றதே தவிர அது வறுமையைப் போக்கியதாகச் சரித்திரமே இல்லை. அது வளர்ச்சியை ஒரு போதும் ஏற்படுத்தாது என்பதை அழுத்தந்திருத்தமாக தெரிவித்துக் கொள்கிறேன். இதிலே 100 கோடி செலவழிக்கிறோம், 200 கோடி செலவழிக்கிறோம் என்று பெருமையாகச் சொல்கிறீர்கள். இதனால் எந்த ஒரு குடும்பத்திலாவது வறுமை ஒழிக்கப்படுமா அல்லது நாட்டிலே வளர்ச்சி ஏற்படுமா என்பதைப் பற்றி இந்த மன்றம் சிந்திக்க வேண்டும்.

தமிழக அரசினுடைய இன்றைய நிலைமை என்ன? இதைப் பற்றிப் பொருளாதார வல்லுநர்கள் மிக அழகாகச் சொல்லி இருக்கிறார்கள். அவ்வாறு சொன்னதைப் பத்திரிகைகளிலே படித்திருப்பீர்கள். அகில இந்தியாவின் தனி நபர் சராசரி வருமானத்தைப் பொறுத்தவரையில் நாம் நான்காவது இடத்திலே இருந்தோம். இப்போது 7—வது இடத்திற்கு நாம் தள்ளப்பட்டிருக்கிறோம். 1961—ல் இருந்த சராசரி வருமானம் 7 சதவீதம் அதிகரித்தது. இன்றைக்கு அது 12 சதவீதம் குறைவாக ஆக்கப்பட்டிருக்கின்றது. மேலும் மற்ற மாநிலங்களை விட பிறப்பு விகிதத்திலும் நாம் குறைவாகத்தான் இருக்கிறோம். அதாவது அகில இந்திய சராசரி 55.1 ஆனால் நம்முடைய வளர்ச்சி 43.4 தான். அப்படி ஜனத்தொகையும் அதிகமாக அளவில் பெருகாத நிலையில், சகல வாய்ப்பு வசதிகள் எல்லாம் இருந்தாலும் கூட உணவு உற்பத்தி வளர்ச்சியானாலும் சரி சமமாக இருந்தாலும் தேசிய சராசரியை விட தமிழ்நாட்டில் குறைவாகத்தான் இருக்கின்றது.

உணவுப் பொருள் உற்பத்தியினைப் பொறுத்தவரையில் அகில இந்திய சராசரி வளர்ச்சி 2.8 சதவீதம். ஆனால் தமிழ்நாட்டிலே உணவு உற்பத்தி 1.8 சதவீதம்தான். ஆகவே



1984 பிப்ரவரி 20] [திரு. சோ. அழகர்சாமி]

சகல வாய்ப்பு, வசதிகளும் இருந்தாலும் கூட நாம் அதிலே 10—வது இடத்திற்கு வந்து விட்டோம். ஒரு நபரின் அகில இந்திய சராசரி உணவு உற்பத்தி 166 கிலோ- ஆனால் தமிழ் நாட்டில் 145 கிலோதான் உற்பத்தி செய்ய முடிகின்றது. எனவே நாம் உணவு உற்பத்தியிலும் பின்தங்கி இருக்கிறோம்.

தொழில் துறையில் 1970—ல் மிகவும் முன்னேறிய மகாராஷ்டிராவிற்குச் சமமாக இருந்த நாம் இன்றைக்கு 12—வது இடத்திற்குத் தள்ளப்பட்டிருக்கிறோம் என்றும் மின் உற்பத்தியிலே—திறனிலே—அகில இந்திய சராசரியை விட மிகக் குறைவாகத்தான் வளர்ச்சி பெற்றிருக்கிறோம் என்றும் தெரிகிறது.

அடுத்து வேலையில்லாத் திண்டாட்டம். இந்தியாவில் எல்லா மாநிலங்களை விட, வேலையில்லாமல் இருப்பவர்கள் அதிகமாக இருக்கும் மாநிலங்களிலே தமிழகம் மூன்றாவது இடத்தைப் பெறுகிறது. தேசிய அளவில் வேலையற்றோர் 8.5 சதவீதய இருந்தால் தமிழ் நாட்டில் மட்டும் 16 சதவீதம் வேலையற்று இருக்கிறார்கள்.

விவசாயத்தை எடுத்துக் கொண்டாலும் பலவித வளர்ச்சி ஏற்பட்ட காரணத்தால், பருப்பு வகைகள், எண்ணெய் உற்பத்தி பருத்தி போன்றவைகளில் தன்னிறைவு அடையாத நிலைமையிலே இருந்து வருகிறோம்.

அது மட்டுமல்லாமல், கிராமப் புறங்களிலே இருக்கிற வறுமையை எடுத்துக் கொண்டால், தேசிய மட்டத்தைக் காட்டிலும் விகிதாச்சாரத்திலே தமிழ்நாட்டிலே தான் அதிகமாக இருந்து வருகிறது. இது பற்றி மாண்புமிகுமுதலமைச்சர்அவர்கள் கூட 6—வது ஐந்தாண்டுத் திட்ட புத்தகத்திலே முன்னுரையிலே முதல் பக்கத்திலே விளக்கி எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, இன்றைக்கு வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளவர்களுடைய எண்ணிக்கை தமிழ்நாட்டில்தான் அதிகம். கிராமப் புறங்களிலே விவசாயத் தொழிலாளர்கள், நிலமில்லாதவர்கள், விகிதாசாரம் 30 சதவீதத்திலிருந்து 20 ஆண்டுகளில் 55 சதவீதமாக உயர்ந்திருக்கிறது. இதனுடைய அர்த்தம் என்ன? நிலமில்லாதவர்கள் எண்ணிக்கை அதிகமாகி இருக்கிறது. அதிகமானவர்கள் ஓட்டாண்டி ஆகியிருக்கிறார்கள் என்பதுதான். எனவே, இப்படியாக, இன்றைக்குத் தமிழகத்தினுடைய நிலைமை இருக்கிறது என்று பொருளாதார வல்லுநர்கள் கூறியிருக்கிறார்கள். இதை ஒழிக்க பொருளாதார வளர்ச்சிக்கு என்ன தீர்வு சொல்லியிருக்கிறார்கள் என்று பார்த்தால், நம்முடைய ஆளுநர் உரையிலே ஒன்றுமே இல்லை. எல்லாமே மத்திய சர்க்காரை எதிர்பார்க்கிறது. என்று அறிவிப்புகள் சொல்லப்படுகிறதே தவிர, உருப்படியாக, இந்தத் தமிழகத்தினுடைய தொழில் வளர்ச்சிக்கோ, உற்பத்திப் பெருக்கத்திற்கோ

எதுவும் சொல்லப்படவில்லை என்று நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன் ஆகவே, இந்த வறுமையை ஒழிக்கவும், பொருளாதார வளர்ச்சி ஏற்படுத்தவும் என்ன திட்டங்கள் அரசு ஏற்படுத்தியிருக்கிறது என்று பார்த்தால் உருப்படியாக ஒன்றுமே சொல்லப்படவில்லையென்று தெரிவிக்க விரும்புகிறேன்.

மின்சார உற்பத்திக்காக இரண்டு சொல்லப்பட்டிருக்கிறது. என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்றால் 210 மெகாவாட் உற்பத்தித் திறன் கொண்ட இரண்டு யூனிட்டுகளை மேட்டூரிலே அமைக்க மத்திய சர்க்கார் அனுமதி வழங்கியிருக்கிறது என்றும், மேலும் நெய்வேலியில் 210 மெகாவாட் கொண்ட 5 யூனிட்டுகள் அமைப்பதற்கு அனுமதி கேட்டிருப்பதாகவும் சொல்லப் பட்டிருக்கிறது. ஆனால், 1983–84–ல் தமிழ்நாட்டிலே உள்ள மின்சாரத்திற்காக ஒதுக்கப்பட்ட ஆண்டுத் திட்டத்தில் ரூ.272 கோடி, ரூ. 169 கோடியாகக் குறைக்கப்பட்டு, அது ரூ. 103 கோடி என்று இந்தத் திட்டத்திலே குறைந்து, அதனால் முக்கியமாகச் செய்யவேண்டிய காரியங்களைச் செய்ய முடியாமல் போய் விட்டது என்று அந்த வாரியத்தினுடைய தலைவர் திரு. விஜயராகவன் அவர்களே, பத்திரிகை மூலமாகச் சொல்லியிருக் கிறார்கள். இது தொழில் வளர்ச்சிக்கு உதவக் கூடியதா? உணவு உற்பத்திக்கு உதவக் கூடியதா? விவசாயத்திற்கு உதவக் கூடியதா? விவசாயத்திற்கு உதவக் கூடிய மின்சாரத்தை உற்பத்தி பண்ணக் கூடியதற்கு வேண்டிய திட்டங்களை, அதற்குச் செய்ய வேண்டிய காரியங்களைச் செய்ய, ஒதுக்கப்பட்ட ரூ. 103 கோடி கூட கடந்த ஆண்டு குறைக்கப் பட்டிருக்கிறது என்பதை நினைக்கும் போது, இன்றைக்குத் தொழில் வளர்ச்சிக்குத் தேவையான மின்சாரத்தை உற்பத்தி செய்யக் கூட உங்களுடைய கவனம் சரியாக இல்லை. அதையெல்லாம் விட்டு விட்டு, வேறு ஏதோ அன்றாடம் மக்கள் நம்மைப் பாராட்ட வேண்டுமென் பதற்காக வேறு செலவுகளை செய்து கொண்டு, முக்கியமான காரியங்களுக்கு நீங்கள் பணம் ஒதுக்கவில்லை, என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதற்கடுத்தப்படியாக, முக்கியமானது நீர்பாசன வசதி, நீர்பாசனம் சம்பந்தமாக இன்றைக்கு நம்முடைய அறிக்கையிலே என்ன சொல்லப் பட்டிருக்கிறது என்றால், பாசனம் பெறாத நிலங்களுக்குப் பாசனம் ஏற்படுத்திக் கொடுப்பதும் பாசனம் பெற்று வந்த நிலங்களுக்கு அந்த வசதியை நிலை நாட்டுவதும் அரசின் முக்கியமான கொள்கை என்று கூறி இருக்கிறீர்கள். இன்றைக்கு 9 இலட்சம் பரப்புள்ள பாசனம் அளிக்கக் கூடிய 39,000 ஏரி குளங்கள் தமிழகத்திலேதான் இருக்கின்றன. வேறு எங்கும் கிடையாது. நீங்கள் எல்லாம் பார்த்திருப்பீர்கள். வட நாட்டுக்குப் பல பேர் போயிருப்பீர்கள். நான்கூட இரண்டு மூன்று தடவை போயிருக்கிறேன். தமிழகத்திலே இருக்கிற மாதிரி, 39,000 குளங்கள், மழை நீர் தேக்கை வைக்கக் கூடிய, புஞ்சை நிலத்தை நஞ்சைகளாக மாற்றக் கூடிய பாசன வசதி





அளிக்கக் கூடிய குளங்கள் வேறு எங்கும் கிடையாது. இங்கு மிக அதிகம். கடந்த காலத்திலே இருந்து, மன்னர் காலத்திலே இருந்து, ஆங்காங்கு பல குளங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அந்த குளங்கள் எல்லாம் இன்றைக்கு எப்படி இருக்கின்றன? 30,000 குளங்கள் இருக்கின்றன. பல குளங்கள் மேடாக இருப்பவை, மேடாக இருக்கின்றன. அவற்றில் பி டபுள். யு. டி கான்ட்ராக்ட் மூலம் வருஷாவருஷம் வேலை நடப்பதாகப் பணங்களைக் கொள்ளை அடிக்கிறார்களே தவிர, அந்தக் குளங்களைச் சீரமைத்து ஒழுங்காக, அந்தக் குளங்கள், வாய்க் கால்கள், செப்பனிட என்ன செய்ய வேண்டுமோ அவை செய்யப் படவில்லை. சென்ற கூட்டத்திலே கூடச் சொல்லி இருக்கிறேன். கடந்த காலத்திலே அந்தக் குளங்களிலே ஒரு நேரம் நிரம்பினால் இரண்டு போகம் விளையும் என்று சொல்வார்கள். இந்தக் காலத்திலே இரண்டு நேரம் நிரம்பினாலும் ஒருபோகம் விளைவதில்லை என்று சொல்லக்கூடிய அளவுக்குக் கண்மாய்கள் பூராவும், ஏரிகள் பூராவும் குளங்கள் பூராவும் மோடாக்கப் பட்டிருக்கிறது. அவற்றைச் சரியாகச் செப்பனிடாத காரணத்தினால் இந்நிலை என்று தெரிவித்துக் கொள்கிறேன். அவற்றை நவீனப்படுத்தி, இன்றைக்கு அந்த நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்த அதிக முக்கியத்துவம் அளிக்கப் பட்டிருக்கிறது என்று சொல்லிவிட்டு ஐக்கிய நாட்டு பொதுக் கழகத்திடம் ரூ. 25 கோடி 5 வருஷ காலத்திற்கு மானியமாக வாங்கி செலவழிக்கப் போகிறோம் என்று சொல்லியிருக் கிறார்கள். 5 வருஷம், ஒவ்வொரு வருஷமும் ரூ. 5 கோடி என்றால், இந்த 39,000 குளங்களுக்கு அத்தொகை போதுமா?

(முற்பகல் 11–30)

ஐந்து கோடி ரூபாய் எந்த மூலைக்கு? இதில் ஒரு கண்மாய் கூட செப்பனிட முடியாது. இதை ஒரு பெரிய சாதனையாக 25 கோடி ரூபாய் நாங்கள் ஐரோப்பிய பொருளாதாரக் குழுவிடமிருந்து பெறுவதில் வெற்றி பெற்றிருக்கிறோம் என்று கொடுத்திருக்கிறீர்கள். இன்றைக்கு தஞ்சையிலே ஏற்பட்ட வெள்ளத்தினால் எவ்வளவு பெரிய சேதம் ஏற்பட்டிருக்கிறது என்பதை நம்முடைய வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் வெள்ளை அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. 7 இலட்சத்து 10 ஆயிரம் குடிசைகள் நாசமாயிருக்கின்றன. குடியிருப்புகளே இல்லை. அதுமட்டுமல்ல இன்றைக்கு 102 கோடி ரூபாய் பெறுமானமுள்ள பயிர்கள் சேதமாகியுள்ளன என்று சொல்லி இருக்கிறார்கள். 14,500 கால்நடைளை், ஆடு, மாடு, கோழி முதலியவை அடித்துச் செல்லப்பட்டன. இவ்வளவு பெரிய சேதம் தஞ்சையிலே ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னால் இதற்காக காலத்திலே கால்வாய்களை செப்பனிட்டு, வடிகால்களை ஒழுங்காக அமைத்து தண்ணீர் சரியாக போவதற்கு செய்திருந்தால் இந்த நிலைமை எற்பட்டிருக்குமா? இது சம்பந்தமாக 1921–ஆம் ஆண்டு ஆங்கிலேயர்கள் காலத்தில் திட்டங்கள் போடப்பட்டிருக்கின்றன. கல்லணை கட்டியதற்கு

பின்னாலே அதிகமாக வருகிற தண்ணீரை எப்படி வழிப் படுத்தலாம் என்று இரண்டு திட்டங்களை சொல்லியிருக் கிறார்கள். அதற்கு பின்னாலே 1931—ல் தஞ்சையிலே சூப்பரின் டென்டிங் என்ஜினியராக இருந்த திரு. நீலகண்ட சாஸ்திரி இருந்த போதும், 1961-ல் சூப்பரின்டென்டிங் என்ஜினியராக இராமச்சந்திர அய்யர் இருந்த போதும் அவர்களால் தயாரிக்கப் பட்ட திட்டங்கள் இரண்டும் இன்றைக்கு தமிழக அரசினுடைய அலமாரியிலே தூங்கிக் கொண்டிருக்கின்றன. புளூபிரிண்ட் நிலைக்கு அடுத்த ஸ்டெப்பிற்கு போகாமல் அவை இருக்கின்றன. இது நியாயம் தானா? தஞ்சை தமிழ் நாட்டிற்கே சோறு போடுகிறது. அங்கே வேளாண்மை இல்லை. என்றால் எப்படி விலைவாசி குறையும்? தஞ்சை மாவட்டம் நெல் உற்பத்திக்கு முக்கியமான மாவட்டம். காவேரியை நம்பி தஞ்சை இருக்கிறது. தஞ்சையை நம்பி தமிழகம் இருக்கிறது. அப்படி இருக்கிற காவேரி திட்டம் புளூபிரிண்ட் வடிவிலே இருக்கிறதே அதை எடுத்து நடைமு றப் படுத்துவதற்கு ஏன் அரசாங்கம் முயற்சிக்கவில்லை? இனியாவது செய்ய வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக புதியதாக பாசன கண்மாய்களை அமைத்தல். நாங்கள் இருக்கிற சங்கரன் கோவில், ஒட்டப் பிடாரம், கோவில்பட்டி ஆகிய பகுதிகளில் மழைக்காலங்களில் தண்ணீர் வரும். பாசன வசதிகள் சரியாக இல்லாமல் இருப்பதால் அது வீணாக சமுத்திரத்திலே போய் விழும். இதைத் தடுத்து நிறுத்த வேண்டிய அளவு குளங்கள் அமைத்து விட்டால் தேவையான அளவு தண்ணீர் கிடைக்கும். இதன் காரணமாக பாசன வசதியை பெறலாம். அது மட்டுமில்லாமல் பக்கத்திலே இருக்கிற கிணறுகளில் வாட்டர் லெவல் உயர்வதற்கும் வசதியாக இருக்கும். அதற்காக மிகவும் பிரயாசைப்பட்டு என்ஜினியர்கள் எஸ்டிமேட் போட்டு அந்த ரிப்போர்ட், அக்ரிகல்ச்சர் டிபார்ட் மென்ட்டும், ரெவின்யூ டிபார்ட்மென்ட்டும் சிபார்சு செய்த பிறகு சென்னைக்கு வந்திருக்கின்றன. அந்தத் திட்டங்களில் 10, 15 புதிய ஏரிகளை அமைக்க திட்டம் இருந்தது. சென்ற ஆண்டு ஏப்ரல் மாதம் அரசாங்கத்திற்கு சாங்ஷனிற்காக வந்திருக்கிறது. அந்த பைல்கள் முதலமைச்சர் அவர்களுடைய ஆய்விலே இருக்கின்றன. சாங்ஷன்ட் என்று போட்டால் செலவு செய்வதற்கு துட்டு இல்லை; ஆகவே சாங்ஷன் ஆகாமல் இருக்கின்றன. இது நியாயம் தானா? எத்தனையோ பிரயாசைப்பட்டு என்ஜினியர்களால் தயாரிக்கப்பட்ட அந்தத் திட்டங்கள் அப்படியே முதலமைச்சர் அவர்களுடைய அலுவலகத்திலே தூங்கிக் கொண்டிருப்பது சரிதானா? என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். இது பாசன வசதியைப் பெருக்குமா? உற்பத்தியை அதிகரிக்குமா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

பக்கம் 9—ல் மாநிலத்தின் விவசாயப் பொருளாதாரம் [illegible]யாகப் பாதிக்கப்பட்டிருந்த போதிலும் பல்வேறு [illegible]க்கைகளை அரசு எடுத்ததால் உணவு உற்பத்தியின் அளவு





திருப்திகரமாகவே இருக்கும் என்று சொல்லி இருக்கிறீர்கள். எங்கே திருப்திகரமாக இருக்கிறது? கடந்த ஆண்டு சம்பா கம்ப்ளீட்டாக போய் விட்டது. மேலும் விவசாயம் குறித்து அரசாங்கம் அனுஷ்டிக்கிற சில கொள்கைகள் காரணமாக விவசாயிகள் விவசாயத்தை சீராக செய்ய முடியவில்லை. அந்தப் பக்கத்திலே இருந்தாலும், இந்தப் பக்கத்திலே இருந்தாலும் சரி இதில் ஆளும்கட்சியைச் சார்ந்தவர்கள் விவசாயிகளாக இருப்பவர்களுக்கு நன்றாகத் தெரியும். அவர்களுக்கு விவசாயத்தில் 10 வருடங்களாக ஏற்பட்ட நெருக்கடியின் காரணமாக விவசாயத்தை செம்மையாகச் செய்ய முடியவில்லை. அதுவும் சாதாரண விவசாயிக்கு கூட்டுறவு உதவி போய் விட்டது. கூட்டுறவுக் கடன் திரும்பப் பெற முடியவில்லை என்பதால் இன்றைக்கு கூட்டுறவு கடன் கொடுப்பதே நின்று இருக்கிறது. 58 கோடி ரூபாய் இந்த ஆண்டு கடன் கொடுப்பதாக அறிவித்து இருக்கிறார்கள். இது எப்படி இருக்கும் என்றால், பழைய பாக்கியை வசூலித்ததாகக் காட்டி, புதிய கடன் அவர்களுக்கே கொடுத்தது போல், ஒரு புக் அட்ஜெஸ்மென்ட்டாகத் தான் இருக்கும். பணம் யார் கைக்கும் போய் இருக்காது. எல்லோரும் கடன் கொடுக்க வேண்டும் என்று சொன்னால் கிட்டத் தட்ட 200 கோடி ரூபாய் தேவைப்படும்.

கூட்டுறவு கடன் சம்பந்தமாக உயர்மட்டக் குழுவிடத்தில் சொன்னோம். பழைய பாக்கியை 10 ஆண்டு காலத்தில் திருப்பி செலுத்தி விட வேண்டும் என்றும், புதிய கடன்கள் அவர்களுக்குக் கொடுக்க வழி வகை செய்ய வேண்டும் என்றும் சொன்னோம். அந்த சிபார்சு அமல்படுத்தப்படவில்லை. ஏனென்றால் இன்றைக்கு ஜப்தி நோட்டீஸ் போய் இருக்கிறதே தவிர புதிய கடன் வரவில்லை. இன்றைக்கு இதனால் நிலைமை எப்படி யிருக்கிறது என்றால் ரூபாய் 100 கடன் வேண்டுமானால் தனியாரிடத்தில் தான் செல்ல வேண்டியிருக்கிறது அவர் களிடத்தில் எப்படி கடன் கிடைக்கிறது என்றால் 100 ரூபாய் கடனுக்கும், அந்தப் பணத்தை மூன்று மாதம் கழித்து திருப்பித் தருவதோடு மட்டுமல்லாமல், ஒரு மூட்டை நெல்லும் அவர்கள் தரவேண்டும். ஆகவே, இதனால் லேவாதேவிக்காரர்கள் வளர்ந்து விட்டார்கள். இன்றைக்கு லேவாதேவி, பைனான்ஸ் நிறுவனம் என்றபெயரில் நடக்கிறது. ஏனெனில் கடன் நிவாரண சட்டம் இவர்களை ஒன்றும் செய்யாது. இன்றைக்கு புஞ்சை நிலம் பொய்த்து விட்டது. முன்பு மழை இல்லாமல் இருந்தது. அதனால் பொய்த்துப் போய் விட்டது. பிறகு மழை வந்தது. அதுவும் காலம் கெட்ட காலத்தில் பெய்ததால் பயிர்கள் நாசமாகி விட்டன. இதனால் சோளம். உளுந்து, மல்லி நாசமாகி விட்டது. இப்படிப்பட்ட நெருக்கடியான நிலையில் ஜப்தி வேலைகள் நடந்து கொண்டு இருக்கின்றன. என்னுடைய தொகுதியில் இடைச் செருகு என்ற இடத்தில் நடராசன், சீனிவாசன் அவர்களிடத்தில் போய் பணத்தைக் கட்டி விட்டு அறுவடை செய் என்று சொல்லியிருக் கிறார்கள். இது என்ன கொடுமை? இந்த மாதிரி செய்தால்

[திரு. சோ. அழகர்சாமி] [1984 பிப்ரவரி 20

விவசாயிகளின் வாழ்க்கையை நாசம் செய்வதற்கு ஒப்பாகும். இன்றைக்கு பெரிய நிறுவனங்களாக இந்த பைனான்ஸ் கார்ப்பரேஷன்கள் வளர்ந்து விட்டன. அரசு ஜப்தி போன்ற நடவடிக்கைகளை நிறுத்த வேண்டும். உயர் மட்டக் குழுவில் போடப்பட்ட அந்த சிபாரிசுகளை அமல் நடத்த அரசு முன் வர வேண்டும். அப்படி நடவடிக்கை எடுக்க இந்த அரசு தவறுமானால், எல்லா விவசாயிகளின் கோபத்திற்கும் இந்த அரசு ஆளாக நேரிடும் என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு இருக்கின்ற நிலைமையில் விவசாயிகள் பழையக் கடனைக் கட்டக் கூட சக்தி இழந்து இருக்கிறார்கள். ஆகவே, அவர்களின் பழைய கடனை ரத்து செய்து விட்டு, புதிய கடன்களைக் கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். விவசாயிகளுக்குக் கொடுக்கும் கடனுக்கு உண்டான வட்டி பூராவையும் இந்த அரசாங்கம் ஏற்றுக் கொண்டால் என்ன? பத்திரிகையில் செய்தி பார்த்தேன். இதனால் இந்த அரசுக்கு 12 கோடி ரூபாய்தான் செலவு வரும். இந்த 12 கோடியை அரசாங்கம் கொடுத்து, அந்த விவசாயிகளைக் காப்பாற்றலாம். எவ்வளவோ பணம் எவ்வளவோ வழிகளில் வீணாகச் செலவாகிறது ஆகவே, இந்த மாதிரி உதவிகளை அரசாங்கம் விவசாயிகளுக்குச் செய்ய முன் வரவேண்டும். அவர்களுக்கு விதைகள், பூச்சிகொல்லி மருந்துகள் ஆகியவையும் மலிவு விலையில் கிடைக்க வழி செய்யவேண்டும். இப்போது மத்திய அரசாங்கம் சொல்கிறது. ரிசர்வ் வங்கி இந்த கடன்களை ரத்து செய்ய ஒப்புக்கொள்ளவில்லை என்று ரிசர்வ் வங்கி என்ன மத்திய அரசுக்கு மேலாக இருக்கிறதா? மத்திய அரசின் கன்ட்ரோலில் இருப்பது ரிசர்வ் வங்கி. ஆகவே, மத்திய அரசு பார்த்து இந்த கடனை ரத்து செய்ய வேண்டும் என்று சொல்லிவிட்டால், அதற்கு ரிசர்வ் பாங்க் எப்படி மறுப்பு தெரிவிக்க முடியும்? ஆகவே மத்திய அரசும் சரி, மாநில அரசும் சரி, ரிசர்வ் வங்கி சொல்கிறது என்று குறிப்பிடுவது சரியல்ல. ஆகவே, ரிசர்வ் வங்கியிடம் மத்திய அரசு வற்புறுத்திச் சொல்லி, இந்தக் கடன்களை ரத்து செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 11-40)

அடுத்தபடியாக இந்த விவசாய விளைபொருள்கள் சம்பந்தமாக பிப்ரவரியில்தான் விலை அறிவித்திருக்கிறீர்கள். அதற்கு பிறகும் உடனடியாக இந்த விலையை கொடுக்க மாட்டார்கள். குவிண்டாலுக்கு 171 ரூபாய் அறிவிக்கப் பட்டிருக்கிறது. அது போதாது. 200 ரூபாய் ஒரு குவிண்டாலுக்கு கொடுக்க வேண்டும். அது மட்டும் போதாது. மார்க்கெட்டுக்கு வரக் கூடிய நெல் எல்லாவற்றையும் அரசாங்கமே கொள்முதல் செய்ய வேண்டும். ஒரு மாவட்டத்தில் நல்ல விலை இருக்கிறது; ஒரு மாவட்டத்தில் விலை இல்லை. அதனால் கடத்தல், வியாபாரிகள் கொள்ளை இப்படியெல்லாம் நடை



1984 பிப்ரவரி 20] [திரு. சோ. அழகர்சாமி]

பெறுகிறது. வாங்கிச் சாப்பிடுகிறவர்களுக்கு நியாயமான விலையில் பொருள்கள் கிடைப்பதில்லை. இப்படிப்பட்ட பிரச்சனைகளைத் தவிர்க்க வேண்டுமென்றால் அரசாங்கமே மார்க்கெட்டுக்கு வரக்கூடிய நெல் எல்லாவற்றையும் குவிண்டாலுக்கு 200 ரூபாய் விதம்கொடுத்து கொள்முதல் செய்ய வேண்டும். அப்படியானால் விவசாயிகளும் மகிழ்ச்சியடைவார்கள் கிலோ அரிசி 4 ரூபாய் 5 ரூபாய்க்கு விற்காது.

அதைப்போன்று கரும்புக்கு டன் ஒன்றுக்கு 125 ரூபாய் என்று அறிவித்திருக்கிறார்கள். போன வருஷம் 165 ரூபாய் என்று விலை நிர்ணயம் செய்தீர்கள். ஆனால் மத்திய சர்க்கார் 135 ரூபாய் என்று நிர்ணயித்தது. அதே நேரத்தில் சீனிக்கு விலை அதிமாக இருக்கிறது. சர்க்கரை என்றால் அவர்களுக்கு இனிக்கிறது, ஆனால் கரும்பு அவர்களுக்கு கசக்கிறது. கரும்பு விலையை குறைத்திருக்கிறார்கள், சீனி விலையை 25 ரூபாய் கூட்டியிருக்கிறார்கள். இது என்ன கணக்கு என்று தெரியவில்லை. நம்முடைய சர்க்கார் இதை கண்டிக்க வேண்டும். கரும்புக்கு 250 ரூபாய் வாங்கித் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து தொழிலாளர் சம்பந்தப்பட்ட விஷயம். தமிழ்நாட்டில் பதிவு செய்யப்பட்ட ஃபாக்டரி தொழிலாளர்கள் 6 இலட்சம் பேர் இருக்கிறார்கள். இந்த 6 இலட்சம் பேர்களில் ஒரு இலட்சம்பேர் ஸ்டிரைக், லாக் அவுட், லே ஆஃப் போன்ற காரியங்களால் வேலை இல்லாமல் இருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் இங்கே சொன்னார்கள். ஒரு இலட்சம் தொழிலாளர்கள் வேலையில்லாமல் இருந்தால் அவர்களை நம்பி இருக்கிற 5, 6 இலட்சம் பேர்கள்—அவர்களுடைய குடும்பத்தினர் என்ன செய்வார்கள்? அவர்கள் அன்றாடம் எப்படி சாப்பிட முடியும்? மாதாமாதம் வேலை செய்து, சம்பளம் பெற்று வந்தாலே சரியாக வாழ்க்கை நடத்த முடியாத நிலையில் வேலையில்லாமல் இருந்தால் அவர்கள் எல்லாம் என்ன செய்வார்கள்? அவர்களால் வாழ்க்கை நடத்த முடியாது.

15,000 தொழிலாளர்கள் வேலை செய்கின்ற சிம்சன் தொழிற்சாலை மூன்று மாதமாக மூடிக்கிடக்கிறது. பி. அண்ட் சி. மில் 40 நாட்களாக மூடிக்கிடக்கிறது. இந்தியா போர்ட் 8 மாதங்களாக மூடிக்கிடக்கிறது. மாதவரம் பால் பண்ணையில் வேலை பார்த்த 1,500 தொழிலாளர்கள் தெருவிலே நிற்கிறார்கள். அவர்களுக்கு 100 ரூபாய், 125 ரூபாய் மாதச் சம்பளம் கொடுக்கப்படுகிறது. அது போதாது என்று ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தம் செய்தார்கள்; உடனே அவர்களை வீட்டுக்கு அனுப்பியிருக்கிறார்கள். அவர்கள் கோர்ட்டுக்குப் போனார்கள். கோர்ட்டிலே சொன்னது, முதலில் நீங்கள் தொழில் கோர்ட்டுக்குப் போங்கள் என்பது. நீங்கள் அதையும் செய்யவில்லை. வீட்டுக்கு அனுப்பியிருக்கிறீர்கள்: இப்படி பல்வேறு காரியங்களினால் ஒரு இலட்சம் தொழிலாளர்கள் வேலையில்லாமல் வெளியே இருக்கிறார்கள்.

[திரு. சோ. அழகர்சாமி] [1984 பிப்ரவரி 20

முதலாளிகள் வேலையைத் திணிக்கிறார்கள். முன்பு செய்ததைப்போல ஒன்றரை மடங்கு வேலை செய்தால் பழைய சம்பளம் என்று சொல்கிறார்கள், இல்லை என்றால் சம்பளத்தைக் குறைக்கிறார்கள்.இப்படிச் செய்து முதலாளிகள் கொள்ளை இலாபமடிக்கிறார்கள். இந்த அரசாங்கம் அவர்களுக்கு உடந்தையாக இருக்கிறது. தொழிலாளர்களை அரசாங்கம் நசுக்குகிறது. முதலாளிகள் கொள்ளை இலாபம் அடிக்க அரசாங்கம் உடந்தையாக இருக்கலாமா தொழிலாளர்களுக்கு ஆதரவாக அரசாங்கம் இருக்க வேண்டாமா? தொழிலாளர் நலனைப் பாதுகாக்க வேண்டுமென்று சொன்னால் உடனே மேற்குவங்கத்தைப் பாருங்கள், அங்கே என்ன செய்கிறார்கள், அதைச் செய்கிறார்கள், இதைச் செய்கிறார்கள் என்று சொல்கிறார்கள். மேற்கு வங்கத்தில் எப்போதும் அரசாங்கம் முதலாளிகள் பக்கம் நின்றது இல்லை. தொழிலாளர்கள் பிரச்சனை என்றால் அரசாங்கமும் போலீசும் தொழிலாளர் பக்கம்தான்; முதலாளிகள் பக்கம் எப்போதும் இல்லை. தொழிலாளர்களுக்கு சாதகமாக இருந்து, முதலாளிகளுக்கு பாதகமாக இருக்கிறது மேற்கு வங்க சர்க்கார். ஆனால் நீங்கள் முதலாளிகளுக்கு சாதகமாக இருந்து தொழிலாளர்களுடைய மண்டையை உடைக்கிறீர்கள். உங்களுடைய தொழிலாளர் நலக் கொள்கை இப்படி இருக்கிறது.

மதுரை சர்க்கரை ஆலையில் பிரச்சனை வந்தபோது அதை எடுத்துக் கொண்டீர்கள்; ரொம்ப சந்தோஷம். ஆனால் நெல்லிக்குப்பம் சர்க்கரை ஆலையை ஏன் எடுக்க மறுக்கிறீர்கள்? இன்றைக்கு அவர்கள் 1,000 பேர்களை வீட்டுக்குப் போகச் சொல்கிறார்கள். இன்றுவரை வேலை செய்தவர்களை திடீரென்று வீட்டுக்குப் போ என்று சொன்னால் அவர்களுடைய குடும்பம் என்னவாகும்? யோசிக்க வேண்டாமா? வேலையில்லாமல் தொழிலாளி வீட்டுக்குப் போனால் அவனுடைய பெண்டாட்டி, பிள்ளைகள் குளம் குட்டைகளிலே, கிணற்றிலே தான் போய் விழவேண்டும். வேறு வழியில்லை. கல்யாணம் ஆகாமல் இருந்தால் அவன் ஒருவன் மட்டும்தான், எப்படியாவது, எங்காவது போய் பிழைத்துக்கொள்வான். ஆனால் கல்யாணம் ஆகி, 3, 4 குழந்தை; பெண்டாட்டியோடு இருக்கிற ஒருவன் என்ன செய்ய முடியும்? அவன் மனைவி, மக்களை காப்பாற்ற வேண்டுமென்றால் அவனுடைய தொழிலுக்கு நீங்கள் உத்தரவாதம் கொடுக்க வேண்டும்.

உங்களால் முதலாளியை கன்ட்ரோல் செய்ய முடியவில்லை. இரண்டு நாளைக்கு நீங்கள் பாதுகாப்பு கொடுக்கவில்லை என்றால் நிலைமை சீராகிவிடும். தவறு செய்கின்ற முதலாளிகளைப் பிடித்து சிறையில் அடையுங்கள். சிறையில் அடைக்கக்கூட வேண்டாம்; அடைப்போம் என்று மிரட்டினாலே போதும், பணிந்து விடுவார்கள், ஒருவரும் சிறைக்குப் போகமாட்டார்கள். அதை நீங்கள் செய்ய வேண்டும், செய்வீர்களா என்று பார்ப்போம்.



1984 பிப்ரவரி 20] [திரு. சோ. அழகர்சாமி]

இன்னொரு விஷயம், மதுரையில் மருத்துவக் கல்லூரி சம்பந்தப்பட்ட விஷயம் அது. நண்பர் நெடுமாறன் அவர்கள் தெளிவாகச் சொன்னார்கள்; மற்றவர்களும் சொன்னார்கள். மாணவர்கள் தப்பு செய்தார்கள் என்றால் அவர்களைக் கூப்பிட்டு பேச வேண்டும். இல்லை என்றால்அவர்களை கைது செய்யுங்கள், வழக்கு போடுங்கள், சிறையில் அடையுங்கள், தண்டனை கொடுங்கள். நியாயப்படி நடவடிக்கை எடுங்கள். அதைச் செய்யாமல் அத்தனை மாணவர்களையும் ரவுண்ட் அப் செய்து மைதானத்தில் நிறுத்தி, 200, 300 போலீஸ்காரர்களை விட்டு அடித்து நொறுக்கியிருக்கிறீர்களே. ஏன் இந்த நிலை? இது ஒரு காட்டுமிராண்டி சர்க்காரா, அல்லது ஜனநாயக சர்க்காரா? மாணவர்கள் எப்போதும் கொஞ்சம் விறுவிறுப்பாக இருப்பார்கள், சுயநலம் இல்லாதவர்கள். அவர்களைக் கூப்பிட்டு எப்படி டீல் செய்ய வேண்டுமோ அப்படிச் செய்ய வேண்டும். போலீஸார் தப்பு செய்திருக்கிறார்கள். மாணவர்கள் கேட்டிருக்கிறார்கள். ஒரு மாணவனிடம் நான்எஸ்.ஐ.என்று சொல்லியிருக்கிறார்கள். ஏன் இப்படிச் செய்கிறீர்கள் என்று கேட்டிருக்கிறார்கள் மாணவர்கள். அந்த ஒன்றிரண்டு மாணவர்களை அழைத்துச் சென்றிருக்கிறார்கள்; அவர்களோடு மற்ற மாணவர்களும் சென்றிருக்கிறார்கள்.

உடனடியாக் அத்தனை பேரையும் மைதானத்திற்குக் கூட்டிக்கொண்டுபோய் சுற்றி, அடித்து கை, காலை உடைத்து, உறுப்பினர் நெடுமாறன் சொன்னமாதிரி கையிலே இருந்த கைக் கடிகாரம், செயின் எல்லாவற்றையும் பிடுங்கியது நியாயமா? உடனடியாக சர்வகட்சி நீதி விசாரணை கூட நாங்கள் கேட்கவில்லை. எல்லா கட்சி ஆட்களையும், சட்டத்திலே இருக்கிறபடி கட்சி ஆட்களை போடுங்கள். நேராகப் போய் பார்ப்போம், அது நடந்து இருக்கிறதா என்று? போலீஸ்காரர் தப்பு பண்ணியிருக்கிறார்களா, அல்லது அங்கிருக்கிற அதிகாரி தப்பு பண்ணியிருக்கிறார்களா என்று பார்த்து தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் அதைக் கண்காணிக்க சட்டமன்ற உறுப்பினரைக் கொண்ட கமிட்டி ஒன்றைப் போடவேண்டும்.

அடுத்ததாக, தொழில் வளர்ச்சி முன்னேற்றத்திலே கரூர்-தூத்துக்குடி ரயில் பாதை அகலப்படுத்துவது போன வருஷமும் வரவில்லை. 75 திட்டங்கள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன, இந்த திட்டத்தோடு சேர்ந்து, 74 திட்டங்கள் முடிவடைந்து விட்டன, ஆனால் இந்த ஒரு திட்டத்தை மாத்திரம் எப்போது முடியும் என்று சொல்லவில்லை. அதற்காக பணம் ஒதுக்கியது ரு. 42, 86,00,000. இதுவரைக்கும் 6 கோடிதானா செலவழிக்கப்பட்டது? மீதி என்னவாயிற்று? அதற்கு அந்த அம்மையாரிடம் கேட்டால் கோபித்துக்கொள்வார்களோ என்று பயப்படுகிறீர்களே? நாம் சொன்னால், மத்திய சர்க்கார் கோபிப்பார்களோ, நம்முடைய உறவு எங்கே முறிந்துவிடுமோ, தேர்தலில் நமக்கு ஆதரவு, கூட்டு வராமல் போய் விடுமோ என்று பயப்படுகிறீர்களா? அதைப்பற்றி பயப்படலாமா? நம்முடைய தமிழக

மக்களுடைய திட்டங்களுக்காக சண்டை போடுவதற்கு பயப்படலாமா? மற்ற இடங்களில் மத்திய அரசில், திண்டுக்கல், தூத்துக்குடியில் ஹர்த்தால் நடத்துகிறார்கள். ஆகவே இந்தத் திட்டத்தை உடனடியாக ஒழுங்காக நடத்துவதற்கு மத்திய சர்க்காரிடம் சண்டை போட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்ததாக சேது முத்திரத் திட்டம். இது ஒரு பெரிய சர்வதேச, மத்திய அரசினுடைய திட்டம், இந்தத் திட்டம் கிடப்பிலே இருக்கிறது, இதை மத்திய சர்க்காரிடம் நிறைவேற்ற வேண்டுமென்று நாம் கேட்க வேண்டாமா? அதற்கு வேண்டிய கடுமையான முயற்சிகளைச் செய்ய வேண்டாமா? செய்ய மாட்டீர்கள், நிலக்கரிக்கு திடீரென்று 25 சதவீதத்தை உயர்த்தி இருக்கிறார்கள், ரூ. 1,000க்கு வாங்கிய நிலக்கரியை ரூ.1,250 கொடுத்துத்தான் வாங்கவேண்டும். இப்படி திடீரென்று 25 சதவீதத்தை உயர்த்தியிருக்கிறீர்களே இது நியாயம் இல்லை என்று கண்டிக்க வேண்டாமா? சொல்லமாட்டீர்கள். தமிழக தொழில் வளர்ச்சியில் அக்கறையோடு இந்த நிலைமைகளிலிருந்து காப்பாற்ற வேண்டும். ஒட்டுமொத்தமாக இந்தியாவிலே, மத்திய சர்க்காரிலே கடைபிடிக்கக் கூடிய கொள்கை இருக்கிறதே இது மொத்தத்திலே தமிழக மக்களுக்கு, தொழிலாளர்களுக்கு விரோதமானது. விலைவாசி உயர்வதற்கு சாதகமாக உள்ளது. இதை எதிர்த்து நீங்கள் 'ஃபைட்' பண்ணாமல், தமிழகத்திலே எதுவும் செய்யமுடியாது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, பயிர் இன்ஷூரன்ஸ் திட்டத்தை பற்றிச் சொல்லியிருக்கிறீர்கள். நெல்லை மாவட்டத்திலே உள்ள விவசாயிகள் அங்குள்ள கூட்டுறவுச் சங்க இன்ஷூரன்ஸ் திட்டத்திலே பணம் கொடுத்திருக்கிறார்கள். இப்போது மகசூல் தீய்ந்து இருக்கிறது என்று பணம் கேட்டால் நாங்கள் வாங்கிக் கொடுப்போமே தவிர, பணம் கிடைக்கவில்லை என்றால் நாங்கள் என்ன செய்வது அதற்கு? விதிகள் இல்லையென்று அங்கே மத்திய சங்கத்தில் சொல்கிறார்கள். ஆக இதுவரைக்கும் நஷ்ட ஈடு கொடுக்கப்படாத நிலைமை இருக்கிறது. ஆக இந்த இன்ஷூரன்ஸ் திட்டத்தை முறையாக நடைபெறுவதற்கு ஏற்பாடுகள் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக சென்னை நகரத்தைப்பற்றி ஒன்று சொல்ல விரும்புகிறேன். எங்கு பார்த்தாலும் ஒரே மழை. அந்த ஒரு நாள் பெய்த மழையால், வீட்டைச்சுற்றி வெள்ளம், ரோட்டு பக்கம் வெள்ளம், குடிசையைச்சுற்றி வெள்ளம், குடிசைக்குள்ளே வெள்ளம். சிறிய பிள்ளைகள் பள்ளிக்கூடம் செல்ல முடியவில்லை. இந்த ஒரு நாள் பெய்த மழையிலே இப்படி; பெரிய நகர அபிவிருத்தி திட்டம் போட்டிருக்கிறீர்கள் செலவு பண்ணுகிறீர்கள். ஆக அந்தத் தண்ணீரை நீங்கள் பார்க்கவேயில்லை.





அடுத்து வீடுகள் கட்டுவதற்கு 'பிளான் அப்ருவல்' கேட்கிறார்கல். நம் மாதிரி ஆட்கள், அரசாங்க அதிகாரிகள், அலுவலர்கள், 'பர்மிஷன்' வாங்கவேண்டும் அல்லது லோன் வாங்குகிறவர்கள் 'பிளான்' வாங்கவேண்டும் என்று இருக்கிறது. 'லோன் வாங்காதவர்கள் கையிலே கருப்புப்பணத்தை வைத்துக் கொண்டிருப்பவர்கள் ..ஷடத்திற்குக் கட்டிக்கொள்கிறார்கள். முக்கியமாக இன்ஜினியர்களை சரி பார்த்துக்கொள்கிறார்கள். அந்தக் கட்டிடங்கள் ரோடு மத்தியிலே இருக்கிறது. வழியிலேயே இருக்கிறது. கட்டிடங்களைக் கட்டுவதத்கு லஞ்சத்தின் காரணமாக, அனுமதிப்பதன் காரணமாக நகரத்தில் எங்கே பார்த்தாலும் தண்ணீர் ஆக போக முடியவில்லை, வரமுடியவில்லை. முதலமைச்சரே ஜீப்பில் போகமுடியாமல் நடந்து வந்தார் என்று கேள்விபட்டேன். அதற்குத் தகுந்த ஏற்பாடுகள் செய்ய வேண்டும். இந்த நகரத்தை அபிவிருத்தி செய்வதற்கு டெவலப்மெண்டு வரி போட்டீர்கள். ஒரு அடிக்கு ரூ. 135/– வாங்குகிறீர்கள். ஆகவே இதயெல்லாம் ஒழுங்காகச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எதிர்க்கட்சிகளைச் சார்ந்த பிரதிநிதிகள் உச்ச மாநாடு கல்கத்தாவில் ஜனவரி, 13, 14, 15 தேதிகளில் நடைபெற்றது. இன்னென்ன செயல்கள் எல்லாம் செய்யவேண்டுமென்ற தீர்மானம் போடப்பட்டது. அத்யாவசிய பொருள்கள் நியாய விலையிலேயும், பொது விநியோக முறையிலும், விவசாயிகளுக்கு கட்டுப்படி ஆகக்கூடிய விலையில் தொழிலாளர் சட்டத்திலே சீரமைத்து அமல்படுத்த வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது. ஆக அதைச் செயல்படுத்தாத காரணத்தினால்தான் தமிழ் நாட்டிற்கு 25 லட்சம் கிடைக்கவேண்டிய இடத்திலே 1 இலட்சம் ஏக்கருக்குத்தான் கிடைத்திருக்கிறது. வறுமைக்கோட்டிற்குக் கீழே இருக்கிறவர்கள் மேலும் அதிகரித்துக்கொண்டு வருகிறார்கள்.

(முற்பகல் 11-50)

விவசாயிகளுக்கு குறைந்த வட்டியிலே எளிமையான முறையிலே கடன் கிடைக்க ஏற்பாடு செய்யவேண்டும்; விவசாயத் தொழிலாளர்களுக்கு குறைந்த பட்சக் கூலிச் சட்டத்தை அமுல்படுத்த வேண்டும், அரசினுடைய தொழில் விரோதக் கொள்கையை கைவிடவேண்டும்; பெண்கள், நிராதரவற்றவர்கள், சிறுபான்மையோர், அரிசனங்கள் ஆகியவர்களுக்கு எதிரான நடவடிக்கைகளை, தாக்குதல்களை கைவிடவேண்டும் என்பது போன்ற முக்கியமான கோரிக்கைகளை முன்வைத்துத்தான் இன்றைக்கு தமிழகம் பூராவும் எதிர்க்கட்சிகள் எல்லாம் சேர்ந்து அதற்காக இயக்கங்கள் நடத்தியது. அப்படி நடத்தினால், நீங்கள் அதற்கு எதிர்ப்பாக, அதெல்லாம் கிடையாது என்று எதிர்ப்பு இயக்கங்கள் நடத்துகிறீர்கள். இதிலே கைது செய்யப்பட்டவர்கள் இன்னும் வெளியே விடப்படவில்லை. உதாரணமாக செங்கற்

பட்டு மாவட்டத்தில் கைது செய்யப்பட்டவர்கள் இதுவரையில் வெளியில் விடப்படவில்லை. ஆகவே இந்த மாதிரியான நியாயமான பிரச்சினைகளை நீங்கள் ஒதுக்கி விடாமல், இந்த ஏழை மக்களுக்கு, தொழிலாளர்களுக்கு சாதகமான முறையில் இருக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து விவசாயத் தொழிலாளர்களுக்கு வேஷ்டி சேலை கொடுக்கும் திட்டம். தப்பானவர்களுக்கு எல்லாம் வழங்கப் பட்டிருக்கிறது. வாங்கிக்கொண்டு போகட்டும். ஆனால் உண்மையாக பாதிக்கப்பட்ட விவசாயத் தொழிலாளர் களுக்கு கிடைக்கும்படி செய்யவேண்டும். அதிலே சிலருக்கு விட்டுப்போயிருக்கிறது. நியாயமாகக் கிடைக்கக்கூடியவர்களுக்கு கிடைக்கவில்லை. யார் யார் இதிலே பாதிக்கப்பட்டு இருக்கி றார்கள் என்று கணக்குப் பார்த்து அவர்களுக்கு கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து பால் உற்பத்தியைப் பெருக்குவது பற்றி நம்முடைய அமைச்சர் அவர்கள் இங்கே சொல்லியிருக்கிறார்கள். இதிலே பால் உற்பத்திக்கு லோன் கொடுக்கிறார்கள். அதை வாங்கு கிறவர்கள் கடனை கட்டமுடியவில்லை. பாலுக்கு சரியான விலை கிடைக்கவில்லை என்று சொல்லுகிறார்கள். விலையைக் கூட்டி விற்கிறீர்கள். இதலே ஏகப்பட்ட ஊழல்கள் நடக்கிறது. அதை முறைப்படுத்தவேண்டும்.

அடுத்து இந்த என்.ஆர்.டி.பி. என்ற தேசிய வேலை வாய்ப்புத் திட்டம், கிராம வேலை வாய்ப்புத்திட்டம். இதிலே எல்லாம் கான்ட்ராக்ட் விடக்கூடாது. கிராம சேவக்குகளுக்கு கொடுக்கவேண்டும். ஆங்காங்கே எங்கே பார்த்தாலும் கான்ட் ராக்டருக்குத்தான் கொடுக்கிறார்கள். ஆகவே அது கூடாது. அதை நிறுத்திவிட்டு, அது எப்படி மத்திய அரசு, மாநில அரசு சமமாகச் சேர்ந்து இரண்டு பேரும் 50:50 சதவீதம் என்று போட்டு வேலையைச் செய்கிறார்களோ, அதிலே பொதுமக்க ளுடைய கமிட்டி மூலமாக, கையிலே காசுகொடுத்து, ஆங்காங்கே வேலைகளைச் செய்யுங்கள், அதை கான்ட்ராக்ட்டுக்கு விடக் கூடாது என்று சொல்லிக்கொள்கிறேன்,

அடுத்து நம்முடைய போக்குவரத்துக் கழகத்தைப் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்கள்கூட இங்கே சொன்னார்கள். அவருடைய சொந்த அனுபவத்தைப் பற்றி. நம்முடைய போக்குவரத்துக் கழகத்தில் உள்ள பஸ்களில் பிரன்ட் வீலில், ரி—பட்டன் செய்த டயர் களைத்தான் போட்டு உபயோகிக்கிறார்கள். அவைகள் திடீரென்று வெடித்தால், எத்தனை பேர்களுடைய உயிர் போகும் தனி பட்ட பஸ் முதலாளிகள் கூட அவற்றைப் போடுவதில்லை. ஆகவே அரசாங்க பஸ்களிலே பிரன்ட் வீலிலே ரீ-பட்டன் போட்ட டயர்களை போடுவது சரியல்ல. அது நியாயம் அல்ல. அதை உடனடியாக நிறுத்தவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.



அடுத்து இப்போதெல்லாம் தொழிலாளர்கள் ஏகப்பட்ட புகார்கள் சொல்லுகிறார்கள். முன்னால் எல்லாம், 4 மணிக்கு ஒரு தடவை டூட்டி மாற்றுவார்கள். இப்போது 8 மணிக்கு ஒரு தடவை போகச் சொல்லுகிறார்கள். என்று சொல்கிறார்கள். இதனால் ஆட்களுக்கு சேதாரம் ஏற்படும், இதைத் தவிர்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து வீட்டு வசதியைப் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். 4 ஆயிரம் ரூபாய் என்று இருந்ததை இப்போது 6 ஆயிரம் என்று ஆக்கியிருக்கிறார்கள். நேற்று நான் இந்து பத்திரிகையிலோ, அல்லது இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையிலோ ஒரு செய்தி பார்த்தேன். என்.ஜி.ஒக்களுக்கு கொடுக்கிற கடன்கள் உடனடி யாக நிறுத்தப்பட்டது. பேஸ்மென்ட் மட்டத்தில் இருந்தாலும் சரி. அவன் 10 ஆயிரம் கடன் வாங்கியிருப்பான், 40 ஆயிரம் ரூபாய் சாங்ஷன் ஆகியிருக்கும். 10 ஆயிரம் வாங்கி அரைகுறை யாக கட்டியிருந்தாலும்கூட, இன்றைக்குக் கடன் இல்லை என்று சொன்னால் அவன் என்ன செய்வான்? கொடுக்காமல் இருந்தாலும் அவன் கட்டாமல் இருந்திருப்பான். வீட்டிலே யிருந்து பெண்டாட்டியினுடைய நகை எல்லாம் வைத்து அவன் இடத்தை வாங்கினால், அவனுக்கு கடன் இல்லை என்றால், எப்படி? இப்போது புதிதாக அநேகமாக 40 ஆயிரம் வீடுகள் கட்டப்போகிறோம் என்று சொல்கிறார்கள். இருக்கிற கூட்டுறவு சொசைட்டிகளுக்கே கடன் வரவில்லை. 7, 8 மாதங்களாக, இதற்கு ஒரு திட்டம் இருக்கிறது அரசாங்கத்திலே. கடனாவது அட்வான்சாகக் கொடுங்கள். எனவே இதையெல்லாம் பரிசீலனை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு எஸ். ஆர். இராதா: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் மரியாதைக்குரிய அழகர்சாமி அவர்கள் இந்த வீடு கட்டுவதற்காக இதுவரையில் பணம் கொடுக்கவில்லை என்று சொன்னார்கள். அந்த நிலைமை இல்லை. இதுவரை வந்து இருக்கிற விண்ணப்பங்களுக்கு மட்டும் பணம் தரப்படு கிறது. பணம் வழங்கிக்கொண்டு இருக்கிறார்கள். அதேபோல் என்.ஜி.ஒக்களைப் பொறுத்தவரையில், ஓர் ஆண்டுக்கு எவ்வளவு தருவது என்று வரைமுறை வைத்திருக்கிறார்கள். அதைத்தான் தடை செய்திருக்கிறோமே தவிர, அந்தப் பணம் எவ்வளவு செலவு செய்ய வேண்டுமோ, அந்த அளவிற்கு செலவு செய்து இருக்கிறோம். யார் யாருக்கு பணம் தரவேண்டுமோ, அவர் களுக்கு ஏப்ரல் மாதம் 1ஆம் தேதி, அடுத்த பட்ஜெட் வரவு செலவு வருகிறபோது அவர்கள் வாங்கிக்கொள்ளலாம். அதற்காக எந்த என்.ஜி.ஒவும் நகைகளை அடகு வைத்துவிட்டு கடன் வாங்க வேண்டிய அவசியம் இல்லை. ஏன் என்றால், முழு அளவிற்கு அவர்களுக்குக் கடன் தருகிறோம். எனவே என்.ஜி. ஒக்களுக்குத் தேவையான பணத்தை நிச்சயமாக வழங்குவோம்.

திரு. சோ. அழகர்சாமி: நம்முடைய வீட்டு வசதி வாரிய அமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கோள்கிறேன். இப்போதுதான் எல்.ஐ.சி-யிலிருந்து 10 கோடி வேண்டும் என்று

கடன் கேட்டோம். ஆனால், 7, 8 மாதமாக கடன் வரவில்லை. எங்களுக்கு 5 லட்ச ரூபாய் டிமாண்ட் வந்திருக்கிறது என்று சொன்னால், அவர்கள் 3 லட்ச ரூபாய்தான் சாங்ஷன் செய்கிறார்கள். அந்த ரூபாய் போதவில்லை. 15 கோடி ரூபாய்க்கு தற்போது டிமான்ட் இருக்கிறது. அரசாங்கம் 1700 கோடி ரூபாய் போடுகிற பட்ஜெட்டிலே ஒரு 10 கோடி ரூபாய் வருஷாவருஷம் ஒதுக்கினால் எல்லோருக்கும் வீட்டு வேலை நடக்கும். கொத்தனாருக்கு வேலை கிடைக்கும். சித்தாளுக்கு வேலை கிடைக்கும், சிமென்ட், கல் எல்லாவற்றுக்கும், டிமான்ட் இருக்கும், ஆகவே இதைச் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். எல்.ஐ.சியிலே எதிர்பார்த்து, எதிர்பார்த்து, போய் அலைந்து அலைந்து, வருஷத்திற்கு 10 பேர்களுக்கு அவர்கள் கொடுக்கிறார்கள். அதைத்தான நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக சோழன் போக்குவரத்துக் கழகத்திலே கோடிக் கணக்கான ரூபாய்க்கு ஊழல் நடந்திருப்பதாக சொல்லுகிறார்கள். அதில் இதுவரை நடவடிக்கை எடுத்தார்களா? இல்லையா? இல்லையென்றால், உடனடியாக நடவடிக்கை எடுப்பதற்கு ஏற்பாடு பண்ண வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்தபடியாக, மாவட்டங்களைப் பிரிப்பதற்காக வல்லுநர் குழு ஒன்று போட்டிருக்கிறார்கள்.. (குறுக்கீடு)

திரு. ஜே. எஸ். இராசு: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, எல். ஐ. சியிலேயிருந்து வீடு கட்டுவதற்காக 10 கோடி ரூபாய் வந்தது. அதிலே 3 கோடி ரூபாய் பழைய கடனுக்காக எல்.ஐ. சிக்கே திருப்பிக் கொடுத்து விட்டோம். மீதம் இருக்கிற பணத்தில் 9வது மாதம் வரையில்தான் கடன் கேட்பவர்களுக்கு அனுமதி செய்யப்பட்டிருக்கிறது. அதை டிசம்பர் மாதம் வரையில் கொடுக்கவேண்டும். ஏனென்றால், I am also the President of the Perambalur Housing Society. எங்களுக்கு வரவேண்டிய நிலுவைக் கடன் பாக்கித் தொகையில் பல லட்சம் வரவில்லை. ஆகவே, அதை முழுமையாக தரவேண்டும் என்பதுதான் திரு. அழகர்சாமி அவர்களுடைய கோரிக்கையும் ஆகும். அவரும் பிரசிடெண்ட்டாக இருக்கிறார்கள். டிமாண்டிற்கு ஏற்றவாறு அனுமதி தரவேண்டும். இல்லையென்றால், பொது மக்களுக்கு தினம் தினம் பதில் சொல்வது கஷ்டமாக இருக்கிறது எங்களுக்கு.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் திரு. வே. இரா. ஜெயராமன்: இவைகளையெல்லாம் அமைச்சரிடம் தனியாக நேரில் சந்தித்துப் பேசிக் கொள்ளுங்கள். திரு. அழகர்சாமி, இப்போது முடித்து விடுங்கள்.

திரு. சோ. அழகர்சாமி: இரண்டு நிமிடங்களில் முடித்து விடுகிறேன். மாவட்டத்தைப் பிரிவினை செய்வது சம்பந்தமாக சர்வ கட்சிகளையும் கலந்து செய்து, அதற்குப் பிறகு இந்த





முடிவை அறிவித்திருக்கலாம். ஆனாலும் இது இப்போதைக்குள் முடியப் போவதில்லை. இந்தக் குழு போய் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் சென்று ஆராய்ந்து, சகலமும் பண்ணி, பிறகு அறிக்கை கொடுத்து, அதற்குப் பிறகு தான் முடிவு செய்ய வேண்டும். ஆனால் இப்போதே பல இடங்களில் தலை நகரம் சம்பந்தமாக பல பிரச்னைகள் கிளம்பிக் கொண்டிருக்கின்றன. எங்களுடைய ஊர் தான் தலைநகராக வேண்டும், எங்களுடைய ஊர்தான் தலைநகராக வேண்டும் என்று ஒவ்வொருவரும் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள், இவைகள் எல்லாம் இப்போது மக்களை திசை திருப்பி விட்டுக் கொண்டிருக்கின்றன. ஆகவே, முதலிலேயே அதைக் கொஞ்சம் ஆராய்ந்து, அங்கங்கேயுள்ள சர்வ கட்சிகளையும் சேர்ந்தவர்களை கலந்த பிறகு, இந்தக் காரியங்களைச் செய்திருக்கலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து அரசு பணியாளர்களுக்கு ஓய்வு பெறும்போது 10,000 தருவதாகச் சொல்கிறீர்களே, அதை எப்படி தரப்போகிறீர்கள் என்று தெரியவில்லை. உதாரணத்திற்கு ஒருவர் 25 வயதில் வேலைக்கு சேர்ந்தார் என்றால், 13 வருடத்தில் அவருக்கு அவருடைய சேமிப்பில் 5,000 சேர்ந்து விடுகிறது. 25 பிளஸ் 33 தான் 58 வருஷம் வருகிறது. 58 வயதில் தான் ரிடையர்மெண்ட். ஆனால் அவருக்கு 7 வருஷத்திலே 10 ஆயிரம், 14 வருஷத்திலே 20 ஆயிரம், 20 வருடத்திலே 40 ஆயிரம் ஆகிறது. அதற்குப் பிறகு அதற்கு வட்டி, வட்டிக்கு வட்டி என்று மேலும் வரும். ஆகவே, இதிலே நீங்கள் 40 ஆயிரம் வாங்கிக்கொண்டு 10,000 கொடுத்தனுப்பப் போகிறீர்களா? இது எப்படி என்பதை எனக்கு விளக்கம் சொல்ல வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கட்டிடத் தொழிலாளர்களைப் பற்றி இங்கே எல்லோரும் எடுத்து பேசிருக்கிறார்கள். சட்டத்திலே அதற்கு பாதுகாப்பு தரவேண்டும். முதலமைச்சர் நிதியிலிருந்து கொடுக்கப்படுகிறது என்று சொன்னால், அந்த அவர்கள் சட்டரீதியாக பெறமுடியாமல் போய்விடும். அடுத்து செஞ்சி என்ற ஊரிலே கிட்டத்தட்ட 500 நபர்கள் இருக்கிறார்கள். அங்கே ஓட்டர் லிஸ்டிலே அவர்கள் பெயரை சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டால், அதிகாரிகள் சேர்த்துக்கொள்ள மறுக்கிறார்களாம். பாராளுமன்றத் தேர்தலிலே, சட்டமன்றத் தேர்தலிலே வாக்களித்திருக்கிறார்கள். ஓட்டர் லிஸ்டில் பெயர்கள் இருந்திருக்கின்றன. இந்த நகராட்சி, ஊராட்சி ஒன்றிய தேர்தல்களுக்கு அவர்களுடைய பெயரை சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று அவர்கள் கேட்கிறார்கள். சரியாகச் சொல்லவேண்டும் என்றால், நரசிங்கராயன் பேட்டை என்ற ஊர், அதிலே எம்.ஜி.ஆர். நகர் அங்கேயிருக்கும் 500 பேர்களையும் கட்டாயம் இப்போது எடுக்கும் ஓட்டர் லிஸ்டிலே சேர்த்தாக வேண்டும் என்று அவர்களே கேட்பதற்காக இங்கே வந்திருக்கிறார்கள். கேட்டால், நீங்கள் வீட்டு வரி கட்டவில்லை. வீட்டு வரி ஏன் கட்டவில்லை என்றால், டிமான்ட்

நோட்டீசே அனுப்பவில்லை—என்று பி.டி.ஓ. சொல்கிறார்களாம். நானே உங்கள் சார்பாக சட்டசபையிலே பேசும்போது சொல்லி விடுகிறேன் என்று அவர்களிடம் சொல்லி விட்டு வந்தேன். ஆகவே, அவர்களுடைய பெயர்களை கட்டாயம் ஓட்டர் லிஸ்டிலே சேர்த்துக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறேன். அங்கே மின்சாரம் இருக்கிறது. அவர்கள் ஒழுங்காகக் குடியிருக்கிறார்கள். பிறகு சேர்ப்பதற்கு என்ன மறுப்பு?

அடுத்து புகளூர் காகித நிறுவனம் 195 லட்சம் ரூபாய் செலவில் அரசு சார்பாக ஆரம்பிக்கப்பட்டது. அங்கே வேலைக்கு ஆள் சேர்ப்பதில் எந்தவித முறையும் கிடையாது. நேராக அப்ளிகேஷன் போட்டால், எந்தவித எம்ப்ளாய் மெண்ட் எக்ஸ் சேஞ்சின் உதவியும் இல்லாமல், அவர்களே நேரிடையாக ஆட்களை எடுத்துக் கொள்கிறார்கள். இதனால் பல ஊழல் நடக்கிறது என்று சொல்கிறார்கள். எம்ப்ளாய்மெண்ட் எக்ஸ்சேஞ்சில் எல்லாவிதமான கேட்டகரிகளுக்கும் ஆட்கள் பதிவு செய்திருக்கிறார்கள். ஆகவே, அதன் மூலமாகவே அந்த நிறுவனத்தில் ஆட்களை எடுக்கும் வகையில் அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

அடுத்தாற்போல் ஸ்ரீரங்கம் கோயில் தணிக்கை அதிகாரி வெங்கடாஜலம் மறைவு பற்றி நிறைய விவரமாக மாண்புமிகு உறுப்பினர் நெடுமாறன் அவர்கள் சொன்னார்கள். அவருடைய மரணம் தற்கொலை அல்ல, கொலைதான் என்று அவர்களுடைய பெற்றோர்களே சந்தேகப்படுகிறார்கள். ஆகவே, அதற்கு ஒரு நீதி விசாரணை வைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். அத்தோடு அந்த இடத்திலே நிர்வாக அதிகாரி 6 வருடங்களாக இருக்கிறார்கள். மற்ற இடங்களில் 3 வருடத்தில் மாற்றம் செய்கிறபோது, இங்கே மட்டும் ஏன் 6 வருடங்களுக்கு வைத்திருக்கிறீர்கள்? அதனால்தான் ஊழல் அதிகரிப்பதாக கூட அங்கே சொல்லுகிறார்கள். அதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அடுத்து ஈரோடு செந்தமனார் கூட்டுறவுச் சங்கத்தில் 4 ஆண்டுகளாகப் பணிபுரிந்தும், அவர்களுடைய பணி நிரந்தரமாக்கப்படாமையால், அதற்காக வேண்டி அதன் ஊழியர்கள் உண்ணாவிரதம் இருக்கிறார்கள். அவர்களுக்கு பணிப் பாதுகாப்பு தேவை. அது மட்டும் அல்ல, இதுபோன்ற நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்றும், தமிழகத்தினுடைய முன்னேற்றம் வளர வேண்டும் என்றும், தொழிலாளர் நலப் பிரச்சினை, விவசாயிகள் பிரச்சினை, விவசாயிகளின் பழைய கடனை கொடுத்து, புதிய கடன் வசதி பெறுதல், நீர்ப்பாசனத்திற்கு அதிக அளவில் ஏற்பாடு செய்தல் போன்ற அத்தனை வளர்ச்சிப் பணிகளையும் உள்ளடக்கி, தாங்கள் நல்லவிதமாக பட்ஜெட்டைக் கொண்டு வரவேண்டும், இந்த அவையில் சமர்ப்பிக்க வேண்டும் என்று கேட்டு எனது உரையை முடித்துக் கொள்கிறேன்.





(நண்பகல் 12-00)

திரு. ரா. உமாநாத்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, கவர்னர் உரையின் மீது பேசுகின்றபோது ஒரு கேந்திரமான ஜனநாயக உரிமைப் பிரச்சினையை இந்த ஆளுநர் உரையிலே குறிப்பிடவில்லை என்பதை முதலிலே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். பத்திரிகை சட்டம் வாபஸ் பெறப்படுவதற்கான சட்டம், அதற்காக ரிப்பீல் பண்ணுகிற சட்டம் இந்தக் கூட்டத் தொடரில் வரும் என்று கூறப்பட்டது. இந்தக் கூட்டத் தொடரில் இந்த இந்த பில்ஸ் வரும் என்று கவர்னர் உரையிலே சொன்னார்கள். ஆனால் இதுபற்றிய ஒரு பில் வரும் என்று இந்த ஆளுநர் உரையிலே சொல்லப்படவில்லை என்பதை It is a criminal lapse குற்றகரமான தவறுஎன்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். அவை முன்னவர் என்ன சொன்னார், அதை ரத்து செய்வதற்கு தேவைப்படும் சட்ட சம்பந்தமான ஆலோசனைகள் நடத்தப்படுகின்றன என்று சொன்னார். அதுவரை உபயோகப் படுத்த மாட்டாராம் அவர். பெரிய சலுகை மாதிரி. நான் கேட்கிறேன். ஆலோசனை செய்வதற்கு ஒன்றரை வருடமா? வாக்குறுதி கொடுத்து ஒன்றரை வருடம் ஆகிறது. அதுவரையில் பயன்படுத்தமாட்டோம் என்று சொல்வது ஒரு சலுகை கிடையாது. அந்த சட்டத்தை சுப்ரீம் கோர்ட் சஸ்பெண்ட் பண்ணியிருக்கிறது. நீங்கள் என்ன உபயோகப்படுத்துவது?

You cannot use it.

ஆகவே சலுகை கிடையாது. பத்திரிகை உரிமையை அழிப்பதற்கு அவசரச் சட்டம் கொண்டுவர முடிந்தது உங்களால். ஆனால் இப்போது மீண்டும் வழங்குவதற்கு அவசரச் சட்டம் கொண்டுவர முடியவில்லையா? சினிமா, வீடியோ இவைகளுக்காக எல்லாம் 10 நாட்களிலே 3 ஆர்டினன்ஸ் வந்தாகி விட்டது. ஆனால் பத்திரிகை உரிமையை மீண்டும் வழங்குவதற்கு ஏன் அவசரச் சட்டம் கொண்டுவராமல் இருக்கிறீர்கள்? ஏன் ஒன்றரை வருஷம் எடுக்கிறீர்கள்? உண்மையை மறைக்கிறீர்கள் என்பது என்னுடைய கருத்து. சுப்ரீம் கோர்ட்டிலே கேஸ் இருக்கிறது, அதனுடைய தீர்ப்பு என்ன ஆகிறது என்று பார்க்கலாம், ஒருக்கால் நமக்கு சாதகமாக இருந்தால் 'ஊம்' என்று நினைக்கிறீர்கள். தவறான எண்ணத்தோடு அப்படிக் காத்திருக்க வேண்டாம், காத்திருப்பது சரியல்ல. அது ஒரு கருப்புச் சட்டம், இந்தியாவிலேயே தமிழகத்திலேதான் அது இருக்கிறது. அக்கிரமமானது. வெட்கக்கேடானது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். Preposterous, atrocious and shame. ஆகவே அதற்காக சட்டத்தை இந்தப் பேரவைக் கூட்டத்திலேயே கொண்டு வந்து அதை ரிப்பீல் பண்ணவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஓர்ஸ்ட் திங் என்னவென்றால் தங்களுக்கு அல்லது சபாநாயகருக்குத் தெரியாமலேயே இங்கே ஜனநாயக உரிமை தாக்கப் படக்கூடிய விஷயம் நடக்கிறது. முன்பு பிரஸ் காலரியிலே

நடந்தது பற்றி உங்களுக்கு ஞாபகம் இருக்கும். போலீஸ் இங்கே வேவு பார்க்கக்கூடிய முறையிலே சர்க்குலர் வந்ததை நாங்கள் இங்கே ரெய்ஸ் பண்ணினோம். அது வாபஸ் பெறப்பட்டது என்று சொன்னார்கள் எங்களுக்குத் தெரியும். விஷயம் அப்படியே நடக்கும் என்று. எங்களுக்கு வந்திருக்கிற தகவல் பிரஸ் காலரியிலே சி.ஐ.டி. சாதாரண உடையிலே உட்கார்ந்துகொண்டு சி.ஐ.டி. வேலை பண்ணிக்கொண்டிருக்கிறார்கள். பிரஸ் எப்படி பிரீயாக வேலை செய்வார்கள். அதே மாதிரி லாபியிலே உறுப்பினர்கள் பலதும் பேசுவோம். இன்டலிஜன்ஸ் மென் அங்கே உட்கார்ந்து கொண்டு எந்த மெம்பர் எந்தக் கட்சிக்காரரோடு என்ன பேசுகிறார்கள் என்று வேவு பார்க்கக்கூடிய விஷயம் இருக்கிறது. அது சபாநாயகருக்கும் தெரியாது, செகரட்டரிக்கும் தெரியாது, This thing is going on. அது அவையை அச்சுறுத்துவது ஆகும், மெம்பருடைய பிரிடம் பாதிக்கப்படும். ஆனால் கவர்னமென்டை கேட்டால் அப்படிப் போடவில்லை, அப்படி உத்திரவு இல்லை என்று சொல்வார்கள். நான் அவைத் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்ள விரும்புவது எல்லாம் கவர்ன்மென்டில் அப்படித்தான் சொல்வார்கள். You must make an independent investigation. அதை செய்து இந்த சபையின் சுதந்திரத்தையும் கௌரவத்தையும் பாதுகாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இன்டிபென்டண்ட் ஆக நீங்களே இன்வெஸ்டிகேட் பண்ணி கண்டுபிடித்து இதற்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து ஆளுநர் உரையை நான் ஊன்றி கவனித்துப் படித்துப் பார்த்தேன். இந்திய நாட்டில் ஏற்பட்டிருக்கிற பொருளாதார நெருக்கடி தமிழகத்திற்குப் பொருந்தாதது போல அப்படிச் சொல்லவில்லை, படித்தால் உள் அர்த்தம் அப்படி இருக்கிறது. தமிழகத்திலே பொருளாதாரம் ஏதோ சுதந்திரமான சுயேச்சையான பொருளாதாரம் என்பது மாதிரி இந்த உரை அமைந்திருக்கிறது. இந்த நாட்டுப் பொருளாதாரம் பற்றி Currency and Finance இல் குறிப்பிடப்பட்டிருக்கிறது. 28-1-84 ஆம் தேதிய அந்த ரிப்போர்ட்டில் என்ன குறிப்பிடப்பட்டிருக்கிறது என்றால் 1982-83 ஆம் ஆண்டு விவசாய உற்பத்தியில் கணிசமான வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாலும் தொழில் வளர்ச்சிப் பின்னுக்குப்போனதாலும் இந்தியப் பொருளாதாரத்தில் கடுமையான பின்னடைவு ஏற்பட்டுள்ளது, என்று கூறப்பட்டிருக்கிறது. அது 1982–83 இல். வரும் ஆண்டிலே 1984-85 ஆம் ஆண்டின் கதி என்ன? வரும் ஆண்டு என்ன என்பது நமக்கு தெளிவாக இருக்கவேண்டும் ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கடைசி ஆண்டு தேதி அழுகு முடியப் போகிறது. ஆகவே மத்திய மாநில அரசுகளின் 1984-85 ம் ஆண்டிற்கு திட்டங்களை, ரூபாய் கணக்கில் அல்ல, அக்சுவல், பிஸிக்கல் திட்டங்களை திட்டக் கமிஷன் வெட்டியுள்ளது.

முதலில் 1983-84ம் ஆண்டு பட்ஜெட்டில் திட்ட வளர்ச்சிக்கு 21 சதவீதம் ஏற்பாடு செய்யப்பட்டது. ஆனால், அந்த 21 சதவீதம் வராது. அது 12 சதவீதமாகக் குறையப்



போகிறது. நமக்கு முன்னால் இருக்கிற விஷயம் அடுத்த ஆண்டில் திட்ட முதலீடு என்ற வகையில் குறைப்பது என திட்ட கமிஷன் முடிவுசெய்துள்ளது. ஆகவே இதனால் ஏராளமான புது தொழில்கள் அமைக்க முடியாமல் போகும். திட்ட கமிஷன் வட்டாரங்களிலிருந்து நமக்கு தகவல் கிடைத்து இருக்கிறது. நான் இந்த அரசை கேட்பது இந்த நிலைமை இந்திய நாட்டில் உள்ள நிலைமை, இதனால் தமிழகத்தின் வளர்ச்சி பாதிக்காதா? தொழில் வளர்ச்சி பாதிக்காதா? மின்சார உற்பத்தி வளர்ச்சி பாதிக்காதா? வேலை வாய்ப்பு பாதிக்காதா? பாதிக்காதா என்றால் எதிர்காலத்தை குறிக்கும். ஏற்கனவே பாதிக்கவில்லையா என்று நான் கேட்கிறேன். இது ஒரு சீரியஸான விஷயம். இந்த பாதிப்பு பற்றியும், மேலும் ஏற்பட இருக்கும் பாதிப்பு பற்றியும், அதற்கான காரணங்களை, மத்திய அரசினுடைய கொள்கை என்ன என்று ஐடென்டிபை செய்வதற்கு இனம் காட்டாமல் ஆளுநர் உரை அது சம்பந்தமாக மௌனம் சாதிக்கிறது. whole economy தமிழ்நாட்டில் பாதிக்கக்கூடிய அளவில் நிலைமை இருக்கிறது. அதுபற்றி ஆளுநர் உரை மௌனம் சாதிக்கிறது. தமிழகத்தினுடைய நிலைமை இவ்வளவு அபாயகரமாக இருக்கும்போது ஆளுநர் உரையில் என்ன கூறுகிறார் "Let me quote" வருகிற ஆண்டில் நம் மாநிலத்தின் பொருளாதாரம் எல்லா வகையிலும் மேலும் வளம் பெறும் என்று உளமார நம்புகிறேன் என்று உள்ளது.

Where does the Governor come I do not understand. If living where? எல்லா வகையிலும் வரும் ஆண்டில் இந்தியா பூராவும் இருக்கிற நிலைமையைப் பற்றி ரிசர்வ் வங்கி ரிப்போர்ட்டில் கூறியிருக்கிறது. அது தான் கைவிடு செய்வதற்காக இருக்கிறது. வரும் ஆண்டில் மேலும் வளம் பெறும் என்றும் எல்லா வகையிலும் வளம்பெற உளமாற நம்புகிறேன் என்றும் ஆளுநர் உரையின் துவக்கமே உண்மைக்கு மாறாக, உண்மைக்கு புறம்பாக இருக்கிறது இது தமிழ்நாட்டு மக்களை ஏமாற்றும் முறையில் அமைந்து இருக்கிறது. இது எப்படி இருக்கிறது என்றால் குஷ்டரோகிக்கு சென்டு பூசுவது போன்ற உரையாக இந்த ஆளுநர் உரை இருக்கிறது. சென்டு பூசினால் போய்விடுமா? வறட்சி வெள்ளம் பற்றி ஏராளமாக பேச வேண்டியிருக்கிறது, ஆனால் 22 ம் தேதி தனி விவாதமாக அது வருவதால் நான் அதைப்பற்றி அந்த விவாதத்தில் விரிவாக பேசுகிறேன், இந்த உரையைப் பொறுத்தவரையில் முதல் கிரைம் என்ன என்றால் கடும் குற்றம் என்னவென்றால் 1982-ம் ஆண்டு இந்த அரசு என்ன கூறியது. என்ன என்றால் மக்கள் உபயோகப்படுத்துகின்ற அத்தியாவசிய பண்டங்களின் விலைகள் செங்குத்தாக உயர்ந்ததைக் கண்டு இந்த அரசு ஆழமாக கவலைப் படுகிறது. இந்த விலைவாசி பிரச்சினையில் நாட்டின் பொருளாதாரக் கொள்கை இணைந்துள்ள பிரச்சினை ஆகும் என்று இந்த அரசு 1982ம் ஆண்டு கூறியது. இந்த அசெம்பிளி ரிக்கார்டில் இருந்து படிக்கிறேன் அதற்கு பின் இன்று விலைவாசி பல மடங்கு உயர்ந்து இருக்கிறது. இதை யாரும் மறுக்க முடியாது

இதனால் கோடிக்கணக்கான மக்கள், அதுவும் வறுமை கோட்டுக்கு கீழே இருக்கக்கூடிய மக்கள் தாங்கமுடியாத வேதனையினால் சுருண்டு விழுந்து கொண்டு இருக்கிறார்கள். அதை ஆங்கிலத்தில் சொல்வார்கள். Ripping in pain ஆனால் அதைப்பற்றி கவர்னர் உரையில் ஒரு துளி கூட கவலை தெரிவிக்க வில்லை. இது சர்ப்ரைசிங்காக இருக்கிறது. ஓர்ல் போஸின் வந்து இருக்கும் போது கவர்னர் உரையில் ஒரு வார்த்தை கூட இல்லை. டீசல்விலை உயர்ந்துள்ளதால் அரசு போக்குவரத்து கழகங்கள் பாதிக்கப்பட்டுள்ளது என்று ஆளுநர் உரையில் கூறப் பட்டிருக்கிறது இப்போது தான் டீசல விலை உயர்ந்ததா மத்திய அரசு பெட்ரோலிய பொருள்களின் விலைகளையும் மற்றும் 34 ஐடம்களின் விலைகளை 1980லிருந்து 1983 வரை 4 தடவை உயர்த்தி இருக்கிறது. 3 வருடத்தில் 4 தடவை பெட்ரோலிய மற்றும் சில பொருள்களின் விலையை உயர்த்தியதால், மத்திய அரசுக்கு 5500 கோடி ரூபாய் அதிகமாக வருவாய் வந்து இருக்கிறது. நான் கேட்கிறேன் மத்திய அரசின் இந்த நடவடிக்கை 3 ஆண்டுகளில் உங்களை பாதிக்கவில்லையா மத்திய அரசின் கொள்கையை எதிர்த்து போராடினீர்களா? இல்லையே இப்போது போராடப் போகிறீர் களா? இல்லையே என்ன பதில் You have now said; it has affected in three years.'' அதற்கு பதிலாக நீங்கள் அங்கு தாக்குவதற்கு பதிலாக நம்முடைய பொருளாதாரத்தையும், நம் திட்டங் களையும் இந்த மாநிலத்திலே வெட்டி விடக்கூடிய அந்த கொள்கையை கொண்டு இருக்கிற அவர்களை தாங்குவதற்கு பதிலாக போயும் போயும் மேற்கு வங்கத்தை குறிக்கோளாக வைத்து பேசுகிறீர்களே.

(பிற்பகல் 12-10.)

தாக்குகின்ற இடத்தில் தொடமாட்டீர்கள். தொடுவதற்குப் பயமோ என்னவோ தெரியவில்லை, போக்குவரத்துத் தொழிலாளர்களின் ஊதியத்தை தானே காட்டுகிறீர்கள். நிலக்கரி விலையை மைய அரசு 25 சதவிதம் உயர்த்தியதால் மின்சார போர்டு பாதிக்கப்பட்டுருக்கிறது என்று கவர்னர் உரையிலே கூறப்பட்டிருக்கிறது. நம்மை நாசமாக்கும மைய அரசின் இந்த நடவடிக்கைகளை எதிர்த்துப் போராடுகிறீர்களா? கடந்த ஆண்டு பலமுறை உயர்த்தியிருக்கிறார்கள். It is a fact that Cost Prices has increased மைய அரசு செய்கின்ற அநியாயத்தை எதிர்க்கத் தவறி விட்டீர்கள். மின்சார கட்டணத்தை உயர்த்தி மக்களைத்தானே தாக்குகிறீர்கள்? மின்சார வாரிய ஊழியர்களின் போனசைத்தானே தாக்குகிறீர்கள்? தொழிற் சங்கங்களைத்தானே தாக்குகிறீர்கள்?

விலைவாசி என்ற அபரம் இதோடு நிற்காது என்று நான் எச்சரிக்க விரும்புகிறேன். ஏன் சொல்கிறேன் என்றால், சமீபத்தில் பத்திரிகை நிருபர்கள் ஒரு பிரஸ் கான்பிரன்ஸிலே



பிரதமரை மடக்கினார்கள். ஏன் என்றால் 1980 ஆம் ஆண்டு வாக்குறுதி கொடுத்தார்கள், விலைவாசியைக் குறைப்பேன என்று. அதற்குப் பிறகு இவ்வளவு பயங்கரமாக வந்திருக்கிறது அல்லவா? ஆகவே, பிரஸ் கான்ஃப்ரன்சிலே பிரஸ் கரெஸ்பான் டென்ட்ஸ் கேள்விக்கு மேலே கேள்வி போட்டு, அந்த அம்மாள் பதில் சொல்ல முடியாமல் ஆத்திரத்தில் உண்மையை வெளி யிட்டு விட்டார்கள். ஐ கோட், 'இந்து'—ஜனவரி மாதம் 12 ஆம் தேதி. பிரதமர் என்ன சொல்கிறார்? ஆத்திரத்தில் உண்மையை வெளியிட்டு விட்டார். விலைவாசி உயர்ந்ததைக் குறிப்பிடுகையில், பொருளாதார வளர்ச்சிக்கும், தொழில் வளர்ச்சிக்கும் தேவையானதே என்று சொல்கிறார். இந்த விலைவாசி உயர்வு தேவையானதாம். பொருளாதாரம் வளர வளர விலைவாசியும் ஏறிக்கொண்டே இருக்கும் என பிரதமர் கூறினார். அதன் பொருள் என்ன? அடுத்து கோடிக்கணக்கான குடும்பங்கள் அடுத்த ஆண்டுகளில் நாசமாக்கப்படக் கூடும். வளர்ச்சி வேண்டுமென்றால் விலைவாசி ஏற வேண்டும் என்று பிரைம் மினிஸ்டர் சொல்கிறார். இதுவரைக்கும், கட்டுப் படுத்துவேன் என்று சொன்னதையெல்லாம் விட்டு விட்டார்கள்.

Thiru K. S. G. HAJA SHAREEF: Mr. Chairman, it is a well-known fact that in a rising economy whenever prices rise, wages also rise and whenever wages rise, the prices also rise. So,, my good friend, Hon Mr. Umanath must come to an understanding, at what level the price should rise and at what level the wages should be freezed.

திரு. ரா. உமாநாத்: தலைவரவர்களே, என்னவோ கூலி உயர்ந்ததால் விலைவாசி உயர்ந்ததாகக் கூறுகிறார்கள். ஆகவே, கூலியைக் குறைக்க உதவி செய்ய வேண்டுமென்று சொல்கிறார்கள். அதற்கு வேறு ஆளைப் பார்க்கட்டும். என்னிடம் ஒன்றும் நடக்காது. பிரதமர் கூலியைச் சொல்ல வில்லை. விலைவாசி உயர்ந்ததைக் குறிப்பிடுகையில் பிரதமர் சொன்னதைச் சொல்கிறேன். பொருளாதார வளர்ச் சிக்கும் (for the devlopment of the economy.) விலைவாசி உயர்வு தேவை. தொழில் வளர்ச்சிக்கும் for the development of the industry-அது அவசியம், (it is necessary) என்ற கருத்தைச் சொல்கிறார். பொருளாதாரம் வளர, வளர, எகானமி டெவலப் ஆக ஆக, விலைவாசி உயர்ந்துகொண்டே இருக்கும் என்ற கருத்தைத்தான் சொல்கிறாரே தவிர கூலி உயர உயர என்று அப்படிச் சொல்லவில்லை. I say it is a broader statement.

THIRU K. S. G. HAJA SHAREEF: They are not hampering the production..

திரு. ரா. உமாநாத்: நாளைக்கு ரொம்ப நீட்டமாக பேசப் போகிறார்கள். அந்த ரிப்ளையில் சொல்லுங்கள். "They are not going to affect. infact, already it has affected. கோடிக் கணக்கான குடும்பங்கள் நாசமாக்கப்படக் கூடும். எனவே, இதை ஆட்சேபித்தீர்களா என்று கேட்க விரும்புகிறேன். இதைக் கண்டித்தீர்களா? ஆமாம், அப்படித்தான் என்று ஒரு ஸ்டேட்மெண்ட் வந்தபிறகு அதைக் கண்டிக்க வேண்டாமா? நீங்கள் எப்படி இங்கே உள்ள ஜனங்களைச் சமாளிக்கப் போகிறீர்கள்? ஆகவேதான் அண்ணா தி.மு.க. அரசை நாங்கள் கடுமையாக எதிர்க்கிறோம். அது உண்மை.

மைய அரசு விலைகளை உயர்த்தி நமது திட்டங்களையும், மக்களின் வாழ்க்கைத் தரத்தையும், மின்சார வாரியத்தையும் போக்குவரத்துத் துறையையும் தாக்குகின்றபொழுது இங்கே, சும்மா அபாயக் குரல் எழுப்பிக்கொண்டு, லெட்டர் எழுதிக் கொண்டு உட்கார்ந்திருப்பதால் பிரச்னை தீராது. ஜனங்களைத் திரட்டவேண்டும். நம்முடைய பொருளாதாரம் குட்டிச்சுவராகிக் கொண்டிருக்கின்ற நேரத்தில், ஜனங்களைத் திரட்டி மைய அரசை எதிர்த்துப் போராடவில்லை என்பதால் நாங்கள் எதிர்க்கிறோம். காங்கிரசுடன் அரசியல் உறவுக்காக மக்கள் நலன்களைக் கை விடுகிறீர்கள். ஆகவே, உங்களை நாங்கள் எதிர்க்கிறோம்.

உங்கள் பொறுப்பிலே உள்ள பொது விநியோக முறையில் என்ன நடக்கிறது? 80,000 டன் மைய அரசு கொடுத்தால்தான் முறையாக விநியோகிக்க முடியும் என்று சொல்கிறீர்கள். ஆனால் அதை மறுத்து, அது 40,00) டன்களாக வந்து, அதிலும் இப்பொழுது லேட்டஸ்டாக 5,000 டன் குறைச்சலாகத் தரப் படுகிறது. மைய அரசு ஏன் குறைக்கிறார்கள்? 80,000 டன் தேவைப்படும் இடத்தில் 4 ',000 டன்கள் என்று ஆகி அந்த 40,000 இல் இப்பொழுது ஏன் 5,000—ஐக் குறைக்கிறார்கள்?

அரிசி இல்லாததால் அல்ல. நீங்கள் அதைக் கவனித்திருக்க மாட்டீர்கள். மத்திய அரசு அரிசியினை வழங்கப்போவதில்லை என்று சொல்லிவிட்டார்கள். பச்சையாக சொன்னால் இந்த ஜனவரி மாதம் 12 ஆம் தேதி மத்திய அரசின் உணவுத்துறை காரியதரிசி ஒரு ஸ்டேட்மென்டிலே கொடுத்திருக்கிறார்கள். ஆகவே அரிசி இல்லாததால் அல்ல. அதாவது அவர் என்ன சொன்னார் தெரியுமா? கூடுதலாக அரிசி கொடுப்பதற்கு மத்திய அரசு தயாராக இல்லை, கோதுமையை வேண்டுமானால் கூடுதலாகத் தருவோம். கோதுமை உபயோகத்தைத்தான் ஊக்கப்படுத்த விரும்புகிறோம் என்று உணவு காரியதரிசி கங்கோபாத்யாயா தெளிவாகக் கூறியிருக்கிறார். ஆகவே இதிலிருந்து என்ன தெரிகிறது? மத்திய அரசு கோதுமையின் உபயோகத்தை ஊக்கப்படுத்துவதற்காக வேண்டுமென்றே அரிசி கொடுக்க மறுக்கிறார்கள் என்று நான் சொல்கிறேன். அதுதான் உண்மை நிலை. ஆனால் நீங்கள் அதற்குள் போக மாட்டேன்



என்று சொல்கிறீர்கள். ஏன் அப்படி செய்கிறார்கள்? அரிசி குறைந்தால் கோதுமை சாப்பிட மாட்டீர்கள் என்பதுதான்.

இந்தச் செய்தி வெளியானவுடன் இதனை எதிர்த்து நீங்கள் போராடினீர்களா என்றால் இல்லை. ஆகவே இந்த விஷயத்திலே மத்திய அரசின மடியில் கை வைப்பதற்குப் பதிலாக, மக்களின் மடியிலே கை வைக்கிறீர்கள். மக்களுக்கு அளித்து வந்த அரிசியினைப் பொறுத்தவரையில் 20 கிலோவைக் 6 கிலோவாக ஆக்கினீர்கள். அதிலும் கிராமங்களைப் பொறுத்த வரையில் 2 கிலோவாக ஆக்கினீர்கள். அதுகூட பல இடங்களில் கிடைக்காத நிலைமைதான். ஆனாலும் ஒரு டமாரம் அடிக்கப் படுகின்றது, நாங்கள் வந்ததற்குப் பிறகு 16,00 கடைகளாக எண்ணிக்கையினை உயர்த்தினோம் என்று. 16 ஆயிரம் கடை களிலே கணிசமான கடைகளில் பொருள்கள் இல்லை. இது பற்றி ஆளும் கட்சியினரின் தொகுதிகளிலிருந்து கூட பல கம்ப்ளயின்ட்ஸ் வந்திருக்கின்றன. அவற்றிலே பெருவாரியானவை தகர டப்பாக்கள்தான் வந்திருக்கின்றன. பொருள் இல்லை. அல்லது அரைகுறையாக இருக்கின்றது; அல்லது வெகுநேரம் நிற்கவைத்து விடுவார்கள். அதாவது அவர்களாகவே சோர்ந்து போய்விடட்டும் என்பதற்காக. எனவே அந்தக் கடைகள் என்று சொல்லப்படுபவை அனைத்தும் ஊழல்களின் கூடாரங் களாக இன்றைக்கு இருக்கின்றன. பொருட்களைக் கடத்தக் கூடிய கடத்தல் தளமாக அவை இருக்கின்றன.

அடுத்து ஒரு ரூபாய் 75 காசுக்கு அரிசி கொடுப்பதாக ஒரு டமாரம் அடிக்கப்படுகின்றது. தமிழ்நாட்டிலே எந்தக் கடையில் அவ்வாறு ஒரு ரூபாய் 75 காசுக்கு அரிசி கொடுக்கிறார்கள் என்பதைச் சொன்னால் நல்லது. நானும் தேடித் தேடிப் பார்த்தேன். நான் விசாரித்து அறிந்த வரையில் எந்தக் கடை யிலும் ஒரு ரூபாய் 75 காசுக்கு அரிசி கொடுக்கப்படவில்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு பாலசுப்பிரமணியம் அவர்கள் பேசி இருக்கிறார்களே, அதனால் எம்.எல்.ஏ. ஹாஸ்டலுக்குப் பக்கத்திலே உள்ள ஆல் இண்டியா உமன்ஸ் கான்ஃபிரன்ஸ் கடையில் போய் கேட்டேன். ஒரு ரூபாய் 75 காசுக்கு அரிசியே ஃபேர் ப்ரைஸ் கடையிலே இல்லை என்று சொன்னார்கள், சேல்ஸ்மேன் சொன்னார், நான் இந்தக் கடைக்கு வந்து ஒன்றரை வருடங்கள் ஆகின்றன. அப்படி ஒன்றேமுக்கால் ரூபாய்க்கு விற்ற அரிசியினை நான் கண்ணாலேயே பார்த்தது இல்லை என்று சொன்னார்கள். ஆகவே ஒன்றேமுக்கால் ரூபாய்க்கு அரிசி எங்கே கொடுக்கிறார்கள் என்பது தெரியவில்லை. ஒருவேளை அவ்வாறு கொடுப்பதற்கு தனியாக ஏதாவது கடை வைத்திருந்தால் சொல்லுங்கள். இங்குள்ள பப்ளிக் டிஸ்ட்ரிப்யூஷன் சிஸ்டம் இப்படி இருக்கிறது என்பதைத்தான் சொல்கிறேன். சம்பிரதாயமாக நீங்கள் ஒன்றே முக்கால் ரூபாய்க்கு அரிசி கொடுப்பதாக வைத்துக்கொள்வோம் என்றாலும் ஒன்றே முக்கால் ரூபாய் என்ற வகையில் 6 கிலோதான் கொடுப்பீர்கள், மீதி 14 கிலோ அரிசியினை வெளிமார்க்கெட் ரேட்டிலே தான்

அவர்கள் வாங்கவேண்டும். ஆகவே ஒன்றே முக்கால் ரூபாய் ரேட்டிலே 6 கிலோ அரிசியினை நீங்கள் ஒருவேளை கொடுப்பதாக இருந்தாலும் மீதியினை அவர்கள் வெளிமார்க்கெட் ரேட்டிலே தான் வாங்கவேண்டியிருக்கின்றது. இதனால் ஏற்படுகின்ற நிலைமை என்ன? முன்பு 20 கிலோ அரிசியினை 33 ரூபாய்க்கு வாங்கிய குடும்பம் இன்று 70 ரூபாய் 70 பைசா அரிசிக்காகக் கொடுக்கவேண்டி இருக்கின்றது. இதுதான் உங்களுடைய பப்ளிக் டிஸ்ட்ரிப்யூஷன் சிஸ்டம். எனவே இப்படிப்பட்ட சூழ்நிலையில் நடைமுறையில் இல்லாத ஒன்றாகிய ஒன்றே முக்கால் ரூபாய்க்கு அரிசி கொடுப்பதாகச் சொல்லி ஏமாற்று கிறீர்கள். இதுதான் உங்களுடைய பொது விநியோக முறை. அக்கிரமமான நிலைமை இருக்கின்றது. ஆகவே இப்படிப்பட்ட நிலைமையிலும் உங்களை எதிர்க்காமல் இருக்க வேண்டும் என்று நீங்கள் விரும்பினால் அது நடக்காது.

கவர்னர் உரையினை வரவேற்றுப் பேசிய திரு. பாலசுப்பிர மணியம் அவர்கள் எதிர்க்கட்சிகள் நடைப்பயணம் நடத்துவது கண்டு வேதனைப்படுகிறேன் என்று சொன்னார்கள். இது தமிழக அரசினுடைய கருத்தாகத்தான் நான் எடுத்துக் கொள்வேன். ஏனென்றால் அவர்தானே ரிசொலூஷன் மூவ் பண்ணிப் பேசினார். எனவே தமிழக அரசின் கருத்தாக எதிர்க் கட்சியினர் நடைப்பயணம் நடத்துவதைக் கண்டு வேதனைப் படுகிறேன் என்பதை எடுத்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12-20)

அனைத்திந்திய கட்சிகள், பிராந்திய எதிர்க்கட்சிகள் கல்கத்தா மாநாட்டு முடிவை மக்களிடம் பரப்ப நடத்தப்பட்ட நடைப்பயணம் அது. அந்த முடிவு என்னவென்றால்—எல்லாவற்றையும் விளக்கவில்லை. அதிலே வேதனை என்றாரே எதிலே வேதனை என்று எனக்குத் தெரியவில்லை. அதிலே ஒரு கோரிக்கை. அதை நான் கோட் செய்கிறேன், 'நியாயமான விலையில் அத்தியாவசியப் பொருட்கள் அனைத்தும் தட்டுப் பாடின்றி அனைவருக்கும் கிடைப்பதற்கு மத்திய அரசு உத்தரவாதம் செய்யவேண்டும். அதற்காக பொது விநியோக முறை பலப்படுத்தப்பட வேண்டும். மொத்த வியாபாரிகளின் இலாபத்தை வெகுவாகக் குறைக்க வேண்டும். இந்தக் கோரிக்கையை நடைப்பயணம் மூலம் பிரச்சாரம் செய்வதால் இந்த அரசுக்கு என்ன வேதனை என்று கேட்கிறேன்.

அடுத்து, இன்னொரு கோரிக்கை 'ஏழை மக்கள், நடுத்தர மக்கள் பயன்படுத்தும் பொருட்களை—அத்தியாவசியப் பொருட் களை—உற்பத்தி செய்வதற்கு முன்னுரிமை அளிக்க வேண்டும். பிரையாரிட்டி டி.வி.க்கு அல்ல, இதற்கு பிரையாரிட்டி கொடுங்கள். இது இன்னொரு கோரிக்கை. இதைப் பிரச் சாரம் செய்வதனால் இந்த அரசுக்கு என்ன வேதனை? அது





போகட்டும். இன்னொன்று—"ஏழைகளையும் தொழிலாளி களையும் கசக்கிப் பிழிந்து அதன்மூலம் பலம் பெறும் பெரிய ஏகபோக நிறுவனங்களையும் அமைப்புகளையும் [illegible] கொள்கைகளையும் கைவிட வேண்டும்". இது இன்னொரு கோரிக்கை. இந்தக் கோரிக்கைகளை மக்களிடம் பரப்புவதனால் பிரதமர் காந்திக்கு வேதனையளிப்பது என்னால் புரிந்து கொள்ள முடியும். ஏன் என்றால், இந்தக் கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டால், ஜனங்கள் இதற்குப் பின்னால் [illegible] டாடா, பிர்லாக்களின் அடிவயிற்றில் கை வைக்க வேண்டும். அதனால் அவர்களுக்கு வேதனை இருக்கும். கிராமப்புற [illegible] நிலங்களின் கொள்ளையில் கை வேண்டியிருக்கும். ஆகவே பிரதமருக்கு வேதனை இருக்கும். ஆனால், அதனால் ஏ.ஐ.ஏ.டி. எம்.கே. அரசுக்கு இதனாலே வேதனை ஏன் ஏற்படவேண்டும்? ஐ டு நாட் அன்டர்ஸ்டான்ட். ஒருக்கால் பிரதமர் இந்திராவின் வேதனையைக் கண்டு அ.தி.மு.க. அரசுக்கு வேதனை ஏற்படு கிறதா என்று சந்தேகம்.

இந்திய நாட்டு மக்களின் நலனைக் கருதி—தமிழ் நாட்டு மக்களின் நலனைக் கருதி இந்தக் கோரிக்கைகளை ஆதரிக்க வேண்டிய அ.தி.மு.க. அரசு, கல்கத்தாவில் கூடியிருந்த எதிர்க் கட்சிகளுடன் சேர வேண்டிய அ.தி.மு.க. மாறாக, இந்திரா காங்கிரசின் பொருளாதாரக் கொள்கைகளை ஆதரித்து நடைப் பயணம் அல்ல, விமானப் பயணம் நடத்துவதைக் கண்டு நான் உண்மையிலேயே வேதனைப்படுகிறேன் என்று சொல்ல விரும்பு கிறேன்.

அடுத்தது, இந்தக் காலத்தில் நாடு முழுவதும் பிரம்மாண்ட மான முறையில் [illegible] பிரச்னை—மத்திய மாநில உறவுப் பிரச்னை—மாநில சுயாட்சி பிரச்னை. அது அதிகாரம் [illegible] வரம்பையும் தாண்டி, இந்திய நாட்டின் [illegible] பாதுகாப்பதற்கே அவசர அவசியமான பிரச்னையாகிவிட்டது. [illegible] பார் மோர் பவர்ஸ். இந்த [illegible] நேரத்தில், சர்க்காரியா கமிஷனை ஊறுகாய்ப் பானையில் [illegible] அதிக அதிகாரம் [illegible] இந்திய நாட்டின் ஒற்றுமையைப் [illegible] அவசியமாக இது இருக்கிறது. இந்த அவசிய [illegible] ஆளுநர் உரை மௌனம் சாதிக்கிறது. [illegible]

[illegible] மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒரு கருத் [illegible] பேசினார்? [illegible] நான் [illegible] [illegible] செய்கிறேன். "கட்டப்பொம்மன்" [illegible] [illegible] [illegible] சொல்லவேண்டும் [illegible] ஆகவே, [illegible] 1984 [illegible]

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

'இரட்டை ஆட்சி, இப்போது இந்தியாவில் நடக்கிறதென்பதை நான் மனம் விட்டு சொல்வேன். ஒரு ஆட்சி ஆதிக்கம் செலுத்த விரும்பும் ஆட்சி, ஒரு ஆட்சி தொண்டு செய்ய விரும்பும் ஆட்சி, முதல்வர் சொன்னது. தாட் இஸ் குட். அடுத்து அவர் சொன்னது. 'மக்களை நாம் கேட்க வேண்டும். இனி தேர்தலுக்கு வருவதாக இருந்தால் இந்த உறுதியை அதாவது மாநிலங்களுக்கு அதிக அதிகாரம், தருவதாக இருந்தால் வா—இல்லையென்றால் போ என்று மக்கள் கேட்கக் கூடிய நிலைக்கு மக்களைத் தயார் செய்ய வேண்டும். முதல் அமைச்சர் அங்கே பேசினார். ரொம்பப் பிரமாதமான பேச்சு. இதிலே கிளைமாக்ஸ்—உச்சகட்டம் என்னவென்றால், முதல்வர் சொன்னது ''இங்கிருக்கிறவர்கள்''—அதாவது கலைவாணர் அரங்கத்திலே இருக்கிறவர்கள்—''படித்தவர்கள், இப்படிப்பட்ட அரங்குகளில் கொள்கையைச் சொல்வதோடு மட்டுமல்லாமல் அதை எடுத்துக்கொண்டு செல்ல வேண்டியவர்களிடம் மக்களிடம் கொண்டு சொல்ல வேண்டும். மக்களுக்கு சொல்லியாக வேண்டும். என்று சொல்லியிருக்கிறார். ஆனால், அதில் வேடிக்கை என்ன வென்றால், மத்தியில் இருக்கும் இந்திரா ஆட்சி ஆதிக்கம் செலுத்தும் ஆட்சி என்றோ, இனி தேர்தலுக்கு வருபவர்களிடம் அதிக அதிகாரம் தரப்படுமென உத்தரவாதம் தந்தால் வா—இல்லாவிட்டால் போ' என்ற கருத்துக்களை மாண்புமிகு முதல்வர் மக்களிடம் கொண்டு போக மாட்டாராம். கலையரங்கில் உட்கார்ந்து கேட்டவர்கள்தான் மக்களிடம் கொண்டு போக வேண்டுமாம். ஊருக்கு உபதேசம் உனக்கல்லடி என்று ஒரு கதாகாலட்சேபம் செய்தவர் தன் மனைவியிடம் கூறியது போல் இருக்கிறது இது. மக்களை மாண்புமிகு முதல்வரும் திரட்ட மாட்டார். இந்தியா பூராவும் இந்தப் பிரச்னையில் மக்களைத் திரட்ட—இந்து காங்கிரஸல்லாத முதல்வர்களும், ஜனநாயக இடதுசாரி கட்சிகளும் முன்வந்துள்ளபொழுது அவர்களுடனும் பேச மாட்டார்.

மைய மாநில உறவுகள் சம்பந்தமாக நீங்கள் பேசியதில் உங்களுக்கு நம்பிக்கை இருக்குமானால்—முதலமைச்சருக்கு நம்பிக்கை இருக்குமானால்—அதை மறுக்கும் இந்திரா காங்கிரசுடன் முறித்து உங்கள் விருப்பத்தை. நிறைவேற்றும் ஸ்ரீநகர் முடிவுகளை உருவாக்கிய எதிர்க்கட்சிகளுடன் தோளோடு தோள் சேர்ந்து நில்லுங்கள். அதற்குத் தயாரா என்று முதல் அமைச்சர் அவர்கள் பதில் சொல்ல வேண்டும். மக்களால் [illegible] தேர்ந்தெடுக்கப்பட்ட காங்கிரஸ் அல்லாத அரசுகளை மைய [illegible] கவிழ்க்கும் அபாயம் பயங்கரமாக நாட்டிலே இப்போது [illegible] உள்ளது. கவர்னர் உரை இதுபற்றி மவுனம் [illegible]. காங்கிரஸ் (இ) கட்சி காரியதரிசி [illegible] அவர்கள் சொன்னார்கள். 'கவிழ்ப்பு [illegible] என்று பகிரங்கமாக கூறியுள்ளார். பிரதமர் [illegible] என்று சொன்னதைக் கட்டிக் காட்டுகிறேன்.



[illegible] பிரதமருடைய கட்சி ஆல் இண்டியா காங்கிரஸ் [illegible] ஆதாரபூர்வமான, அதிகாரபூர்வமான வெளியீடு [illegible] உடைய தலைப்பு, கர்நாடகாவின் அரசியல் [illegible] தலைப்பில் என்ன கூறுகிறது? நான் அதை கோட் [illegible] கிறேன். 'திட்டப்படியான அபிவிருத்தி வேலைகளும் [illegible] முன்னேற்றமும் தடங்கலின்றி நடைபெற ஒரு நிலையான அரசை மீண்டும் கர்நாடகாவில் கொண்டு வர காலம் பக்குவமாக உள்ளது''. இன்னும் எலக்ஷனுக்கு பல வருடங்கள் இருக்கின்றன. ஆகவே அதனுடைய பொருள் என்ன? இது ஏ.ஐ.சி.சி. பப்ளிகேஷன் ரிப்போர்ட். இதன் அர்த்தம் என்ன? காங்கிரஸ் அல்லாத தேர்ந்தெடுக்கப்பட்ட தற்போதைய ஜனதா சர்க்காரை கவிழ்க்க தருணம் வந்து விட்டது என்பது தானே? இது பயங்கரமான டிக்லரேஷன். அதேபோல காஷ்மீர் அரசையும் கவிழ்க்க பகிரங்க முயற்சி நடைபெறுகிறது. காங்கிரஸ் அல்லாத ஐந்து முதலமைச்சர்களும் இதைக் கண்டித்தார்கள். ஈ.எம்.எஸ். அவர்கள் சமீபத்தில் சென்னைக்கு வந்தபோது பத்திரிகை நிருபர்கள் கேட்டபோது அவர் சொன்னார். மைய அரசு அ.தி.மு.க அரசைக் கவிழ்க்க முயற்சித்தாலும் ஸ்ரீநகர் முடிவின்படி அந்த முயற்சியை நாங்கள் எதிர்ப்போம் என்று சொன்னார்கள். அதுதான் ஸ்ரீநகர் டெசிஷன். இவ்வளவு கண்டனம் வந்தபிறகும் மைய அரசினுடைய தீய முயற்சியை கண்டிக்காத காங்கிரஸ் அல்லாத ஒரே முதல்வர் தம்முடைய தமிழக முதல்வர்தான். அது தமிழகத்திற்குப் பெருமை தருவது அல்ல.

[illegible] கட்சியின் பொதுக் காரியதரிசி ப.உ.ச. அவர்கள் [illegible] பேசினார்? ''அண்ணா'' ஏடு 9–1–84. ''மாநில [illegible] கலைக்கும் அதிகாரம் மைய அரசிடம் உள்ளது— [illegible] அதிகாரம் இந்தியக் குடியரசுச் சட்டத்தில் எப்படியோ [illegible] பெற்று விட்ட சர்வாதிகார கரும்புள்ளி. இந்த பயங்கர [illegible] பிரிவை அரசியல் சட்டத்திலிருந்து பிய்த்து, எறிந்தாக வேண்டும்.'' ரொம்ப கரெக்ட். ஆனால் இந்த சர்வாதிகார கரும்புள்ளியை பிய்த்து எறிவதற்குப் பதிலாக, அது கர்நாடகா, [illegible] ஆந்திரா, காஷ்மீர், மேற்கு வங்கம், திரிபுரா போன்ற [illegible] காங்கிரஸ் அல்லாத மாநிலங்களைப் பிய்த்து எறிவதற்கு இந்தக் [illegible] முயற்சி [illegible]. இப்படி பேசியிருக்கிற [illegible] கட்சியின் பொதுக் காரியதரிசி இந்த நிலைமையை [illegible] கண்டிக்க ஏன் மறுக்கிறீர்கள்? [illegible] இல்லையா? [illegible] நடக்கும் போது, [illegible] ஜனநாயக [illegible] [illegible] அந்த நிலைமை [illegible]

அடுத்து மாண்புமிகு உறுப்பினர் வி.பி. பாலசுப்பிரமணியன் அவர்களுக்கு நான் சில விஷயங்களில் பதில் சொல்ல வேண்டும். பூராவும் இல்லை. அவர் பேசியதன் கருத்து அவ்வளவு சரியல்ல என்பதற்காகத்தான் இதைக் கூறுகிறேன். ஒன்றிரண்டு எக்சாம்பிள்ஸ் தான் சொல்ல வேண்டும். அதைச் சொல்ல வில்லையென்றால் இவ்வளவு தூரம் பேசிய அவர்களுக்கு நான் நியாயம் வழங்கியதாக இருக்காது. அவர் பேசியபோது எனக்கு ஒரு சந்தேகம் வந்தது. இது மேற்கு வங்க சட்டசபை என்று தவறாக புரிந்து பேசுகிறாரோ என்று; சில சமயங்களில் பேசுவது, மேற்குவங்க சட்டப்பேரவை காங்கிரஸ் கட்சித் தலைவரைப் போல தோற்றமளித்தது; விலைவாசிப் பிரச்னையில் இரட்டை வேடம் போடுவது இங்குள்ள ஆளும் கட்சிதான் என்று போன செஷனில் நோ-கான்பிடன்ஸ் மோஷனில் பேசும் போது அப்போதே சொன்னேன். ஆகவே நான் ரிபீட் பண்ண விரும்பவில்லை. தன் அரசை புகழ எவ்வளவு வேண்டு மானாலும் பேசட்டும். ஆனால் மேற்கு வங்க அரசு பற்றி பேசியது எவ்வளவு அபாண்டமானது என்பதற்கு ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்று சொல்கிறேன். விலைவாசி வாழ்க்கை புள்ளி மேற்கு வங்கத்தை விட தமிழ் நாட்டிலே குறைவு என்று சொன்னார். எனக்கே ஆச்சரியம்.

(பிற்பகல் 12-30)

இதோ ரிசர்வ் பாங்க் புல்லட்டின் ஜூன் 1983-ல் வெளியிடப் பட்டது என்னிடத்தில் இருக்கிறது. அதனால் புள்ளிவிவரம் கோட் பண்ணி பிரயோசனம் இல்லை. ரிசர்வ் வங்கிதான் எல்லா மாநிலங்களின் முக்கிய நகரங்களின் கணக்குகளையும் தயாரிக்கிறது. அவர்களின் ஜூன் இஷ்யூவில் பப்ளிஷ் செய் துள்ளதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். வாழ்க்கைப் புள்ளி கணக்கு 1981-82-ல் கல்கத்தா நகரத்தில் 414. சென்னை நகரத்தில் 446. மதுரையில் 467. 1982-83-ல் கல்கத்தா நகரத்தில் 447, சென்னை நகரத்தில் 475, மதுரையில் 515. (குறுக்கீடு). அவர் பேசும்போது நான் குறுக்கிடவில்லை. ஆகவே, அவர் என்பேச்சில் குறுக்கிடாமல் இருக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உமாநாத் அவர்கள் பேசி முடித்தபின், விளக்கங்கள் தரலாம் இப்போது குறுக்கிட வேண்டாம்.

திரு. ரா. உமாநாத்: அதேபோல், 1983 ஜனவரியில் கல்கத்தாவில் 452, சென்னையில் 489, மதுரையில் 534, 1983 ஆகஸ்டில் கல்கத்தாவில் 513, சென்னையில் 562, மதுரையில் 6 0, டெல்லி மாநகரம், நம்முடைய இந்தியாவின் ஹெட்குவார்ட்டர்ஸ் சிட்டியில் விலைவாசி மிகவும் காஸ்ட்லி என்று சொல்லக்கூடிய இடத்தில் 1982-83-ல் 511, ஆனால்



நம்முடைய தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய மதுரையில் 534, அதேபோல 1983 ஆகஸ்டில் டெல்லியில் 549, மதுரையில் 600. இது எல்லாம் ரிசர்வ் பாங்கி புல்லட்டின் குறிப்பிட்டுள்ள புள்ளி விவரங்கள். ஆகவே, அந்தப் புள்ளிவிவரங்களின்படி அதில் குறிப்பிட்டுள்ள நகரங்களில் மிகவும் குறைந்த விலைவாசி கல்கத்தாவில் தான் இருக்கிறது என்பதை நான் குறிப்பிட்டுக் கூறவிரும்புகிறேன். ஆகவே, மேற்கு வங்கத்தில் தமிழகத்தை விட பல பொருள்களின் விலை அதிகம் என்று பல பத்திரிகை களை மாண்புமிகு பாலசுப்பிரமணியம் மேற்கோள் காட்டியது அவ்வளவும் உண்மைக்குப் புறம்பானது என்பது தெளிவாகி விட்டது அல்லவா? ஐயா, இப்படி உண்மைக்குப் புறம்பாக, பேசுவதிலும் சற்று திறமை காட்டவேண்டாமா, இப்படியா போய் சகதியில் மாட்டிக்கொள்வது? அப்படியிருந்தும் நான் மேற்கு வங்க விலைவாசிகளை நியாயப்படுத்தத் தயாராக இல்லை. குறைந்த விலைவாசி என்று சுட்டிக்காட்டிய விலை வாசியும் மக்களைப் பொறுத்த வரையில் தாங்க முடியாத விலைவாசி என்றே கூறுகிறோம். மைய அரசு விலைகளை ஏற்றிக்கொண்டே இருக்கும்பொழுதும் மேற்கு வங்க அரசு எடுத்த நடவடிக்கைகள் மூலம் பொதுவிநியோக முறை வழியாக 15 பொருட்கள் விநியோகம் செய்வதன் மூலம், இங்கே வழங்குகிற அளவை விட அங்கே கூடுதலாக வழங்குவதன் மூலமும், மலிவான விலைகளுக்கு வழங்குவதன் மூலமும், ஊழலற்ற விநியோகம் உத்தரவாதமாகக் கொடுப்பதன் மூலமும், முடிந்த அளவிற்கு இந்த உயர்வின் வேகத்தைத் தடைசெய்யும் அளவிற்கு லகான் போடுகிறது என்பதற்காகவும் நான் இதைச் சுட்டிக் காட்டினேன்.

இப்படி செய்து கொண்டே, விலைகளை உயர்த்தும் மைய அரசை எதிர்த்து இடது கூட்டணி அங்கே பந்த் நடத்துகிறது. மேற்கு வங்கத்தில் பிரதமர் திருமதி காந்தியின் அபாண்டங்களை வெற்றிகரமாகச் சந்தித்தவர்கள், மேற்கு வங்கத்தில் ராஜீவ் காந்தியின் அபாண்டங்களைச் சந்தித்தவர்கள் தமிழக நவீன ராஜீவ் காந்திகளின் அபாண்டங்களையும் வெற்றிகரமாகச் சந்திப்போம் என்பதை நான் இங்கே சொல்லிக்கொள்ள விரும்பு கிறேன்.

எவ்வளவு தூரம் உண்மைக்குப் புறம்பாகப் பேசினார் என்பதற்கு அவர் குறிப்பிட்ட சென்னை உதாரணமே அதற்குச் சான்று. டி.வி.எஸ். ஸ்ட்ரைக்கில் போலீசை வாபஸ் பெற்றார் முதல்வர், மைய அரசு சி.ஆர்.பி.ஐ அனுப்பித்தான் அடக்கு முறை செய்தது என்று கூறினார். டி.வி.எஸ். ஸ்ட்ரைக்கின் போது சேம்பர் ஆப் காமர்ஸ் கூட்டத்தில் போலீசை வாபஸ் பெறுவேன் என்று முதலமைச்சர் அவர்கள் பேசினார்கள். ஆனால் வாபஸ் பெறவில்லை. ஆகவே, சென்னையில் நாங்கள் பார்த்த விஷயம், அதைக்கூடவா இப்படி டிஸ்டார்ட் செய்வது? அப்படி அவர்கள் வாபஸ் பெறாதது மட்டுமல்ல, தொடர்ந்து அங்கே போலீசை குவித்தார். சி.ஆர்.பி.யையும் முதல்வர் அவர்கள்தான் சென்ட்ரல் கவர்ன்மென்டைக் கேட்டு அழைத்தார்.

அந்த சி.ஆர்.பி. இங்கே வந்தபோது நம்முடைய சூப்பிரண்டு ஆஃப் போலீஸ் நிர்வாகத்தில்தான் செயல்பட்டது. அப்படித் தான் செயல்பட முடியும். இந்திரா காந்தி அம்மையார் சொன்ன வுடன் நேரடியாக அவர்கள் வந்து செயல்பட முடியாது. அந்த போலீஸ் டி.வி.எஸ். ரவுடிகளை கேட்டில் வந்து மாதவன் என்ற தொழிலாளியை பயங்கரமாக குத்தி வீழ்த்த அனுமதித்தது. அவர்கள் ஒன்றும் செய்யவில்லை; பார்த்து விட்டு சும்மா தான் இருந்தார்கள். ரவுடிகள் குத்திவிட்டு உள்ளே போய் விட்டார் கள். யாரையும் கைது செய்யவில்லை.

இன்னொரு தொழிலாளியின் கையை வெட்டினார்கள். எஸ்.பி. அங்கே இருந்தார். ரவுடிகள் வந்தார்கள், கையை வெட்டினார்கள், உள்ளே போனார்கள். இன்றைக்கும் யாரும் கைது செய்யப்படவில்லை. அன்றைக்கு அந்த ரவுடிகள் தொழிலாளியின் கையை வெட்டிவிட்டு உள்ளே போக போலீஸார் அனுமதித்தார்கள். இந்த அப்பட்டமான உண்மையை மாண்புமிகு உறுப்பினர் பாலசுப்பிரமணியம் திரித்துக் கூறுகிறார். என்ன துணிச்சல் பாருங்கள். தூங்கியவன் தொடையில் கயிறு திரிப்பது என்று சொல்வார்கள். ஆனால் இவர் விழித்திருக்கிற வர் தொடையிலேயே கயிறு திரிக்கிறாரே, தூங்காதவன் தொடை யில் கயிறு திரித்தால் என்ன நடக்கும்:

இப்பொழுது நெல்லிக்குப்பத்தில் பாருங்கள்: ஃபாக்டரிக் குள்ளேயே போலீஸ் வைக்கப்பட்டிருக்கிறது. பிரிட்டிஷ் காலத்திலே பல அடக்குமுறைகளை கையாண்டார்கள். அப்படி இருந்தாலும் ஃபாக்டரிக்குள்ளே போலீஸ் நுழையாது, வெளியே தான் இருப்பார்கள். ஆனால் இப்போது போய் பாருங்கள். என்ன செய்கிறார்கள் தெரியுமா? டி.எஸ்.பி-யும் காவலர்களும் சர்க்கரை மூட்டைகளை அடுக்கி வைத்து, வேகன்களைத் தள்ளுகிறார்கள். நல்ல வேலை தான். ஏ.டி.எம்.கே. ஆட்சியில் காவலர்களுக்கு என்ன வேலை என்றால் பெரும் முதலாளி அருணாசலத்தின் வாகன்களைத் தள்ளுவது. ஸ்டிரைக்கை உடைக்க போலீஸ்காரர்களை அருணாசலத்தின் சம்பளமில்லாத வேலைக்காரர்களாக தமிழக சர்க்கார் அமர்த்தியுள்ளது. இதை விட கேவலம் வேறு ஏதாவது இருக்க முடியுமா?

அது மட்டுமல்ல. தென்னாற்காடு மாவட்டத்தில் கைத்தறி நெசவாளர்கள் சட்டப்படி குறைந்தபட்ச கூலி கேட்டு ஊர்வலம் நடத்தினார்கள். சட்டப்படி கூலி கேட்ட கைத்தறி நெசவாளர் கள் மீது போலீஸ் லத்தி சார்ஜ் செய்தது. நான்கு நாட்களுக்கு முன்னால் கூட போலீசார் நெசவாளர் வீடு தேடி போய் அடித் திருக்கிறார்கள், ஊர்வலம் நடத்தியது கைத்தறி நெசவாளர் கள் என்பதால் நெசவாளர் வீடு யாருடையதாக இருந்தாலும் சரி, ஊர்வலத்திற்குச் செல்லாதவர்களாக இருந்தாலும் சரி, நெசவாளி வீடு என்று தெரிந்தால் உடனே அடி, உதை. ஏன் இந்த நிலை? தவறு செய்தார்கள் என்றால் கைது செய்யுங்கள், குற்றம் இருந்தால் நடவடிக்கை எடுங்கள். ஆனால் வீடு தேடி போய் ஏன் அடிக்க வேண்டும்? இதுதான் நெசவாளர்களுக்கு



குறைந்தபட்ச கூலிச் சட்டத்தை அமுலாக்கும் விதம். இப்படி எல்லாம் செய்துவிட்டு, மேற்குவங்க அரசை குறை சொல்கிறார் கள். நான் சவால் விடுகிறேன். இரண்டரை இலட்சம் சணல் ஆலைத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் மேற்கொண்டார் கள். மேற்கு வங்கத்தில் இந்தப் போராட்டம் நடைபெறுகிறது. மில் கேட்டில் ஒரு போலீசை சுட்டிக்காட்ட உங்களுக்கு தைரியம் இருக்கிறதா? மில்லுக்கு உள்ளேயும் சரி, வெளியேயும் சரி, ஒரு போலீசையாவது உங்களால் சுட்டிக்காட்ட முடியுமா என்ற சவாலை நான் ஏற்றுக் கொள்கிறேன்; நீங்கள் ஏற்றுக் கொள் கிறீர்களா? அந்த தைரியம் உங்களுக்கு இருக்கிறதா?

ஸ்டிரைக்கை உடைப்பதற்கு போலீசை தொழிற்சாலைக்கு உள்ளே அனுமதித்திருக்கிறவர்கள் ஜோதிபாசு தமிழக முதல் அமைச்சருக்கு முன்னால் நிற்க முடியுமா என்று கேட்கிறார்கள். ஆம். ஜோதிபாசு தமிழக முதல்வருடன் நிற்க முடியாது தான். மில் கேட்டில் போலீஸை குவிப்பதில், கருங்காலிகளுக்கு போலீஸ் பாதுகாப்பு கொடுப்பதில், ஸ்டிரைக்கை உடைப்பதில், குண்டர் களை ஏவிவிடுவதில், தொழிலாளி, விவசாயிகளைச் சுட்டுத் தள்ளுவதில் ஜோதிபாசு நமது முதல்வருடன் நிற்க முடியாதுதான் என்பதை நான ஏற்றுக் கொள்கிறேன்.

அடுத்த படியாக என்.ஜி.ஓ.க்களுக்கு 10,000 ரூபாய் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. நாங்கள் தான் 10,000 ரூபாய் கொடுக்கிறோம் என்று ஆட்டம் போடுகிறீர்கள். நான் அதுபற்றி டிஸ்கஸ் பண்ணிப்பார்த்தேன். என்.ஜி.ஓ. 5000 ரூபாய் கொடுத் தால் அரசு 5000 ரூபாய் கொடுப்பதாகக் கூறுகிறீர்கள். ஆனால் இதில் இருக்கிற உண்மை என்ன? முதலமைச்சர்தான் விளக்க வேண்டும். நேஷனல் சேவிங்சில் ஐந்தாண்டுகளுக்கு மாதம் 20 ரூபாய் கட்டினால் 1200 ரூபாய் வரும். அதற்கு வட்டி 415 ரூபாய் ஆக மொத்தம் ஐந்தாண்டுகளில் 1615 ரூபாய் வரும். அதன் பிறகு பணம் கட்ட வேண்டாம். இந்த 1615 ரூபாயை மறுபடி யும் பத்து வருடத்திற்கு நேஷனல் செக்யூரிட்டி சர்டிபிகேட்டில் டிபாசிட் பண்ணினால் அது 5000 ரூபாய்க்கு வரும். இந்த 5000 ரூபாயை மீண்டும் 10 ஆண்டுகளுக்கு முதலீடு செய்தால் அது 15,000 ரூபாயாகும். இந்த 15,000 ரூபாயை மீண்டும் ஆறு ஆண்டுகளுக்கு முதலீடு செய்தால் 30,000 ரூபாயாகும்.

ஆனால் அரசின் திட்டப்படி 12 ஆண்டுகள் பிடித்தம் செய்து, 31 ஆண்டுகளில் 10,000 ரூபாயும் அதற்கான வட்டியும்தான் கிடைக்கும். இது 30,000 ரூபாயோடு ஒப்பிட்டுப் பார்க்கும் போது மிகவும் குறைச்சலாக இருக்கிறது. ஆகவே, அரசாங்கத் தின் திட்டப்படி 8 இலட்சம் என்.ஜி.ஓ.க்கள் கட்டும் (அசலும் வட்டியும்) பணத்திலிருந்தே அரசின் 5000 ரூபாயும் வட்டியும் கொடுக்கப்படும். அப்படிக் கொடுக்கப்பட்டாலும் என்.ஜி.ஓக் களின் முதலீடு மீதம் கணிசமாக அரசு கையில் மீதியிருக்கும். இந்தத் திட்டம் அரசாங்கத்தின் சாதனை என்று சொன்னார் கள். ஆனால் அவர்கள் கட்டும் பணத்தைவிட குறைவாகத்தான்

[திரு.ரா.உமாநாத்] [1984 பிப்ரவரி 20

அவர்களுக்கு 31 வருஷம் கழித்து கொடுக்கப்படுகிறது. எந்த வகையிலே இது சாதனை? நீங்கள் தான் சொல்ல வேண்டும். அவர்கள் பணத்திலிருந்தே அவர்களுக்கு கொடுத்தது போக கணிசமாக மிச்சம் இருக்கும். ஆகவே, இது என்.ஜி.ஓ-வினருக்கு அரசு மானியம் வழங்கும் திட்டமல்ல; அவர்கள் கையிலிருந்து பணத்தை அரசு பிடுங்கும் திட்டம்தான்.

(பிற்பகல் 12-40)

ஆக என்.ஜி.ஓ.வினரிடமிருந்து அரசுக்கு வருமானம் சேர்க்கும் திட்டம். கேரள அரசாங்கத்திற்கு மத்திய அரசாங்கத்திடமிருந்து ஒரு சுற்றறிக்கை அனுப்பப்பட்டிருக்கிறது. இது கேரள அரசாங்க ஊழியர்களிடமிருந்து எங்களுக்குத் தெரிய வந்தது. ஆக என்.ஜி.ஓ.வினரிடமிருந்து, அரசு ஊழியர்களிடத்திலிருந்து சேர்க்கப்படும் இந்த வருமானத்தை சம்பாதிக்கிற திட்டம் தான் இது. வருமானம் சேர்க்கிற திட்டம் தான் இந்தத் திட்டம். அந்த சுற்றறிக்கைப் படி தான் இங்கே நடக்கிறதோ என்பதை முதல்வர் அவர்கள் பதிலில் தெரிவிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக இந்த அரசு அமெரிக்க சி.ஐ.ஏ. உளவாளி முறைகளைக் கையாள்வதாகத் தெரிகிறது. அதிகாரிகளை குறிப்பாக போலீஸ் அதிகாரிகளைத் தரம் பிரித்து உள்ளார்கள். ஒன்று 'டிபெண்டபிள்' மற்றொன்று 'நான்-டிபெண்டபிள். அதாவது நம்பத் தகுந்தவர்கள், நம்பத் தகாத அதிகாரிகள் இன்னொரு கேட்டகரி. டிஸ்பென்சபிள்—நான் டிஸ்பென்சபிள் அதாவது சிலபேரை உபயோகிப்பதை தவிர்க்கலாம்—அப்படி தவிர்க்கமுடியாதவர்கள் சில அதிகாரிகள்—இப்படி கேட்டகரிஸ் பண்ணியிருக்கிறார்கள்.

அரசியல் கட்சிகளின் தனிக் கூட்டம்-இன்டோர் கூட்டம்—அதில் பப்ளிக் வரமுடியாது. சி.ஐ.டி. வரமுடியாது. இந்த இன்டோர் மீட்டிங்குகளே பார்ட்டிகளுடைய உரிமை. அங்கே என்ன பேசப்படுகிறது என்பதை ரெக்கார்டு பண்ணுவதற்கு உள்ளே போக முடியவில்லை. ஆனால் ஒரு பர்லாங் தூரத்தில் இருந்து கொண்டே, உள்ளே நடக்கிற பேச்சுகளை பதிவு செய்வதற்கான கருவி அரசாங்கத்திடம் இருக்கிறது. பல்வேறு கட்சிகள் இருக்கின்றன. தலைவர்களின் ஊழல்கள், பலவீனங்கள் ஏதாவது இருந்தால், அதை ரெக்கார்டு பண்ணுவது. அவர்களுடைய பலவீனங்களை பிளாக்மெயில்செய்யலாம், பலவீனத்தை பயன்படுத்திக் கொண்டு அவர்களை ஆளும் கட்சியிலே இழுக்கலாம். இந்த மாதிரி சி.ஐ.டி. முறைகளை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன். இந்த அரசு இந்த மாதிரி வேலைகளில் ஈடுபடுகிறது ரொம்ப அநியாயமானதாக இருக்கிறது என்பதை நான் சொல்லிக் கொள்கிறேன்.



1984 பிப்ரவரி 20] [திரு.ரா.உமாநாத்]

காவலர்களுக்கு சங்க உரிமை வழங்கப்படும் என்ற தேர்தல் வாக்குறுதியை காலில் போட்டு மிதித்து விட்டார்கள். நேர்மாறாக ஏற்கெனவே இந்தச் சங்கத் தலைவர்களாக இருக்கிறவர்களை, one fter another அந்த வாக்குறுதியை மீறியது மட்டுமல்ல—அவர்கள் விக்டிமைஸ்டு—நயினார் தாஸ் டிஸ்மிஸ்டு—விட்டோ சஸ்பெண்டட்— (குறுக்கீடு) ஒரு லிஸ்டிலிருந்து படித்துக் காண்பிக்கிறேன். அந்தோனிசாமி நெல்லை மாவட்டத்தலைவர் சஸ்பெண்டட்—போலீஸ் சங்கத் தலைவர் ஏற்கெனவே இருக்கிறார்—சீனிவாசன், சென்னை சங்கத் தலைவர் டிஸ்மிஸ்டு —பழனிசாமி கோவைச் சங்கத் தலைவர் டிஸ்மிஸ்டு—யூசப் தஞ்சை சங்கத் தலைவர் டிஸ்மிஸ்டு—போஸ், திருச்சி சங்கத் தலைவர் டிஸ்மிஸ்டு— நான் கேட்கிறது—வாக்குறுதி கொடுத்தது செகண்டு எலக்ஷனிலே—ஆய்வாளர்களிலிருந்து காவலர் வரக்கும் சங்கத் தலைவர்களை அமர்த்தி விட்டு அவர்களை காலில் போட்டு மிதிப்பது மட்டுமல்லாமல், அவர்களை விக்டிமைஸ் செய்வது அவர்களுக்கு நம்பிக்கைத் துரோகம் செய்வதல்லவா?

அடுத்து லஞ்ச ஊழல்—லேடஸ்ட்ஓவர்சீஸ் மேன்பவர் கார்ப்பரேஷன் லிமிடெட் என்ற ஸ்தாபனம் இருக்கிறது. சர்க்கார் இதில் சம்பந்தப்பட்டிருக்கிறது. முக்கியமாக வெளிநாடுகளில் உள்ள நிறுவனங்களில் வேலைக்குத் தேவையானவர்களை அனுப்புவதற்கு ஏற்பாடு செய்வது, வெளிநாட்டு நிறுவனங்களில் வேலையில் அமர்த்தப்படுவதற்கு இந்நிறுவனத்தின் மூலமாக இன்டர்வியூ ஏற்பாடு செய்து அனுப்புவது. பயங்கரமான ஊழல் இந்த ஸ்தாபனத்தில் நடக்கிறது. வெளிநாட்டு வேலைகள் என்றால் அதிக பணம் வரும் என்று பல்லாயிரக்கணக்கான அப்ளிகேஷன்கள் வருகின்றன. எத்தனையோ பேர் பணம் கொடுத்து ஏமாறுகிறார்கள். அது பார்ம் ஒன்றுக்கு ரூ.2/- பதிவு செய்பவர்களுக்கு ரூ.5/- என்று வசூல் செய்யப்படுகிறது. லட்சக்கணக்கான ரூபாய் சேர்ந்திருக்க வேண்டும். * *

ஆனால் கணக்கில் காட்டியது 1978-79-லே பேலன்ஸ் ஷீட்டிலேயிருந்து தெரிகிறது—அவர்களுடைய அப்ளிகேஷன்கள் வந்தது 12500. இப்படி 2, 5 என்று கலெக்ட் பண்ணுவது ரூ. 12565/- ஒவ்வொரு ஆண்டும் நஷ்டம் என்று சொல்கிறார்கள். 3, 4 ஆண்டுகளில் வந்த ரூபாய்கள் கணக்கில் காட்டப்பெறவில்லை என்பதை அதாரிடேடிவ் ஆக சொல்கிறேன். * *

இந்த பீஸ், ரிஜிஸ்ட்ரேஷன் வசூல் செய்வது சம்பந்தமான முதல் பேலன்ஸ் ஷீட்டிலே ஆடிட்டர் சொல்கிறார்.

"The Company collects a charge of Rs.2/- against each ata sheet issued to prospectiv applicants and a further sum of Rs.5/- against registration. The amount is received in the form of dem nd drafts, postal orders, etc Althougth this constitutes the major source of revenue for the compa y, no detailed day to day record of the receipt is kept. There should be sufficient control in this res ect".

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

(குறுக்கீடு). நீங்கள் ஒதுக்கின டைம்—அதற்கு ஒரு மார்ஜின் இருக்கிறது. எல்லோருக்கும் கொடுத்தமாதிரி. ஆகவே அந்த ஆடிட்டர் என்ன சொல்கிறார் என்று சொன்னால், அந்த 2 ரூபாய், 5 ரூபாய் என்று பல்லாயிரக்கணக்கான அளவில் அப்ளிகேஷன் போட்டிருக்கிறார்கள். அதற்கு ரசீதுகள், அதைப் பெற்றதற்கான ரெக்கார்ட்ஸ், முறையாக வைக்கப்படவில்லை என்று.

No detailed day today record of the reeipts is kept

அடுத்த ஆண்டு அதை கரெக்ட் பண்ணவேண்டுமா, இல்லையா? அடுத்த ஆண்டு அந்த ஆடிட்டர் என்ன சொல்கிறார் என்றால்,

The company collects a charge of Rs.2/- against each data sheet issued to prospective applicants and a further sum of Rs.5/- against registration. The amount is received in the form of demand drafts, postal orders etc. Although this constitutes the major source of revenue for the company no detailed today day record of the receipts is kept. The same holds good for the year under audit

அதையும் சொல்லி

The company collects a charge of Rs.2/- against each data sheet issued to prospective applicant etc. etc, Although this constitutes the major source of revenue no records were kept in respect of the registration fee collected

மறுபடியும் அதற்கு அடுத்த ஆண்டு

No records were kept.

கணக்கு வைக்கவில்லை என்று சுட்டிக்காட்டின பிறகு கூட மறுபடியும் அந்தக் கணக்கை வரவு வைக்கவில்லை என்றால், என்ன அர்த்தம்? மறுபடியும் அடுத்த ஆண்டு—3வது ஆண்டு வந்து விட்டது. மறுபடியும் ஆடிட்டில் என்ன சொல்கிறார்கள் என்றால்

The Company collects a charge of Rs.2/- against each data shett issned to Prospective applicants, etc.

Although this constitutes the major source of revenue for the company no records were kept in respect of the registration fee collected. There should be sufficient control in this respect.

தொடர்ந்து இந்த மாதிரி வாங்கின பணத்தை கணக்கிலே வைக்காமல் அவர்கள் செலவு பண்ணியிருக்கிறார்கள். எத்தனை லெக்ஸ் ஆப் ரூபீஸ். ஆகவே இந்த மாதிரியான விஷயங்கள் அங்கே வந்திருக்கிறது. ஆகவேதான் நான் சொல்கிறேன். ஊழலை எதிர்க்கிறார்கள் என்று சொல்கிறார்கள். ஆக்கவழி, நடைமுறையில் பார்த்தால் இந்த ஊழலைப் பொறுத்தவரைக்கும்



You are actually shierlding Govenment officials. என்று தான் நான் சொல்ல விரும்புகிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்கள் இங்கே ஒரு அதிகாரியைப் பற்றி குற்றச்சாட்டுக்களைச் சொன்னார்கள். உண்மையிலேயே ஒரு அதிகாரி தவறு செய்திருப்பாரேயானால், அதைப் பற்றிச் சொல்வதற்கு அவர்களுக்கு உரிமையுண்டு. அதைப் பற்றி ஆட்சேபணை இல்லை. ஆனால் அதேநேரத்தில் அப்படித் தவறு செய்யாமல் ஒரு அதிகாரி இருந்து விடுவாரேயானால் அவரைப் பற்றி இப்படி குற்றச்சாட்டுக்கள் சொல்கிறபோது அவர் தன்னை நிரபராதி என்று சொல்லுகின்ற வாய்ப்பை இழந்து விடுகிறார். அதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் (குறுக்கீடு) நீங்கள் பேசும் போது நாங்கள் பொறுமையாக இருந்தோம் அல்லவா? நாங்கள் அந்த மாதிரி நடுவிலே பேசுகின்ற அளவிற்கு பேசுகிறீர்கள். அது போல் நீங்களும் நாங்கள் பேசும் போது பொறுமையோடு இருக்கவேண்டும். கொஞ்சம் நெருப்பாக இருக்காதீர்கள். பொறுமையோடு இருக்கவேண்டும். ஆகையினாலே நம்முடைய உரிமையைப் பயன்படுத்தி, அப்படி ஒரு நிலைமையை உண்மையாக நிரபராதியாக ஒரு அதிகாரி இருப்பாரேயானால் நாம் அந்த நிலைமையை உருவாக்கிவிடக்கூடாது. இங்கே தணிக்கை அதிகாரிகள் கொடுத்த அறிக்கையைப் படித்தார்கள். அதிலே அவர்கள் குறிப்பிடுவது மனுபோடுகின்றவர்கள் தருகின்ற 2ரூபாய், 5 ரூபாய் என்று பெற்ற ரூபாய்க்கான விவரமான கணக்கை வைக்கவில்லை என்பதுதான். மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்கள் பேசும்போது அதைப்பற்றி மட்டும் குறிப்பிட்டிருந்தால் பொருத்தமாக இருக்கும். அதற்கு மாறாக****ஒரு அதிகாரியைப் பற்றி தனிப்பட்ட முறையில் குற்றச்சாட்டு போடுவது சரியல்ல என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ரா. உமாநாத்: தலைவர் அவர்களே, இதைப்பற்றி ஏற்கனவே ஒரு ரூலிங் கொடுத்திருக்கிறார்கள். மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள்**சீப் இன்ஜினியர் அவர்களைப் பற்றி குற்றம் சாட்டியபோது சீப் இன்ஜினியர் அதற்கு வெளியிலே பதில் சொன்னார். அதை பிரிவிலெஜ் கமிட்டிக்குக் கொண்டு போக வேண்டும் என்று நான் தான் கொண்டு வந்தேன். பிரிவிலெஜ் கமிட்டி ரூலிங்ஸ் என்னவென்றால் தனிப்பட்ட நபர்கள், அவையில் இல்லாதவர்கள், அல்லது அதிகாரிகளாக இல்லாதவர்கள், தனிப்பட்ட நபரைப் பற்றி குற்றம் சாட்டினால் அவர்கள் டிபென்ட் பண்ணுவதற்கு வாய்ப்பு இல்லை. ஆகவே அவர்களைப் பற்றி குற்றம் சாட்டக்கூடாது என்பதை ஒத்துக்கொள்ளளாம். ஆனால் ஆபிசர்ஸ் என்று சொன்னால், இங்கே ஆபிசர்களை டிபென்ட் பண்ணுவதற்கு, கவர்ன்மென்ட் சார்பிலே டிபென்ட் பண்ணுவதற்கு வாய்ப்பு இருக்கிறது.

---

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

(பிற்பகல் 12-50)

சீப் மினிஸ்டர் ஓர் அதிகாரியின் மீது குற்றம் சாட்டியதற்கு, அந்த அதிகாரி வெளியிலே பிரஸ் ஸ்டேட்மென்ட், மறுத்துக் கொடுத்து தப்பு என்று சொல்லி, அவர்கள் சீப் மினிஸ்டரை அப்ரோச் பண்ணி through the C.M. டிஃபெண்ட் செய்திருக்க வேண்டும் என்று, அவையிலே ரூலிங் கொடுத்தார்கள். ஆகையினால் பாதுகாப்பு இல்லை அதிகாரிகளுக்கு என்று சொல்லக் கூடாது. தனி நபர்களுக்குப் பொருந்துவது அதிகாரிகளுக்கு பொருந்தாது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இப்படி ஏதாவது பெரியகுற்றச்சாட்டு சொல்வதாக இருந்தால் அதற்கான ஆதாரங்களை முதலில் என்னிடம் காட்டி, நோட்டீஸ் கொடுத்துஅனுமதி பெற்றுச் சொல்ல வேண்டும். பேசும்போது திடீர் என்று இப்படி சொல்வது முறை அல்ல.

திரு ரா. உமாநாத்: அமைச்சர்களைப் பற்றி சொல்ல வேண்டும் என்றால், மன்றத்திலே உள்ள வேறு உறுப்பினர்களைப் பற்றி சொல்ல வேண்டும் என்றால், நோட்டீஸ் கொடுக்க வேண்டும், ஆனால் ஒரு அதிகாரியைப் பற்றிச் சொல்வதற்கு எதற்கு நோட்டீஸ்? எனக்கு தகவல் வந்தது. அதை அவையின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். அதை சரி, தப்பு என்று டிஃபெண்ட் பண்ணுவதற்கு கவர்ன்மென்ட் இருக்கிறது.

மாண்புமிகு திரு. சா. இராமச்சந்திரன் மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அவர்கள் கூறிய குற்றச்சாட்டில் இரண்டு வித வாதத்தில் ஒரு பக்கத்தை நான் ஏற்றுக் கொள்கிறேன். 2 ரூ. 5ரூ. மனுதாரர்களிடம் வாங்கியது பற்றி கணக்கு சரிவர இல்லை என்று தணிக்கை அதிகாரி சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். அவர்கள் சொல்வது, "In the discherge of official functions... So there is a lapse and I suspect. என்று

அதைச் சொல்வதற்கான உரிமை அவருக்கு இருக்கிறது. ஓர் அதிகாரியின் மேல் ஸ்வீப்பிங் அலிகேஷன் சொல்வது என்று வந்தால் யாரும் யாரை வேண்டுமானாலும் சொல்லலாம்.** அதற்கு மேல் அமைச்சர்கள் எழுந்து அவற்றை நிராகரித்துக் கொண்டிருக்க வேண்டும் என்று தாங்கள் நினைத்தால் தவறு, அதனால்தான் தெளிவாக நம்முடைய விதிகளில் இருக்கிறது. அத்தோடு, எந்த அதிகாரியைப் பற்றியும் எந்தவித ஆதாரமும் இல்லாமல் ஒரு குற்றச்சாட்டை சொல்வது என்பது சரியல்ல, என்பதற்கு என்ன ஆதாரம்? இந்த மன்றத்தினரை ஏமாளிகள் என்று நினைத்துக் கொள்ளக் கூடாது. (குறுக்கீடு) அடிப்படை ஆதாரம் இல்லாமல் எப்படிஅதைப் பற்றி விசாரிப்பது?

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



திரு. ரா. உமாநாத். தனிப்பட்ட குற்றச்சாட்டு அல்ல. ஓர் அரசு அதிகாரி மீது குற்றச்சாட்டு, அரசு அதற்குப் பதில் சொல்ல கடமை இருக்கிறது.

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன்: * *

திரு. ரா. உமாநாத்: என்குயரி வைத்தால் தெரிந்துவிடும்....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அவையிலே பேசுவதற்கு உறுப்பினர்களுக்கு உரிமை இருக்கிறது என்பதினால் அதிகாரிகளைப்பற்றி என்ன வேண்டுமானாலும் பேசிவிட முடியாது.

திரு ரா. உமாநாத்: அவர்களைப் பாதுகாக்க வேண்டியது அமைச்சர்கள் கடமை. கவர்ன்மென்ட் ஆபீசராக இருந்தால், குற்றச்சாட்டு வந்தால், மினிஸ்டர் தான் அவர்களைப் பாதுகாக்க வேண்டும். அப்படித்தான் விதி.

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன். விதிகளில் 'In the official discharge of his duty' you cannot make a personal charge,, என்றுதான் இருக்கிறது. தயவுசெய்து பேரவை விதிகளைப் பாருங்கள். தணிக்கை அறிக்கையில் உள்ளது பற்றிச் சொன்னார்கள். அது சரியாக இருக்கலாம்.** (குறுக்கீடு)

திரு ரா உமாநாத்: ஒரு அபீஷியல், மேனேஜிங் டைரக்டர் ஆப் தி கம்பெனி. ஆகவே, அவரைப் பற்றி சொல்வதற்கு எனக்கு உரிமை இருக்கிறது. அப்படி இல்லை என்று சொன்னால், இந்த அவையிலே கவர்ன்மென்ட் டிபார்ட்மெண்டினுடைய ஊழல் எதுவுமே எடுத்து வர முடியாது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர். எதையும் ஆதாரத்தோடு சொல்ல வேண்டும். பேரவைத் தலைவரிடம் ஆதாரம் எதையும் முன்கூட்டிக் காட்டி அனுமதி பெறாமல் இதுபோன்ற ஸ்டேட்மெண்டாக சொல்லிக் கொண்டிருக்கக் கூடாது.

திரு ரா உமாநாத். ரூல்படி எனக்குக் கிடைத்திருக்கிற தகவல் ரீதியில்தான் நான் சொல்ல முடியும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர். அதற்கு என்ன ஆதாரம் இருக்கிறது? எனக்குக் கிடைத்த தகவல் அடிப்படையில் என்று சொல்ல முடியாது. ஆதாரம் இருந்தால் உடனே கொண்டு வந்து காட்டுங்கள். com·on show it to me. நான் அனுமதிக்கிறேன்.

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

திரு ரா உமாநாத்: அந்த அதிகாரி மீது என்குயரி கன்டெக்ட் பண்ணுங்கள். அங்கே வந்து நான் காட்டுகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தணிக்கை குறிப்பின் சார்பாகவோ, அல்லது நிர்வாகத்தில் ஏற்படுகிற குளறுபடிகள், குறைபாடுகள் ஆகியவற்றைச் சுட்டிக் காட்டியோ பேசுவது தவறு இல்லை. இப்படிப்பட்ட குற்றச் சாட்டுகள் சொல்லப்பட்டிருக்கின்றனவே என்று எடுத்துச் சொல்லி அதற்கு என்ன மாற்று நிலைமை, அல்லது அமைச்சர்களுடைய பதில் என்ன என்று கேட்பதிலும் தவறு இல்லை அவற்றுக்கு அமைச்சர்கள் பதில் சொல்ல முடியும். ஆனால் ஒரு குறிப்பிட்ட அதிகாரி 5 ஆயிரம் ரூபாய் லஞ்சம் வாங்கினார் என்று சொல்லி விடுகிறீர்கள். நாங்கள் அவரைக் கேட்கிறோம். வாங்கவில்லை என்று அவர் சொல்கிறார், வாங்கவில்லை என்று அவர் சொல்லி விட்டார் என்று நாங்கள் பதில் சொல்கிறோம். நீங்கள் அவர் வாங்கினார் என்று சொல்கிறீர்கள். அதை எப்படி நிரூபிக்க முடியும்? குறிப்பிட்டு முதலமைச்சர் அவர்களுக்கு ஒரு குற்றச் சாட்ட நீங்கள் விசாரியுங்கள் என்று சொன்னால் வெளியே விசாரிக்கலாம். அப்படிச் சொல்கிறபோது எழுதிக் கொடுக்கிற நீங்கள் சாட்சியாக வருகிறபோது ஆதாரங்கள் காண்பிக்கின்ற போது அது உண்மையாக இருக்குமானால் நடவடிக்கை எடுக் கலாம். இங்கே பொதுவாக சொல்வதற்கெல்லாம் தீர்ப்பு சொல்லமுடியாது. குற்றச்சாட்டுகளை சொல்லக்கூடாது என்றோ அல்லது நிர்வாகத்தில் உள்ள குளறுபடிகளை சொல்லக் கூடாது என்றோ நான் சொல்லவில்லை. அவர் வாங்கவில்லை என்று சொல்கிறார் என்றால் அதை விசாரிக்க வேண்டுமென்றால் நீங்கள் தனியாக எழுதிக் கொடுப்பீர்களானால் என்குயரி என்று வருகிறபோது சாட்சி சொல்ல வருகிறபோது என்ன என்ன ஆதாரங்களால் அவர் வாங்கினார் என்று சொல்லலாம் அப்படி வருகிற குற்றச்சாட்டுகளை விசாரிக்கிறபோது சில குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்படுகின்றன. நிரூபிக்கப்பட்டவை மீது நடவடிக்கை எடுக்கிறோம். அப்படியில்லாமல் இங்கே அவையிலே பொதுப்படையாக பலர் சொன்னார்கள் என்று சொல்லவேண்டாமென்று தான் சொல்கிறேனே தவிர வேறல்ல' இப்படி இங்கே குற்றச்சாட்டு சொல்வதன்மூலம் பத்திரிகையிலே வருகிற நிலைமைகள் எல்லாம் வரும். அதைத் தவிர்க்கவே ஆதாரங்கள் இருந்தால், அதைக் காட்டிவிட்டுச் சொல்லலாம்.

திரு. ரா. உமாநாத்: மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் சொல்வதைத் தான் நான் சொல்கிறேன். மானேஜிங் டைரக்டர் இன் ஹிஸ் கெப்பாசிடி அவர் அட்மினிஸ்டர் பண்ணுகிறபோது அந்த பவரைப் பயன்படுத்திக்கொண்டு இந்த மாதிரி ....

Mr. DEPUTY SPEAKER:- I will read out the relevant portion. 'It is the Minister's duty to defend his subordinates, howsoever lowly against unmerited or unfair criticism, especially when the civil servant is debarred from replying to criticism in his personal oapacity. By



doing so, the Minister engenders in the civil servants the confidence that they will receive a fair deal and due protection. The principle that persons who are not in a position to defend themslves should not be subjected to attack.. " என்று இருக்கிறது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மற்ற குற்றங்களை யெல்லாம் மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் எடுத்து வைப்பதைப்பற்றி ஒன்றுமில்லை. [ * * * ] என்று சொல்வதைத்தான் நான் சொல்கிறேன். (குறுக்கீடு) ஒரு இயந்திரத்தை 15 ஆயிரத்திற்கு இந்த கம்பெனியிலே வாங்கினார் என்றால் அதிலே ஊழல் இருந்தால் அதை விசாரிக்கலாம். லஞ்சம் என்று சொல்கிறபோது வருகிற தகராறைத் தான் சொல்கிறேன். சாதாரணமாக சொல்ல வேண்டாமென்று சொல்ல வில்லை. பல அதிகாரிகள் லஞ்சம் வாங்கினார்கள் என்று சொல் கிறபோது தான் எழுதிக் கொடுத்தால் விசாரிக்கலாம் என்று சொல்கிறேன். விசாரிக்கிறபோது புரூப் பண்ணுகிற நிலைமைகள் வரும். அப்படி விசாரிக்கிறபோது பத்து குற்றச்சாட்டுகளிலே 8 நிரூபிக்கப்பட்டன என்று சி.ஐ.டி. மூலமாக வருகிறது. அப்படி வருகிறபோது லஞ்சம் வாங்கினார் என்று புரூப் பண்ணப்படு கிறது. ஆகவே அப்படிப்பட்ட நிலைமைகள் வருகிறபோது விசாரணைக்கு வருகிற ஒன்று· மற்ற குறைபாடுகளைச் சொல்ல வேண்டாமென்று சொல்லவில்லை. பொதுவாக லஞ்சம் வாங்கி னார் என்ற குற்றச்சாட்டு வருகிறபோது தனியாக எழுதிக் கொடுத்து விசாரிக்கச் சொல்லலாம் என்று சொல்கிறேன். அதை இங்கே சொல்கிறபோது பல சங்கடங்கள் வரும். அந்த பிரச்சினைகளைச் சொல்வதை விட்டுவிட்டு மற்றவைகளைச் சொல்லுங்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: The Hon. Speaker has oberved 'I have said many times that it is wrong and it is not fair that any member of this House should refer to names of Individuals who are not present in this House and who have no opportunity therefore of either explaining the facts to the House or replying to the charge made. Whatever the defeets were founder or were belived to exist by the member who spoke, he could criticise the concerned Minister without mentioning the name.

திரு. ரா. உமாநாத்: I am observing that rule. என்னை கிளியர் படுத்தவிடவேண்டும். நீங்கள் ரூலை சொல்லியிருக்கிறீர்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ரூல் கிடையாது ரூலிங்.

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

திரு ரா. உமாநாத்: 2 ரூலிங் படித்திருக்கிறீர்கள். அவையிலே தன்னைப்பற்றி டிபெண்ட் பண்ணுவதற்கோ தன்பேரில் இருக்கக் கூடிய குற்றச்சாட்டை தெளிவுபடுத்துவதற்கோ வாய்ப்பு இல்லாதவரைப்பற்றி குற்றச்சாட்டு சொல்லக்கூடாது. கரெக்ட். முன்னாலே ஒரு ரூலிங்கை படித்தீர்கள்.

As far as the officers are concern d, it is the duty of the Ministers to defend them, and clarify the posircton. அவர்கள் பேரிலே சார்ஜ் வந்தால்

If the Minister does not defend what is the position ஆகவே இரண்டும் டிபரண்ட்

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அதை வெளியே பேசுங்கள். நமக்கு பிரிவிலேஜ் இருக்கிறது என்பதால் பேசலாம் என்று முழுமையாக ஏற்றுக் கொள்ள முடியாது. சில நேரங்களில் நமக்கு இருக்கிற புரடக்ஷனை நாம் மிஸ்யூஸ் பண்ணுகிறோம். இன்னொரு எக்ஸ்டிரிமை நான் சொல்கிறேன். மினிஸ்டர் டிபெண்ட் பண்ண வில்லையென்றால் அந்த அபிஷியலை யார் டிபெண்ட் பண்ணுவது I will go to the other extreme ஒரு அதிகாரி லஞ்சம் வாங்கி விட்டார் என்று சொல்கிறார்கள். அதை மந்திரி டிபெண்ட் பண்ணாமல் சும்மா இருந்து விட்டால் அதிகாரியின் நிலைமை என்ன? (கூச்சல்–குழப்பம்) நீங்கள் அதற்கு நோட்டிஸ் கொடுக்க வேண்டும். நோட்டிஸ் கொடுக்காமல் பேசக்கூடாது (குறுக்கீடு)

(பிற்பகல் 1—00)

சாமனாக சொல்கிறேன். அதைக் கூட கேட்கவில்லை என்றால் எப்படி' அவையில் இல்லாத ஒருவரைப் பற்றி பேசும் போது அவரை யார் வந்து டிபெண்டு செய்வது, டிபெண்ட் செய்ய முடியாத நிலை இருக்கிறது, இங்கே உள்ளே நமக்கு பிரிவில்லேஜ் இருக்கிறது. நாம் யாரைப் பற்றியும் பேசிவிடலாம் எந்த நீதி மன்றமும் நம்மை அழைக்க முடியாது. ஆனால் நமக்கு செல்ப் ரெஸ்டிரெயின்டு வேண்டும். (குறுக்கீடு) நமக்கு பிரிவில்லேஜ் இருக்கிறது என்று எல்லோரைப்பற்றியும் பேசிவிட முடியுமா?

திரு. ரா. உமாநாத்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்படியே போனால் இது நம்மை நாளைக்கு பாதிக்கும். எனக்கு பதில் சொல்ல வாய்ப்பு கொடுங்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேசுவதற்கு வாய்ப்பு கொடுக்கிறேன்.

"No Member shall be ailowed to make an allegation against a outsider unless he has obtained the prior permission of the Hon. Speaker after giving advance notice there of to the Hon. Speaker and the Hon. Minister concerned. Such notice shall..............

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உரிமைக் குழுவும் அதைப் பரிசீலித்தது; அவர் ரெக்ரட் எக்ஸ்பிரஸ் செய்த பிறகு தான் அந்தப் பிரச்சினை விடப்பட்டது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள் ஒரு இலாக்காவைச் சுட்டி குற்றங் குறைகள், ஊழல்கள் ஆகியவற்றைப் பற்றி எடுத்துச் சொல்வதைப் பற்றி ஆட்சேபணை இல்லை. துறை சம்பந்தமாக உறுப்பினர்கள் கூறும் குற்றங்குறைகள் உண்மையா என்று பார்ப்பதற்கான நடவடிக்கைகளை அந்தந்தத் துறைகள் எடுத்து வருகின்றன. குறிப்பிட்டு ஒரு அதிகாரியின் மீது குற்றம் சொல்லும்போது, ** அதைப்பற்றி நாங்கள் விசாரிக்கிறோம். எனவே, இப்பொழுதுள்ள பிரச்சினையில் அந்த அதிகாரி அம்மாதிரி இல்லை என்று சொல்கிறார் என்றால் அதை நிரூபிக்க உறுப்பினர் தம்மிடம் ஆதாரம் இருக்கிறது என்று சொல்லிவிட்டால், அதுபற்றிய விசாரணை வரும்பொழுது அதற்குத் தயாராக இருந்தால், இந்த நிலையோடு நிறுத்தலாம்.

திரு. ரா. உமாநாத்: துணைத் தலைவரவர்களே, நான் சொன்ன அந்தப் பிரச்சினையில், ''முதலமைச்சரே என்னை டிஃபண்ட் பண்ணாமல் குற்றம் சாட்டியுள்ளபோது அதைப்பற்றி வெளியே விளக்கம் கொடுக்க எனக்கு உரிமை இல்லையா'' என்று கூறிய அந்த அதிகாரி பற்றிய பிரச்னை வந்தபொழுது அது பிரிவிலேஜ் கமிட்டிக்கு அனுப்பப்பெற்றது. ''உங்களைப் பற்றி சார்ஜ் சொன்னாலும், மினிஸ்டரே டிஃபண்ட் செய்யவில்லை என்றாலும் உங்களைப் பொறுத்தவரைச்கும் அந்தக் குற்றச் சாட்டு பற்றி அவைக்கு விளக்குவது என்றால் அமைச்சரின் மூலமாகத்தான் முடியுமே தவிர வெளியே சொல்ல உரிமை இல்லை'' என்று உரிமைக் குழுவில் அவரிடம் சொல்லியிருக் கிறார்கள்.

எனவே, நான் சொல்வது, இம்மாதிரி ஏராளமாக வெளி நாட்டுக்குப் போனவர்களிடமிருந்து புகார்கள் வந்திருக்கின்றன. இதனால் அரசாங்கத்தின் பெயர் பாதிக்கப்படுமா இல்லையா? மேனேஜிங் டைரக்டர் மீது கூறிய இப்படிப்பட்ட குற்றச்சாட்டுக் களைப்பற்றி என்கொயரி நடத்த வேண்டுமென்று கேட்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: குற்றச்சாட்டுக்கள், அது சம்பந்தமாக உள்ள நடவடிக்கைகள் அவைக்குறிப்பிலேயிருந்து நீக்கப்படுகின்றன.

திரு. ரா உமாநாத்: அதை நீக்குவதற்கான காரணம் என்ன?

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ஏதாவது ஒரு குற்றச் சாட்டு கூற வேண்டுமென்றால் அதற்கான தக்க ஆதாரங்களை முன்கூட்டியே பேரவைத் தலைவரிடம் காட்டி அனுமதி பெற்றிருக்க வேண்டும். அதற்கான பொறுப்பை உறுப்பினரே ஏற்றுக்கொள்ள வேண்டும். அவர் சொன்னார், இவர் சொன்னார் என்பதாக

* *

என்று சொல்வது எதில் போய் முடியும்? இங்கே உள்ள 234 உறுப்பினர்களும் தங்களுக்குப் பாதுகாப்பு வேண்டுமென்று மட்டும் சொல்லிவிட்டு வெளியிலே உள்ள அதிகாரிகளைப் பற்றி என்னென்ன வேண்டுமானாலும் சொல்வது என்பது சரியா இருக்காது என்பதால்தான் நீக்குகிறேன்.

(பிற்பகல் 1-10.)

திரு. ரா. உமாநாத்: அந்தமாதிரி பாதிக்கப்பட்டவர்கள் பலர் இம்மாதிரிக் குறைகளைச் சொல்லி இருக்கிறார்கள். ஆகவே இதைப்பற்றி ஒரு என்கொயரி அந்த மேனேஜ்மென்டின் பேரிலே வையுங்கள். பாதிக்கப்பட்டவர்களை வந்து சாட்சியம் சொல்லச் சொல்கிறேன். I want an enquiry.

MR. DEPUTY SPEAKER: Then are you taking up the responsibility?

THIRU. R. UMANATH: I am prepared to take up the responsibility, if an enquiry is ordered against the officer, to ask the persons who have complained to me to come and tell their version

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: கமிஷன் அல்லது கமிட்டி வைத்தால் அதிலே வந்து நான் சொல்கிறேன் என்று சொல்கிறீர்கள். ஆனால் எந்தவிதமான பிரைமா பேசியும் இல்லாமல் இங்கே வந்து பேசி அதனை அவைக்குறிப்பிலே ஏற்றுவது நல்லதல்ல......

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: துணைத் தலைவர் அவர்களே, நான் அப்பொழுதே எழுந்து பேசவேண்டும் என்று ஆசைப்பட்டேன். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள் அந்த வாய்ப்பைத் தரமாட்டேன் என்று சொல்லி விட்டார்கள். அமைச்சராக இருப்பதன் காரணத்தாலேயே நீங்கள் குறுக்கிட்டுப் பேசலாமா என்று கேட்டார்கள். எனவே இப்போது உறுப்பினர் என்ற வகையிலேயாவது பேச அனுமதி வேண்டும்.

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக் கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வாய்ப்பினைத் தருவது நான் தான். வாய்ப்பு தருவது உறுப்பினர்கள் அல்ல. எனவே நான் இப்போது வாய்ப்புத் தருகிறேன். அமைச்சர் பேசலாம்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: துணைத் தலைவர் அவர்களே, தங்களிடமே இந்த வாய்ப்பைக் கேட்டுப் பெற வேண்டிய நிலைமையை உருவாக்கினார்கள், அதனால்தான் சொன்னேன், நான் ஒன்றைத் தெளிவாகச் சொல்ல விரும்புகிறேன். It is a degree of the difference.

அதாவது குற்றச்சாட்டு கூறக்கூடாது என்பதல்ல. மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள் ஆடிட் பாராவிலே இருப்பதைப்பற்றிச் சொன்னார்கள். அதை ஆட்சேபிக்கவில்லை. ஆனால் அடுத்து அந்த அதிகாரி பற்றிச் சொன்னது தான் ஆட்சேபணைக்குரியதாக உள்ளது. அது நியாயம் என்றால், இந்த மன்றத்திலே நாம் யோசிக்கவேண்டியது என்னவென்றால், நிரபராதியான ஒரு அதிகாரிக்கு என்ன பாதுகாப்பு என்பதைத் தான். ஆகவே குற்றச் சாட்டுக்களைச் சொல்கின்றபோது ஓரளவுக்கு அதற்கான ஆதாரங்களையும், உண்மைகளையும் முன்கூட்டி காட்டி இருக்கவேண்டும்.

உதாரணமாக ஓர் அதிகாரி நான்கு பேர்களிடத்திலே டெண்டர் கேட்டார்கள்; அதிலே ஒருவருக்குத்தான் தகுதி இருக்கின்றது; இன்னொருவருக்குத் தகுதி இல்லை; அப்படித் தகுதி இல்லாதவருக்குக் கொடுத்துவிட்டார் என்பது மாதிரியாகச் சொன்னால் அதிலே மேலெழுந்தவாரியாகவாவது குற்றம் என்று தெரியும். அப்படி மேலெழுந்தவாரியாகக் கூட குற்றம் என்று தெரியாத வகையில் ஒரு அதிகாரியைப் பற்றி பொதுவாக

* *

என்று சொல்வது சரியல்ல.

இன்னொன்றையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அதாவது முதலிலே அவர்கள் பேசியபோது *

* என்று சொன்னவர் படிப் படியாக இப்போது எந்த அளவிற்கு வந்திருக்கிறார் என்றால் இப்படி பல பேர்களிடத்திலிருந்து எனக்குப் புகார் வந்திருக்கின்றது என்று சொல்கின்ற அளவிற்கு வந்திருக்கிறார். Now he has come to a stage where his allegation has become vague. எங்கே போய் யாரைக் கேட்பது?

---

*மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ஆதாரங்கள் எதுவும் இல்லாமல் வெறுங்கையோடு வந்து குற்றச்சாட்டுகளைச் * சொன்னால் எப்படி நம்புவார்கள்?

* என்று சொன்னால் அதற்கான ஆதாரத்தைத் தர வேண்டாமா (குறுக்கீடு)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்களிடத்திலே தான் ஒன்றைக் கேட்டுக்கொள்கிறேன். குற்றச்சாட்டு. * மற்றவைகள் எல்லாம் ஒருபுறம் இருக்கட்டும்; * * என்பதை மட்டும் தனியாக எழுதிக் கொடுங்கள்.

திரு. ரா. உமாநாத்: எனக்குத் தகவல் வந்திருக்கிறது. பாதிக்கப்பட்டவர்கள் சிலர் என்னிடம் கம்ப்ளெயின்ட் பண்ணியிருக்கிறார்கள். நான் சொல்வது ஒன்றுதான். (குறுக்கீடு) அதை நீங்கள் ஷட் அவுட் செய்தால் எப்படி? பல டிபார்ட்மென்ட்களில் நல்ல அபிஷியல்ஸ் இருக்கிறார்கள். கரப்ட் அபிஷியல்கள் இருக்கிறார்கள். அது தெரிந்த விஷயம்தான். நீங்கள் இப்படி ஷட் அப் செய்தால் எப்படி? நான் என்ன சொல்கிறேன் என்றால், ஏற்கனவே ஒன்றை ரெக்கார்டிலிருந்து எடுத்துக் காட்டினேன். ரசீது பண்ண வேண்டிய ரூபாயைக் கணக்கிலே காட்டாமல் செய்கிறார் என்று எடுத்துக் காட்டினேன். எப்படி ஒரு எம்.டி........

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அப்படி எழுதிக் கொடுத்திருப்பது உண்மையோ, இல்லையோ தெரியாது. அந்த எழுதிக் கொடுத்திருக்கிற குற்றச்சாட்டுகளில் பிரைம பேஸி கேஸ் இருக்கிறது என்று நினைத்தால் சொல்லலாம். அது இருக்கிறதா, இல்லையா என்று உங்களுக்குத் தெரியாது. அதை விசாரியுங்கள் என்று சொல்லி அதோடு நிறுத்திக் கொள்ளுங்கள்.

திரு. ரா. உமாநாத்: அது உண்மையா, பொய்யா என்பதை அரசாங்கம் விசாரித்துச் சொல்லட்டும். ஆகவே, நான் சொல்வதை எரேஸ் பண்ணக் கூடாது, எக்ஸ்பஞ்ச் பண்ணக் கூடாது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு உறுப்பினர் கூறுவது சில பேர்கள் புகார்கள் தந்திருக்கிறார்கள். புகார் உண்மையா அல்லது உண்மைக்குப் புறம்பானதா என்பதை ஆராய வேண்டுமென்று அவர் கேட்டுக்கொள்கிறார் என்ற அளவிலே இருக்கிறது. அந்த அளவிலே வைத்துக்கொள்ளலாம், குற்றச்சாட்டு இல்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அப்படியானால், குற்றச்சாட்டு நீக்கப்பட்டிருக்கிறது.

---

*மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

திரு. ரா. உமாநாத்: பாதிக்கப்பட்டவர்கள் என்னிடம் வந்து அந்தஸ்தாபன எப்.டி. பற்றி புகார் கொடுத்திருக்கிறார்கள். அரசாங்கம் அதைப் பற்றி விசாரித்து உண்மையைக் கண்டறியவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: குற்றச்சாட்டு நீக்கப்பட்டிருக்கிறது. மற்றவற்றை நான் பார்த்துச் சொல்கிறேன். உண்மையைக் கண்டறிய வேண்டும் என்பது இருக்கட்டும்.

திரு. அ. ரகுமான்கான்: மன்றத்தினுடைய துணைத் தலைவர் அவர்களே, நானும் சட்டமன்ற உறுப்பினராக இருக்கிற காரணத்தாலே உங்களிடத்திலே ஒரு தெளிவான ரூலிங் கேட்கிறேன். ஏனென்றால், எதிர்காலத்திலே சபைக்கு உதவியாக இருக்கும் என்ற காரணத்தால், கேட்கிறேன். ஒரு அதிகாரியைப் பற்றி ஒரு ஊழல் குற்றச்சாட்டு வருகிறபொழுது..........

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் என்ன கேட்கிறீர்கள் என்று தெரியும். நீங்கள் உட்காருங்கள், சொல்கிறேன். எந்தக் குற்றச்சாட்டைச் சொல்ல வேண்டுமென்றாலும்........

திரு. அ. ரகுமான்கான்: சார், என்னவென்று கேட்டு ரூலிங் கொடுங்கள், ஏற்றுக்கொள்கிறேன் (குறுக்கீடுகள்). மன்றத்தினுடைய துணைத் தலைவர் அவர்களே, எங்களுக்கு உதவியாக இருக்கும் என்பதற்காகத் தான் கேட்கிறேன். உங்களுடைய ரூலிங்குக்குக் கட்டுப்பட்டு நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். எதிர்காலத்தில் எங்களுக்கு உதவியாக இருக்கும். ஒரு அதிகாரியின் மீது ஊழல் குற்றச்சாட்டு சொல்லப்படும்போது இந்த சபையிலே நாங்கள் அதைப்பற்றி பேச வேண்டுமென்றால் ஒன்று, அது பற்றி கமிஷன் வைத்து விசாரிக்கலாம், அல்லது எங்களுக்குத் திருப்தியாக இருந்தாலும் சொல்லலாம். * * ஆதாரம் வேண்டுமென்று சொல்கிறீர்களே, அது என்ன, என்ன ஆதாரம்........?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அதை ஜெனரலாகச் சொல்ல முடியாது. எதை, எதைச் சொல்கிறீர்களோ, அதற்கு ஆதாரங்களைக் காட்ட வேண்டும்.

திரு. அ. ரகுமான்கான்: லஞ்சம் கொடுத்த ஆளை சட்ட சபைக்குக் கூப்பிட்டுக் கொண்டு வரலாமா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அதுபற்றி தற்போது எந்த கேசும் இல்லாமல் நான் தீர்ப்பளிக்க முடியாது. என்னிடம் ஏதாவது ஒரு வழக்கு வந்தால்தான் நான் தீர்ப்பளிக்க முடியும். ஹைப்பத்தெட்டிக்கலாக இமாஜின் பண்ணி விவாதத்திற்குப் போக வேண்டாம்.

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



திரு. ரா. உமாநாத்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடைசி பாய்ன்ட்டைச் சொல்லி முடித்து விடுகிறேன். 1977 ஆம் ஆண்டு அமைச்சரவை அமைத்தவுடன் மாண்புமிகு முதல்வர் ஒரு பொறுப்பை, ஒரு கடமையை, சவாலாக ஏற்றுக் கொண்டார். இந்த அவையிலே அவர் சொன்னார், காவலர்களை மனிதத் தன்மை உடையவர்களாக மாற்றித் தீருவேன் என்று.

(பிற்பகல் 1–20.)

ஐ வில் ஹ்யூமனைஸ் தெம் என்று சொல்லி அதை ஒரு சேலஞ்சாக அந்த முறையில் நான் பொறுப்பு எடுத்துக் கொள்கிறேன் என்று சொன்னார். அந்த சபதத்தில் அவர் படுதோல்வி அடைந்திருக்கிறார் என்றே நான் சொல்வேன். அவர்களை ஹ்யூமனைஸ் பண்ணுவதற்கு பதிலாக மேலும் புருட்டலைஸ் பண்ணி இருக்கிறார்கள் அதாவது காவல் துறையினரை மனிதத் தன்மை உடையவர்களாக மாற்றுவதற்கு பதிலாக மனித உருவத்திலே தோன்றிய ரத்த காட்டேறிகளாக மாற்றி இருக்கிறார் இன்றைக்கு.

செஞ்சி வட்டத்தில் கண்டமாநல்லூர் கிராமத்தில் 53 வயதுள்ள ஒரு பெண்ணை 8–11–1983 முதல் 15-11-1983 வரையில்——பெண்களை லாக்கப்பில் வைக்கக் கூடாது; ஆண்களை வைத்தாலும் 24 மணி நேரத்திற்குள் ரிமாண்ட் செய்யவேண்டும்.——ஆனால் 8-ம் தேதியிலிருந்து 15-ம் தேதி வரையில் வளத்தி காவல் நிலையத்தில் வைத்து தினமும் மாலை——தயவுசெய்து என்க்குயர் பண்ணி சீரியசான நடவடிக்கை எடுக்கவேண்டும்——7 மணிக்கு மேலே லாக்கப்பில் கயிற்றில் அந்தப் பெண்ணைத் தொங்கவிட்டு, நிர்வாணமாகத் தொங்கவிட்டு, இரண்டு கால்களையும் விரித்து பிடித்து, உயிர் நிலையில் குத்தினார்கள். இவ்வளவும் சப்–இன்ஸ்பெக்டர் தேவ கிருஷ்ணன் முன்னிலையில் நடந்தது. அதனால் பிளீடிங் ஏற்பட்டது; அந்தப் பெண் நடக்கக்கூட முடியாத நிலையில் பிரக்ஞை இழக்கும் வரையில் கழியால் அந்தப் பெண்ணை அடித்து வீழ்த்தினார்கள். பிறகு அந்தப் பெண்ணை தூக்கிப் போய் கிராமத்திற்கு வெளியே போட்டு விட்டார்கள். இவ்வளவும் அனுபவித்த அந்தப் பெண்ணை எங்கள் கட்சியினுடைய மாநில உறுப்பினர் என்.ஆர். ராமசாமி தென்னாற்காடு கலெக்டரிடத்தில் கொண்டு போய் புரடியூஸ் செய்தார் கலெக்டர் பார்த்தார். அவர் அந்த விஷயத்தை சப்-கலெக்டரிடம் விட்டார். சப் கலெக்டர் என்ன செய்தார்? தண்ணீர் தண்ணீர் படத்தினுடைய காட்சி மாதிரி போயிற்று. அதாவது கலெக்டரிடம் கொடுக்க, கலெக்டர் சப்–கலெக்டரிடம் கொடுக்க அவர் தாசில்தாரிடம் கொடுக்க இப்படி ஆயிற்று. அந்த மாதிரி சத்ய ஓரியல்-தின் அப்படி போயிருக்கிறது.

சமீபத்தில் ஆட்டோ டிரைவர்கள் ஸ்ட்ரைக்கிலே தியாகராய நகர் போலீஸ் ஸ்டேஷன் தயாள் ரங்கன் என்ற டிரைவரை பொட்டை அடித்து இருக்கிறார்கள். இது என்ன லா? அண்டர் வாட் செக்ஷன்? தவறு செய்தால் அரெஸ்ட் பண்ணட்டும். ஆயிரம் விளக்குப் பகுதியில் மூர்த்தி என்ற டிரைவரை ஒரு பக்கம் மீசையை சிரைத்தார்கள். இது என்ன காவலர்களா? காட்டு மிராண்டிகளா? மீசையில் ஒரு பக்கம் எடுத்தார்கள். ஒருவேளை அந்த காவலர்களுக்கு அந்த வேலையில் ஒரு துடிப்பு இருக்கிறது போல இருக்கிறது. வேண்டுமானால் அந்த வேலையைச் செய்யட்டும். அதுவும் மதிக்கக்கூடிய வேலை தான். இப்படியா அக்கிரமம் செய்வது? முதல்வரின் தோல்வி எந்த அளவு போயிற்று என்றால், இதுவரையில் பெண் போலீஸ் மனிதத் தன்மை உடையவர்களாக இருந்தனர். அவர்களுக்கும் மிருக உணர்ச்சிகளை ஊட்டி விட்டார்கள். பிப்ரவரி 3–ம் தேதி இந்த மாதம் சென்னை பூக்கடை அண்ணா சாலை தொலைபேசி அலுவலகம் முன் தொலைபேசி ஊழியர்கள் ஆர்பாட்டம் நடத்தினார்கள். என்ன காரணம் என்று பார்த்தால் திருச்சியில் டெலிபோன் ஆப்பரேட்டராக வேலைபார்க்கும் ரோஸி என்ற பெண் வைகை எக்ஸ்பிரசில் எக்மோருக்கு வந்தார்கள். டிக்கட் விஷயமான தாவாவில் ரெயில்வே அதிகாரிகள் எக்மோர் போலீசிடம் ஒப்படைத்தனர். உடனே பெண் போலீஸ் வந்தார்கள். கம்பால் ரோசியின் முதுகில் அடித்தார்கள். தலை முடியை பிடித்து இழுத்து பூட்ஸ் காலால் உதைத்தனர். 5,000 ரூபாயுடன் பையை பிடுங்கி எறிந்து விட்டனர். ஸ்டேஷனுக்குள்ளே கொண்டு போன பிறகு அந்தப் பெண்ணின் வயிற்றின் கீழேயும், தொடையிலும் பூட்ஸ் காலால் உதைத்தார்கள். புடவை, ஜாக்கெட்டைக் கிழித்தனர். 5,000 ரூபாய். மோதிரம், நகை போயிற்று. அந்தப் பெண் மகளுடைய மேரேஜ்ஜிற்காக வித்டிரா செய்த அந்தப் பணம் போயிற்று. ஆகவே ஏ.டி.எம்.கே. கவர்ன்மென்டில் போலீஸ் இஸ் ஆன் ராம்பேஜ்——போலீஸ் துறையினர் காட்டுமிராண்டிகளைப் போல கட்டவிழ்த்து விடப் பட்டுள்ளனர். ஆகவே சீரியசான நிலைமை. இந்த நிலையில் போலீஸ் ஸ்டேஷனை ஜனங்கள் கெரோ பண்ணுகிற நிலைமை வருகிறது. அதனால் துப்பாக்கிச் சூடு வருகிறது. ஆகவே இந்த விஷயத்தில் முதலமைச்சர் அவர்களுடைய சவால் தோல்வி அடைந்துள்ளது என்பதைக் கூறி என் பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நான் பேசிய பேச்சிலே முழுக்க முழுக்க தவறான புள்ளிவிவரங்களைக் கொடுத்தேன் என்ற குற்றச்சாட்டை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வெளி யிட்டார்கள். ரிசர்வ் வங்கியினுடைய புல்லட்டின் ஒரு மாதிலத்திலே இருக்கிற பிரைஸ் இன்டெக்ஸ் வெளியிடுவது அக்ரிகல்ச்சர் லேபரர்களுக்குத் தான். 1983 ஆம் ஆண்டு ஜூன் மாதம் ரிசர்வ் வங்கியினுடைய புல்லட்டினை வைத்து தான் நான் பேசினேன். மேற்கு வங்கத்தை விட ஒவ்வொரு மாதமும் 80 ஆம் ஆண்டு,



81 ஆம் ஆண்டு தமிழகத்திலே விலைவாசிப் புள்ளிகள் அக்ரி–கல்ச்சுரல் லேபரரர்களுக்குக் குறைவாக உள்ளது. அந்தச் சூழ்நிலையில் தவறான புள்ளிவிவரங்களை நான் கொடுத்ததாகச் சொன்னார்கள். நான் சொல்கிறேன், தவறான புள்ளிவிவரங்களை இந்த சபையிலே பல முறை திரு. உமாநாத் அவர்கள் தான் கொடுத்திருக்கிறார்கள் என்பதை ஆதாரத்தோடு நிரூபிக்கிறேன்.

திரு. ரா. உமாநாத்: தலைவர் அவர்களே, இது என்ன, இன்னொரு ஸ்பீச்சா? (கூச்சல்.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கும் இப்படிப்பட்ட சந்தர்ப்பங்கள் கொடுக்கப்பட்டு இருக்கின்றன. இப்படி ஒருவருக்கொருவர் பதில் சொல்லி விவாதத்தை வளர்ப்பது கூடாது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உமாநாத் அவர்கள் சொல்லியது இன்டஸ்டிரியல் லேபரைப் பற்றியதாகும். மாண்புமிகு உறுப்பினர் வி.பி. பாலசுப்பிரமணியம் அவர்கள் எடுத்துச் சொன்னது அக்ரிகல்சுரல் லேபர் பற்றி ரிசர்வ் பாங்கி கொடுத்து இருக்கும் கணக்காகும். வெஸ்ட் பெங்கால் 566, தமிழ் நாடு 529 இதிலே தமிழ்நாட்டிலே குறைவாக இருக்கிறது. மாண்புமிகு உமாநாத் சொல்லியது இன்டஸ்டிரியல் லேபர் பற்றி. அதைச் சொல்கிறபோது அவர்கள் சொல்லிய கணக்குப்படி கல்கத்தாவில் 526 என்று வருகிறது. சென்னையில் 549 என்று வருகிறது. ஆகவே, இரண்டு பேரும் சொன்னது சரியான புள்ளிவிவரம் தான். அதிலே பிரச்சினை தேவையில்லை. (குறுக்கீடு.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்கள் அமைதியாக அமரவேண்டும். அடுத்து திரு. என். வி. என். சோமு பேசுவார்.

திரு. என். வி. என். சோமு: துணைத் தலைவர் அவர்களே, இப்போது நேரம் 1-27 ஆகிறது. ஆகவே, நாளைக்கு என்னைப் பேச அனுமதிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இன்றைய நிகழ்ச்சிகளை பிற்பகல் 2 மணி வரையில் நடத்தலாம் என்று முடிவு எடுக்கப்பட்டுள்ளது. ஆகவே, இன்றைக்கே நீங்கள் பேசி முடித்து விடுங்கள்.

திரு. என். வி. என். சோமு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு ஆளுநர் உரை எந்தவித உயிரோட்டமும் இல்லாத அறிக்கையாக இருப்பதைக் கண்டு நான் வருந்துகிறேன். உயிரிழந்து, உடமையிழந்து, வீடிழந்து வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு எந்தவிதமான உருப்படியான உதவியும் இந்த ஆளுநர் உரையில் குறிப்பிடப் படவில்லை என்பதை மெத்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

அதேபோல் மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள் எடுத்த எடுப்பிலேயே சொன்னார், பத்திரிகைக் கட்டுப்பாடு சட்டம் தளர்த்தப்படும் என்று முதலமைச்சர் அவர்கள் பல மாதங்களுக்கு முன்னாலேயே ஒப்புதல் அளித்தபின்னரும். இன்னும் அதைத் தளர்த்த இந்த அரசு முன்வரவில்லை என்பதை நான் மிகவும் வேதனையோடும், வருத்தத்தோடும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஐ.இ.என்.எஸ். செயற்குழு என்று சொல்லக்கூடிய இந்திய பத்திரிகையாளர் சங்கத்தின் தலைவர் திரு. முரளி அவர்கள் தலைமையில் செயற்குழுவினர் முதலமைச்சர் அவர்களை சந்திக்க இரண்டு மாதங்களுக்கு முன்னாலே சென்ற நேரத்திலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அந்த பத்திரிகைக் கட்டுப்பாடு சட்டத்தை, அந்தக் குறிப்பிட்ட சட்டத்தை, இந்தியாவிலேயே பீகருக்கு வழிகாட்டியாகக் கொண்டு வந்த சட்டத்தை, வாபஸ் பெற்றுவிடுகிறேன் என்று அறிவித்தார். பல மாதங்கள் ஆகியும் இன்னும் அந்தச் சட்டம் வாபஸ் பெறாதது வன்மையாகக் கண்டிக்கத்தக்கது. பத்திரிகைத் துறையை It is th. Fourth Estate என்று சொல்வார்கள் ஒருவன் கையில் இருக்கும் கூர்மையான வாளை விட எழுத்தாளனின் கையில் இருக்கும் பேனாவின் முனை கூர்மையானது என்று சொல்வார்கள், அப்படிப்பட்ட வலிமைமிக்க பேனா முனையை முறிப்பதற்காகக் கொண்டு வரப்பட்டச் சட்டம் அந்தத் தடைச் சட்டம். இன்றைக்கு அதை மாற்ற வேண்டும், வாபஸ் பெற வேண்டுமென்று பலமுறை மக்கள் பிரதிநிதிகள் எல்லாம் சொல்லியிருக்கிறார்கள், எல்லாக் கட்சித் தலைவர்களும் சொல்லியிருக்கிறார்கள். அப்படி எல்லாம் இருந்தும்கூட, வாக்குறுதி கொடுத்தும் கூட இன்னும் வாபஸ் பெறாதது மட்டுமல்ல, அதுபற்றி சட்டம் வரவிருக்கிறது என்று ஆளுநர் உரையில் கூறப்பட்டிருப்பது வருந்தக்கது, கண்டிக்கத்தக்கது.

(பிற்பகல் 1—30)

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வே. இரா. ஜெயராமன்) அவையின் அனுமதியுடன் அலுவல் நேரம் சிறிது நீட்டிக்கப் படுகிறது.

திரு. என். வி. என். சோமு: இங்கே இந்த ஆளுநர் உரையின் மீது நடைபெறும் விவாதம் இன்னும் 4 அல்லது 5 நாள் நடைபெறும். அதன் பிறகு மார்ச் 3-ந்தேதி பட்ஜெட் கூட்டம் ஆரம்பித்து ஏறத்தாழ ஒரு மாதம் நடைபெறும் அதற்குள்ளே இந்த சட்டத்தை வாபஸ் பெறும் ஏற்பாடுகளை முதலமைச்சர் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



அடுத்து நம்முடைய திராவிட இயக்கப் பாரம்பரியத்தின் மிகப்பெரிய கொள்கையான பஸ்களை தேசியமயமாக்கும் பிரச்சனை குறித்து ஆளுநர் உரையில் ஒரு வார்த்தைக் கூட இல்லாதது எங்களுக்கு எல்லாம் மெத்த வேதனையை அளிக்கிறது. பேரறிஞர் அண்ணா அவர்களால் கொண்டுவரப்பட்ட இந்தத் திட்டத்தைத் தொடர்ந்து அப்போதைய முதலமைச்சராக இருந்த டாக்டர் கலைஞர் அவர்கள் பஸ்களை தேசியமயமாக்கினார்கள் சில பஸ் முதலாளிகள் அதை எதிர்த்து சுப்ரீம் கோர்ட்டுக்குப் போனார்கள். 1973லிருந்து 1983 ஆம் ஆண்டு வரையில் 10 ஆண்டு காலத்திற்கு அந்த ரிட் மனுக்கள் எல்லாம் தேங்கிக் கிடந்து, சமீபத்தில் இரண்டு மாதத்திற்கு முன்னால். அக்டோபர் மாதத்தில் அரசாங்கத்திற்கு சாதகமாக தீர்ப்பு வழங்கியிருக்கிறார்கள். இதிலே இந்த அண்ணா தி.மு.க. அரசின் கொள்கை என்ன என்று ஆளுநர் எதுவும் குறிப்பிடவில்லல. சுப்ரீம் கோர்ட்டில், தமிழ்நாட்டில்தான் பஸ்களை முழுமையாக தேசியமயமாக்கியிருக்கிறார்கள் தமிழக அரசு பஸ்களை தேசியமயமாக்கியதைத் தொடர்ந்து இந்த ரிட் மனுக்கள் வந்திருக்கின்றன: ஒரு சமுதாயத்தில் "One of the planks of building an egalitarian society, in order to achieve socio economic emancipation is the policy of nationalisation of industries, Easy, cheap and dependable transport is a prime social necessity; no State has been able to achieve this goal so far by a full fledged nationalisation". என்று தீர்ப்பு வழங்கியிருக்கிறார்கள். பஸ்களை தேசியமயமாக்கியது செல்லுபடியானது, முறையானது என்று சொல்லியிருக்கிறார்கள். அது மட்டுமல்ல, மிகவும் நம்பக்கூடியது. அதனுடைய முதல் படியாக பேரறிஞர் அண்ணா அவர்களைத் தொடர்ந்து, டாக்டர் கலைஞர் அவர்கள் பஸ்களை தேசியமயமாக்கும் கொள்கையைச் செயல்படுத்தினார்கள். அதுசம்பந்தமான ரிட் மனுக்களை விசாரித்து, தீர்ப்பளித்து, இப்போது நமக்கு வழிவிட்டிருக்கிறது. ஆகவே பஸ்களை தேசியமயமாக்கும் கொள்கை பற்றி ஆளுநர் அறிக்கையில் எதுவுமே குறிப்பிடாமல் இருப்பது என்னைப்போன்றவர்களுக்கு மெத்த வேதனையாக இருக்கிறது.

அண்ணா தி.மு.க. என்று பெயரை வைத்துக்கொண்டு அண்ணா அவர்களின் சின்னத்தை சொடியிலே போட்டுக்கொண்டு. அண்ணாவினுடைய கொள்கையைப் பின்பற்றாமல் இருப்பது கண்டிக்கத்தக்கது என்று குறிப்பிட விரும்புகிறேன்.

அதைப்போன்று சென்னை மாநகராட்சிப் பிரச்சனை. ஒரு காலத்தில் தமிழகத்தின் தலைநகரான சென்னை சிங்கார சென்னை என்று சொல்லப்பட்டது. உங்களுடைய ஆட்சியில் அந்த சிங்கார சென்னை போய் இன்றைக்கு சீரழிந்த சென்னை நகரம் என்று சொல்லக்கூடிய அளவுக்கு எங்கு பார்த்தாலும் சாக்கடை துர்நாற்றம், எங்கு பார்த்தாலும் சுகாதாரக் கேடு, எங்கு பார்த்தாலும் மேடு பள்ளம் என்று சொல்லக்கூடிய அளவுக்கு தமிழகத்தின் தலைநகரம் மிகவும் மோசமாக காட்சி அளிக்கிறது.

தெருவெல்லாம் ஓடுகின்ற சாக்கடை நீரை கட்டுப்படுத்த வடிகால் திட்டத்தை விரைவிலே அமைக்காவிட்டால் இன்னும் ஐந்தாண்டு காலத்தில் சென்னை மாநகரமே அதில் மூழ்கிவிடக் கூடிய அபாயத்தில் இருக்கிறது என்று ஒரு என்ஜினீயர் சுட்டிக் காட்டியிருப்பதை இங்கே எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

தெருவிலுள்ள வடிகால்களுக்கு மூடி இல்லை. அதனால் பெரிய தீமைகள் ஏற்படுகின்றன. இரண்டு மாதங்களுக்கு முன்னால் ஒரு பெரிய மாடு ரோட்டில் இருக்கிற குடிநீர் வடிகால் வாரியப் பள்ளத்தில் விழுந்து இறந்துவிட்டதை நாங்கள் கண்டு இறந்துபோன அந்த மாட்டை வெளியே எடுக்க முடியாது அளவுக்கு சென்னை மாநகரில் சுகாதார நிலை மிகவும் மோசமாக இருக்கிறது.

அதைப்போன்று பேசின்பிரிட்ஜ் பக்கத்தில் ரோடு ஒன்றை நான்கு ஆண்டு காலமாகப் போட்டுக் கொண்டிருக்கிறார்கள். எழும்பூர், பெரம்பூர், புரசவாக்கம் ஆகிய மூன்று ரோடுகளை இணைக்கும் 'குக்ஸ் ரோடு' கடந்த நான்கு ஆண்டுகளாகப் போடப்பட்டு வருகின்றது. இன்னும் போட்டு முடியவில்லை.

பேசின்பிரிட்ஜ் அனல் மின் நிலையத்திலிருந்து வருகிற புகை கரி பற்றி சொல்லி முடியவில்லை. சுற்றுச் சூழல் மாசு கட்டுப் படுத்துதல் துறை அமைச்சர் என்று ஒரு அமைச்சரை வைத்திருக் கிறோம். அந்த அமைச்சரிடத்திலே கூட சட்டமன்றத்திலே பலமுறை தெரிவித்திருக்கிறோம். அந்த அனல் மின் நிலையத்தி லிருந்து சாம்பல் புகை. கரித்தூள் வெளியே வந்து. அதனால் 9 வயது, 10 வயது குழந்தைகள் காசநோயால் பாதிக்கப்பட்டு மோசமான நிலைமையடைந்து. பலர் இறந்துதிருக்கக்கூடிய நிலையை எல்லாம் சுட்டிக்காட்டியிருக்கிறோம்.

அதைப்பற்றியும் இந்த ஆளுநர் அறிக்கையிலே சென்னை நகரத்தை பற்றி ஒன்றுமே குறிப்பிடவில்லை. எந்தத் தெருவிலும், எந்த வீதியிலும்வாரம் விட்டு வாரம் அனைத்து விளக்குகள் எரிய வில்லை சென்னை நகரத்திலுள்ள முக்கியமான தொகுதியிலே அங்கத்தினராக இருக்கக்கூடிய நான் பல்வேறு முறை அந்தப் பிரச் சினையை சொல்லியும். நான் அன்புக் கூர்ந்து மீண்டும் மாற்றுத் தலைவர் அவர்களின் மூலம், ஆளுங்கட்சியினருக்கு வேண்டுகோள் விடுக்கிறேன். வெகு சீக்கிரத்தில் அந்த என்ஜினீயர், எச்சரித் தாரே குடிநீர் வடிகால் வாரியத்தின் இன்ஜினியர் சாக்கடைநீர் பிரச்சினையிலே அரசாங்கம் கவனக்குறைவாக நடந்து கொண் டால்,இன்னும் 5 ஆண்டுகளில் சென்னை நகரமே சாக்கடைகளில் மிதக்கும் என்று அந்த அபாயத்தை நீக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.



அதோடு மட்டுமல்ல. உலக வங்கி உதவியோடு சென்னை மாநகராட்சிக்கு ஒதுக்கப்பட்ட 100இலட்சம் ரூபாய்திட்டத்தைப் பயன்படுத்த முடியாமல் சரெண்டர் செய்யப்பட்டதை ஆடிட்டர் குறிப்பு, தணிக்கைக் குறிப்பு கண்டிக்கிறது. அதுபோல் இன்னும் 500 இலட்சம் ரூபாய் குடிநீர் வடிகால் வாரியத்திற்காக ஒதுக்கினார்கள். அதையும் சரியாகப் பயன் படுத்தாத காரணத்தால் அதையும் மீண்டும் சரெண்டர் செய்யக் கூடிய சூழ்நிலையில், மாநகராட்சிக்காக ஒதுக்கப்பட்ட பணத்தை குடிநீர் வடிகால் வாரியத்திற்காக ஒதுக்கப்பட்ட பணத்தை. ஆக 100 இலட்சம் ரூபாய் சரெண்டர் ஆகிறது, 500 இலட்சம் ரூபாய் சரெண்டர் ஆகிறது. இப்படி ஒதுக்கப்பட்ட் பணங்கள் செலவழிக்கப்படாமல் திருப்பி அனுப்பப்பட்டால், சென்னை நகரம் எப்படி சீர்திருத்தம் அடையும்? சென்னை நகரம் எப்படி சுத்தம் அடையும் என்பதை நான் இங்கே பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** எங்களை இழுக்காமல் இருந்தால் நான் ஒன்றும் பேசமாட்டேன். (குறுக்கீடு) நீங்கள் பேசுவதால் தான் நான் திரும்பப் பேசவேண்டியிருக்கிறது. (குறுக்கீடு)

மாண்புமிகு மன்றத்தினுடைய தற்காலிக தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சோமு அவர்கள் இங்கே சென்னை மாநகராட்சியுடைய சீரழிந்த முறை என்ற தலைப்பிலே பேசிக் கொண்டிருக்கிறார்கள். நான் பணிவன்போடு மாண்புமிகு உறுப்பினர் அவர்களை கேட்டுக்கொள்வது—திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே 1973–லே சென்னை மாநகராட்சி கலைக்கப்பட்டது. கலைக்கப்பட்டதனுடைய நோக்கமே அன்று ஏற்பட்ட மஸ்டர் ரோல் வழக்கு-ஏறத்தாழ 8 கோடி ரூபாயை அங்கு பதவியிலே இருந்தவர்கள், அலுவலர் களாக வேலைபார்த்தவர்கள், மக்களிடத்திலேயிருந்து அடித்த கொள்ளை ரூ.8 கோடி. ஆகவே அப்போதே சீரழிந்த சென்னையாக மாறிவிட்டது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகின்றேன்.

அடுத்ததாக உலகவங்கி கொடுத்த கடனை நாம் சரியாக செலவு செய்யவில்லை என்ற குறிப்பினைச் சொன்னார்கள். நகராட்சிக்குக் கொடுத்த பணத்தை நாங்கள் சரியாக செலவு செய்யவில்லை என்பதனை குறிப்பிட்டுச் சொல்லவேண்டும். உலகவங்கிடமிருந்து வாங்கிய பணத்தை மொத்தமாக நீங்கள் செலவு செய்யாமல் சரெண்டர் செய்திருக்கிறீர்கள் என்று சொல்வது சரியாக இருக்கமுடியாது என்பதை இந்தநேரத்திலே அவர்களைக் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். (குறுக்கீடு)

திரு. என். வி. என். சோமு : அமைச்சர் அவர்களிடம் பணிவன்போடு தெரிவித்துக்கொள்வது கண்ட்ரோலர் அண்டு ஆடிட்டர் ஜெனரல் அறிக்கையை அமைதியாக படித்துப் பார்த்தால், நான் சொன்ன விவரங்கள் எல்லாம் அவருக்கு அதிலே கிடைக்குமென்று தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு) 1973—ஆம் ஆண்டு கலைக்கப்பட்டது என்று சொன்னால், 11 ஆண்டு காலமாகிறது. அந்த மஸ்டர் ரோல் ஊழலில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த 5 மாநகராட்சி உறுப்பினர்கள் குற்றஞ்சாட்டுப்பட்டு, தண்டிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவரவிரும்புகிறேன். அவர் சொன்ன 8 கோடி ரூபாயில் அவர்களுக்கும் பங்கு உண்டு என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே. அந்த மஸ்டர் ரோல் வழக்கிலே, ஈடுபட்டவர்களே திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த உறுப்பினர்கள் என்று ஜட்ஜ்மெண்டிலே கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் அதற்கும் சம்பந்தம் இல்லை என்பதை தெரிவிக்கக் கடைமப்பட்டிருக்கிறேன்.

திரு. என். வி. என். சோமு : மாண்புமிகு அமைச்சர் எப்போதுமே உண்மைக்குப் புறம்பான தகவல்களைச் சொல்லி மாட்டிக் கொள்வதிலே சமர்த்தர்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: உண்மைக்கு மாறானதல்ல. தயவு செய்து தீர்ப்பை படித்துப் பார்க்கவேண்டும். தீர்ப்பை படித்தற்குப் பின்னாலே தயவு செய்து இங்கே பேசுங்கள்.

திரு. அ. ரகுமான்கான்: பாயிண்ட் ஆப் ஆர்டர். (குறுக்கீடு ஒரு முக்கியமான பிரச்சினை என்னவென்று கேளுங்கள். நாங்கள் அமைதியாகக் கேட்கிறோம். (குறுக்கீடு)

(பிற்பகல் 1-40)

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: மாண்புமிகு தலைவர் அவர்களே, நான் உங்களிடம் கேட்டுக்கொள்வது எல்லாம், இப்போது என். வி. என். சோமு அவர்கள் இங்கே பேசிக்கொண்டு இருக்கிறார்கள். ஆகவே அவர்கள் தான் இங்கே பேசவேண்டும். எனக்கும் அவருக்கும்தான் சர்ச்சையே தவிர, இங்கே இருக்கக் கூடிய மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கானுக்கும் எனக்கும் அல்ல. தயவு செய்து இதைப் புரிந்துகொள்ளுங்கள். இரண்டாவது என். வி என். சோமு அவர்கள் இந்தப் பிரச்சனையை சரியாக அணுகவில்லை என்பதோ, அல்லது இந்தப் பிரச்சனை தெரியவில்லை என்ற காரணத்திற்காகவோ,



ரகுமான்கான் அவர்கள் எழுந்து நிற்கிறாரோ என்ற கேள்வியை தான் நான் கேட்கிறேன். அதுமட்டுமல்ல. நான் இன்னொன்றையும் சொல்லவிரும்புகிறேன். திரு. என். வி. என். சோமு அவர்கள் ஒரு சிறந்த வழக்கறிஞர். ஏன் என்று சொன்னால், எனக்கு அவரை நன்றாகத் தெரியும். நானும் அவரும் ஒன்றாகப் படித்தவர்கள், தயவுசெய்து அதை கவனத்திலே கொள்ளவேண்டும். ஆகவே என். வி. என். சோமு அவர்கள் சொல்வது சரியில்லை என்று சொன்னால், நான் சொல்வதும் சரியில்லை என்று முடிவிற்குக் கூட நீங்கள் வந்துவிடலாம், ஆகவே தயவுசெய்து என். வி. என். சோமு அவர்கள் பேசுவதை விட்டுவிட்டு, ரகுமான்கான் அவர்கள் எப்படி இந்த நேரத்தில் பேசுவது சரியாக இருக்கும்,(குறுக்கீடுகள்

திரு. என். வி. என். சோமு: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் சட்டமன்றத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் செயலாளர், என்ற உரிமையில் அவருக்கு இதிலே தலைவிட்டுப் பேசுவதற்கு உரிமையிருக்கிறது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு).

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: செயலாளர் உரிமை எல்லாம் இங்கே கிடையாது. முன் வரிசையிலே இருப்பவர்கள் வேண்டுமானால் பேசலாமே தவிர, அங்கே இருப்பவர்கள் பேச முடியாது.

திரு. அ. ரகுமான்கான்: ஒரு பாயின்ட் ஆப் ஆர்டர்....

மாண்புமிகு மாற்றுத் தலைவர்: (திரு. வே. இரா. ஜெயராமன்) உறுப்பினர் திரு. சோமு அவர்கள் தொடர்ந்து பேச வேண்டும்.

திரு. அ. ரகுமான்கான்: தலைவர் அவர்களே, நாளைக்கே, பிரிவிலெஜ் மூவ் பண்ணுகிறேன். சொல்லட்டும், அகில இந்திய அண்ணா தி.மு.க. சம்பந்தப்படவில்லை, தீர்ப்பிலும் இல்லை என்று ஸ்டேட்மெண்ட் கொடுக்கவேண்டும். (குறுக்கீடு).

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இங்கே வந்து கட்சி செயலாளர் என்றெல்லாம் கிடையாது. இங்கே நாம் எல்லோரும் உறுப்பினர்கள் தான். ஒரு உறுப்பினருடைய பேச்சிலே ஏதாவது சந்தேகம் என்றால்தான் பாயிண்ட் ஆர் ஆர்டர் கேட்கவேண்டும். (குறுக்கீடு). உறுப்பினர் சோமு அவர்கள் சீக்கிரம் பேச்சை முடிக்கவேண்டும்.

திரு என். வி. என். சோமு: துணைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசும்போது, அகில இந்திய அண்ணா தி.மு.க.வைச் சேர்ந்தவர்கள் யாரும் தண்டிக்கப்படவில்லை என்றார்கள். நான் வேண்டுமானால் பெயரைச் சொல்கிறேன். லோகநாதன், ஒரு மாநகராட்சி மன்ற உறுப்பினர். எம். எஸ் ராமச்சந்திரன், ஒரு மாநகராட்சி மன்ற உறுப்பினர். (குறுக்கீடு) கேட்கிறார்கள், அதனால் சொல்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: நீங்கள் வந்து as a lawyer you are speaking, and as a Lawyer I am standing here. நான் தீர்ப்பைப் பற்றித் தான் சொல்கிறேன்.

Mr. DEPUTY SPEAKER: I am not sitting here as a Judge. நீங்கள் இரண்டு பேரும் லாயராக இருந்தால் நான் ஜட்ஜாகத் தான் இருக்கவேண்டும்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: துணைத் தலைவர் அவர்களே, இங்கே நான் சொல்வதெல்லாம், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு வழக்கறிஞராக இருந்து பணியாற்றிக் கொண்டிருப்பவர். அதேபோல் நானும் ஒரு வழக்கறிஞராக பணியாற்றியவன் என்ற காரணத்திற்சாகத்தான் அதைச் சொன்னேனே தவிர, வழக்கறிஞர்கள் மட்டுமே பேசவேண்டும் என்ற நியதி இல்லை. நான் குறிப்பாகக் கேட்டுக்கொள்வது, அவர்கள் தீர்ப்பைப் பார்க்கவேண்டும். ஏன் என்றால். 5 பேர்கள் இதிலே சேர்க்கப்பட்டிருக்கிறார்கள் என்று சொன்னாலும், யார் மீது குற்றச்சாட்டு கூறப்பட்டிருக்கிறது, நிருபிக்கப்பட்டு இருக்கிறது என்பதை தயவுசெய்து அவர்கள் தீர்ப்பை படித்ததற்குப் பிறகு பேசினால் நல்லது.

திரு என் வி. என். சோமு: நான் நேரடியாகவேக் கேட்கிறேன் அண்ணா தி.மு.க.வைச் சேர்ந்த மாநகராட்சி மன்ற உறுப்பினர்கள் இது தொடர்பாக கைது செய்யப்பட்டு வழக்கு போடப்பட்டது உண்மையா? இல்லையா? அமைச்சர் சொல்லட்டும். உண்டா? இல்லையா? (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: எல்லோரும் உட்காருங்கள்.

THIRU N.V.N.SOMU: Mr. Deputy Speaker Sir, I am stressing my point that the Hon'ble Minister should reply in a straightaway mann r whether the/5 AIADMK Councillors have been charge-sheeted or not. This is my straight question to the Minister.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்; சார்ஜ் ஷீட் 72லேயே போட்டாகிவிட்டது. லோகநாதன் விடுதலை ஆகிவிட்டார். லோகநாதனுக்கு வக்கீலே நான் தான்.



திரு. என் வி. என். சோமு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் சொல்ல வந்தது. மாநகராட்சி மஸ்டர் ரோல் ஊழலை சம்பந்தப்பட்ட மட்டிலே, எல்லாக் கட்சிகளுக்குமே. இங்கே யார் யார் இடம் பெற்றிருக்கிறார்களோ, அவர்கள் எல்லோரும் அதில் ஈடுபட்டிருக்கிறார்கள். ஆகவே, திராவிட முன்னேற்றக் கழகம் மட்டும் அல்ல... (கூச்சல் குழப்பம்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வழக்கு எந்தக் காலத்திலேயோ நடந்து முடிந்து விட்டது அதற்குப் பிறகு யார் யாரோ வந்து விட்டார்கள். எல்லோரும் உட்காருங்கள் சோமு சீக்கிரம் நீங்கள் பேசி முடித்துக் கொள்ளுங்கள்,

திரு. என். வி. என். சோமு: நான் பொதுவுடைமை கட்சி உறுப்பினர்களையோ, மற்றவர்களையோ சொல்லவில்லை. திராவிட முன்னேற்றக் கழகம். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த எல்லோருமே அதில் குற்றம் சாட்டப்பட்டது உண்டு. அதைத்தான் நான் வலியுறுத்திக் கூறினேன். (குறுக்கீடுகள்) இப்படி குறுக்கிட்டுக் கொண்டேருந்தால் என்னால் பேசுவதற்கு முடியாது. நமது மாண்புமிகு உதவிசபா நாயகர் அவர்களே, இதில் சம்பந்தப்பட்ட ஒருவருககு விடுதலை வாங்கித் தந்ததாக கூறியிருக்கிறார்கள்..... (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: சீக்கிரம் உங்கள் பேச்சை முடிக்கப் பாருங்கள்.

திரு என். வி. என். சோமு. ஆகவே நான் சொன்ன மற்றக் குற்றச்சாட்டுக்களை, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அன்பு கூர்ந்து ஆடிட் ரிப்போர்ட்டை வாங்கிப் பார்த்துத் தெரிந்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தாற்போல இந்த சத்துணவுத் திட்டம். சத்துணவு திட்டத்தினால் எவ்வளவு படிப்பு சத்திழந்து இருக்கிறது என்பதை மிகவும் வேதனையோடு கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். பள்ளிக் கூடங்களில் படிப்பே நடைபெறவில்லை. தட்டையும் கிண்ணத்தையும் தூக்கிக் கொண்டு பிள்ளைகள் பள்ளிக்கூடத்திற்கு வருகிறார்கள். படிப்புச் சொல்லிக் கொடுக்கக் கூடிய ஆசிரியர்களின் மீது இருப்பதை விடை குழந்தைகளுடைய விழிகள் எப்போது 12 மணியாகும் நமக்கு சோறுபோடுவார்கள் என்றே பார்த்துக் கொண்டிருக்கின்றன. அதைத் தவிர அவர்களுடைய கவனம் படிப்பிலே செல்லவில்லை. அது மட்டும் அல்ல. சத்துணவு திட்டத்திலே என்ன குற்றங் குறைகள் இருக்கின்றது என்று இங்கே கூட கேட்டார்கள். நான் உங்கள் அனுமதியோடு இதைப் படிக்க விரும்புகிறேன், **

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக் கிணங்க அகற்றப் பெற்றது.

128-271—16

என்று ஒரு பத்திரிகையிலே... — (மணியடிக்கப் பெற்றது

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இதை நீங்கள் முன் கூட்டியே என்னிடத்தில் காட்டி அனுமதி பெற்று பிறகு படித்திருக்க வேண்டும்

திரு. என். வி. என். சோமு: இப்போது காட்டித்தான் அனுமதி கேட்டேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர். இப்பொழுது காட்டினால் சரியல்ல. அது அவைக்குறிப்பில் ஏறாது.

திரு. என். வி. என். சோமு: நேற்று இங்கே பேசிய ஆளும் கட்சி உறுப்பினர் வின்செண்ட் அவர்கள் அமெரிக்க எழுத்தாளர் ஒருவர் எழுதிய புத்தகத்தை மேற்கோள் காட்டி பேசினார்.. (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர். திரு. ரகுமான்கான் அவர்கள், அவர்களுடைய இருப்பிடத்திற்கு சென்று உட்கார வேண்டும்.

திரு அ. ரகுமான்கான்: அவையில் பேசாமல் இருக்கும்போது எந்த இடத்தில் எந்த உறுப்பினர் பக்கத்தில் வேண்டுமானாலும் உட்காரலாம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர். நீங்கள் அவருடைய பக்கத்திலே உட்காரலாம். ஆனால் பேசாமல் ருக்க வேண்டும். பேசுவதாக இருந்தால், உங்கள் இடத்திற்கு வந்துவிட வேண்டும்.

திரு. என். வி. என். சோமு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நேற்றைய தினம் ஆளும் கட்சி உறுப்பினர் வினசெண்ட் அவர்கள் ஒரு மேற்கொள் காட்டி பேசும்போது கூட ஆளும் கட்சியினர் ஆர்ப்பரித்து, ஆரவாரித்தார்கள். ஆனால் நான் உண்மையைச் சொல்லும்போது மட்டும் ஏன் உடம்பில் எரிச்சல் வருகிறது. இதிலே திட்டவட்டமாகச் சொல்கிறார்கள்.

* * * *

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் அதை என்னிடம் முன்பே காட்டி அனுமதி பெறவில்லை....

திரு. என். வி. என். சோமு: இப்போது காட்டித்தான் அனுமதி கேட்டேன்.

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.





Mr. DEPUTY SPEAKER: I can't apply my mind now அதை நான் அனுமதிக்கவில்லை. அது அவைக்குறிப்பில் ஏறாது.

(பிற்பகல் 1–50)

திரு. என். வி. என். சோமு: நேற்று புத்தகம் இல்லாமலே திரு. வின் சென்ட் பேசினார் . இன்றைக்கு நான் புத்தகத் த வைத்துக் கொண்டு பேசுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்; அவர் என்னிடம் காட்டினார். என்ன சொல்லப்போகிறேன் என்பதை என்னிடம் சொல்லிவிட்டுப் போனார். தங்கள் முன் கூட்டியே என்னிடம் சொல்லவில்லை, அதைக் கொடுக்கவில்லை. (குறுக்கீடுகள்)

திரு.என். வி. என். சோமு: இப்போது கொடுக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர். இப்போது அது முடியாது திடீர் திடீரென்று பார்க்க முடியாது.

திரு. என், வி. என். சோமு: இதிலே இருக்கிற படத்தைப் பாருங்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: படம் நன்றாகத்தான் இருக்கிறது.

திரு. என். வி என். சோமு: படமும் நன்றாக இருக்கிறது. தலைப்பும் அழகாக இருக்கிறது. சத்துணவுத் திட்டத்திற்கு மற்றத் துறைகளிலிருந்து தங்களுடைய துறைகளைக் கவனிக்காமல் —லட்சம் லட்சமாக பணத்தை வாரி வாரி வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். அதனால் மற்றத் துறைகளின் முன்னேற்றப் பணிகள், திட்டங்கள் எல்லாம் தடைப்படுகின்றன. நான் ஆதாரத்தோடு சொல்கிறேன். சத்துணவுத் திட்டத்திற்கு டாமின் நிறுவனம் 1981–82 ஆம் ஆண்டில் 1 லட்சம் ரூபாய் கொடுத்து இருக்கிறார்கள். 1982–83 ஆம் ஆண்டில் 2 லட்சம் ரூபாய் கொடுத்து இருக்கிறார்கள். அதற்கு முன்பு 1 லட்சத்து 53 ஆயிரம் ரூபாய் கொடுத்து இருக்கிறார்கள். அதற்கு முன்னதாக 2 லட்சத்து 50 ஆயிரம் கொடுத்து இருக்கிறார்கள். இப்படி ஒரு துறை சத்துணவுத் திட்டத்திற்காக என்று லட்சக்கணக்கிலே பணத்தைக் கொடுத்துக் கொண்டிருந்தால், தாரைவார்த்துக் கொண்டிருந்தால் அந்தத் துறையினுடைய வேலைகள் என்ன ஆகும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். ஜகந்நாத் மிஸ்ரா பீகார் முதலமைச்சராக இருந்தவர், தினசரி 5 லட்ச ரூபாய்..

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்தரராஜன்: பல்வேறு அட்டானமஸ் நிறுவனங்கள் சத்துணவுத் திட்டத்திற்கு கரயபட்ட கணக்கை மாண்புமிகு உறுப்பினர் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அந்த நிறுவனத்தின் லாபத்திலிருந்து கொடுக்கிற பணம். அப்படித் தருவதன் மூலமாக மத்திய அரசுக்கு வரியாகப் போவது தடுக்கப்படுகிறது. அதனாலே நம் நாட்டிற்கு லாபமே தவிர நட்டமல்ல.

திரு. என். வி என். சோமு: அதேபோன்று சத்துணவுத் திட்டத்திற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் பல்வேறு விதமாக பயன்படுத்தப்படுகிறார்கள் என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ** (கூச்சல்—குழப்பம்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கையில் இருப்பது என்ன? முதலில் அதை என்னிடம் காட்டவேண்டாமா?

திரு. என். வி. என். சோமு : இதோ காண்பிக்கிறேன் (அதை திரு. இரெ. இராசமாணிக்கம் அவர்கள் பேரவைத்துணைத் தலைவரிடம் காண்பிக்கிறார்) ஆகவே சத்துணவு என்ற பெயராலே நடக்கக்கூடிய கொள்ளைகளைத் தான் நாங்கள் கண்டிக்கிறோம். சத்துணவு திட்டத்தின் மூலம் ஏற்படக்கூடிய பலன்களை நாங்கள் எப்போதும் கண்டிக்கவில்லை என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல் திருமதி சந்திரலேகா அவர்கள் மதுரை மாவட்ட ஆட்சித் தலைவராக இருக்கிறார்.**

திரு. இரா. முத்தையா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்களுடைய மாவட்ட ஆட்சித் தலைவர்** என்கிற ஆதாரம் இல்லாத குற்றச்சாட்டை மாண்புமிகு உறுப்பினர் இங்கே தெரிவித்து இருக்கிறார்கள். இத்தகைய ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளை இந்த அவையில் சொல்லக் கூடாது என்று முன்பே நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். இப்போது இதை அனுமதிக்கிறீர்களா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: என்னிடம் காட்டிய காப்பி போட்டோஸ்டேட் காப்பி, கையெழுத்து இல்லை.

THIRU N. V. N. SOMU. I take the responsibility for that

Mr. DEPUTY SPEAKER. You shonld have Produced the original. We will have to follow certain rules. Photos'at copy is nos admissible. (கூச்சல் குழப்பம்) கையெழுத்து இல்லை. ஆகவே இதை அவைக் குறிப்பிலிருந்து நீக்குமாறு உத்திரவிடுகிறேன்.

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



திரு. ப. சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ** (கூச்சல்—குழப்பம்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : என்னுடைய அனுமதி இல்லாமல் பேசியதால் இதையும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கும்படி உத்தரவிடுகிறேன்.

திரு. என். வி. என். சோமு : இதற்கெல்லாம் ஒரே வழி மக்கள் என்றைக்கு உங்களை மந்திரி சபையிலிருந்து நீக்குகிறார்களோ அன்றைக்கு தான் இந்த நீக்குகின்ற பிரச்சினை முடியும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நம்மை நாமே நீக்கி கொள்ளலாம் என்று சொன்னால் எப்படி.?

திரு. என். வி. என். சோமு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அடுத்த பிரச்சினை இலங்கை பிரச்சினை. நமமுடைய அரசு இந்த இலங்கைப் பிரச்சினையில் எவ்வளவு வழ வழா கொழ கொழா என்று இருக்கிறது ** என்பதற்காக கவர்னர் உரையே சரியான எடுத்து காட்டு. (குறுக்கீடு) இதிலே ஆளுநர் உரையிலே எந்தப் பிரச்சினைப் பற்றிச் சொன்னாலும் நாளைக்கு முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்லப் போகிறார்கள். அவர்களுக்கு பதில் சொல்ல உரிமை இருக்கிறது. அமைச்சர் அவர்கள் தங்களுடைய கருத்துக்களை முதலமைச்சர் அவர்கள் மூலமாக சொல்லி வாய்ப்பை பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். குறுக்கிட வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்த ஆளுநர் உரையிலே இதற்கு முன் அனுமதி தேவையில்லை என்று கருதுகிறேன்—6 வது பக்கம் 9 வது பாராவிலே ஸ்ரீலங்காவில் உள்ள இந்திய வம்சா வழியினர் மீது குறிப்பாக தமிழர்கள் மீது அவிழ்த்துவிடப்பட்ட அரக்கத்தன மான வன்முறை நடவடிக்கைகளினால் தமிழர்கள் ஈவிரக்கமின்றி படுகொலை செய்யப்பட்டது தமிழ்நாட்டு மக்களிடையே கொதிப்பையும் தாங்கோணாத் துயரையும் ஏற்படுத்தியது. எவன் செய்தான்? இவ்வளவு அக்கிரமங்களையும் கற்பழிப்பதை. சிசுக்களை தூக்கி தரையில் மோதி சுக்கு நூறாக்கியது, குட்டிமணி, ஜெகன் விழிகளை பிடுங்கியது எவன் செய்தான்?

ஒரு வார்த்தை இருக்கிறதா? அவ்வளவு பயமா உங்களுக்கு? தமிழனை, தமிழர்களுடைய பெண்களை தாக்கியதை, மான பங்கம் செய்ததை சிங்கள வெறியர்கள் செய்தார்கள் என்று சொல்வதற்குக் கூட இந்த அரசுக்கு இவ்வளவு அச்சம் ஏன் என்று கேட்க ஆசைப்படுகிறேன். இதைவிட ஒரு பச்சை துரோகத்தை இந்த அரசு தமிழர்களுக்கு செய்ய முடியாது என்பதை நான் மிக பகிரங்கமாக குற்றம் சாட்ட விரும்புகிறேன்.

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. என். வி. என். சோமு அவர்களுக்கு கூற விரும்புகிறேன், இந்த அவையிலே இரு நாட்கள் முழுமையாக ஒதுக்கப்பட்டு எல்லா கட்சிக்காரர்களும் பேசி ஒரு 18 பிரிவைக் கொண்டு இருக்கிற தீர்மானத்தை போட்டு எவ்வளவு கண்டிக்க வேண்டுமோ அவ்வளவு கண்டித்து நான்கு, ஐந்து முறை சர்வகட்சித் தலைவர்கள் கூட்டம் கூட்டி பிறகு நிறைவேற்றி அனுப்பியிருக்கிறோம். ஒவ்வொரு தடவையும் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. கோடிட்டுக் காட்டினால் போதும். எந்த அளவுக்கு கண்டிக்கவேண்டுமோ அந்த அளவுக்கு கண்டித்து முடித்து ஆகிவிட்டது. ஆனால் அதற்கு பிறகு எடுக்கவேண்டிய நடவடிக்கைகளை இந்த அரசு முறையாக எடுத்து வருகிறது என்பதை பாதிக்கப்பட்டவர்களே பாராட்டியிருக்கிறார்கள். அதற்கு உரியவர்கள் போற்றி இருக்கிறார்கள். அதற்கு பிறகு அவருடைய கருத்தை சொல்வதைப் பற்றி எங்களுக்கு ஒன்றும் ஆட்சேபணை இல்லை. ஆனால் உண்மை நிலை வேறு.

(பிற்பகல் 2-00)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஆளுநர் உரை ** என்று சொன்னது நீக்கப்படுகிறது.

திரு. என். வி. என். சோமு : நான் சொல்லவில்லை.

திரு. ஆர். மணிமாறன் : ஆளுநர் உரை ** என்று ஆரம்பத்தில் என். வி. என். சோமு அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ** என்று சொல்வது ஆளுநரைப் பாதிப்பதாக இருக்கிறது என்று அர்த்தம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அது நீக்கப்படுகிறது.

திரு. என். வி. என். சோமு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, ஆளுங்கட்சி கொறடா நண்பர் மணிமாறன் சொல்வது போன்ற கருத்தை நான் சொல்லியிருந்தால் அதை நீக்குவதைப் பற்றி எனக்குக்கூட ஆட்சேபணை இல்லை. ஆனால் நான் இந்த அரசாங்கத்தைத்தான்** என்று சொல்கிறேனே தவிர, ஆளுநர் உரையைப் பற்றிச் சொல்லவில்லை என்பதை மீண்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இங்கே சொல்லும் பொழுது அம்மாதிரி வார்த்தைகளை ஏன் பேச வேண்டும்? அவைகளெல்லாம் நீக்கப்படுகின்றன.

---

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.





திரு. என். வி. என். சோமு: பேரவைத் துணைத் தலைவரவர்களே, இங்கே ஆளுநர் அறிக்கையிலே, அதை யார் செய்தார்கள், அந்த அக்கிரமத்திற்குக் காரணமானவர்கள் யார் என்று குறிப்பிடவில்லை என்பதுதான் என்னுடைய குற்றச்சாட்டு. அரசாங்கமும் மற்றக் கட்சிக்காரர்களும் எடுத்த முயற்சிகள் அவரவர்களின் வசதிக்கேற்றாற்போல், திறமைக்கேற்றாற்போல், சக்திக்கேற்றாற்போல் நடந்து வருகிறது. ஆனால் ஆளுநர் உரையில், சிங்கள வெறியர்கள் என்று ஏன் குறிப்பிடவில்லை என்றுதான் கேட்கிறேன்.

அமைச்சரவர்கள் ஐக்கிய நாடுகள் அவைக்குச் சென்று பேசினார்கள் என்பதற்காக வாண வேடிக்கைகள் நடந்தன, வரவேற்பு கொடுத்தார்கள். அது உங்கள் கட்சி விவகாரம், அதில் நான் தலையிடவில்லை, அமைச்சரவர்கள் ஐ. நா. மன்றத்தில் We confine ourselves only to the exte t of flow ot refugees from Sri Lanka இலங்கையிலிருந்து தமிழ் நாட்டிற்கு வருகின்ற அகதிகள் பிரச்சினைப்பற்றி மட்டும் நான் என்னுடைய பேச்சை வைத்துக்கொள்கிறேன், மற்றவற்றிலெல்லாம் நுழையவில்லை என்று ஐ. நா. அகதிகள் கமிட்டியிலே, பேசுகிறார்கள் இன்னும் பேசுகிறார் பாருங்கள். We neither criticise the policies of Sri Lanka nor criticise the actions cf the Government of Sri Lanka ஸ்ரீலங்கா அரசாங்கத்தின் நடவடிக்கைகளையோ, அதன் கொள்கைகளையோ நான் கண்டிக்கவில்லை. அதைப்பற்றி எதையும் பேசவில்லை என்று அமைச்சரவர்கள் ஐ. நா. சபை அகதிகள் கமிட்டிக் கூட்டத்திலே பேசினார்கள். இதோ என்னிடம் ''தமிழரசு'' பத்திரிகை இருக்கிறது. அதிலே நம்முடைய முதல்வரவர்களின் படத்தோடு இருக்கிறார்கள். இதில் அமைச்சரின் பேச்சையெல்லாம் போட்டார்கள். ஆனால் We confine only to the refugees problem என்று அமைச்சர் அவர்கள் பேசினார்கள், அதை மறைத்துவிட்டார்கள். எதிர்க்கட்சியினர் பேசினால் இருட்டடிப்பு செய்வார்கள் என்பது தெரியும். ஆனால் அரசாங்கப் பத்திரிகையிலே, அதை மறைத்து இருக்கிறார்கள் என்றால் குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்கிறது என்றுதான் விட்டுவிட்டார்கள். அதற்கு எவ்வளவு பெரிய ஆர்ப்பாட்டம், அரசாங்கச் செலவிலே அவர் சென்று வர வேண்டிய அவசியம் என்ன வந்தது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, ஒரேயொரு விளக்கத்தை மட்டும் குறிப்பிட விரும்புகிறேன். ஐ.நா. அவையின் அகதிகள் பற்றிய குழுவிலே அகதிகளைப் பற்றி மட்டும்தான் பேசவேண்டும். ஆகவே, அதோடு நான் நிறுத்திக் கொள்கிறேன் என்றாரே தவிர, மற்றயிடங்களில் ஸ்ரீலங்கா பிரதிநிதிகள் பேசும்பொழுது

உடனுக்குடன் ஏற்றவகையில் பதில் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, ஐ. நா. அவையிலே எந்த அளவிற்கு எடுத்து வைக்க வேண்டுமோ அந்த அளவிற்கு எடுத்து வைத்து, ஸ்ரீலங்காவைச் சேர்ந்த, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தமிழர்களின், இலங்கை வாழ் தமிழர்களின் பாராட்டைப் பெற்றிருக்கிறார்கள். யார் பாராட்ட வேண்டுமோ, யார் போற்ற வேண்டுமோ அவர்களது போற்றுதலையும், பாராட்டுதலையும் பெற்றிருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் பாராட்டியிருந்தால் மகிழ்ச்சி. ஆனால் நாங்கள் அதை எதிர்பார்க்க முடியாது, எதிர்பார்க்கவும் இயலவில்லை.

திரு. என். வி. என். சோமு : அப்படியானால் இலங்கைத் தமிழர்களுக்காகக் குரல் கொடுத்தவர் என்றும், கூழாங்கல்லை வைரமாக மாற்றிய புரட்சித் தலைவர் என்றும் கித்தாப்பு ஏன்?

அடுத்து தொழிலாளர் நலப் பிரச்சினை. சிம்சன் கம்பெனி ஏறக்குறைய மூன்று மாத காலமாக மூடப்பட்டிருக்கிறது.

திரு. மா. சின்னராசு: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே தவறான கருத்து இடம் பெறக்கூடாது என்பதற்காக நான் ஒரு விளக்கத்தைச் சொல்ல விரும்புகிறேன். மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்கள் ஐ. நா. சபையிலே பேசியவற்றில் உள்ள ஒரே ஒரு வார்த்தையை மட்டும் வைத்துக்கொண்டு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசிக்கொண்டு இருக்கிறார்கள். அமைச்சரின் பேச்சிலே தொடர்ந்து வருகின்ற வரிகளைப் பார்த்தால் உண்மை தெரியும். எனவே அந்த முழுப் பேச்சினையும் படிக்கத் தயாராக இருந்தால் அதைப் படிக்கலாம். அப்படி இல்லாவிட்டால் நான் படிக்கிறேன். At this point I must briefly refer to certain developments in our neighbourhood which threaten to give rise to a situation resulting in the involuntary flow of population. அதுதான் அகதிகள் பற்றிச் சொல்கிறார். The Distinguished Foreign Minister of Sri Lanka in his address to the General Assembly, in the general debate, had described the recent event in his country and had commented in a forthright manner on the outlook of violence in which the Tamil minority underwent untold sufferings. As the Foreign Minister of Sri Lanka indicated there is a category of Tamils in Sri Lanka who have been there for centuries. There is also another category of Tamils from India who went to Sri Lanka in the last century, A large number of these settlers have not yet been given Sri Lanka Citizenship. கண்டனத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். அது பின்னால் வருகின்றது. (குறுக்கீடு) வெளிநாட்டு அமைச்சருக்குப் பதில் சொல்கின்றபோது சொன்னார்கள். Following the tragic eveuts of July 1983, the Prime Mtnister of India offered her good offices to heip in the process of rebuilding confidence and resuming a dialogue between the communities and this offer has been accepted by the President of Sri Lanka. As has been stated categorically by our Prime Minister, Inc ia does nct intervene in the internal affairs of Sri Lanka என்று அதைச் சொல்கிறார். அதை



சுட்டிக்காட்டிச் சொல்கிறாரே தவிர அவர் ஏதோ அந்த வார்த்தையை மட்டும் சொன்னார் என்று சொல்வது தவறானது. அதற்குப் பிறகு அவர் இந்த விவாதத்திலே பங்கு கொண்டு பேசும் போது தொடர்ந்து அதை மறுத்து இருக்கிறார். எனவே, அரை குறையாகச் சொல்லி இந்த அவையிலே பேசக் கூடாது. அமைச்சர் அவர்கள் ஐ.நா. மன்றத்திலே பேசிய அனைத்தையும் பற்றிய முழு அறிக்கை இருந்தாலொழிய அவர் பேசக்கூடாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான்: மன்றத்தின் துணைத் தலைவர் அவர் களே, சகோதரர் ஆங்கிலத்திலே படித்தார்கள். ஆனால் இங்கே ஆங்கிலம் தெரியாத சட்டமன்ற உறுப்பினர்களும் இருக்கிறார்கள். ஆகவே எனக்குத் தெரிந்த ஆங்கிலத்தை வைத்து நான் புரிந்து கொண்டது என்னவென்றால், ஸ்ரீலங்கா பிரச்சினையிலே திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் இதுவரை எடுத்த நடவடிக்கைகளைப் பற்றித்தான் சொல்லியிருக்கிறார் என்ப தாகும். அதாவது அகதிகள் பிரச்சினைக்கு என்ன காரணம் என்பதைச் சொல்லி இருக்கிறாரே தவிர, அதிலே வேறு என்ன இருக்கின்றது?

திரு. என். வி. என். சோமு : துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சின்னராசு அவர்கள் கேட்டார்கள். எனவே அந்த பாரகிராஃபை நான் முழுமையாக அவருக்கு படிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இப்படியே போய்க் கொண்டிருந்தால் இதற்கு ஒரு முடிவே வராது.

திரு. என். வி. என். சோமு : மாண்புமிகு அமைச்சர் பேசு கிறார் ஐ. நா. சபை அகதிகள் கூட்டத்தில் "we confine ourselves only to the extent of flow refugees from Sri Lanka." அதாவது 'நாங்கள் அகதிகள் பிரச்சினையைப்பற்றி மட்டும்தான் பேச வந்திருக் கிறோம், என்று சொன்னார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அவை முன்னவர் அவர்கள் சொன்னார்கள். அந்தக் கமிட்டியிலே அதைப்பற்றித் தானே பேச முடியும் என்று. ஆகவே இங்கே பேசுவது மாதிரி எல்லாம் அங்கே பேச முடியாது.

திரு. என். வி. என். சோமு : துணைத்தலைவர் அவர்களே, நான் ஏதோ மறைத்துவிட்டேன் என்று சொல்கிறார்கள் அல்லவா? ஆகவே நான் முழு பாரகிராஃபையும் படிக்கிறேன். We neither criticised the policies of Sri Lanka nor criticised the action of the Government of Sri Lanka. In fact, even in my intervention, I had made it ciear that we do not propose and we do not intend to inrerfere in the internal affairs of Sri Lanka. அதாவது இலங்கையி னுடைய உள்நாட்டு விவகாரத்திலே நான் தலையிட விரும்ப வில்லை என்பதைத் திட்டவட்டமாகத் தெரிவித்துக்கொள்வதாக ஐ.நா. சபை அகதிகள் கூட்டத்தில் சொல்லி இருக்கிறார்

(பிற்பகல் 2-10)

என்னுடைய பாய்ன்ட் அதுவல்ல. தமிழரசு பத்திரிகையில் எல்லா பாராவும் வந்திருக்கிறது. இந்தக் குறிப்பிட்ட ஒரு பாரா மட்டும் ஏன் வரவில்லை என்பதுதான் என்னுடைய கேள்வியே தவிர வேறில்லை என்பதையும் இங்கே நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மூன்று மாத காலமாக மூடியிருக்கிறது சிம்சன் தொழிற்சாலை. சென்னையிலே பருவ மழை பொய்த்தாலும் பொய்த்து விடும், ஆனால் 3 ஆண்டுகளுக்கொரு முறை சிம்சனிலே வேலை நிறுத்தம் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டு வருகிறது. இது தொழிலாளர் அரசு என்று சொல்கிறார்கள். அங்கே வேலை நிறுத்தம் நடைபெறுகிறபொழுது, தொழிற் சங்கக் கட்டுப் பாட்டை மீறி, தொழிற்சங்கத் தலைவர்களாக இருப்பவர் களுக்கு எதிராக, முதலமைச்சர், பிரச்னையைத் தீர்க்காமல், அதற்கு ஒரு முடிவு கட்டாமல், எல்லோரும் உள்ளே செல்லுங்கள் என்று சொன்னவுடன் ஒரு குறிப்பிட்ட சாரார் உள்ளே செல் கிறார்கள். அவர்களுக்குப் போலீஸ் பாதுகாப்பு, இப்படி ஜனநாயக முறையிலே நடக்கும் ஒரு வேலை நிறுத்தத்தை உடைக்கக்கூடிய ஒரு கேவலமான நிலைக்கு முதலமைச்சர் தன்னை தாழ்த்திக் கொள்ளலாமா என்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். 3 மாத காலமாக அங்கே வேலை நிறுத்தம். 'நோ ஒர்க், நோ பே'' மாதம் ரூ. 1,000 சம்பளம் என்றால், ரூ. 3,000 போய்விடும். இப்பொழுது ஒப்பந்தத்தின் ரூ. 3,000 வந்தால் கூட ரூ. 3,000-ஐ இழந்து தொழிலாளர்கள் என்ன செய்வார்கள், ஆகவே, இதற்கு ஒரு நிவாரணம் அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தொழிலாளர் நல அமைச்சர் பி.அன்ட் சி. மில்லில், பொங்கலுக்கு முன்தினம் தொழிலாளர்களுக்கு ரூ. 50 தருகிறார். பொங்கலோ பொங்கல் என்று கூறுகிறோம், திராவிடர் திருநாள் என்கிறோம், தமிழர் திருநாள் என்கிறோம். ஆனால் அந்த ரூ. 50-ஐ வைத்துக் கொண்டு அந்த பி.அன்ட் சி. தொழிலாளி என்ன செய்வான்? அதை அமைச்சர் பரிந்துரைக்கிறார். ரூ. 50 வாங்க மாட்டோம் என்று தொழிலாளர்கள் சொல்கிறார்கள். பி.அன்ட்.சி. ஆலை பொங்கலன்று மூடப்பட்டு, அது இன்னும் திறக்கப்படவில்லை.

அதே போல நெல்லிக்குப்பம் சர்க்கரை ஆலை மூடப்பட்டிருக் கிறது. அதைப் பற்றியும் அரசாங்கம் எந்தவிதமான கவலையும் இல்லாமல் இருக்கிறது. எல்லா தொழிலாளர்களும் 6-ஆம் தேதி கோட்டைக்கு வருகிறார்கள், அமைச்சர்களைப் பார்ப்பதற்கு. 24 மந்திரிகள் இருக்கிறார்கள். கொச்சையாகச் சொல்ல வேண்டு மென்றால் 2 டஜன் மாண்புமிகு அமைச்சர்கள் இருக்கிறார்கள்.



ஒரு மந்திரிகூட அன்றைக்குக் கோட்டையிலே இல்லை. ஊர்வலமாகக் கொட்டுகின்ற மழையிலே கோட்டைக்கு வருகி றார்கள், ஒரு அமைச்சர் கூட இல்லை. இதுதான் பாட்டாளி களை மதிக்கின்ற பண்பா? இதுதான் தொழிலாளர்களுக்குக் கை கொடுப்பதா? இதுதான் லேபர் பிராபிளத்தைத் தீர்க்கின்ற முறையா என்று நான் கேட்க ஆசைப்படுகின்றேன்.

நடிகர், நடிகைகளின் வீட்டுத் திருமணத்திற்குச் செல் கிறார்கள். செல்லட்டும். அங்கே 10 பேர் போனால், இங்கே 10 பேர் இருந்து, இல்லாவிட்டால் 24 பேர் சார்பாக, யாராவது ஒருவர் இருந்து அந்த மனுவைப் பெற்றிருந்தால் வாடிய தொழிலாளர்களுக்கெல்லாம் வான்மழை கண்டதைப் போல இருக்கிற ஒரு அரசாங்கம் பிறந்திருக்கிறதா? அரசாங்கத்தின் சார்பில் ஆறுதல் அளித்திருக்கிறார்கள், கவனிப்பதாகச் சொல்கிறார்கள் என்று எண்ணம் ஏற்பட்டிருக்கும். எதுவுமே சொல்லாவிட்டாலும் இலட்சக்கணக்கான பாட்டாளி மக்களை மதித்து மனுவைப் பெற்றுக் கொண்டார்கள் என்ற எண்ணமாவது ஏற்பட்டிருக்காதா? அதையும் செய்யவில்லை.

குடும்பத்திற்கு ஒருவருக்கு வேலை வாய்ப்புத் திட்டம் சென்ற ஆண்டு கொண்டு வந்தீர்கள். இன்றைக்கு ரூ. 15 கோடி ஒதுக்குவதாகச் சொன்னீர்கள். வேலை இல்லாத பட்டதாரி களுக்கு ரூ. 50 தருவதாகச் சொன்னீர்கள். ஆனால், அதற்காக ஒதுக்கப்பட்ட தொகை என்னவாயிற்று? மொத்தத்தில் 20,590 விண்ணப்பங்கள் வந்தன. அவற்றிலே 13,196 பேர்களுக்குத்தான் ரூ. 50 கொடுக்கப்பட்டிருக்கிறது. மற்றவர்களுக்குக் கொடுக்கப் படவில்லை; பணம் இல்லையென்ற காரணமா என்றால் இல்லை. அங்கே அந்த வேலை வாய்ப்பு அலுவலகத்தில் வேலை செய்ய போதுமான ஆட்கள் இல்லை. வேலையில்லாத பட்டதாரிகளுக்கு உதவிப் பணம் வழங்குகின்ற அந்த அலுவலகத்திலேயே போது மான ஆட்கள் இல்லை. அதன் காரணமாக ரூ. 76 இலட்சம் சரண்டர் செய்யப்பட்டிருக்கிறது என்பதை ஆடிட்டர் விளாசித் தள்ளியிருக்கிறார்கள், அமைச்சர் அவர்கள் பார்த்துக்கொள்ள வேண்டும்.

வெள்ளத்தினால், இதுவரையில் இல்லாத அளவிற்கு 36 பேர்கள் இறந்திருக்கிறார்கள். சென்னையில் 8 பேர்கள், வட ஆற்காட்டில் 3 பேர்கள், இராமநாதபுரத்தில் 5 பேர்கள், திருச்சியிலே 6 பேர்கள், நெல்லையிலே 1 என்று இவ்வாறு மொத்தம் 36 பேர்கள் செத்திருக்கிறார்கள். வெள்ள நிவாரணப் பணிகளைப் பார்க்க முதலமைச்சர் அவர்கள் நேற்றைக்கு முன் தினம் சென்னையில் எல்லா தொகுதிகளுக்கும் சென்றார். ஆனால் சட்டமன்ற உறுப்பினர்கள் செல்லவில்லை. நேற்றைக்கு எல்லா அமைச்சர்களும் சென்றார்கள், ஆனால் சட்டமன்ற உறுப்பினர்களை அழைத்துச் செல்லவில்லை. இப்படிப்பட்ட ஜனநாயக விரோதமான காரியங்களுக்கு வாய்ப்பளிக்காத காரியங்களைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பொருட்களைச் சீர்திருத்துதல்.

(இ) காவலர் மற்றும் காப்பாளர்.

(ஈ) சிற்றுண்டி விடுதி.

(ii) பொறியியல் தொழில்களில் உள்ள பணிகளில் ஒப்பந்தத் தொழிலாளர் நிலை குறித்து மாநில அளவில் ஆராய்வதற்காக வேறொரு துணைக் குழுவினை அமைக்கலாம்.

3. மேற்கண்ட பரிந்துரைகளை ஏற்று, மாநிலத்தில் பொறியியல் தொழில்களில் நிலவும் ஒப்பந்தத் தொழிலாளர் பணி நிலைமைகள் குறித்து ஆராய்வதற்காக 1981-ஆம் ஆண்டு சனவரித் திங்களில் அரசு ஒரு துணைக் குழுவை அமைத்தது.

4. இத்துணைக்குழு அமைக்கப்படுவதற்கு முன்பே, திருச்சியிலுள்ள பாரதக் கனரக மின் கருவிகள் தொழிலகம் மற்றும் அதன் துணைப் பிரிவுகளில் உள்ள ஒப்பந்தத் தொழிலாளர் நிலை குறித்து ஆராய, 1979 ஆம் ஆண்டு பிப்ரவரித்திங்களில் அரசு ஒரு துணைக் குழுவை அமைத்திருந்தது. இக்குழுவின் உறுப்பினர்கள் பின்வருமாறு:

(1) திரு. ஏ. கே. நடராசன், பொறியியல் தொழில் கட்டுமானக் கழகம் (வரையறுக்கப்பட்டது)

(2) திரு. வை. பெருமாள், பொதுச் செயலாளர், அண்ணா தொழிற்சங்கப்பேரவை, சென்னை.

(3) திரு. எஸ். ராஜாசுப்பிரமணியம். தொழிலாளர் துறைஇணை ஆணையர்.

மேலும் சில உறுப்பினர்களை சேர்த்து இக்குழுவை மாற்றி அமைப்பதன் மூலம் இக்குழுவுக்கு மிகுதியாகப் பிரிதிநிதித்துவம் அளிக்க வழிவகை செறுயுமாறு அடிக்கடி கோரிக்கைகள் எழுப்பப்பட்டன. 29-7-82 அன்று நடந்த எட்டாவது மாநில ஒப்பந்தத் தொழிலாளர் ஆலோசனைக் குழுவிலும் இது குறித்து விவாதிக்கப்பட்டது. இந்த ஆலோசனைக் குழுவின் பரிந்துரை யின்படி பாரதக் கனரக மின் கருவிகள் தொழிலகம் மற்றும் துணைப் பிரிவுகளுக்கென அமைக்கப்பட்ட துணைக் அதன் குழுவை ஏற்கெனவே பொறியியல் தொழில் களுக்கென அமைக்கப்பட்டுள்ள துணைக் குழுவுடன் இணைத்தும், மேலும் சில உறுப்பினர்களைச் சேர்த்துக் குழுவிற்கு மேலும் பிரதிநிதித்துவம் அளிக்கும்வகையில் அமைக்கும் செயற்குறிப்பொன்று அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது.

LIST OF AGENTS FOR THE SALE OF
TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS,
IN MADRAS CITY.

1 Account Test. Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-1.
3 Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Road, Madras-5.
10 The South India Saiva Siddhanta Works Publishing Society (Tirunelveli) Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras-1.
12 New Century Book House (Private) Limited, Madras-2.
13 Kalaivani Book Centre, No. 1, Ponniamman Koil Street, Egmore, Madras-8.

IN MOFUSSIL OF TAMIL NADU.

1 A. Venkatasubban & Company, Vellore (North Arcot) District.
2 Bharathamutha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V. Nathan Company, Kumbakonam (Tanjore District).
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Bros., Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9/31, Cross Cut Road, Coimbatore-12.
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore-1.
11 S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tirchirappalli-1.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi.
13 Mary Martin, Booksellers, Kottagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar & Sons, Salem-1.
15 Parameswari Book Shop, No. 46D, ld Market Street, Salem.
16 Meenakshi Pathippagam, Pudukkottai.
17 K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-10.
21 Kumaran Book Depot, Booksellers, Erode-1.
22 Vasa Book Company, No. A. Annaji Rao Street, Erode-1.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajantha Book Center, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchirappalli-2.
26 Sri Ramavilas Book Shop, 90, Amman Sannathi, Madras-1.

IN OTHER STATES.

1 Jain Book Agency, New Delhi.
2 Inter National Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthaghalevam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bagohi & Company, 286, R.B. Gandhi Street, Calcutta-11.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY DEPARTMENT PUBLISHED UNDER RULES 303 AND 306 OF THE TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY RULES (CORRECTED UPTO 5TH NOVEMBER 1979) AND PRINTED BY THE DIRECTOR OF STATIONERY AND PRINTING, MADRAS.

வெளியீடு 7-7-1984 Issued 7-7-1984

2754

# தமிழ் நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES

## பணித்துறை வெளியீடு—OFFICIAL REPORT

செவ்வாய்கிழமை 1984 பிப்ரவரி 21- தொகுதி LVII எண். 3

**Tuesday 21st February 1984—Volume LVII No. 3**

சட்டமன்றப் பேரவைத் துறை, சென்னை—600009

Legislative Assembly Department, Fort St. George,
Madras-600009

[விலை ரூ. 3-50 காசுகள்] [Price Rs. 3-50 paise

மாவட்ட மைய நூலகங்களில் முரசொலி, விடுதலை, தினகரன், மாலை முரசு, எதிரொலி, குங்குமம், போன்ற பத்திரிகைகள் எல்லாம் ஆறு மாதங்களுக்கு முன்பு நிறுத்தப்பட்டு விட்டன. ஏனென்று கேட்டால் அரசாங்க உத்தரவு என்று சொல்கிறார்கள். வேலூர், அரக்கோணம், ஆம்பூரில் எதிர்க் கட்சி பத்திரிகைகளை வரவழைக்காமல் தடுக்கிற ஜனநாயக விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கிறார்கள். அந்த முயற்சியில் ஈடுபட வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப் பெற்றது)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, 21–2–1984 காலை 9.00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 2–15 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

## 6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டப்படிக்கான விதிகளும்—ஆணைகளும்

(82) தமிழ்நாடு 1940 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து உள்துறையின் 9-11-1983 ஆம் நாளிட்ட 2347 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிக்கை தமிழ்நாடு 1939 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 4/1939) 133 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது).

(83) தமிழ்நாடு 1940 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து உள் துறையின் 5-12-1983 ஆம் நாளிட்ட 2532 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிக்கை [தமிழ்நாடு 1939 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 4/1939) 133 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

(84) வேர்க்கடலை, எள், மிளகாய், நெல், கரும்புச் சர்க்கரை (அனைத்து வடிவில்), முந்திரி, கம்பு, சோளம், ராகி, கொத்தமல்லி, உளுந்து, தேங்காய், மஞ்சள், மரவள்ளிக் கிழங்கு, பருத்தி, புகையிலை ஆகியவற்றைப் பொறுத்தமட்டில் வருவாய் கிராமங்களைச் சுற்றியுள்ள பதினாறு கிலோ மீட்டர் பரப்பளவினை அறிக் கயிடப்பட்ட அங்காடிப் பகுதியாக அறிவிப்பது குறித்து வேளாண்மைத்துறையின் 1–10–1983 ஆம் நாளிட்ட 1752 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிக்கை தமிழ்நாடு 1959 ம் ஆண்டு வேளாண் விளைபொருள் அங்காடிச் சட்டத்தின் 29 (4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.))





(85) தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சிக் கழகத்தின் 1981–82–ஆம் ஆண்டிற்கான பதினேழாம் ஆண்டறிக்கை. (ஆங்கிலம், தமிழ்) [1956–ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619—A பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

### (ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்

—எதுவுமில்லை—

## இணைப்பு

[193ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண் 90 (14380)—க்ககான விடையைக் காண்க.]

பொறியியல் தொழிலில் ஒப்பந்தத் தொழிலாளர் பணி நிலைமைகள் குறித்து ஆராய்வதற்காக, 1977 ஆம் ஆண்டு அக்டோபர் திங்களில் கீழ்க்கண்ட உறுப்பினர்கள் கொண்ட ஒரு துணைக்குழுவினை அரசு நியமித்தது:—

(1) திரு. எ. கே. நடராசன். பொறியியல் கட்டுமானக் கழகம் (வரையறுக்கப் பட்டது)

(2) திரு. வை. பெருமாள், பொதுச் செயலாளர். அண்ணா தொழிற்சங்கப் பேரவை.

(3) தொழிலாளர் துறை உதவி ஆணையர் (தலைமையகம்), சென்னை.

2. சென்னை நகரம் மற்றும் அதன் சுற்றுப்புறங்களிலுமுள்ள ஒப்பந்தத் தொழிலாளர் பிரச்சனைகள் குறித்து ஆராய்ந்த இக்குழு பின் வருமாறு பரிந்துரைகள் செய்தது:—

(i) இருபதும் அதற்கு மேற்பட்ட ஒப்பந்தத் தொழிலாளர்கள் அமர்த்தப்பட்டுள்ள கீழ்க்கண்ட நிறுவனங்களில் அவர்களது பணி நிலைமைகள் மற்றும் ஊதிய விதங்களை நிர்ணயிக்கும்படி தொழிலாளர் துறை ஆணையாளரைக் கேட்டுக் கொள்ளலாம்.

(அ) தொழிற்சாலையினுள் பொருட்களைக் கையாளுதல்'

(ஆ) வேலை நடந்துக்கொண்டிருக்கும்போது, தூய்மைப் படுத்துதல், பொருட்களை உடைத்தல் அல்லது

உள்ளடக்கம்

21-2-84 பக்கங்கள்

1. வினாக்கள்—விடைகள்: 307—340

உடுக்குறியிட்ட வினாக்கள்

2. அறிவிப்பு

பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு 1984 340

3. அரசினர் சட்ட முன்வடிவுகள்

(அ) பொது விற்பனை வரி (திருத்த) சட்டமுன்வடிவு 1984 (அ.ஆ) 340

(ஆ) மகளிர் பல்கலைக் கழக சட்ட முன்வடிவு 1984 340—341

(இ) கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) திருத்த சட்ட முன்வடிவு 1984, 341

4. ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம்—விவாதம் (தொடர்ச்சி)

திரு. கே. எஸ். ஜி. ஹாஜா ஷெரீப் 342—356

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி 356—358

மாண்புமிகு டாக்டர் எம். இ. இராமச்சந்திரன் 359—383

5. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள் 384—385

128—272—1

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

1984, பிப்ரவரி 21, செவ்வாய்க்கிழமை

மாசி 9, ருத்ரோத்காரி — திருவள்ளுவர் ஆண்டு 2015

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்ட மன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-30 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

''என்றும் ஒருவுதல் வேண்டும் புகழொடு
நன்றி பயவா வினை''

பொதுப் பணியில் நாட்டு ஆட்சியில் ஈடுபட்டோர் தமக்கும் தம் தலைவனுக்கும் தம் நாட்டுக்கும் புகழையும் நன்மையையும் தாராத வேலைகளை எப்போதும் செய்யவே கூடாது.

1. வினாக்கள்– விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

மதுராந்தகம் வட்டத்தில் குடிசைக்கு ஒரு விளக்கு திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட மின் இணைப்புகள்

1—(*வினா எண். 17318) திரு. எஸ். டி. உகம்சந்த் :

மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுராந்தகம் வட்டத்தில் குடிசைக்கு ஒரு விளக்கு கொடுக்கும் திட்டம் தற்பொழுது நிறுத்தப்பட்டுள்ளதா?

(ஆ) 1980-81, 1981-82, 1982-83-ஆம் ஆண்டுகளில் எத்தனை குடிசைகளுக்கு இத்திட்டத்தின் கீழ் விளக்கு அளிக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) இல்லை.

(ஆ) மதுராந்தகம் வட்டத்தில் 1980-81-ம் வருடத்தில் 2,963 குடிசைகளுக்கும், 1981-82-ம் வருடத்தில் 3031 குடிசைகளுக்கும், 1982-83-ம் வருடத்தில் 1508 குடிசைகளுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர்களே, மதுராந்தகத்திலும் மற்ற பகுதிகளிலும் ஏராளமான குடிசைவாசிகள் இது போன்ற மின் இணைப்புக் கேட்டு விண்ணப்பித்து இருக்கிறார்கள். ஏற்கனவே மின் பற்றாக்

குறை இருந்த காரணத்தால் அரசாங்கம் மின் இணைப்புக் கொடுப்பதை நிறுத்தி வைத்து இருக்கலாம். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு முறை அப்படித்தான் சொன்னார்கள். இப்போது மின்பற்றாக்குறை இல்லாமல் இருப்பதால், பழைய விண்ணப்ப தாரர்களுக்கு மின் இணைப்புக் கொடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, குடிசைகளுக்கு மின் இணைப்பு வழங்குவதற்கும் மின் பற்றாக் குறைக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை. குடிசைகளுக்கு மின் இணைப்பு வழங்குவதில் பெரிய பாதிப்பு ஒன்றும் கிடையாது. தமிழ்நாட்டில் 5,22,074 குடிசைகளுக்கு மின் இணைப்பு வழங் கப்பட்டுள்ளது. இன்னும் வழங்கப்பட வேண்டிய மனுக்களின் எண்ணிக்கை 14,420.

திரு. என். ஏ. பூங்காவனம் : மாண்புமிகு பேரவைத், தலைவர் அவர்களே, குடிசைகளுக்கு மின் இணைப்பு வழங்கு வது சம்பந்தமாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் புள்ளி விவரங்களைத் தந்து இருக்கிறார்கள். குறிப்பாக என்னுடைய தொகுதியில் காமராஜர் நகர் என்கிற கிராமத்திலும், எட்டிக்குப்பம் கிராமத்திலும் தொடர்ந்து மனு செய்தும் கொடுக்காமல் இருப்பதை அரசு அறியுமா? பல்வேறு கிராமங் களில் மக்கள் மனு செய்துள்ளதால் அவர்களுக்கு மின் இணைப்புக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, அரசுக்குத் தெரியாது. தனிக் கேள்வி போட்டால் விவரம் தெரிவிக்க இயலும்.

## மின் உற்பத்திக்குத் தேவையான அத்யாவசியப் பொருட்களுக்கான விலை நிர்ணயம்

*2 –*(வினா எண். 19971) திரு. இ.கணேசன்: மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மின் உற்பத்திக்குத் தேவையான அத்யாவசியமானப் பொருட்களின் விலையை உயர்த்தும் போது மத்திய அரசு மாநில அரசுகளைக் கலந்து ஆலோசிக்க வற்புறுத்தப்படுமா?

(ஆ) ஆம் எனில் ஏற்படுகிற இழப்புகளுக்கு மத்திய அரசு மாநில அரசுகளுக்கு மானியம் தர வற்புறுத்தப்படுமா?

மாண்புமிகு திரு.ச. இராமச்சந்திரன்: (அ) மற்றும் (ஆ) ஆம்

திரு. தி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்மையில் மையா அரசால் உயர்த்தப்பட்ட நிலக்கரி விலையின் விளைவாக மாநில அரசுக்கு செலவு எவ்வளவு அதிகம் ஏற்படுகிறது இப்படி. மின் உற்பத்திக்கு



தேவையான அத்தியாவசியமான பொருள்களின் விலையை உயர்த்துகின்ற போது,அந்தந்த மாநில அரசின் மின் தயாரிப்புச் செலவுக்குத் தகுந்தபடி ஈட்டுத்தொகை அளிக்க மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்துமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, அவ்வப்போது இது போன்ற விலை உயர்வினால் மின்சார வாரியம் பெரிதும் பாதிக்கப்படுகிறது என்பதை மத்தியஅரசுக்கு நாம் சொல்லி வருகிறோம் உதாரணமாக நிலக்கரி, எண்ணெய் இவற்றின் விலை உயர்வு மற்றும் நிலக்கரியைக் கொண்டு செல் வதற்கான இரயில் மற்றும் கப்பல் சரக்குக் கட்டண உயர்வு போன்றவற்றை மாநில அரசை கலந்து கொள்ளாமலே மத்திய அரசு அவ்வப்போது செய்கிறது இதனால் தமிழ்நாடு மின்சார வாரியம் ஒவ்வொரு ஆண்டும் 92 கோடி ரூபாய் கூடுதலாக—அதாவது 1979–80 ஆம் ஆண்டு கணக்கின் அடிப் படையில், செலவு செய்ய வேண்டியநிலைமை இருக்கிறது.

திரு. ரா. உமாநாத் : தலைவரவர்களே, இதை ஈடு செய் வதற்கு பணம் வேண்டுமென்று மத்திய அரசை வற்புறுத்துமா என்று கேட்ட இரண்டாவது உப கேள்விக்கு ஆம் என்று கூறி யிருக்கிறார்கள். எவ்வளவு தொகை மத்திய அரசிடம் ஈடு செய்ய கேட்கப்பட்டது எப்போது கேட்கப்பட்டது? அவர் களிடமிருந்து பதில் வந்திருக்கிறதா இல்லை என்றால் வற் புறுத்திப் பெற என்ன நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, நிலக்கரி எண்ணெய் போன்றவற்றின் விலையை உயர்த்தும் போது மின்சாரம் உற்பத்தி செய்ய பயன்படுத்துவதற்கான நிலக்கரி, எண்ணெய் விலைகளை உயர்த்தக் கூடாது, விதிவிலக்கு (எக்சம்ஷன்) அளிக்க வேண்டுமென்று மத்திய அரசுக்கு கடிதம் எழுதியிருக்கிறோம், சந்திக்கும் போது நேரிலேயும் சொல்ல வரு கிறோம். ஆனால் இதுவரை ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

திரு. செ. சிவசாமி : தலைவரவர்களே, இந்த நஷ்டத்தை ஈடு செய்ய மத்திய அரசிடம் நிதி கேட்டகப்பட்டதாகச் சொல் லப்படுகிறது. அதே நேரத்தில் 25 சதவீதம் இன்றைக்கு நிலக்கரி விலையை உயர்த்தியிருக்கிறார்கள். இதை ஈடு செய்ய அவர் கள் நிதி கொடுக்காவிட்டால் நம்முடைய மின்சார வாரியம் மின்கட்டணத்தை உயர்த்தும் நிலைமை ஏற்படுமே அப்படி உயர்த்துவதற்கு ஏதாவது அரசிடம் திட்டம் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, பிரச்னை அதுதான். செலவுகள் அதிகமாகும் போது மின் கட்டணத்தை உயர்த்த வேண்டிய நிலைமை மாநில அரசுகளுக்கு ஏற்படுகிறது. ஆனால் மின்சாரக் கட்டணத்தை உயர்த்தினால் கூட ஓரளவிற்குத்தான் உயர்ந்த முடியும். இந்த நிலையை

அறிந்து கொள்வதற்கு மாநில அரசுகளோடு கலந்து பேச வேண்டும். அதாவது கன்சல்டேஷன், கன்சன்ட் இல்லை என்றாலும் கன்ஸல்ட் என்ற முறையில் நிலக்கரி, எண்ணெய் விலையை உயர்த்துவது, இரயிற் மற்றும் கப்பல் சரக்குக் கட்டணத்தை உயர்த்துவது போன்ற நேரங்களிலாவது, மாநில சர்க்கார்களுடைய பண நிலைமைகளைக் கருத்திற் கொண்டு மாநில அரசுகளை கலந்து கொள்ள வேண்டுமென்று நாம் வற்புறுத்தி வருகிறோம். அண்மையில் நிதிக் குழுவிலே கூட மாநில அரசு சார்பாக இதை வற்புறுத்தியிருக்கிறோம். மாநிலங்களை கலந்தாலோசிக்காமல் இப்படி விலையை உயர்த்தினால் மாநில அரசுக்கு வேறு வழியில்லாமல் தன்னுடைய நிதியை மத்திய அரசுக்கு கொடுத்து விட்டு, அதைஈடு செய்ய கட்டணங்களை உயர்த்தவேண்டிய நிலைமை ஏற்படுகிறது.

### 1983 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் கேரள மாநிலத்திற்கு வழங்கப்பட்ட மின்சாரம்

3— *(வினா எண். 20836) திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1983—ம் ஆண்டு ஜூன் மாதத்தில் கேரளா மாநிலத்திற்குத் தமிழநாடு அரசு மின் விநியோகம் செய்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரமென்ன?

(இ) சப்ளை செய்யப்பட்ட மொத்த மின்சாரம் எவ்வளவு?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :

(அ) ஆம்.

(ஆ) 1983-ம் ஆண்டு ஜூன் மாதத்தில் நிலவிய மின் நெருக்கடியின் காரணமாக கேரளம் கேட்டதற்கிணங்க மின்சாரம் வழங்கப்பட்டது.

(இ) 11.543 மில்லியன் யூனிட்டுகள்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவர் அவர்களே, கேரள மாநிலம் கேட்டபோது நம்முடைய அரசும் அவர்களுக்கு மின்சாரம் கொடுத்திருக்கிறது. அதைப் போன்று நாமும் கேரள மாநிலத்திலிருந்து வாங்கியிருக்கிறோம். நாம் அவர்களுக்கு யூனிட்டுக்கு என்ன விலைக்கு தந்திருக்கிறோம். அவர்கள் நமக்கு என்ன விலைக்கு கொடுத்திருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, பெரும் பாலும் கேரளத்திலிருந்துதான் நாம் பெறுவது வழக்கம். அவர்களுக்கு நாம் தருவது மிகமிக குறைவு. ஆனால் கடந்த இரண்டாண்டுகளாக கேரளத்தினுடைய நிலைமை நமக்கு





அதிகமாக தரக்கூடிய அளவில் இல்லை. இருந்தாலும் நாமும் அவர்களுக்குக் கொடுக்கக்கூடிய நிலைமையில் இல்லை நாம் பரிவர்த்தனை செய்கின்ற மின்சாரத்திற்கு யூனிட்டுக்கு 35. காசு 11-4-1984 வரையில் இந்த ஒப்பந்தம் அமுலில் இருக்கும் அதன் பிறகு என்ன விலை என்பதை பேசி முடிவு செய்ய வேண்டும். ஆனால் அவர்கள் தரும் நிலையிலும் இல்லை, நாம் பெறும் நிலையிலும் இல்லை. அதனால் அதுபற்றி இப்போது நாம் பேச வேண்டியதில்லை.

(முற்பகல் 9–10)

திரு. பெ சு. திருவேங்கடம்: பேரவைத் தலைவர் அவர்களே, நாம் கொடுத்த மின்சாரத்திற்கு கேரள அரசாங்கத்திடமிருந்து நம்முடைய வாரியத்திற்கு வரவேண்டிய பணம் வந்து விட்டதா? அதே போன்று நம்முடைய அரசு கேரள மாநிலத்திற்கு கொடுக்க வேண்டிய பாக்கி உள்ளதா? ஏன் என்றால் பொது நிறுவனங்கள் குழுவிலே பார்க்கின்றபோது ஆந்திரா, கேரளா, போன்ற மாநிலங்களிலிருந்து நமக்கு வரவேண்டிய பணம் பல்லாண்டுக்காலமாக வசூலிக்கப்படாமல் இருப்பதாகத் தெரிகிறது. இதை வசூலிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்; பேரவைத் தலைவர் அவர்களே, கேரளம் நமக்கு இதன் அடிப்படையில் தரவேண்டியதில்லை. ஏன் என்றால் 374 மில்லியன் யூனிட்டுகள் 1982-83 நமக்குத் தந்தார்கள். நாம் அவர்களுக்குத் தந்தது 28.7 மில்லியன் யூனிட்டுகள் தான் அண்டை மாநிலங்களோடு கொடுக்கல் வாங்கல் எப்போதும் இருந்து கொண்டுதான் இருக்கும். நாம் எவ்வளவு அவர்களுக்குக் கொடுக்க வேண்டும். அவர்கள் எவ்வளவு நமக்குக் கொடுக்க வேண்டும் என்ற விவரத்திற்கு தனி கேள்வி போட்டால் பதில் தருவதற்கு இயலும். சில சமயங்களில் நாமே அதிகமாகக் கூட கொடுக்க வேண்டியது வந்தாலும் வரலாம்.

திரு என்.எஸ்.வி.சித்தன்: மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே உள்ள ஒரு சிமன்ட் ஆலை கேரளாவிலிருந்து நேரடியாக மின்சாரத்தைப் பெற்றுக் கொண்டு அதற்கு ஈடாக சிமென்ட் கொடுப்பதாகச் சொல்லப்படுவது உண்மையா? ஆமெனில் அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டு இருக்கிறது

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போடவும்.

திரு. ப நெடுமாறன்: மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, கேரள மாநிலத்திலிருந்து மின்சாரம் பெற்றுக கொண்டு அதற்கு பதிலாக தமிழ்நாட்டிலிருந்து அலுமினியம் தருவதற்காக அரசாங்கம் செய்து கொண்ட ஒப்பந்தத்தை மத்திய அரசு ரத்து செய்தது. அதைப் போலவே இப்போது மின்சார பரிமாற்றத்திற்கும மத்திய அரசின் அனுமதி தேவை இருக்கிறதா? அனுமதியில்லாமல் இந்த பரிமாற்றம் நடைபெற

மீண்டும் கேரள அரசாங்கத்திடமிருந்து மின்சாரம் பெறவும் நாம் அலுமினியம் தருவதற்கும் இந்த அரசு எடுதத நடவடிக்கை என்ன என்பதை அறிய விரும்புகிறேன்

**மாண்புமிகு திரு. ச. இராமசந்திரன்** தலைவர் அவர்களே, இதற்கு இந்திய அரசின் அனுமதி தேவையில்ல.

திரு. ச. செம்மலை மாண்புமிகு பேரவைத் தலைவர்களே இப்படி ஒரு மாநிலத்தில் இருந்து மற்றொரு மாநிலத்திற்கு மினசாரம் பரிவர்த்தனை செய்கிறபோது மின்சாரத்திற்காக பற்றாக்குறை மாநிலங்கள், உபரி மாநிலங்களுக்கு அதிகமான விலை கொடுக்கவேண்டியிருக்கிறது. அதேபோல் சில சமயங் களில் தமிழ்நாட்டைப் போன்ற பற்றாக்குறை மாநிலங்கள் உபரி மாநிலங்களுக்கு ஒப்பந்தத்தின் அடிப்படையில் மின்சாரம் கொடுக்கிறபோது, குறைந்த விலைக்குக் கொடுக்கக்கூடிய நிலை மையிருக்கிறது. எனவே இந்த மின்சாரம் பரிமாற்றம் செய்து கொள்கிற போது ஒரே சீரான விலையை நிர்ணயம் செய்ய மத்திய அரசை நமது அரசு வற்புறுத்தி வந்ததே, அப்படி சீரான விலை நிர்ணயம் செய்வதற்கு மத்திய அரசு ஒத்துக் கொண்டு உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே பொதுவாக இயற்கை வளங்கள் குறைந்த தமிழ்நாடு போன்ற பற்றாக்குறை மாநிலங்களுக்கு மின்சாரம் தருகிறபோது ஒரு விஞ்ஞான அடிப்படையில் அதை அமைக்க வேண்டும் என்று மின் சாரத்துறை அமைச்சர்கள் இந்திய முழுவதற்கும் ஒரு சீரான கட்டணத்தை அவர்கள் வசூலிக்க வேண்டும் என்று வற்புறுத்தி வருகிறோம். இவைகள் எல்லாம் ஆலோசனைகளாக இருக் கிறதே தவிர, முடிவுகள் எடுக்கப்படவில்லை.

தெரு விளக்குகளில் 'Thermister' என்னும் சாதனத்தைப் பொருத்தும் திட்டம்.

*101-*வினா* என் 18992: திரு. வேடசந்தூர் வி. பி. பால சுப்பிரமணியன்: மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா— (அ) தமிழகத்தில் தெரு விளக்குகள் பியூஸ் போவதைக் குறைத்திட ஒவ்வொரு விளக்கிலும் "Thermister' எனும் சாதனத்தைப் பொருத்துவதைப் பற்றி மின்துறை ஆய்வு நடத்தியதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன்:** (அ, ஆ) ஒரு மாதிரி 'தெர்மிஸ்டர்'—ஐப்பயன்படுத்தி ஆய்வு செய்ததில், இதனால் மின் இழப்பு ஏற்படுவதுடன் மின்விளக்கும் சீரின்றி நிலையற்ற ஒளியுடன் எரிந்தது. முறையான வெளிச்சம் தர இது உகந்த தல்ல. எனவே இச்சாதனத்தைப் பயன்படுத்துவது உசிதமல்ல என்று கண்டறியப்பட்டுள்ளது.





திரு வேடசந்தூர் வி.பி. பாலசுப்ரமணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தெரு விளக்குகள் fuse போவதைத் தடுப்பதற்கு தெர்மிஸ்டா என்ற சாதனம் அவ்வளவு பயனுள்ளது அல்ல என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட் டார்கள். இப்போது கிராமங்களில் இருக்கக்கூடிய தெரு விளக்குகள் எல்லாம் உருண்டை வடிவில் உளள விளக்குகள் தான். அவைகள் அடிக்கடி fuse போய்விடுகின்றன. இதைத் தவிர்ப்பதற்கு குழல் விளக்குகள் போட வேண்டும் என்று ஊராட்சி மன்றங்கள் மின்துறையைக் கேட்டபோது, ஊராட்சி மன்றங்கள் மின் துறைக்கு கொடுக்க வேண்டிய பாக்கியை செலுத்தவில்லை என்ற காரணத்திற்காக தெரு விளக்குகளை மாற்றுவது மறுக்கப்படுகிறது. ஆகவே ஊராட்சி மன்றங்களுக்கு அந்த பழைய பாக்கியை கட்டுவதிலேயிருந்து விதி விலக்கு அளித்து, எல்லா கிராமங்களுக்கும் குழல் விளக்குகள் பொருத்த மின் துறை அந்த விதியை, தளர்த்துமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவரவர்களே, குழல் விளக்குகளைப் பொருத்துவது நல்லது தான். ஆனால் அந்த விதிகளைத் தளர்த்துவதென்பது நிதியைத் தளர்த்துவது ஆகும். ஏற்கனவே மின் வாரியம் நிதிப் பற்றாக்குறையாக இருக்கும் பொழுது, இந்த முடிவை மேற்கொள்வது இயலாது.

திரு. ஆர். ரங்கசாமி; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின்சார வீதி விளக்குகளை நாளடைவில் குழல் விளக்குகளாக மாற்றுவது என்று, இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால், அரசு உத்தரவாதம் அளித்திருப்பதாக நான் அறிகிறேன். ஆனால் இன்னும் பல பகுதிகளில் அது பாதி அளவு கூட மாற்றப்படாமல் இருக்கிறது. என்னுடைய தொகுதியிலே தாளவாடியில் 350 விளக்குகளுக்கு 50 விளக்குகள் தான் மாற்றப்பட்டிருக்கின்றன. இவைகளையெல்லாம் உடனடியாக குழல் விளக்குகளாக மாற்றுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, தந்துள்ள தகவல் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. இரா. கருப்பையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களுக்கு அடிப்படையான தேவைகளை பூர்த்தி செய்து கொடுக்க வேண்டிய கடமை அரசிற்கு இருக்கிறது. ஆகவே மக்களுக்குத் தேவையான இந்த மின் விளக்கு வசதிகளை செய்வதற்கு ஊராட்சி ஒன்றியங்கள் பணத்தைக் காலத்தில் செலுத்தவில்லை என்று கூறி, அதற்காக இந்த அடிப்படை யான கடமையைச் செய்வதை அரசு நிறுத்தலாமா என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, விளக்கு எரியவேண்டுமென்பது எப்படி ஒரு அடிப்படையான காரியமோ அது போலவே மின்சார வாரியம் இயங்குவது என்பது அடிப்படையான காரியம் என்பதை உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள். ஆகவே மின்சாரவாரியம் இயங்குவதற்கு அவ்வப் பொழுது மின் கட்டணத்தைக் கட்டாமல் இருக்கின்ற ஊராட்சி ஒன்றியங்களுக்கு நாம் சலுகை காட்ட வேண்டுமென்பது சரியாக இராது.

திரு. த. வேணுகோபால்: தலைவர் அவர்களே, மின் கட்டண பாக்கி இல்லாமல் கட்டிய ஊராட்சி ஒன்றியங்களுக்கு சிரன விளக்குகளைப் பொருத்துவதற்கு, அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: நடவடிக்கை எடுக்கும்

திரு. சி. கோபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படி மின்சார குழல் விளக்குகளை, கிராம நலன் கருதி. தெரு விளக்குகளாக அமைப்பதற்கு 50 சதவீதமாவது ஊராட்சி மன்றங்கள் கட்டினால், கொடுக்கக்கூடிய சூழ்நிலையை அரசு உருவாக்குமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன். தலைவர் அவர்களே, அதாவது பொருளுக்கு கொடுக்கின்ற விலை இது. மின்சார வாரியம் வாங்கும் வரி அல்ல. வரியில் சலுகைகள் உண்டு. ஆனால் ஒரு பொருளை விலைக்கு வாங்கும் போது அதனுடைய விலையை முழுவதும் தந்தாகவேண்டும். ஆகவே இதிலே வாழைக்காய் வியாபாரம் செல்லாது.

Dr. K. SOWIRAJAN: Mr. Speaker, Sir, luckily we have an E gin er as our H n. 'ble Mini ter for Electricity. I do not u derst d the terminology' Thermister'. This is something like voltag stabiliz r. I unders and that all the bulbs fuse olt n because of the fluc u tion in voltages. In that case, is it not pos ble to find out som other mean of k eping the volt ge steady so that bulb will not often becc me f se?

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, தொழில்நுட்பம் நிறைந்த கேள்வி ஒன்றைக் கேட்டிருக்கிறார்கள். அதற்குச் சரியான முழு விவரங்களையும் சேகரித்து அனுப்பி வைக்கிறேன்.

மேல நெட்டூர் கிராமத்தைச் சேர்ந்த பெரிய கோவில் தேர்

102—*வினா எண் 5358) திரு. க. பாரமலை: மாண்புமிகு செய்தி—அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம் மானாமதுரை ஒன்றியத்தைச் சேர்ந்த மேலநெட்டூர் கிராமத்தைச் சேர்ந்த பெரிய கோவில் தேர் பல வருடங்களாக ஓடாமல் இருப்பது அரசின் க[illegible]த்துக் கொண்டுவரப் பட்டுள்ளதா?



(ஆ) ஆம் எனில், தேர் வழக்கம் போல ஓடுவதற்கு அரசு எடுத்துக் கொண்டுள்ள நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரய்யன்: (அ) இராமநாதபுரம் மாவட்டம், மானாமதுரை ஒன்றியம், மேலநெட்டூர் கிராமம் அருள்மிகு சொர்ணவாரீஸ்வரர் ஆலயத்தின் தேர் கடந்த சுமார் 25 ஆண்டுகளாக சாதாரண செலவில் செப்பனிட முடியாத அளவிற்கு பழுதடைந்துள்ளதால் ஓட்ட முடியாமல் உள்ளது.

(ஆ) புதியதேர் செய்ய தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

(முற்பகல் 9-20)

திரு. செ. சிவசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேலநெட்டூர் கிராமம், மானாமதுரை ஒன்றியத்திலே இருந்தாலும் கூட, அந்தக் கிராமம் எங்களுடைய கிராமத்தோடு சேர்ந்தது. அந்தக் கிராமத்தைச் சேர்ந்தவன் என்ற முறையிலே நான் கேள்வி கேட்பதற்கு உரிமை இருக்கிறது என்ற வகையில் கேட்கிறேன். இப்பொழுது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னது போல, அங்கே மிகப்பெரிய தேர்: 25 ஆண்டுகளாக உடைந்து சின்னாபின்னப்பட்டிருக்கிறது. அதை மறுபடியும் சீர்திருத்தி ஓட்டுவதற்கு என்று ஏதாவது அரசிடம் குறிப்புகள் இருக்கிறதா? எந்த அளவுக்கு எஸ்டிமேட் போடப்பட்டுள்ளது என்கிற விவரங்களை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த தேருக்கு உரிய ஆலயம் சிவகெங்கை தேவஸ்தான சமஸ்தானத்திற்கு உரிய நிர்வாகத்திற்கு உட்பட்ட ஆலயம் ஆகும். 83 ஆலயங்களையும், சுமார் 22 கட்டளைகளையும் கொண்ட அந்த நிர்வாகத்திற்கு உட்பட்ட இந்த ஆலயத்தின் வருமானம் ஆண்டு ஒன்றுக்கு 6 ஆயிரம் என்று சொல்லப்படுகிறது. ஆகவே, பரம்பரை அறங்காவலராக சிவகெங்கை சமஸ்தானத்தைச் சேர்ந்தவர்கள் இருந்து வருகிறார்கள். இவ்வளவு காலமாக இந்தத் தேர் ஓடாமல் இருந்ததால் இனிமேல் அதைப் பயன்படுத்த முடியாது என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இந்த சட்டமன்ற கேள்வி எழுந்ததற்குப் பிறகு விவரங்கள் கேட்கிற சூழ்நிலையில், புதிய தேரை நாங்கள் கட்டுவதற்கு ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறோம் என்று தெரிவித்திருக்கிறார்கள். அதற்கு மேல் எந்த விவரமும் அந்தப் பரம்பரை அறங்காவலரிடத்திலிருந்து கிடைக்கவில்லை.

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவிழா நேரங்களில் பொது மக்கள் தேரை இழுத்த பிறகு, தெருவில் அப்படியே போட்டு விட்டுப் போகிறார்கள், பின் எந்தவிதப் பாதுகாப்பும் இல்லாமல் மழை பெய்தாலும், வெய்யில் அடித்தாலும் அங்கேயே நின்று கொண்டிருப்பதால். அதிலுள்ள சிற்பங்கள் பாழாகிவிடுகின்றன. சிறுவர்கள் அந்த

சிற்பங்களை பிய்த்து பிய்த்து விளையாடுகிறார்கள். ஆகவே, அதைப் பத்திரமாகப் பாதுகாக்கும் வகையில் அதை அடைத்து தகரத்தாலோ, வேறு எதிலோ அடைப்புப் போட்டு பாதுகாப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளை அரசு செய்ய முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய நாட்டிலே நெடுங்காலமாக தேர்நிலை என்றும், தேர்முட்டி என்றும் தேருக்கு ஒரு நிலையான இடத்தை ஒதுக்கி அழைப்பார்கள். அந்த இடத்தில் தேரை நிறுத்தியபிறகு, நல்ல தகரங்களினாலோ. அல்லது கூரை வேய்ந்த நிலையில். அடைப்புகள் கொண்ட ஒரு பாதுகாப்பு முறையினாலோ தேரைப் பாதுகாக்கின்ற ஒரு முறை நடைமுறையில் இருந்து வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அப்படி பாதுகாக்கத் தவறியிருக்கின்ற ஊர்கள் ஏதாவது தெரிந்திருந்தால், அவர்களைப் போன்றவர்களே முயற்சி எடுத்து அந்தப் பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்ய முயலலாம்.

திரு. உ. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. பல கிராமங்களில் ஊரிலுள்ள பொதுமக்கள் புதியதாக தேர் செய்ய முன் வரும்போது, அதற்கு அறநிலையத் துறையினர் அனுமதி வழங்குவதில் சில சமயம் குறுக்கே நிற்கிறார்கள். அதற்குப் பிறகு மிகச் சிறிய தொகை அளிக்க முன் வந்தாலும் கூட, அதற்குப் பெரிய கமிட்டி போடவேண்டும். என்று சொல்லி, பல சிக்கல்களை ஏற்படுத்தியிருக்கிற காரணத்தாலே பல இடங்களில் கிராம மக்கள் அப்படிப்பட்ட திருப்பணிகளுக்கு முன்வருவதில்லை. அனதத் தளர்த்தி எங்கெங்கே முன் வருகிறார்களோ அங்கே அவர்களிடமிருந்து வாங்கி புதியதாக தேர் செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது போன்ற திருப்பணி நிகழ்ச்சிகளில் அறநிலையத்துறை கொஞ்சம் எச்சரிக்கையாக இருக்க வேண்டியிருக்கிறது. முன்னாலே போனால் கடிக்கும், பின்னாலே வந்தால் உதைக்கும் என்று பழமொழி. அந்த அடிப்படையிலே இப்படி இங்கே கேள்வி கேட்கின்ற நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்களே கூட நாளைக்கு அங்கே ஊழல் நடக்கிறது, இங்கே ஊழல் நடக்கிறது. அங்கே திருடி விட்டார்கள். இங்கே திருடி விட்டார்கள் என்று சொல்கிற வாய்ப்புகள் ஏற்பட்டு விடுவதைப் பார்க்கிறோம்.

ஆகவே, பொதுமக்கள் தொடர்பான காரியங்கள் நடக்கிற போது, அதிலே முயற்சி எடுத்து செய்கிறவர்கள் அக்கறையோடு செய்கிறார்கள். ஆனால் அதற்காக ஒரு காசு கூட செலவு செய்யாமல் எவன் ஒருவன் இருக்கிறானோ, அவன் தான் உட்கார்ந்து கொண்டு, விவகாரத்தை கிளப்பிக் கொண்டிருக்



கிறான். ஆகவே, எந்தக் காரியம் நடந்தாலும் பொது மக்களிடத்திலே பணம் வாங்குகிறபோது குழு போட்டு வாங்கும் வகையில் கொஞ்சம் பொறுப்பாகத்தான் நாம் நடந்து கொள்ள நேரிடுகிறது. ஆனால் சமீபத்தில் அறநிலையத்துறையிடமிருந்து, ஆலயங்களுக்கு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. திருப்பணி செய்ய பொது மக்கள் யாராவது முன் வந்தால், அவர்களுடைய ஆர்வத்தைக் குறைக்கின்ற வகையில் சட்ட விதிகளைக் காட்டி மிரட்டாதீர்கள், தடுக்காதீர்கள், என்று சொல்லப்பட்டிருக்கிறது.

புதியதாக வீடுகள்கட்டிடங்கள் கட்டும்போது மரங்கள் நடும் திட்டம்.

103 *வினா எண்.—12364—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

தமிழ்நாட்டில் புதிதாக வீடுகள், கட்டிடங்கள் கட்டும்போது மரங்களையும் கண்டிப்பாக நடவேண்டும் என அரசு நிபந்தனை விதிக்கும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: ஆம். வனத்துறையின் ஆலோசனையை ஏற்று அதற்கான சட்டத்திருத்தம் கொண்டு வர ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை முயற்சி எடுத்து வருகிறது.

திரு. இரா. தாமரைக்கனி: தலைவர் அவர்களே, அமெரிக்கா போன்ற நாடுகளில் எல்லாம் புதிதாக வீடுகள். கட்டடங்கள் கட்டும்போது மரங்கள் நடவேண்டும் என்று சட்டங்கள் இருக்கின்றன. அப்படி நடவில்லையென்றால் அவர்களுக்கு கட்டடங்கள் கட்டுவதற்கான லைசென்ஸ் ரத்து செய்யப்படுகிறது. அந்த மாதிரி நடவடிக்கைகள் நம் தமிழ்நாட்டிலும் ஏற்படுத்தப்படுமா? அதுமட்டுவல. ஒரு குழந்தை பிறந்தவுடனே ஒரு மரம் நட்டு விட்டுத்தான் முனிசிப்பாலிட்டி அல்லது நகராட்சியில் பிறப்புபதிவு செய்யவேண்டும் என்ற சட்டத்தையும் அரசாங்கம் இயற்றுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அமெரிக்கா சென்று வந்த விவரத்தை இந்த அவைக்குத் தெரிவிப்பதற்கு அவர்கள் இந்தக் கேள்வியைப் பயன்படுத்திக் கொண்டதற்காக மகிழ்ச்சி. அமெரிக்கா நாட்டில் அவர்கள் கண்டுவந்திருக்கிற விவரத்தை இப்போதுதெரிவித்திருக்கிறார்கள். நாம்இதை சட்டத் துறைக்குத் தெரிவித்து அவர்கள் தயாரித்துக் கொண்டிருக்கிற அந்தச் சட்ட முன்வடிவிலே இதையும் இணைக்க முடியுமா என்பதைப் பரிசீலிக்கச் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒரு குழந்தை பிறந்தவுடன் ஒரு மரம் நடுவது என்றால் பூமியில் மக்களுக்கு இருக்க இடம் இருக்குமா?

திரு. இரா. தாமரைக்கனி: தலைவர் அவர்களே. மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் நான் முதல் கேள்வி கேட்கும்போது ஒரு குழந்தை பிறந்தவுடன் ஒரு மரம் நடவேண்டுமென்று சொல்லியிருந்தேன். அதையும் அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்வார்களா? அதுமட்டுமல்ல, இப்போது நம் சென்னை மாநகராட்சியில் மட்டுமல்ல, எல்லாயிடங்களிலும் வீடுகளிலும் மற்றும் தெருக்களிலும் மரங்கள் அதிகமாக இருக்கின்றன. ஆனால் சில நேரங்களில் மாடுகளை மரத்தில் கட்டிவிடுகிறார்கள் மரத்திலுள்ள குச்சியை ஒடித்துவிட்டு செல்கிறார்கள். ஆகவே மரங்களுக்கு பாதுகாப்பு இல்லாமல் போகிறது. ஆகவே மரங்களைப் பாதுகாப்பதற்கு அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு ஆர். எம். வீரப்பன்: தலைவர் அவர்களே. மரம் நடுவதற்காக குழந்தை பெற வேண்டும் என்று அவ்வளவு பெரியதொரு சுமையை நம் நாட்டின் மீது சுமத்த வேண்டாம். குழந்தைகள் பெறாமலேயே மரங்களை நட்டு வளர்க்க வேண்டும் என்பதுதான் இப்போது மிகப் பெரிய கடமையாக இருக்கிறது. ஆகவே அப்படிப்பட்ட முயற்சிகள் அரசாங்கத்தால் வனத்துறை மற்றும் பல்வேறு துறைகளால் எடுக்கப்பட்டு வருகின்றன. மாட்டைக் கட்டுகிறார்கள் கிளையை ஒடிக்கிறார்கள் என்பதெல்லாம் பொது மக்களாகப் புரிந்து தடுக்க வேண்டிய ஒன்று, அதைச் சட்டம் போட்டு மாத்திரம் தடுக்க முடியாது. மாண்புமிகு உறுப்பினர்களைப் போன்றவர்கள் அப்படிப்பட்ட உணர்வுகளைப் பொத மக்களுக்கு ஏற்படுத்த வேண்டும்.

திரு. எம். எஸ். மாணிக்கம்: தலைவர் அவர்களே, சிலயிடங்களில் அறுபது, நூறு ஆண்டுகளான மரங்களையெல்லாம் வெட்டிக் கொண்டிருக்கிறார்கள். அப்படி வெட்ட அனுமதி கொடுக்கிறோம். ஒருவர் பத்து மரக்கன்றுகளை நட்டால்தான் அந்த மரத்தை வெட்ட அனுமதி அளிக்கப்படும் என அரசு அணையிடுமா என அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவர் அவர்களே. பல்வேறு நிலைகளில் இந்த மரங்களை வெட்டுவதற்காக அனுமதி கொடுக்கப்படுகிறது. தனியார் காடுகள் அல்லது தனியார் தோட்டங்கள் என்றிருந்தால் அவர்கள் முறையாக அனுமதிக்காக விண்ணப்பிக்கிறார்கள். அப்படி விண்ணப்பிக்கிறபோது வயது முதிர்ந்த மரங்கள் என்று கணக்கிட்டு ஒரு குறிப்பிட்ட அளவு வெட்டலாம் என்று அனுமதித்தால் அவர்கள் உடனடியாக வெட்டப்படுகிற மரத்திற்குப் பதிலாக மரம் நடவேண்டும். அதற்கு இணைத்தொகையாக பணம் கட்ட வேண்டும் என்ற விதியெல்லாம் இருக்கிறது. அரசாங்கத் துறைகள், வருவாய்த் துறை, அல்லது நெடுஞ்சாலைத்துறை, உள்ளாட்சித் துறை, கிராமப் பஞ்சாயத்துத்துறை போன்ற பல்வேறு துறைகளால் மரங்கள் வெட்டப்பட்டால் அப்போது இந்தச் சட்டதிட்டங்களுக்கு அவர்கள் உட்படுவதில்லை, உட்படுத்தப்படுவதுமில்லை,



### தமிழ்நாடு ரப்பர் கழகம் அமைக்கும் திட்டம்.

104—*வினா எண். 18465 திரு. ரா. கிருஷ்ணன்: மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு ரப்பர் கழகம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: (அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள அரசு ரப்பர் தோட்டத்தை நிர்வகிக்க, தன்னாட்சியுள்ள ஒரு தனி கழகமாக செயல்பட 25-2-83 நாளிட்ட வனம் மற்றும் மீன் துறை அரசு ஆணை எண். 221ல் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. அந்தக் கழகத்தை உருவாக்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

திரு. ரா. கிருஷ்ணன்: தலைவர் அவர்களே, இந்தக் கழகம் ஆரம்பிக்கப்பட்டு ஓர் ஆண்டு ஆகியும் இன்னும் அதற்கான செயல்வடிவம் எதுவும் தொடங்கப்படவில்லையே, அரசாங்கப் போக்குவரத்துக் கழகங்களுக்கு தேவையான டயர்கள் இருக்கைகள் போன்ற இப்படிப்பட்ட தேவைகளை எல்லாம் பூர்த்தி செய்யக்கூடிய அளவிற்கு அந்தக் கழகத்தின் மூலம் ரப்பர் தேவையைப் பூர்த்தி செய்யலாமே. அது அரசாங்கத்திற்கு வருமானத்தையும் ஏற்படுத்துமே. இதன் காரணமாக உடனடியாக அதைச் செயல்படுத்துவதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவர் அவர்களே, கழகம் அமைத்து ஒரு ஆண்டு ஆகவில்லை. கழகம் அமைக்க வேண்டுமென்கிற முடிவை அரசு அறிவித்தது. அதற்குப் பிறகு அதுபற்றிய அடிப்படை விவரங்களையெல்லாம் சேகரித்து இப்போதுதான் அதற்கான ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அதற்கான அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். விரைவில் அது தனிக் கழகமாக செயல்படத் துவங்கும். ஆனால் அங்கே கிடைக்கிற ரப்பரைக் கொண்டு டயர் போன்ற பொருள்களைச் செய்யமுடியுமா என்பதையும் செய்தால் அது நமக்கு இலாபமாக இருக்குமா என்பதற்கும் தனிக் கேள்வி போட்டால் விவரமான பதில் சொல்ல இயலும்.

திரு. ரா. கிருஷ்ணன்: தலைவர் அவர்களே, கன்னியாகுமரியில் இருக்கக்கூடிய ரப்பர் தோட்டங்களில் பணியாற்றக்கூடிய தொழிலாளர்கள் கடந்த சில ஆண்டுகளாக போனஸ் இல்லாமல் பணியாற்றும் நிலைமை இருப்பது அரசுக்குத் தெரியுமா? அந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அரசாங்கம் எடுக்கக்கூடிய நடவடிக்கைகள் என்ன?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. இது ரப்பர் தோட்டக் கழகம் அமைப்பது பற்றிய மூலக் கேள்வி, மாண்புமிகு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிஉறுப்பினர் வழக்கம்போல் இந்த போனஸ் பிரச்னையை அதற்குள்ளே நுழைத்திருக்கிறார்கள் இருந்தாலும், அரசினுடைய நிர்வாகத்திற்கு உட்பட்ட ஒரு நிறுவனத்திற்கு போனஸ் கொடுக்க முடியாது. ஆகவேதான், உங்களுக்கு மகிழ்ச்சி தருகின்ற வகையிலே இந்த போனஸ் கொடுப்பதையெல்லாம் ஒரு பிரச்னையாக உள்ளடக்கி இது ஒரு கழகமாக மாற்றியமைக்கப்பட்டிருக்கிறது.

(முற்பகல் 9-30)

கொல்லிமலையில் வேட்டையாடுதலைத் தடுக்கும் திட்டம்

105 *வினா எண்.—18746 திரு. சி. சிவப்பிரகாசம்: மாண்புமிகு செய்தி அறநிலயத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கொல்லிமலையில் வேட்டையாடுதலைத் தடுத்து வன விலங்குகளைஅதிகமாக வளர்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: கொல்லிமலையில் காப்புக் காடுகளில் வேட்டையாடுதலைத் தவிர்க்க, தீவிர நடவடிக்கை எடுக்கப்பட்டு, வனவிலங்குகள் பாதுகாக்கப்பட்டு இயற்யையாகவே வளர்ந்து பெருக வாய்ப்பு ஏற்படுத்தப் பட்டுள்ளது.

திரு. சி. சிவப்பிரகாசம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழங்காலத்தில் அங்கே புலி, மான் போன்ற மிருகங்கள் இருந்தன. குறிப்பாக, தற்போது அங்கே காட்டுப் பன்றி, கரடி போன்ற மிருகங்கள் இருக்கின்றன. ஆகவே, அங்கே இன்னும் அதிகமான பாதுகாப்பு கொடுத்து, புலி, மான் போன்ற மிருகங்களை வளர்ப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த கொல்லிமலைப் பகுதி 5 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, அவைகளில் 3 ஏற்கனவே ஒதுக்கப்பட்ட காடுகளாக, ரிசர்வ்ட் பாரஸ்டாக இருந்தது. மேலும் 2 பகுதிகளை ரிசர்வ்ட் பாரஸ்டாக அறிவித்திருக்கிறோம். அதை ஒரு வனச் சரகமாக அறிவித்திருக்கிறோம். ஆகவே, இப்போது அங்கே வன் விலங்குகளைப் பாதுகாக்கின்ற முயற்சிகள் தீவிரமாக மேற் கொள்ளப்பட்டுள்ளன.

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவர் அவர்களே, வேட்டை ஆடுவதைப் பொழுதுபோக்காக கருதுபவர்களுக்கு அரசாங்கம் சட்டதிட்டங்கள் போட்டு நிறுத்தலாம். ஆனால் சில பெரும் பணக்காரர்கள். சில உயர்மட்ட அதிகாரிகள், அரசியல்வாதிகள் பொழுதைப் போக்குவதற்காக வேட்டையாடு கிறார்கள். அவர்களை வன இலாகாவினர் தடுக்க முடியவில்லை. ஆகவே, அதைத் தடுப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டம் எல்லோருக்கும் ஒரே மாதிரி செயல்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் யார் யார், எந்தெந்த பெரியவர்கள் எந்தெந்த அரசியல்வாதிகள் தற்போது இதிலே ஈடுபடுகிறார்கள். என்ற விவரத்தைத் தந்தால், குறிப்பாக அவர்களைக் கண்காணித்து, இந்தச் சட்டத்தை அவர்கள் மீது பாயும் அளவிற்கு ஏற்பாடுகள் செய்யப்படும்.

தமிழ்நாட்டில் தனியார்கள் சார்பில் சர்க்கரை ஆலைஅமைக்கும்திட்டம்

55 * வினா எண்.—15951 திரு. பெ.சு. திருவேங்கடம்: மாண்புமிகு சட்டம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் தனியார்கள் சார்பில் சர்க்கரைஆலை அமைக்க தமிழக அரசு மத்திய அரசுக்கு 1982–83 ஆம் ஆண்டில் சிபாரிசு செய்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரமென்ன?

மாண்புமிகு திரு. இ. பொன்னையன்: (அ) ஆம்.

(ஆ) புதிய சர்க்கரை ஆலை அமைக்க ஒன்பது விண்ணப் பங்கள் அரசுக்குக் கிடைக்கப்பெற்று, அவற்றில் ஏழு விண்ணப் பங்கள் மைய அரசுக்குப் பரிந்துரைக்கப்பட்டுள்ளன. இதில் மூன்று விண்ணப்பங்களுக்கு மைய அரசு முன் உரிமம் வழங்கியுள்ளது. ஒரு விண்ணப்பம் விண்ணப்பதாரரால் திரும்பப் பெறப்பட்டு விட்டது. மற்றொன்று மாநில அரசின் ஆய்வில் உள்ளது.

திரு. பெ. சு. திருவேங்கடம்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 9 விண்ணப்பங்களில், 7 விண்ணப்பங்களை அனுப்பியுள்ளதாக அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். 7 விண்ணப்பங்கள் என்றால், அவைகள் எந்தெந்த இடங்களில் என்பதையும் மத்திய அரசு அனுமதித்துள்ள அந்த 3 இடங்கள் எந்தெந்த இடங்களில் என்பதை அறிவிக்க இயலுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இ. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(1) பொன்னி சுகர்ஸ் மற்றும் கெமிகல்ஸ் லிமிடெட், பள்ளிப்பாளையம், சேலம் மாவட்டம்.

(2) தாராபுரம் சுகர்ஸ் மற்றும் கெமிக்கல்ஸ் லிமிடெட், குன்னப்பாளையம், தாராபுரம் வட்டம், பெரியார் மாவட்டம்.

(3) விஜயலட்சுமி சுகர்ஸ் மற்றும் கெமிக்கல்ஸ் லிமிடெட்
பெலிச்சி கிராமம், கோவை வட்டம்,
கோவை மாவட்டம்.

(4) பன்னாரியம்மன் சுகர்ஸ் லிமிடெட்,
மலையடிபுதூர் கிராமம், சத்தியமங்கலம் வட்டம்,
பெரியார் மாவட்டம்.

(5) திரு பெரியண்ணன் அவர்கள்
மூத்தனேந்தல் கிராமம், மானாமதுரை வட்டம்,
இராமநாதபுரம் மாவட்டம்.

(6) கோத்தாரி சுகர்ஸ் மற்றும் கெமிக்கல்ஸ் லிமிடெட்,
கடையநல்லூர் கிராமம், தென்காசி வட்டம்,
திருநெல்வேலி மாவட்டம்.

(7) திரு. சி. டி. இராமநாதன் அவர்கள்,
முசிறி, திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

இதுகாறும் உரிமம் பெற்றிருக்கின்ற மூன்று நிறுவனங்கள்,

(1) பொன்னி சுகர்ஸ் மற்றும் கெமிக்கல்ஸ் நிறுவனம்,

(2) பன்னாரியம்மன் சுகர்ஸ் லிமிடெட் நிறுவனம்,

(3) திரு பெரியண்ணன்

ஆகிய இந்த நிறுவனங்களுக்கு மத்திய அரசு உரிமம் வழங்கியுள்ளது.

திரு. வெ. சு. திருவேங்கடம்: தலைவர் அவர்களே, அந்த மூன்று மத்திய அரசால் பரிசீலிக்கப்படுவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், அதற்கு மாநில அரசு மத்திய அரசை அனுமதியை வழங்கவேண்டுமென்று வற்புறுத்தியுள்ளதா? இதைத் தவிர தனியார்கள் சர்க்கரை ஆலைகள் ஆரம்பிக்க முன்வருகிற போது அரசாங்கம், பரவலாக பின்தங்கிய மாவட்டங்களில், குறிப்பாக போளூர் போன்ற இடங்களில் ஆரம்பிக்க வேண்டும் என்று தொழிலதிபர்களுக்கு தொழில் அமைச்சர் அவர்கள் ஆலோசனை வழங்குவார்களா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவர் அவர்களே, மைய அரசின் ஆய்விலே நிலுவையிலே உள்ள மனுக்களை விரைவுபடுத்த வேண்டுமென்று மாநில அரசு கூறிவருகிறது, வற்புறுத்திவருகிறது. விரைவிலே அந்த உரிமங்களைப் பெற தக்க நடவடிக்கை எடுக்கிறோம். பின்தங்கிய பகுதிகளில் சர்க்கரை ஆலைகள் வரவேண்டுமென்பதில் அரசுக்கு அக்கறை இருக்கிறது. கரும்பு உற்பத்திக்கு வசதியுள்ள இடங்களில் ஆரம்பிக்க தனியார்கள் முன்வருவார்களானால் அவர்களுக்கு ஊக்கம் கொடுக்கும். அரசு, கூட்டுறவுத் துறையிலே ஆரம்பிக்கவும் அதுபோன்று ஊக்கம் காட்டி வருகிறது.



திரு. எம். ஆறுமுகம்: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறபோது கோவை மாவட்டத்தில் பெளிச்சி என்ற கிராமத்தில் சர்க்கரை ஆலை அமைக்கக் கோரி மனு வந்திருப்பதாகக் குறிப்பிட்டார்கள். ஏற்கெனவே கோவை மாவட்டத்திலே சர்க்கரை ஆலை அமைப்பதற்கு மக்களிடமிருந்து ஷேர் கலெக்ட் செய்யப்பட்டதே, அதனுடைய நிலைமைகள் எப்படியிருக்கின்றன? அந்த ஷேர்கள் இன்னும் திருப்பிக் கொடுக்கப்படவில்லை. ஏற்கெனவே கலெக்ட் செய்யப்பட்ட அடிப்படையிலே சர்க்கரை ஆலையை ஆரம்பிக்க அரசு ஏதாவது முயற்சிகளை மேற்கொள்ளுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் எந்த சர்க்கரை ஆலையைப் பற்றிச் சொல்கிறார் என்று எனக்குப் புரியவில்லை. கோவை மாவட்டத்திலே M/s Vijayalakshmi Sugars and Chemicals Ltd., Pelichi village, Coimbatore என்ற நிறுவனத்திடமிருந்து மனு வந்திருக்கிறது. அந்த மனு மைய அரசின் ஆய்வில் இருக்கிறது. ஆனால் அவர்கள் எவ்வளவு ஷேர் வசூல் செய்து இருக்கிறார்கள் என்று எனக்குத் தெரியவில்லை. அரசைப் பொறுத்தவரையில் கூட்டுறவுத் துறையில் சர்க்கரை ஆலையை அமைக்க பரிந்துரை செய்திருக்கிறது. திருத்தணியிலே கூட்டுறவுத் துறையிலே அமைப்பதற்கு அனுமதி வந்திருக்கிறது. மயிலாடுதுறையிலே அமைக்க வேண்டுமென்ற பரிந்துரை 3 ஆண்டுகள் ஆகியும் மத்திய அரசு முடிவு எடுக்கவேண்டும். விரைந்து முடிவு எடுக்க வேண்டுமென்று மைய அரசை மாநில அரசு வற்புறுத்தி வருகிறது. தொடர்ந்து வற்புறுத்தும்.

திரு. இ. அன்பழகன்: தலைவர் அவர்களே, தனியார் சர்க்கரை ஆலைகள் துவங்க என்ன விதிமுறைகள் வைக்கப்பட்டு இருக்கின்றன? மத்திய அரசில் ஏற்படுகின்ற காலதாமதத்தைக் குறைக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவர் அவர்களே மைய அரசினுடைய தாமதத்தைப் போக்க மாநில அரசு மைய அரசை வற்புறுத்திவருகிறது. தொடர்ந்து வற்புறுத்தி சுமுகமான முறையிலே அந்த உரிமங்களைப் பெற நடவடிக்கை எடுக்கும். தனியார்களைப் பொறுத்த வரைக்கும் அந்தப் பகுதியிலே ஏற்கெனவே எத்தனை ஆலைகள் இருக்கின்றன, எந்த அளவுக்கு கரும்பு உற்பத்தி இருக்கிறது, உபரி கரும்பு புதிதாக சர்க்கரை ஆலை அமைக்கின்ற அளவுக்கு இருக்குமா என்பதையெல்லாம் கணக்கில்கொண்டு economically such a sugar industry would be viable என்பதையெல்லாம் பார்த்து பரிந்துரை செய்கிறோம். மைய அரசு இதையெல்லாம் ஆய்ந்த பிறகு உரிமம் வழங்குகிறது.

கரும்புச் சக்கையைப் பயன்படுத்தி மின்சாரம் உற்பத்தி செய்யும் திட்டம்.

56—(*வினா எண் 18853)—திரு. ஆர். தியாகராசன் : மாண்புமிகு சட்டம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டிலுள்ள எல்லா கரும்பு சர்க்கரை ஆலைகளில் கிடைக்கும் கரும்புச் சக்கையைப் பயன்படுத்தி மின்சாரம் உற்பத்தி செய்ய அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், திட்ட விவரம் என்ன?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) மற்றும் (ஆ) கூட்டுறவு சர்க்கரை ஆலைகளிலிருந்து கிடைக்கும் கரும்புச் சக்கையை மட்டும் பயன்படுத்தி மின்சாரம் தயாரிக்கும் திட்டம் அரசின் பரிசிலனையில் உள்ளது. இவ்வகையில் முன்னோடித் திட்டமாக தருமபுரி மற்றும் கள்ளக்குறிச்சி கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் மின்சாரம் தயாரிக்க திட்டமிடப்பட்டுள்ளது. திருச்சி பாரத் மிகுமின் திட்ட நிறுவனத்தினர் மேற்படி திட்டத்திற்காக திட்ட அறிக்கை தயார் செய்துள்ளனர். இது அரசின் ஆய்வில் உள்ளது.

உப்பை அடிப்படையாகக் கொண்ட இரசாயனத் தொழிற்சாலைகளைத் துவக்கும் திட்டம்.

57—(*வினா எண் 20767)—திரு. சி. கணேசன் : மாண்புமிகு சட்டம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உப்பை அடிப்படையாகக் கொண்ட இரசாயனத் தொழிற்சாலைகளைத் துவங்க அரசிடம் ஏதேனும் செயல் திட்டம் உண்டா?

(ஆ) தனியார்கள் தொடங்க முன்வந்தால் அவர்கட்குத் தேவையான உதவிகளைச் செய்துதர அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) அரசு நிறுவனமான தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (டிட்கோ) இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள வாலிநோக்கத்தில் உப்பை மூலப்பொருளாகக் கொண்டு, மங்கனீசியம் உலோகம் (Magnesium Metal) தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றை அமைக்க முடிவெடுத்து வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன. இந்நிறுவனத்தின் திறன் ஆண்டொன்றுக்கு 600 மெகா டன்களாகும்.

(ஆ) உப்பைச் சார்ந்த இரசாயனத் தொழிற்சாலையை தனியார் துவங்க முன்வந்தால் அரசு அனைத்து உதவிகளையும் அளிக்கும்.



ஐந்தாயிரம் மக்கள் தொகை உள்ள கிராமங்களில் ஆரம்ப சுகாதார நிலையம் நிறுவும் திட்டம்.

106—(*வினா எண் 316)—திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் ஐந்தாயிரம் மக்கள் தொகை உள்ள கிராமங்களுக்கு ஆரம்ப சுகாதார நிலையம் ஆரம்பிக்கும் திட்டம் எந்நிலையிலுள்ளது?

(ஆ) 1978 ஆம் ஆண்டு முதல் எத்தனை கிராமங்களில் ஆரம்ப சுகாதார நிலையம் திறக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் ஒரு ஆரம்ப சுகாதார நிலையத்தை நிறுவுவது என்பது அரசின் கொள்கையாகும். 5,000 மக்கள் தொகைக்கு ஒரு துணை சுகாதார நிலையம் அமைக்க வேண்டும் என்று அரசு திட்டமிட்டுள்ளது.

(ஆ) 1978-க்குப் பின் 41 ஆரம்பச் சுகாதார நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன.

(முற்பகல் 9-40)

திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஒரு துணை ஆரம்ப சுகாதார நிலையம் 5,000 மக்கள் தொகை கொண்ட கிராமங்களுக்கு கண்டிப்பாக ஆரம்பிப்பதற்காக கொள்கை அரசிடம் இருக்கிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். ஆனால் அப்படி கணக்குப் பார்த்தால் தமிழ்நாடு முழுவதும் பல ஊராட்சி ஒன்றியங்களில் துணை ஆரம்ப சுகாதார நிலையங்கள் திறக்கப்படாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா? அவைகளை திறப்பதற்கு உரிய நடவடிக்கையை அரசு மேற்கொள்ளுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் என்னுடைய பதிலை சரியாகப் புரிந்து கொள்ளவில்லை என்று நான் கருதுகிறேன். துணை ஆரம்ப சுகாதார நிலையம் (சப்-சென்டர்), அதாவது தாய் சேய் நல விடுதி என்றுபெயர். ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் இருக்கிறது. அதற்கு மேல் 41 ஒன்றியங்களில் இரண்டாவது ஆரம்ப சுகாதார நிலையம் ஏற்படுத்த இருக்கிறோம். தாய் சேய் நல விடுதியை (சப்-சென்டர்) பொறுத்தவரையில் அகில இந்தியாவில் ஒரு பெரிய வரலாற்றைப் படைத்து இருக்கிறோம். 1—4—1978-ல் 2,964 விடுதிகள் இருந்தன. இன்றையதினம் அதாவது 31—1—1984-ல் 4,909 விடுதிகள் இருக்கின்றன. இது ஏறத்தாழ

6,000 மக்கள் தொகைக்கு ஒரு கிளை நிலையமாக இருக்கிறது. இன்னும் ஆயிரம் சுகாதார கிளை நிலையங்களை அமைத்தால் நம்முடைய டார்கெட் 6—வது ஐந்தாண்டு திட்ட பிளானை நாம் எட்டிவிடுவோம்.

திரு. த. வேணுகோபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் ஒரு துணை ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க வேண்டும் என்று நான் இங்கே கேள்வி கேட்டு இருக்கிறேன். ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கு அந்த அந்த ஊராட்சி ஒன்றியங்கள் மக்கள் தொகை 5,000 இருக்கவேண்டும் என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். என்னுடைய தொகுதியில் ரெட்டியார் பாளையம் என்ற ஊரில் 10 ஆயிரம் ரூபாயும், 5 ஏக்கர் நிலமும் 1978-லே அரசாங்கத்திற்கு தந்துவிட்டது. இதுவரை அங்கு துணை ஆரம்ப சுகாதார நிலையம் திறக்கப்படவில்லை என்பதை சொல்வதோடு, அந்த ரெட்டியார்பாளையத்தில் உடனடியாக ஆரம்ப சுகாதார நிலையத்தைத் திறப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சப்—செண்டரைப் பற்றி சொல்கிறாரா என்ற முழு விவரத்தையும் அவர் தருவார்களானால்—நம்மைப் பொறுத்தவரையில் எத்தனை கிளை நிலையங்கள் அமைக்கவேண்டுமோ அவைகளை நாம் திறந்து ஆகவேண்டும். அது நம்முடைய கொள்கை ஆகும். நிச்சயமாக அனுதாபத்தோடு கவனிக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுகின்ற நேரத்தில் தமிழகத்தில் ஏறத்தாழ 40—க்கும் அதிகமான ஒன்றியங்களில் இரண்டாவது ஆரம்ப சுகாதார நிலையம் ஏற்படுத்தப்பட்டு இருக்கிறது என்று சொன்னார்கள். இந்த ரீதியில் போனால் தமிழகத்தில் இருக்கின்ற எல்லா ஊராட்சி ஒன்றியங்களிலும் இரண்டாவது ஆரம்ப சுகாதார நிலையம் எப்போது நிறைவேற்றப்பெறும்? அதேநேரத்தில் பொருளாதார துறையில் பின்தங்கிய திருமங்கலம், உசிலம்பட்டி, சேடப்பட்டி ஆகிய இடங்களில் இரண்டாவது ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கு நடவடிக்கைகளை விரைவாக எடுத்துக் கொண்டு அரசு முடிக்குமா? அப்படி ஆனால், அது எப்போது முடிக்கப்படும்?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 6-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஒரு பிரச்சினை எழுந்தது, நாம் உடனடியாக எதற்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டும் என்று. இரண்டாவது ஆரம்ப சுகாதார நிலையம் திறப்பதற்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டுமா? அல்லது இந்த சப்-செண்டர்ஸ் ஒப்பன் பண்ணுவதற்கு



முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமா என்ற பிரச்சினை எழுந்தது. முதலில் சப்—செண்டர்ஸ் கட்டிவிட்டால் அதனால் தாய்மார்களுக்கு பிரசவ வசதி ஏற்படும். நாம் அதற்கு ஏற்பாடு செய்துவிட்டால் இன்ஃபிராஸ்ட்ரக்சர் ஏற்படும். அதை வைத்துக்கொண்டு இரண்டாவது ஆரம்ப சுகாதார நிலையங்களை ஏற்படுத்துவதற்கு நன்றாக இருக்கும். இதுவரை நாம் 41 ஆரம்ப சுகாதார நிலையங்களை ஏற்படுத்தியிருக்கிறோம். இடையில் 6 ஆண்டுகளில் செகண்டு பிரைமரி ஹெல்த் செண்டர்ஸ் ஒப்பன் செய்யாமல் இருந்தது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இரா. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் 5,000 மக்கள் தொகை இருந்தால் அங்கு துணை ஆரம்ப சுகாதார நிலையம் திறக்கப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். தமிழகத்தில் 1983—84-ல் எத்தனை பிரைமரி ஹெல்த் செண்டர்ஸ், துணை ஆரம்ப சுகாதார நிலையங்கள் துவக்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு இருக்கிறது? அதற்கு எந்த எந்த கிராமங்களை தேர்வு செய்யப்பட்டு இருக்கிறது என்பதை தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, 1983—84 ஆம் ஆண்டு 949 கிளை நிலையங்கள் துவக்க வேண்டுமென்று திட்டமிட்டிருக்கிறோம். அதில் வெற்றி பெறுவோம் என்ற நம்பிக்கை இருக்கிறது. 17 ஆரம்ப சுகாதார நிலையங்களை நாம் துவக்க ஏற்பாடு செய்திருக்கிறோம் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. துரை ராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, செகண்ட் பிரைமரி ஹெல்த் செண்டர்களைத் திறப்பதைப் பிறகு பரிசீலிக்கலாம் என்று அரசு முடிவெடுத்திருப்பதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். எனவே, இருப்பதையாவது அப்கிரேட் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா? மூகனூர் ஒன்றியத்தில் நீண்ட நெடுங்காலமாக அப்படிப்பட்ட கோரிக்கை இருக்கிறது. அதைப் பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அப்கிரடேஷன் என்பது வேறு. நான் பதில் சொல்லும் நேரத்தில் இரண்டாவது ஆரம்ப சுகாதார நிலையம் துவங்குவதைத் தள்ளி வைக்க வேண்டுமென்று சொல்லவில்லை. இம்பார்ட்டன்ஸ், சப்-செண்டர்களுக்கு என்றுதான் சொன்னேன். இதைச் செய்து கொண்டிருக்கிறோம். அப்கிரடேஷன் ஆஃப் பிரைமரி ஹெல்த் செண்டர்ஸ் என்பது நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலே, ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்திலேயே சொல்லப்பட்டது. ஆனால் இப்பொழுது ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில்தான், ஏற்கனவே சொல்லப்பட்ட அந்தக் கருத்தை, அந்தக் கொள்கையை நாம் இப்பொழுது நடைமுறைப்படுத்திக்

கொண்டிருக்கிறோம். அப்பொழுதே நடைமுறைப்படுத்தியிருக்க வேண்டும். நம்முடைய குறிக்கோள் என்னவென்றால், நான்கு ப்ரைமரி ஹெல்த் சென்டர்களுக்கு ஒரு ப்ரைமரி ஹெல்த் சென்டர் அப்கிரேடட் ஆக இருக்கவேண்டுமென்பது நம்முடைய இறுதிக் குறிக்கோள்.

## புற்றுநோய் உண்டாவதற்கான காரணங்கள்

107 (*வினா எண் 15203)—திரு. ஜே. எஸ். இராசு ; மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புற்றுநோய் உண்டாவதற்கான காரணங்கள் யாவை?

(ஆ) புற்றுநோய் சிகிச்சைக்கான மருத்துவ வசதிகள் தமிழகத்தில் எந்தெந்த மருத்துவ மனைகளில் உள்ளன ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே ; (அ) மற்றும் (ஆ) விவர அறிக்கை **ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. ஜே. எஸ். இராசு : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவரவர்களே, தொடக்கத்திலேயே ஒருசிறிய பரிசோதனையின் மூலம் புற்றுநோயா அல்லவா என்று துல்லியமாகக் கண்டுபிடிக்க ரஷ்யாவில் ஒரு கருவியைக் கண்டுபிடித்திருப்பதாக அறிகிறோம். இது பற்றி அரசுக்குத் தெரியுமா ? ஆமெனில், அந்தக் கருவியை வரவழைத்து நம்முடைய நாட்டு மக்களுக்குப் பயன்படுத்துவதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அந்தக் கருவியை வரவழைப்பதைவிட மிக முக்கியமாக நாம் செய்ய வேண்டியது என்னவென்றால் தமிழகத்திலுள்ள அத்தனை தாய்மார்களுக்கு பாம்ஸ்மியர் என்ற டெஸ்டை, சர்வைகல்ஸ்மியர் என்ற டெஸ்டைச் செய்துவிட்டால் அவர்களில் பலருக்கு சர்வைகல்ஸ்மியர் கேன்சர் என்பது வருவதற்கு முன்பே நமக்குத் தெரிந்துவிடும். தமிழகத்தைப் பொறுத்தவரையில் பாம்ஸ்மியர் என்ற டெஸ்டை எடுத்துப் பார்க்க வேண்டும் என்ற அந்தத் திட்டத்தை முழுமைப்படுத்த வேண்டும் என்று அந்தத் திட்டத்தில் நாம் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறோம்.

திரு. ஜே. எஸ். இராசு ; மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவரவர்களே, ஆயுர்வேத முறையில் புற்றுநோயைக் கண்டுபிடிப்பதற்கான முறைகள் இருக்கின்றனவா ? அப்படியென்றால் அது எந்த அளவிற்குப் பயன்படுத்தப்படும் என்பதை அமைச்சரவர்கள கூறுவார்களா ?

*384-385-ம் பக்கங்களில்—இணைப்பாக அச்சிடப்பெற்றுள்ளது.





மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே ; மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அதுபற்றி இப்பொழுது எந்தவிதமான திட்டவட்டமான ஒரு செய்தியும் நம்மிடத்தில் இல்லை.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : பேரவைத் தலைவரவர்களே, காஞ்சிபுரத்திலுள்ள அறிஞர் அண்ணா புற்றுநோய் நிலையத்தை இன்டர்நேஷனல் ரிசர்ச் இன்ஸ்டிட்யூட்டாக மாற்றுவதற்கு அரசு ஏதேனும் உத்தேசித்துள்ளதா ? அம்மருத்துவ மனையின் வளர்ச்சிக்கு என்னென்ன செயல் திட்டங்களை வைத்திருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே ; மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, காஞ்சிபுரத்தில் பேரறிஞர் அண்ணாவினுடைய பெயரிலே இயங்குகின்ற அந்த மருத்துவமனையைப் பொறுத்த வரையில், ஏற்கனவே 100 படுக்கைகளுக்கு ஒரு மருத்துவமனை இருக்கிறது; இப்பொழுது 250 படுக்கைகளுக்கு ஒரு மருத்துவ மனையாக, நல்லதொரு பெரிய மையமாக, ஸ்தாபனமாக ஏற்படுத்த ஏறத்தாழ 5 கோடி ரூபாய் செலவில் அதற்கான எல்லா ஏற்பாடுகளையும் செய்துகொண்டு வருகிறோம். மாண்புமிகு உறுப்பினரவர்கள் அதைப்பற்றி கவலை தெரிவித்திருக்கிறார்கள். இன்னும் இரண்டு மூன்று மாதங்களுக்குள் உடனடியாக இயங்குவதற்கு ஏற்பாடு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 9-50)

டாக்டர் கே. சௌந்திரராஜன் ; மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, குறிப்பாகக் கருப்பையில் ஏற்படும் புற்றுநோயைக் குணப்படுத்துவதற்குத் தனியான இடங்கள் மதுரை, சென்னையில் தான் இருக்கின்றன. நாம் மருத்துவக் கல்லூரி நடத்திக் கொண்டிருக்கிறோம். கோவை, திருநெல்வேலி, தஞ்சாவூர் என்று இப்படி மூன்று இடங்களில் மருத்துவக் கல்லூரிகளை நாம் நடத்துகிறோம். அந்தக் கல்லூரிகளை ஒட்டிய மருத்துவமனைகளில், கருப்பையில் உருவாகக்கூடிய நோயினைப் பற்றி அறிந்துகொள்கின்ற வகையிலே ஒரு ஸ்பெஷல் கான்சர் டிப்பார்ட்மென்ட் இருக்கின்றதா ? இல்லை என்றால் அவ்வாறு உருவாக்க உடனடியாக அரசு முன்னுரிமை அளித்து ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே ; தலைவர் அவர்களே, இது எனக்கு மிகவும் துணையாக இருக்கக்கூடிய கேள்வி. இருப்பினும் நிதிநிலையைப் பொறுத்துத்தான் இதைச் செய்ய வேண்டும்.

## Primary Complex என்னும் காசநோய்க்கான அறிகுறிகள்

108 *(வினா எண் 15668)—திரு. எம். சின்னசாமி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) Primary complex என்னும் காசநோயின் அறிகுறிகள் பெரும்பாலும் எல்லாக் குழந்தைகட்கும் ஏற்பட்டுள்ளது குறித்து அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில் அதனை ஒழிக்க அரசு ஏதேனும் Crash Programme (தீவிரத் திட்டம்) வைத்துள்ளதா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: (அ) ப்ரைமரி காம்ப்ளக்ஸ் காசநோய்க்கு சமமாகக் கருதப்பட்டு சிகிச்சை அளிக்கப்படுகிறது. நோயை சரியாகக் கண்டறிய ப்ரைமரி காம்ப்ளக்ஸ்-க்கான அறிகுறிகளுடன் காணப்படும் சிறுவர்களை முறையாக சோதனை செய்து பார்த்தபின் அவர்களைக் கவனிப்பில் வைக்கவோ அல்லது சிகிச்சை அளிக்கவோ செய்யப் படும்.

(ஆ) காசநோய்த் தொற்றின் இயற்கையான விளைவுதான் ப்ரைமரி காம்ப்ளக்ஸ் எனப்படுவது. அதற்குத் தேவையான சிகிச்சை வசதிகள் அனைத்து அரசினர் மருத்துவமனைகளிலும், ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் சிறுவர்களுக்கான மருத்துவ மனைகளிலும், பொது மருத்துவமனைகளிலுள்ள சிறுவர்களுக் கான பகுதியிலும் உள்ளன. சிறுவர்களுக்கு பிற்காலத்தில் காச நோய் தோன்றாமல் இருப்பதற்கு வேண்டிய அளவில் பி.சி.ஜி. தடுப்பு ஊசி அளிக்கப்படுகின்றது.

திரு. எம். சின்னசாமி: தலைவர் அவர்களே, ப்ரைமரி காம்ப்ளக்ஸ் என்கின்ற நோய் பெரும்பாலும் நகரத்திலே இருக்கின்ற எல்லா குழந்தைகளுக்கும் வருகின்றது. அவ்வாறு வருவதற்கான காரணம் என்ன? நோய் வந்ததற்குப் பிறகு தடுப்பதற்குப் பதில் நோய் வருவதற்கு முன்பாகவே அதனைத் தடுக்கின்ற வகையிலே ஏதேனும் சிறப்பான திட்டங்களை அரசு வைத்திருக்கின்றதா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவர் அவர்களே, பி.சி.ஜி. என்பதைப் பொறுத்தவரையில் 1980 ஆம் ஆண்டி லிருந்து 1982 ஆம் ஆண்டு டிசம்பர் இறுதி வரையில் 39,14,581 பேருக்கு பி.சி.ஜி. வேக்ஸினேஷன் கொடுக்கப்பட்டிருக்கின்றது.

திரு. எம். சின்னசாமி: தலைவர் அவர்களே, ப்ரைமரி காம்ப்ளக்ஸ் வருகின்ற, ஏழைக் குழந்தைகளின் தாய்மார்கள் இந்த வியாதியினைப் பற்றித் தெரியாமல் அவர்கள் வைத்தியம் செய்யாமலே இருக்கிறார்கள். எனவே ஆரம்ப சுகாதார நிலையங்கள் மூலம் டாக்டர்களை கிராமங்களுக்கு அனுப்பி அவர் களை நேரடியாகச் சந்தித்து அந்த நோய் பற்றித் தெரிந்து குணப்படுத்துவதற்குரிய மருந்துகளைக் கொடுப்பதற்குரிய ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவர் அவர்களே, சத்துணவு மையங்களில் நாம் குழந்தைகளைப் பரிசோதனை செய்து கொண்டிருக்கிறோம். அதாவது பெரிய அளவில், அமைதியான புரட்சியாக சத்துணவு மையங்களில் டாக்டர்களை



அனுப்பி குழந்தைகளைப் பார்ப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்தி ருக்கிறோம். சத்துணவு மையங்களில் இருக்கக்கூடிய குழந்தை களின் தாய்மார்கள் எப்படி எல்லாம் குழந்தைகளைக் காப்பாற்ற வேண்டும் என்கின்ற விவரங்களையும் புத்திமதிகளையும் கூறுகின்ற வகையில் அதாவது ஹெல்த் எஜுகேஷன் ஃபார் சில்ட்ரன் இன் தீஸ் சென்டர்ஸ் என்ற வகையிலே சொல்கின்ற அளவுக்கு தீவிரப்படுத்த நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகின் றோம். இதன் மூலமாக முன்பிருந்ததை விட சென்ற ஓரிரு ஆண்டுகளில் நல்ல வெற்றி கிடைத்திருக்கின்றது.

டாக்டர் கே. சௌரிராஜன்: தலைவர் அவர்களே, பி.சி.ஜி வேக்ஸினேஷனை ப்ரமரி காம்ப்ளக்ஸ் வராமல் இருப்பதற்காகக் கொடுத்துக் கொண்டிருக்கிறோம் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் பி.சி.ஜி. கொடுக்கப்பட்ட குழந்தை களில் எத்தனை பேருக்கு ப்ரைமரி காம்ப்ளக்ஸ் வந்திருக்கின்றது; பி.சி.ஜி. கொடுக்காத குழந்தைகளில் எத்தனை சதவீதம் ப்ரைமரி காம்ப்ளக்ஸ் வந்திருக்கின்றது என்ற புள்ளிவிவரம் அமைச்சரிடத் திலே இருக்கின்றதா? இப்போதுள்ள ஒரு லேட்டஸ்ட் பரிசோதனையின் மூலம் பி.சி.ஜி. கொடுத்தாலும் எந்தவிதமான லாபமும் இல்லை என்று அதாவது The percentage of the incidence is the same in both control as well as B.C.G. immunised population என்று புதுத் தகவல் வந்து கொண்டிருக்கின்றது. அதைப்பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? எனவே இந்தப் ப்ரோகிராம் கைவிடப்படுகின்றதா? இராஜாஜி அவர்கள் சொன்னது போல் அதனைக் கைவிடுவார்களா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவர் அவர்களே, பல ஆண்டுகளாக இருந்து வருகின்ற ஒரு கான்ட்ரோவர்சியாகும் இது. இப்போது ஒட்டு மொத்தமாக பி.சி.ஜி. கொடுப்பது For the third world, B.C.G. vaccination is the only answer to prevent or reduce the onset of (a) primary complex (b) tuberculosis. This is the view of the World Health Organisation (W.H.O).

திரு மா. சின்னராசு: தலைவர் அவர்களே, ப்ரைமரி காம்ப்ளக்ஸ் என்ற நோய் இளம் குழந்தைகளாக இருக்கின்ற போது வருவதால் அந்நோயினால் பாதிக்கப்பட்ட குழந்தைகள் பெரியவர்களாக வளர்ந்த பருவத்தில் என்லார்ஜ்மென்ட் ஆஃப் ஹார்ட் என்ற ஒரு வியாதிக்கு உள்ளாக்கப்படுகிறார்கள் என்று மருத்துவர்கள் சொல்வது உண்மையா? அப்படி இருந்தால் அதைத் தவிர்ப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவர் அவர்களே, ப்ரைமரி காம்ப்ளக்ஸ் என்ற அந்த வியாதியைக் குணப்படுத்தி னாலே போதும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சித்தமருத்துவம் குறித்த மத்திய அரசின் அங்கீகாரம்.

109—(* வினா எண் 17935) திரு. ஆர். ரங்கசாமி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சித்த மருத்துவத்தை தனி மருத்துவமாக மத்திய அரசு அங்கீகரித்துள்ளதா?

(ஆ) இந்திய மருத்துவ ஆய்வுக்குழுவில் சித்தமருத்துவம் சேர்க்கப்படவில்லை என்பது உண்மையா?

(இ) இது குறித்து தமிழக அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) ஆம்.

(ஆ) ஆயுர்வேதம் மற்றும் சித்த மருத்துவத்திற்கு பொதுவாக ஒரு ஆய்வுக்குழு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

(இ) சித்தா பிரிவுக்கென்று தனியாக ஒரு மத்திய ஆராய்ச்சிக் கழகம் ஏற்படுத்த வேண்டுமென்று மத்திய அரசு வலியுறுத்தப்பட்டு வருகிறது.

திரு. ஆர். ரங்கசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சித்த மருத்துவம், பொதுமக்களுக்கு, ஏழைகளுக்கு அதிகச் செலவில்லாமல் கிடைக்கின்ற ஒரு மருத்துவமாகும். ஆகவே, சித்த மருத்துவத்திற்கென்று தனியாக ஆராய்ச்சிக் கழகம் ஏற்படுத்த வேண்டுமென்று மத்திய அரசை நமது அரசாங்கம் கேட்டுக் கொண்டுள்ளது. மத்திய அரசு இப்பொழுது என்ன நடவடிக்கை எடுத்துள்ளது? அது விரைவாக வருகின்ற சூழ்நிலை உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசாங்கத்தைப் பொறுத்தவரை 'இந்தியன் மெடிசன்' என்பதற்கு அவர்கள் கொடுத்த விளக்க வாசகத்தை நான் படிக்கின்றேன். Indian Medicine means—The System of Indian Medicine commonly known as Ashtanga Ayurveda, Siddha or Unani என்று கொடுத்திருக்கிறார்கள். ஆகவே, அவர்கள் இந்தியன் மெடிசன் என்றால் இவை எல்லாம் வருகின்றன என்று சொல்கிறார்கள். நான் தமிழக சர்க்கார் சார்பாக, தமிழக மக்கள் சார்பாக சித்த வைத்தியத்தை ஒரு தனி அமைப்பாக ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். அதற்கு அவர்கள் Siddha system is not All India character. Siddha system is mainly prevalent only in Tamil Nadu என்று சில வியாக்கியானங்களைக் கொடுத்திருக்கிறார்கள். நாம் அதை ஏற்றுக் கொள்ளவில்லை. மீண்டும் மதிப்பிற்குரிய சங்கரானந்த் அவர்களுக்கு ஒரு கடிதம் அனுப்பி இருக்கிறோம். தமிழகத்திலே இருக்கிற அத்தனை எம்.பி.க்களுக்கும் கடிதம்



எழுதி இருக்கிறோம். மத்திய அமைச்சருக்கு எழுதிய கடிதத்தினுடைய நகலை, நம்முடைய ஸ்பெஷல் ரெப்ரசன்டேடிவ்விடம் கொடுத்து, அவர்களும் அதிலே ஈடுபட வேண்டுமென்று கேட்டிருக்கிறோம்.

திரு. இரெ. இராசமாணிக்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது தமிழகத்தில் சித்த வைத்தியத்திலும் ஆயுர்வேத வைத்தியத்திலும் பட்டம் பெற்றவர்கள் எத்தனை பேர்கள் இருக்கிறார்கள்? சித்த வைத்திய மருத்துவ மனைகள் பல இடங்களிலே மூடப்பட்டிருக்கின்றனவே, அவை திறக்கப்படாமலிருப்பதற்கு என்ன காரணம் என்று கேட்டபொழுது, பட்டப் படிப்பு படித்தவர்கள் இல்லையென்று சொல்கிறார்களே, அப்படிப் பட்ட நிலைமை தமிழகத்திலே இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீண்ட காலமாக, ஆரம்பச் சுகாதார நிலையங்களில் தனியாக சித்தப் பிரிவு இல்லாமல் இருந்தது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியும் என்று கருதுகிறேன். ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உடனடியாக எல்லா இடங்களிலும் சித்தப் பிரிவு ஏற்படுத்த வேண்டுமென்று துணிவாக ஆணை பிறப்பித்து அதற்கான ஏற்பாடு செய்தார்கள். அதன்பிறகு, இப்பிரிவுக்குத் தனியாக சித்த வைத்தியப் பட்டம் பெற்றிருக்கிற டாக்டர்களை நியமித்திருக்கிறோம். சில இடங்களிலே பட்டப் படிப்பு படித்தவர்கள் கிடைக்கவில்லை என்பதற்காக மற்ற பி2 வகுப்பு மருத்துவர்களைப் போட ஏற்பாடு செய்திருக்கிறோம்.

டாக்டர் கே.பி. இராமலிங்கம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, சித்த மருந்துகளால் 'ஆப்டர் எபெக்ட்ஸ்' இல்லையென்று சொல்லப்படுகிறதே அது உண்மையா? அப்படி 'ஆப்டர் எபெக்ட்ஸ்' இல்லையென்றால் அதை மேலும் ஊக்குவிக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசாங்கம் தான் சித்த வைத்தியத்தை ஊக்குவிப்பதற்காகவும், வாய்ப் பேச்சளவில் இல்லாமல், திட்டவட்டமாக, தனியாக நடவடிக்கை எடுத்துக் கொண்டு, மதிப்பிற்குரிய முத்தமிழ்க் காவலர் திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள் பாராட்டும் அளவுக்குப் பல காரியங்களை நாம் செய்திருக்கிறோம் என்பது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியும் என்று கருதுகிறேன்.

### அரசு மருத்துவமனைகளில் குறைந்த கட்டணத்தில் முழு அளவில் சோதனை செய்து கொள்வதற்கான திட்டம்.

110—(* வினா எண் 21475) திரு. க. முத்துக்கிருஷ்ணன்: திரு. மி. வின்சென்ட்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு மருத்துவமனைகளில் குறைந்த கட்டணத்தில் முழு அளவில் ஒருவர் சோதனை செய்துகொள்ள அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இத் திட்டம் எங்கெங்கு அமுல்படுத்தப் படுகிறது?

(இ) அதற்காக வசூல் செய்யப்படும் கட்டணம் எவ்வளவு?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: (அ) ஆம்.

(ஆ) இத்திட்டம், கீழ்க்கண்ட மருத்துவமனைகளில் அமுல் படுத்தப்பட்டு வருகிறது;

(1) அரசு பொது மருத்துவமனை, சென்னை.

(2) கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, சென்னை.

(3) அரசு ஸ்டான்லி மருத்துவமனை, சென்னை.

(4) அரசு இராயப்பேட்டை மருத்துவமனை, சென்னை.

(5) மாவட்ட தலைமை மருத்துவமனை, சேலம்.

(6) மாவட்ட தலைமை மருத்துவமனை, திருச்சி.

(இ) ரூபாய் 10 மட்டும்.

(முற்பகல் 10-00)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. ஏ. சி. சண்முகம்; மாண்புமிகு தலைவர் அவர்களே, அரசுப் பணிகளில் இருந்து வரும் டாக்டர்கள் தங்களுடைய பணி நேரங்களில் கூட தாங்கள் சொந்தமாக பணி செய்து சம்பாதிப்பதிலேயேதான் கருத்தாக இருக்கிறார்கள். அரசு மருந்துகளைக் கூட அவர்கள் பயன்படுத்திக் கொள்வதற்கு வாய்ப்பு இருக்கிறது. ஆகவே ஆந்திரா அரசு கொண்டு வந்ததைப் போல டாக்டர்களின் பிரைவேட் பிராக்டீஸை தடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மூலக் கேள்விக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை.



### காஞ்சிபுரத்தில் வீட்டுவசதி வாரியம் மூலம் கூடுதல் குடியிருப்புகள் கட்டுவதற்கான கோரிக்கை.

111—(* வினா எண் 11613) திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்: மாண்புமிகு சுற்றுப்புறச் சூழல் கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா.—

(அ) காஞ்சிபுரத்தில் வீட்டுவசதி வாரியக் குடியிருப்புகள் கூடுதலாகக் கட்ட வேண்டுமென கோரிக்கை வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், இதன்மேல் அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா: (அ) ஆம்.

(ஆ) காஞ்சிபுரத்தில் புறநகர் திட்டத்தின்கீழ் ஹட்கோ நிறுவன நிதியுதவியுடன் ''பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினர்'' ''குறைந்த வருவாய்ப் பிரிவினர்'' மற்றும் ''நடுத்தர வருவாய்ப் பிரிவினர்'' களுக்கு வீடுகள் கட்டும் திட்டமும், ''உயர் வருவாய்'' மற்றும் ''நடுத்தர வருவாய்ப் பிரிவினர்'' களுக்கான வீட்டுமனை மேம்படுத்தும் திட்டமும், வீட்டு வசதி வாரியத்தால் துவங்கப் பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு ஹட்கோ நிறுவனம் ரூ; 46.94 லட்சம் நிதியுதவி அளித்துள்ளது.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்திற்கென்று காஞ்சிபுரத்தில் மொத்தம் எத்தனை ஏக்கர் நிலங்களை அரசு ஆர்ஜிதம் செய்துள்ளது ? எத்தனை வீடுகள் கட்ட அரசு திட்டமிட்டுள்ளது என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காஞ்சிபுர வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சிக் கழக நிதியுதவியுடன் நலிந்த பிரிவினருக்காக 136 வீடுகளும், மற்றும் குறைந்த வருவாய் உள்ளவர்களுக்கும், உயர் வருவாய் உள்ளவர்களுக்கும் வீடுகள் கட்டப்படுகின்றன. 13 வீட்டு மனை மேம்பாட்டுத் திட்டம் வீட்டு வசதி வாரியத்தால் நிறைவேற்றப்பட இருக்கிறது. நடுத்தரப் பிரிவினர்களுக்காக 60 வீடுகள் கட்டும் திட்டமும், 50 வீட்டு மனைகள் மேம்படுத்தும் திட்டமும் வீட்டு வசதி வாரியத்தால் செய்யப் பட்டுக் கொண்டிருக்கின்றன, மற்றும் 262 தொடர் வீடுகளும் உயர் வருவாய் பிரிவினருக்கு, 10 வீடுகளும் கட்டும் திட்டத்திலே இப்போது நடைமுறையிலே இருக்கிறது. இதுவரையில் 859 வீடுகள் காஞ்சிபுரத்தைப் பொறுத்த வரையில் கட்டுகிற நிலைமை உள்ளது. 272 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றன.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, குறைந்த வருவாய் பிரிவினர்க்கு ஒதுக்கீடுகளில் நெசவாளர்களுக்கென்று வீடுகள் ஒதுக்கப்படுமா? அதேபோல அரசு ஊழியர்களுக்கு கூடுதலாக வீடு கட்ட அரசிடம் திட்டம் உள்ளதா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறைந்த வருவாய் பிரிவினர்க்கு 134 வீடுகள் கட்டப்படும். அதிலே நெசவாளர்களுக்கும் வீடுகள் ஒதுக்கப்படும். ஆனால் நெசவாளர்களுக்கு ஒதுக்கீடுகள் செய்யப் படும் நேரத்திலே நெசவாளர்களுக்கு வேண்டிய நெசவு மேடை, தறிக்குழி ஆகியவற்றை அவர்களுடைய செலவிலே தான் அமைத்துக் கொள்ள வேண்டும். அதேபோல அரசு ஊழியர் களுக்கும் வீடுகள் கட்டப்படும்.

திரு. கு. பா. பழனியப்பன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, வீட்டுவசதி வாரியத்தால் வீடுகள் கட்டப்படுகிறபோது எந்தெந்த ஊர்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பதென்று ஏதாவது வரைமுறை இருக்கிறதா? அப்படியென்றால் விழுப்புரத்திற்கு முன்னுரிமை கொடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மூலக்கேள்விக்கும் இதற்கும் தொடர்பில்லை.

திருநெல்வேலி மாவட்ட பத்திரிகைத் துறை ஊழியர்களுக்கான வீடுகள்.

112—(* வினா எண். 18887) திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்; திரு. ரா. கிருஷ்ணன் : மாண்புமிகு சுற்றுப்புறச் சூழல் கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டத்தில் வீட்டுவசதி வாரியத் தால் கட்டப்பட்ட வீடுகளில் சிலவற்றை அரசாங்க ஒதுக்கீட்டு அடிப்படையில் திருநெல்வேலி மாவட்ட பத்திரிக்கைத் துறை ஊழியர்களுக்கு வீடு ஒதுக்கித் தருமாறு தொடர்ந்து கோரிக்கைகள் சமர்ப்பித்துள்ளார்களென்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், இதுபற்றிய விவரம் என்ன ?

(இ) அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா : (அ&ஆ) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டத்தில் வீட்டு வசதி வாரியத்தால் கட்டப்பட்ட வீடுகளில் சிலவற்றை அரசாங்க ஒதுக்கீட்டு அடிப்படையில் திருநெல்வேலி மாவட்ட பத்திரிக்கைத் துறை ஊழியர்களுக்கு வீடு ஒதுக்கித் தருமாறு கேட்கப்படுகிறது. வீட்டு வசதி வாரியத்தினுடைய பரிந்துரையை ஏற்றுக்கொண்டு அவர்களுக்கு வீடுகள் அளிப்பதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.



திரு. ரா. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொருளாதாரத்தில் மிகவும் நலிந்துள்ள பத்திரிக்கை ஊழியர்களுக்கு வீடுகள் ஒதுக்கித் தருவது மிகவும் அவசியம். எனவே நீண்ட கால கோரிக்கையை நிறைவேற்றுகிற வகையிலே அவர்களுக்கு விரைவில் ஏற்பாடு செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன். அத்தோடு எத்தனை பேர்களுக்கு வீடுகள் வழங்கப்படும் என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு தலைவர் அவர்களே, பத்திரிக்கை துறையிலே பணியாற்றிக் கொண்டு இருக்கிற ஊழியர்கள் என்று சொல்கிற நேரத்திலே இன்றைக்கு நிருபர்களாக பணியாற்றிக் கொண்டிருக்கிறவர்களுக்கு பல்வேறு இடங்களில் வீடுகள் வழங்கப்பட்டிருக்கின்றன. திருநெல்வேலி பொறுத்தவரையில் இப்போது கட்டப்பட்டுக் கொண்டிருக்கிற வீடுகளில் அரசு ஒதுக்கீட்டில் அவர்களுக்கு முதலில் இரண்டு வீடுகள் தரலாம் என்றும், அந்த வீடுகளை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் யாருக்கு பரிந்துரை செய்கிறார்களோ அவர் களுக்கு அளிக்கலாம் என்றும் முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. ரா. கிருஷ்ணன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, ஆரம்பத்திலே இரண்டு வீடுகள் என்று சொல்லப்படுகிறது. ஏற்கெனவே அங்கீகரிக்கப்பட்ட பத்திரிக்கைகளுக்காவது அதிக மாக வழங்குவது தான் நியாயமாக இருக்கும். ஆகவே ஒதுக்கப்படுகிற வீடுகளின் எண்ணிக்கையை உயர்த்த வேண்டு மென்ற பத்திரிக்கையாளர்களின் கோரிக்கையையும், என்னுடைய கோரிக்கையையும் வைத்து, அதை பரிவோடு அரசு கவனிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன். அதோடு சென்னையில் இருப்பவர்களுக்கு பிரச்னையை தீர்ப்பதற்கு என்ன என்ன ஏற்பாட்டை அரசு செய்யும் என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பரிவோடு கேட்டு இருக்கிற காரணத்தால் பரிவோடு கவனிக்கவேண்டும் என்ற நிலையில் இருக்கிறோம். ஆனால் அவருக்குப் பரிவு நான் அவரைப் பாராட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன். சென்னையிலே இருக்கிற ஊழியர்களாக இருந்தாலும் அல்லது வேறு எங்கே இருக்கும் ஊழியர்களாக இருந்தாலும் பரிவிலிருந்து கொஞ்சமும் தவறுவது இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தாரமங்கலம் ஒன்றியத்தில் பனைபொருள் பயிற்சி நிலையம் ஆரம்பிக்கும் திட்டம்.

113—(* வினா எண். 18206) திரு. செ. செம்மலை : மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம் தாரமங்கலம் ஒன்றியத்தில் பனை பொருள் பயிற்சி நிலையம் ஆரம்பிக்க எந்த இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளது?

(ஆ) எத்தனை பேர்களுக்கு அந்த நிலையத்தில் பயிற்சி அளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது?

மாண்புமிகு திருமதி விஜயலட்சுமி பழனிச்சாமி : (அ) சேலம் மாவட்டம் தாரமங்கலம் ஒன்றியத்தில் தொளசம்பட்டி மற்றும் ஓலைப்பட்டி ஆகிய இரண்டு இடங்களில் பனைப் பொருள் பயிற்சி நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டன.

(ஆ) தொளசம்பட்டியில் 10 பேர்களுக்கு மூன்று மாதங்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. இது தவிர ஓலைப்பட்டி அரிசன காலனியில் 20 பெண்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டிரைசம் மூலம் பயிற்சி அளிக்கப்பட்ட அவர்களுக்கு பயிற்சி காலம் முடிந்து விட்டது. பயிற்சி பெற்ற பெண்கள் தற்போது வேலை இல்லாமல் இருப்பதால், ஐ. ஆர். டி. பி. மூலமாக கூட்டுறவுத் துறையில் இவர்களுக்கு ஏதாவது தொழில் கூடம் அமைத்து நல்ல வேலைவாய்ப்பு ஏற்படுத்தித்தர அமைச்சர் அவர்கள் முயற்சிப்பாரா?

மாண்புமிகு திருமதி விஜயலட்சுமி பழனிச்சாமி : தலைவர் அவர்களே, பயிற்சி பெற்றவர்களுக்கு தனி கூட்டுறவு சங்கம் ஆரம்பிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும் மேய்ச்சேரி, வெள்ளாறு கிராமத்தில் பயிற்சி பெற்ற பெண்கள் உற்பத்தி செய்யும் பனைத்தும்பை சேலம் மாவட்ட கூட்டுறவு சங்கம் தொடர்ந்து கொள்முதல் செய்வதன் மூலம் அவர்களுக்கு சுயவேலைவாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கப் பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### தஞ்சை மாவட்ட கடற்கரையோரங்களில் மீனவர் வழிகாட்டி விளக்குகள் அமைக்கும் திட்டம்.

114—(* வினா எண். 20327) திரு. எம். எஸ். மாணிக்கம் : மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) தஞ்சை மாவட்ட கடற்கரையோரங்களில் எங்கெங்கு மீனவர் வழிகாட்டும் விளக்குகள் அமைக்கப்படுகின்றன?

(ஆ) வெள்ளப்பள்ளம், ஆற்காட்டுத்துறை, கோவில்பத்து, விழுந்தமாவடி ஆகிய இடங்களில் வழிகாட்டும் விளக்குகள் அமைக்கப்படுமா?



மாண்புமிகு திரு. க. கலைமணி : (அ) தஞ்சை மாவட்ட கடற்கரையோரங்களில் ஏர்புரக்கரை, மல்லிப்பட்டினம், செந்தலைவாயல், காரையூர், வானமாதேவி, கோடிக்கரை, செண்பகமாதேவிப் பட்டினம், ஆற்காட்டுத் துறை, காமேஸ்வரம், சோமநாதபட்டினம், வேளாங்கன்னி, விழுந்தமாவடி, சேதுபாவச்சத்திரம், கழுமன்குடா, பழையாறு, திருமுல்லைவாசல் மற்றும் தரங்கம்பாடி ஆகிய இடங்களில் வழிகாட்டி விளக்குகள் அமைக்க ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

(ஆ) விழுந்தமாவடியில் விளக்குத்தூண் (Tower) அமைக்கப் பட்டுள்ளது. ஆற்காட்டுத் துறையில் விளக்குத்தூண் நிறுவப் பட்டுள்ளது. மற்ற வேலைகளும் நடைபெறுகின்றன. வெள்ளப் பள்ளம் மற்றும் கோவில்பத்து ஆகிய இடங்களில் வழிகாட்டி விளக்குகள் அமைப்பதற்கான கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. எம். எஸ். மாணிக்கம் : தலைவர் அவர்களே, விளக்குத் தூண்கள் இரண்டு இடங்களில் அமைப்பதற்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். வெள்ளப்பள்ளம் மற்றும் கோவில் பத்து ஆகிய கிராமங்களில் விளக்குத்தூண் அமைப்பதற்கு இப்போது முடியவில்லையென்றாலும், அடுத்த ஆண்டாவது நடவடிக்கை எடுக்கப் பரிசீலிக்கப்படுமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. க. கலைமணி : தலைவர் அவர்களே, வெள்ளம்பள்ளம், கோவில்பத்து ஆகிய இடங்களில் அடுத்த ஆண்டு விளக்குத்தூண் அமைப்பதற்கான நடவடிக்கைகள் பரிசீலிக்கப்படும்.

திரு. எம். எஸ். மாணிக்கம் : தலைவர் அவர்களே, கோடிக் கரையில் விளக்குத்தூண் அமைக்கப்படும் என்று சொன்னார்கள். கோடிக்கரையில் விளக்குத்தூண் அமைக்கவேண்டிய அவசியம் இல்லை. அங்கே ஏற்கனவே கலங்கரை விளக்கம் இருக்கிறது. ஆகவே, கோடிக்கரையில் அமைப்பதற்கு பதிலாக நான் முன்பு கேட்ட அந்த இரண்டு கிராமங்களில் விளக்குத்தூண் அமைக்க இந்த ஆண்டே நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. க. கலைமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினரின் கோரிக்கை பரிசீலிக்கப் படும்.

திரு. என். விஜயபாலன் : பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய பூம்புகார் தொகுதியில் சந்திரபாடி, பாவாகிரி, பெருமாள்பேட்டை, சின்னக்காளை, சின்னமேடு போன்ற கடற்கரை ஓரங்களில் உள்ள மீனவர் கிராமங்களில் விளக்குத் தூண் அமைக்க அரசு முயற்சிக்குமா?

மாண்புமிகு திரு. க. கலைமணி : பேரவைத் தலைவர் அவர்களே, அரசு பரிசீலித்து தேவையான இடங்களில் ஆவன செய்யும்.

(முற்பகல் 10–10)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. அறிவிப்பு.

பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு, 1984 (ஆ. இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

3. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(அ) பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு, 1984.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:—

"தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவரவர்களே இச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

(ஆ) மகளிர் பல்கலைக் கழக சட்ட முன்வடிவு, 1984.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:—



"தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு மகளிர் பல்கலைக் கழக சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, இச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

(இ) கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்)

திருத்த சட்ட முன்வடிவு, 1984

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:—

"தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்".

THIRU K. P. PALANIAPPAN : Sir, I oppose the Bill at the introduction stage.

MR. SPEAKER : Your opposition has been recorded. You can speak tomorrow on his Bill. நாளைய தினமே இச் சட்ட முன் வடிவின் மீதான விவாதம் நடைபெறவிருப்பதால் இப்போது விரிவாகப் பேசவேண்டியதில்லை.

பேரவை முன்னுள்ள கேள்வி:

"தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவரவர்களே, இச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

4. ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம் விவாதம்—(தொடர்ச்சி)

திரு. கே. எஸ். ஜி. ஹாஜாசெரீப் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்கள் இந்தச் சபைமுன் ஆற்றிய உரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின்மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

வறட்சியின் காரணமாக மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டார்கள் என்பதை எடுத்துச் சொன்னார்கள். அதற்காக அரசாங்கம் என்னென்ன செய்தது, என்னென்ன பணிகளை அவர்கள் துரிதமாகச் செய்தார்கள், அதன் காரணமாக எப்படி மக்களுடைய கஷ்டங்கள் தீர்க்கப்பட்டு சௌகரியப்படுத்தப்பட்டார்கள் என்பதை எல்லாம் ஆளுநர் அவர்கள் தன்னுடைய உரையில் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

மத்திய சர்க்கார் 68.36 கோடி ரூபாய் தந்தாலும் கூட நம்முடைய அரசாங்கம் 114 கோடி ரூபாய் செலவு செய்திருக்கிறது என்ற கணக்கையும் கொடுத்திருக்கிறார்கள். தஞ்சை மாவட்டத்தில் மட்டும் அதிகப்படியான வடிமுனைக் குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட கடன் கொடுக்கப்பட்டிருக்கிறது என்றும் சொல்லியிருக்கிறார்கள். மாநிலம் முழுவதும் 21,700 துளைக் கிணறுகள் போடப்பட்டிருக்கின்றன. அதற்கு 46 கோடி ரூபாய் செலவாகியிருக்கிறது என்ற கணக்கையும் சொல்லியிருக்கிறார்கள். அப்படிப் பார்க்கப் போனால் ஒவ்வொரு கிணறுக்கும், சராசரி ரூ. 21,200 ஆகின்றது. இந்த மாதிரி கிணறுகளை அரசாங்கம் பாதுகாக்க வேண்டும். ஒரு சமயம் இந்நிலை பின்னால் ஏற்பட்டால், இவை மிகவும் அனுகூலமாக இருக்கும். இதன் காரணமாக இவைகளை மிகவும் கண்காணித்து பார்க்கவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதற்கு அடுத்தாற்போல், வெள்ள நிவாரணப் பணியை அரசாங்கம் ஆரம்பித்தார்கள். தொடர்ந்து கடுமையான மழை பெய்ததன் காரணமாக, புயல் காற்றும் அடித்ததன் காரணமாக, 3,4 மாவட்டங்களில், முக்கியமாக திருச்சி, தஞ்சாவூர், புதுக்கோட்டை, தென் ஆர்க்காடு, இராமநாதபுரம் இவைகளில் மிகவும் சேதம் ஏற்பட்டது. அதனுடைய முழு விவரத்தையும் இந்த அறிக்கையில் கண்டுள்ளோம். குறைந்த பட்சம் 10 இலட்சத்திற்கு மேல் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். 7,000 குடிசைகளுக்கு மேல் அழிவு ஏற்பட்டது. இதற்கெல்லாம் அரசாங்கம் மிகவும் துரிதமான நடவடிக்கைகளில் செயல்பட்டதனால், அதன் காரணமாக எவ்வளவோ நன்மைகள் ஏற்பட்டன. இந்திய பாதுகாப்பு அமைச்சர் திரு. ஆர். வெங்கட்ராமன் அவர்களுடன் கூட நானும் சென்று—காலை 6 மணி முதல் இரவு 10 மணி வரை கேம்புகளை எல்லாம்—சுற்றிப் பார்த்தோம். அங்கே நம்முடைய உத்தியோகஸ்தர்களும், இன்ஜினியர்களும் மிகவும் துரிதமாக, பரபரப்புடன் வேலை செய்ததைப் பார்த்தோம். பார்த்தவுடன் நாங்கள் மகிழ்ச்சியடைந்தோம். சந்தோஷப்பட்டோம். அதற்காகவும், இந்த அரசாங்கத்திற்கு எங்களுடைய கட்சியின் சார்பில் மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



இந்தமாதிரி வறட்சி சந்தர்ப்பத்தில் மக்களுக்காக அதிகாரிகள் பணி செய்ய வேண்டும். எவ்வளவு விரைவில் பணி செய்ய வேண்டுமோ, அவ்வளவு சீக்கிரத்தில் பணி செய்தால், மக்களுடைய துயர் போகுமென்ற எண்ணத்தில் அவ்வளவு விரைவில் பணிகளை ஆற்றியதற்காக நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனக்கு பல கடிதங்கள் வந்துகொண்டேயிருக்கின்றன. அரசாங்கம் இவ்வளவு செய்தும் கூட, கிட்டத்தட்ட 150 கோடி ரூபாய்க்கு மேல் செலவு செய்தும் கூட, நூற்றுக்கணக்கான, ஆயிரக்கணக்கான கடிதங்கள் வந்துகொண்டேயிருக்கின்றன. எனக்குப் பணம் சேரவில்லை. யாருக்கு பணம் சேர வேண்டுமோ அவர்களுக்கு சேரவில்லை. சேர வேண்டாதவர்களுக்கு பணம் சேர்கிறது என்று எல்லாம் கடிதங்கள் வந்துகொண்டேயிருக்கின்றன. அந்தக் கடிதங்களை உடனுக்குடன் அமைச்சர்களுக்கு அனுப்பியிருக்கிறேன். இதுவரை அமைச்சர்களிடத்திலிருந்து எந்த விதமான பதிலும் வரவில்லை. அதற்கான பதில், நாங்கள் என்குயரி பண்ணிக்கொண்டிருக்கிறோம், அல்லது என்குயரி பண்ணுவோம், செய்வோம் என்ற பதில் வந்தாலும், சௌகர்யமாக இருக்கும். நான் முதலமைச்சர் அவர்களுக்குக்கூட பல கடிதங்கள் எழுதியிருக்கிறேன். திரு. எஸ். டி. எஸ்.-க்கும் மற்ற அமைச்சர்களுக்கும் எழுதியும், ஒருவரிடமிருந்தும் எனக்கு பதில் வரவில்லை. அப்படி பதில் வந்தால்தான் நான் எனக்கு கடிதங்கள் அனுப்பியவர்களுக்கு பதில் அனுப்பமுடியும். அரசாங்கம் இந்தெந்த நடவடிக்கைகள் மேற்கொண்டிருக்கின்றது, அரசாங்கம் முழுவிவரங்களையும் சேகரித்துக் கொண்டிருக்கிறார்கள் என்றும் நான் எழுதமுடியும். இது அவர்களுக்கு ஒரு சந்தோஷத்தை கொடுக்கும். இந்த வறட்சியின் காரணமாக சென்ட்ரல் கவர்ன்மென்ட் முதலில் 15,000 டன்னும், பிறகு 85,000 டன்னும் அரிசியும் கோதுமையும் வழங்கியிருக்கிறது. சென்ட்ரல் கவர்ன்மெண்டு யாருக்குக் கொடுப்பார்கள்? யாருக்கும் எந்தவித பாகுபாடின்றிக் கொடுப்பார்கள். நமக்கும் கொடுப்பார்கள். வெஸ்ட் பெங்காலுக்கும் கொடுப்பார்கள், கேரளாவிற்கும் கொடுப்பார்கள். யாருக்கும் எந்தவிதமான பாகுபாடும் செய்யமாட்டார்கள். அந்த நிலையில் அரிசியைக் கொடுத்தார்கள்; கோதுமையும் கொடுத்தார்கள். அதைப் போலவே சிவில் சப்ளைஸ் கார்ப்பொரேஷன் மூலமாக கொள்முதல் செய்து, பப்ளிக் டிஸ்ட்ரிபியூஷன் சிஸ்டத்திலே வழங்குகிறோம். அந்தப் பணிகளைச் செம்மையாக செய்ததற்காக நான் என்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்கிறேன். இருந்தாலும், அதிலே பல குறைகள் இருந்துகொண்டிருக்கின்றன. நிறைகளையும் நாம் அவசியம் பார்க்க வேண்டும்; குறைகளையும் நாம் கண்காணிக்க வேண்டும்,

(முற்பகல் 10–20)

அடுத்து, இந்த ஆளுநர் உரையில் தொழில் வளர்ச்சியைப்பற்றி ஒன்றும் கூறாமல் இருந்ததற்கு நான் மிகவும் வருந்துகிறேன் இரண்டு சர்க்கரை ஆலைகளைப் பற்றி சொல்லியிருக்கிறார்கள்

ஒன்று சிக்காக இருக்கிறது, அதை எடுத்து நடத்தப்போகிறோம். இன்னொன்று புதிதாக ஆரம்பிக்கப்போகிறோம் என்று. அடுத்து பேப்பர் மில்ஸ் ஆரம்பிக்கப்போகிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். இதெல்லாம் ஏற்கனவே போட்ட திட்டங்கள். புதிதாக தொழில் வளர்ச்சிக்காக என்னென்ன திட்டங்கள் தீட்டப்பட்டு இருக்கின்றன, அதன் காரணமாக எவ்வளவு வளர்ச்சி ஏற்பட்டிருக்கிறது என்பதை எல்லாம் அவர்கள் சொல்லியிருந்தால் மிகவும் 'நன்மையாக இருந்திருக்கும்.

அது அல்லாமல், டிரேட், காமர்ஸ் அன்ட் இன்டஸ்ட்ரீஸ் இது மூன்றிலும் எவ்வளவு நம்முடைய மாநிலம் வளர்ச்சி அடைந்தது என்பதையும், இவர்களுடைய உரையில் குறித்திருக்கவேண்டும். வருஷா வருஷம் நம்முடைய மாநிலத்தில் என்னென்ன நடந்தது, என்னென்ன நடக்கப் போகிறது என்ற திட்டங்களை அவர்கள் சொல்லியிருப்பது வழக்கமாக இருக்கிறது. அந்த வழக்கத்திற்கு மாறாக முக்கியமான செக்டார், டிரேட், இன்டஸ்ட்ரீஸ் அன்ட் காமர்ஸ் இவைகளைப் பற்றிச் சொல்லாமல் இருப்பது மிகவும் வருந்தத்தக்க விஷயம். நாம் தொழில் வளர்ச்சியில் அதிகமாக ஈடுபட்டு வந்தால்தான் படித்தவர்களுடைய கஷ்டத்தை நாம் நீக்கமுடியும் என்று பல தடவை நான் இந்தச் சபையில் கூறியிருக்கிறேன். நம்முடைய ஸ்டேட் 15 வருஷத்திற்கு முன் முதலாவதாக தொழில் வளர்ச்சியில் வந்து கொண்டு இருந்தது. மகாராஷ்டிரத்திற்கு அடுத்தபடியாக வந்து கொண்டு இருந்தது. இப்போது பின்தங்கியிருக்கிறோம். இதற்குக் காரணம் சரியான ஒரு புரோகிராம் இல்லை; சரியான திட்டங்கள் இல்லை என்று நான் சொல்லு விரும்புகிறேன். 3,4 வருஷத்திற்கு முன் அடிக்கடி நான் ஹோசூருக்குப் போய் வருகிற போது, எந்த நிலையில் முன்பு இருந்ததோ, அதே நிலையில் தான் இன்றும் ஹோசூர் இருக்கிறது. இதைப்பற்றிக் கூட நான் சொன்னேன். எந்தவிதமான வளர்ச்சியும் இல்லை ஏன் இந்த மாதிரியான அவல நிலைமை என்பதை நாம் பார்க்கவேண்டும். இன்ப்ரா—ஸ்ட்ரக்சர்ஸ் ஃபெசிலிட்டிஸ் இல்லை. ஒத்துக்கொள்கிறேன். ஆனால் இருக்கிற பெசிலிட்டிஸ்களை வைத்துக்கொண்டு, சிறிய தொழில்கள் நிறைய கொண்டுவரலாம். நிறைய சிறிய தொழில்கள் கொண்டு வந்தால்தான், இலட்சக்கணக்கான மக்கள் அதன் மூலம் வேலை செய்வதற்கு ஒரு வாய்ப்பு இருக்கும். அப்படியில்லாமல் தொழில் வளர்ச்சியில் உங்களுக்கு நம்பிக்கையில்லை என்று கூட நான் சொல்வேன். காரணம் இந்தத் தொழில் வளர்ச்சிக்கு எந்தவிதமான பெரிய திட்டமும், எந்த விதமான பெரிய கோரிக்கையும் கொடுக்கவில்லை. இன்றைக்கு கோடிக்கணக்கான ரூபாய்கள், 100 கோடி, 200 கோடி, 300 கோடி என்று வறட்சி நிவாரணத்திற்காகக் கொடுக்கிறார்கள். மகிழ்ச்சி. ஆனால் தொழில் வளர்ச்சிக்கு நீங்கள் கொடுக்க வேண்டாமா? It is a capital expenditure which can produce lot of emploomeent and lot of goods. அப்படி இருந்தால்தான் படித்தவர்களிடையே ஒரு நல்ல நிலைமை ஏற்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.



அடுத்து எலெக்ட்ரிசிட்டிக்காக, புதிய தெர்மல் ஸ்டேசன் கொண்டு வருவதாக இந்த உரையில் கூறியிருக்கிறார்கள். மிகவும் வரவேற்கத்தக்கது. எப்படி காற்று, தண்ணீர், உணவு மக்களுக்கு மிகவும் இன்றியமையாததோ, அதேமாதிரி, எலெக்ட்ரிசிட்டியும் மிகவும் இன்றியமையாத ஒரு பண்டமாக நமக்கு ஆகிவிட்டது. முக்கியமாக தூத்துக்குடி நிலையத்தில் தெர்மல் ஸ்டேசன் நன்றாக செயல்பட்டு வருகிறது என்பதைக் கூட நான் கேட்டு மகிழ்ச்சி அடைகிறேன். ஆனால் இந்த நிலக்கரி ஸ்டாக், அடிக்கடி பற்றாக் குறை வந்து கொண்டேயிருக்கிறது. அதற்கு அமைச்சர் அவர்கள் கூட உடனேயே விரைந்து அதை சுமுகமாக தீர்த்துவிட்டார்கள், நேற்று என்னிடம் அவர்கள் சொன்னார்கள். அதற்காக மிகவும் நான் மகிழ்ச்சி அடைகிறேன். இப்போது நாம் ஆர்கனைஸ் பண்ணப் போவது மேட்டூர் பக்கத்தில் ஒரு தெர்மல் ஸ்டேசன் 210 மெகா வாட் திறன் கொண்டஒரு அடிஷனல் அனுமின் நிலையம். அடுத்து நெய்வேலியில் பழுப்பு நிலக்கரியைப் பயன்படுத்தி மூன்றாவது அனல் மின் நிலையம் தொடங்க திட்டங்கள் கொண்டு வருவதாக நீங்கள் போட்டிருக்கிறீர்கள். போன வருஷம் அதைப் பற்றிக் கூட சொல்லியிருந்தார்கள். நாங்கள் போடப் போகிறோம், போட்டிருக்கிறோம் என்று. அதை துரிதமாக நீங்கள் செயல்படுத்தினால் மிகவும் நன்றாக இருக்கும் என்று நான் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். துரிதமாகவும், வேகமாகவும், விடாமுயற்சியுடனும் நீங்கள் இதுபற்றி சென்டிரல் கவர்ன்மென்ட்டிடம் தொடர்பு கொண்டு அதைக் கொண்டுவர வேண்டும். காரியம் பெரிசா? வீரியம் பெரிசா என்றால், காரியம்தான் பெரிசு. அவர்கள் வந்து அதைப்பற்றிச் சொல்லவில்லை, கிடைக்கவில்லை என்று எல்லாம் நீங்கள் சொல்லிக் கொண்டிருக்க முடியாது. அவர்களுக்கு எவ்வளவோ வேலை இருக்கும். நீங்கள்தான் நம்முடைய வேலை நடைபெறவேண்டும் என்பதற்காக, அங்கே சென்று அவர்கள் பக்கத்திலேயே இருந்து என்னென்ன தேவையோ அந்த ஸ்டேடிஸ்டிக்ஸ்களையெல்லாம் கொடுத்து, அதை தமிழ்நாட்டிற்கு கொண்டுவர வேண்டும். அதில் அவசியம் நமது அமைச்சர் அவர்கள் வெற்றி பெறுவார்கள் என்பதில் எனக்கு எந்தவிதமான சந்தேகமும் இல்லை.

அடுத்து, தொழில் வளர்ச்சியைப் பற்றி நான் பேசுகிற நேரத்தில், தற்சமயத்தில் எத்தனை பெரிய ஆலைகள் ஸ்டிரைக் பவுண்டாகி, 2,3 மாதங்கள் இருந்தன என்பதை முதலிலே இங்கே உங்களுக்கு நினைவுபடுத்திச் சொல்லிக்கொள்ள ஆசைப் படுகிறேன். தொழில் வளர்ச்சி அதிகமாகவில்லை மற்ற மாநிலங்களை விட என்பது ஒரு பக்கம். இருந்த வளர்ச்சியில் கூட இந்த ஸ்டிரைக் காரணமாக தேக்கம் மறுபக்கம். ஆகவே, பெரிய ஆலைகளில் ஸ்டிரைக் வந்தால், அதை உடனுக்குடன் அரசாங்கம் மிகவும் முன்நிலைமை கொடுத்து, அதைத் தீர்ப்பதற்கு முயற்சி எடுக்கவேண்டும். இப்போது நம்முடைய சீஃப் மினிஸ்டர் அவர்கள் சிம்ஸன் அன்ட் கம்பெனி பிரச்னையில் முயற்சி எடுத்து தீர்த்ததைப் போல எல்லாவற்றிற்கும் எடுக்க வேண்டும். இதிலேயே கூட, அவர்கள் 3 மாதங்களுக்கு முன்னாலேயே அதை கண்காணித்து இருப்பார்களேயானால், எவ்வளவோ நிலைமை

களைத் தவிர்த்திருக்கலாம். சிம்ஸன் கன்பெனியிலே மட்டும் ஒரு நாளைக்கு ஒரு கோடி ரூபாய் நஷ்டம் என்று சொன்னார்கள். அத்தோடு அவர்கள் டிஃபென்ஸ் இன்டஸ்ட்டிரீஸ்க்கு பெரிய சப்ளை செய்து கொண்டு வருகிறார்கள். இந்த ஸ்டிரைக்கினால், அவர்களும் எந்த உற்பத்தியும் பண்ண முடியவில்லை. காரணம் அவர்களுக்குத் தேவையான பார்ட்ஸ் கிடைக்கவில்லை. அதைப்போலவே அசோக் லேலண்டுக்கும் அவர்கள் சில பார்ட்ஸ் களை சப்ளை செய்கிறார்கள். அதனால் அசோக் லேலண்டின் உற்பத்தியும் பாதிக்கப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட ரி-ஆக்ஷன் வந்து கொண்டேயிருக்கிறது.

இதன் காரணமாக, சீஃப் மினிஸ்டர் அவர்கள் எந்த ஸ்டிரைக் வந்தாலும் சரி, உடனுக்குடன் அவர்களே அதில் நேரிடையாக தலையிட்டு, நடவடிக்கை எடுத்துக்கொள்ள முன் வந்து, பிரச்னைகளை மிகவும் சுமூகமாக தீர்த்துக்கொண்டு வந்தால் நல்லதாக இருக்கும். பி அண்டு சி மில்லைப் பொறுத்த வரையில் அது ஏற்கெனவே சிக் யூனிட்டாகத்தான் இருக்கிறது. அவர்களுக்கு 46 கோடி ரூபாயை பாங்க் கடன் கொடுத்திருக் கிறது. அங்கே ஒரு மாத காலமாக ஸ்டிரைக் இருந்து கொண்டிருக்கிறது. நிலைமை இது போன்றிருந்தால், எப்படி தொழில் வளர்ச்சி ஏற்படும் என்பதை கேட்டுக்கொள்ள விரும்பு கிறேன்.

ஒவ்வொரு தொழிலாளியும் பேக்டரியில் 1,500 ரூபாய் அளவில் வாங்கிக் கொண்டிருக்கிறார் என்று சொல்லலாம். என்றாலும் கூட, அவர்களுக்கு குறைபாடுகள் இருந்தால் அரசாங்கம் அதை கவனித்து எந்தெந்த குறைபாடுகளை எப்படி எப்படி தீர்க்க வேண்டுமோ, அந்த வகையில் தீர்த்தால்தான், நம்முடைய தொழில்துறை வளர்ச்சி அடையும், தொழில் நடத்துவோருக்கு தொழிலில் கான்ஃபிடன்ஸ் ஏற்படும்; தொழிலாளர்களுக்கும் அச்சம் நீங்கும் என்பதை தெரிவித்துக் கொண்டு முக்கியமாக முதலமைச்சர் அவர்கள், தம்முடைய நிலையில் இருந்து அதை தீர்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாவட்டங்களைப் பிரிப்பது பற்றி இந்த அறிக்கையில் சொல்லியிருக்கிறார்கள். 6, 7 மாவட்டங்களை, நல்லதொரு அட்மினிஸ்ட்டிரேஷனுக்காக, எஃபிஷியன்ட் அட்மினிஸ்ட்டிரேஷ னுக்காக பிரித்து கொண்டு வர இருக்கிறோம் என்று சொல்லி யிருக்கிறார்கள். வரவேற்கத்தக்கது. ஆனால் அதற்காக நிதி மிகுதியாக செலவு ஆகும். அதைப்பற்றி பரவாயில்லை. எஃபிஷியன்ஸி வரும்போது, நாம் எக்ஸ்பென்டிசரை ஒரு பொருட்டாக எடுத்துக் கொள்ளக்கூடாது. இந்த பிரிவினை யில் முத்துராமலிங்கத் தேவர், இராஜாஜி, வ.உ.சி. போன்ற பெரியவர்களின் பெயர்களையெல்லாம் அந்த மாவட்டங்களுக்கு வைத்திருக்கிறார்கள். ஆனால் இரண்டு மூன்று பெரிய லீடர் [illegible] பெயரை வைக்கவில்லை. காயிதேமில்லத், முகமது இஸ்மாயில், அம்பேத்கார் போன்றவர்களுடைய பெயரை [illegible].



ஏன் மறந்து விட்டார்களா? அல்லது வைக்கக்கூடாது என்று நினைத்தார்களா? என்று எனக்குத் தெரியவில்லை. இருந்தாலும் மறந்து விட்டார்கள் என்றுதான் நான் நினைக்கிறேன். முகமது இஸ்மாயில் அவர்களுடைய பெயரை திருநெல்வேலியிலிருந்து பிரிக்கும் மாவட்டத்திற்கு கொடுத்திருக்கலாம். அவர் பிறந்து, வளர்ந்து படித்த இடம் அது. ஆகவே, அவசியம் அதை நீங்கள் கவனிக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

உங்களுடைய வெள்ளை அறிக்கையிலே கூட நிறைய விவரங்கள், எந்தெந்த கம்யூனிட்டிக்கு எவ்வளவு வீடுகள் கட்டிக் கொடுத்திருக்கிறீர்கள், குடிசைகள் எவ்வளவு சேத மாயிற்று என்றெல்லாம் சொல்லியிருக்கிறீர்கள். மகிழ்ச்சி. முக்கியமாக அரிஜனங்களுக்கு எவ்வளவு நீங்கள் செய்திருக்கிறீர்கள் என்று சொல்லியிருக்கிறீர்கள். மகிழ்ச்சி. ஆனால் அதே சமயத்தில் மைனாரிட்டி கம்யூனிட்டிக்கு என்ன சேதமே ஏற் படாதா? அவர்களுக்காக என்ன செய்தீர்கள் என்பதற்கான புள்ளி விவரமே காணவில்லை. அவசியம் அந்த புள்ளி விவரங்களை நாளைக்காவது அமைச்சர் அவர்கள் கொடுப்பார் கள் என்று நான் எதிர் பார்க்கிறேன். மைனாரிட்டி சமூகத் திற்கு இந்த அரசாங்கம் அதிக சலுகைகளைக் கொடுக்கவில்லை என்றுதான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். காரணம் கிட்டத்திட்ட 10, 20 மாவட்டங்கள் இருக்கின்றன. ஒரு மாவட்டத்திலாவது ஒரு முஸ்லீம் கலெக்டர் கிடையாது. ஒரு முஸ்லீம் எஸ். பி. கிடையாது.

(முற்பகல் 10–30)

அரசாங்கம் வேண்டுமென்றே செய்கிறது என்று நான் சொல்லமாட்டேன். ஆனால் அவர்கள் பாராமுகமாக இருந்திருக் கலாம். இப்படிச் செய்ததின் காரணத்தினால் மக்கள் பல மாதிரிப் பேசிக்கொள்கிறார்கள். இந்த அரசாங்கம் முஸ்லீம்களுக்கு அதிப்படியான சலுகை செய்வதில்லை. முஸ்லீம்கள், நபிநாயகம் அவர்கள் பேரில் ஆர். எஸ். எஸ். மிகுந்த தாக்குதல் கொண்டு வந்தால் கூட அவர்கள் பாராமுகமாக இருக்கிறார்கள், அதற்குத் தகுந்த நடவடிக்கை எடுக்கவில்லையென்று எல்லாம் பேசிக் கொள்கிறார்கள், எனக்கு தகவல் வருகிறது. சமீபத்திலே முத்துப்பேட்டையிலே ஆர். எஸ். எஸ். சேர்ந்து—அங்கே ஒரு தர்க்கா இருக்கிறது—அந்த தர்க்காவை அட்டாக் செய்து அந்த காம்பவுண்டு வாலை சேதப்படுத்தியிருக்கிறார்கள். அதைப்பற்றி முதலமைச்சர் அவர்களுக்கு பல விண்ணப்பங்கள் தந்திருக்கிறார்கள். பல பேர்கள் பேசியிருப்பதாகவும் என்னிடம் சொன்னார்கள். அதைப்பற்றி என்ன செய்தார்கள் என்று தெரியவில்லை. யார் செய்தாலும் சரி, எங்காவது அப்படிப் பட்ட இன்சைட்மெண்ட் செய்தாலும் அது இந்துவோ முஸ்லீமோ, கிறித்துவரோ யார் செய்தாலும் சட்டத்திற்குட்பட்ட முறையில் என்ன தண்டனை விதிக்கப்பட வேண்டுமோ அதை விதிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆனால்

பாராமுகமாக இருந்து ஆர். எஸ். எஸ். வளர்த்துவிட்டால் அது தும்பைவிட்டு வாலைப்பிடிப்பதாக ஆகிவிடும். ஒரு பெரிய வேலையாகிவிடும். பிறகு அதனால் ஏற்படக்கூடிய கஷ்ட நஷ்டங்கள் மிகவும் அதிகமாக இருக்கும். இன்றைக்கு பஞ்சாபில் என்ன நிலை என்பதைப் பார்க்கிறோம். இந்துஸ் வெர்சஸ் சீக்ஸ் பெரிய நிலையாக இருக்கிறது. அந்த மாதிரி நிலைக்கு ஏறாதவாறு தடுப்போமானால் நல்லதாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். நம்முடைய ஸ்டேட், எந்த விதமான கம்யூனல் டென்ஷனோ அல்லது டிரபிளோ பல நூற்றாண்டுகளாக இல்லாமல் இருந்து வருகிறது. இங்கே இந்துக்களும், முஸ்லீம்களும், கிறித்துவர்களும் சொந்த அண்ணன் தம்பிகளாக இருந்து வந்திருக்கிறார்கள். பல இடங்களிலே இப்போது ஆர். எஸ். எஸ். இந்து முன்னேற்ற சங்கம் செய்து கொண்டு இருக்கிறார்கள். இது மிகவும் தவறு, அதைக் கண்காணித்து ஒடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். சென்ற வருஷம் நான் ஸ்ரீநகரில் இருந்தபோது காலஞ்சென்ற டாக்டர் அப்துல்லா அவர்கள் என்னிடம் கேட்டார்கள். ஏன் உங்கள் ஊரில் எப்போதும் இருந்ததில்லை. அதுவும் இப்போது திரு. எம்.ஜி.ஆர். தலைமையில் இருக்கிறபோது இந்த மாதிரி கஷ்டம் வந்திருப்பது எனக்கு ஆச்சரியத்தை அளிக்கிறது. ஏன் என்று கேட்டார்கள். இவ்வளவு காலம் கிடையாது. ஏதோ நடந்துவிட்டது. கன்வர்ஷன் நடந்துவிட்டது. அந்த மாதிரி டென்ஷன் வராமல் எம்.ஜி.ஆர். அவர்கள் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னேன். அவர்கள் ஆர்.எஸ்.எஸ். இங்கே இருக்கிறதா என்று கேட்டார்கள். ஆம், இப்போதுதான் வளர்ந்து கொண்டு வருகிறது என்று சொன்னேன். அவர்கள் ஓஹோ, அதைப்பற்றி அறிகிறேன். அப்படியானால் அதைத் தடுக்கும்படி நான் சொன்னதாக முதலமைச்சரிடம் சொல்லும்படி சொன்னார்கள். தயவுசெய்து உடனடியாக இதை ஸ்டாப் செய்யுங்கள். முஸ்லீம்கள் யார் தவறு செய்தாலும் அவர்களை நீங்கள் கண்காணிக்க வேண்டும். அதற்காக நான் வக்காலத்து வாங்கவில்லை. கம்யூனல் டென்ஷன் எந்தக் காரணத்தைக் கொண்டும் எந்த அடிப்படையிலும் வரக்கூடாது என்பது என்னுடைய கோரிக்கை. அது வந்தால் சுமுகமாக இருக்காது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, போலீஸ் எக்சஸ் பற்றி இங்கே பல நண்பர்கள் பேசினார்கள். ஒரு வகையில் நாம் அதை ஒத்துக் கொள்ள வேண்டும். எனக்கு பல லெட்டர்கள் வந்து கொண்டிருக்கின்றன. ஒன்றிரண்டு இன்ஸ்டன்சஸ் எனக்குத் தெரியும். ஒரு பெரிய தொழிலதிபர் வடநாட்டுத் தொழிலதிபர் அவரை ராத்திரி 12 மணிக்கு அவருடைய கட்டடத்திற்குள் சென்று அவரையும் சிப்பந்திகளையும் அடித்து தாக்கி பண்டையை உடைத்து, கை பிராக்சர் ஆகி இந்த மாதிரி செய்திருக்கிறார்கள். மறுநாள் காலை எனக்கு தகவல் கிடைத்தது. அதைப்பற்றி நான் சொன்னேன். விசாரணை நடத்தி வருகிறார்கள். அவர்களிடம் 75 லட்சம் ரூபாய்க்கு ஸ்டாக் இருந்தது என்று சொன்னார்கள். எல்லா சிப்பந்திகளையும் ஸ்டேஷனுக்குக்



கொண்டுபோய் விட்டார்கள். அதைப் பற்றி லெட்டர் எழுதியிருக்கிறார்கள் கமிஷனருக்கு. ஒரு சிப்பந்திகூட கிடையாது. என்ன காரணம் என்றால் ஒரு சிறிய காரணம் என்று நான் கேள்விப்பட்டேன். ஏதோ அவருடைய குக் மிஸ்-பிகேவ் செய்ததன் என்பதற்காக அங்கே உள்ள சிப்பந்திகளுக்கும் அவனுக்கும் ஏற்பட்ட தகராறு, அதனால் அந்த மாதிரி நடந்தது என்று சொன்னார்கள். இதற்கு ஏதாவது ஒரு வழிமுறை வேண்டாமா? அதற்காக அந்த ஓனரை மேலே இருந்தவரை கூப்பிட்டு நடு இரவில் அடித்து, உதைத்து இதை எல்லாம் செய்து எல்லோரையும் போலீஸ்ஸ்டேஷனுக்கு கொண்டு செல்வது என்றால் இதற்கு ஏதாவது ஒரு வழிமுறை வேண்டாமா? அவசியம் இதைப்பற்றி முதலமைச்சர் அவர்கள்—போலீஸ் போர்ட்போலியோ அவர் கையில்தான் இருக்கிறது—இதை கவனிக்க வேண்டும். அவர்கள் அந்த மாதிரி செய்ததற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். அது அவருடைய பொறுப்பு என்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். வெஸ்டர்ன் கண்டிரிஸ்க்கு சென்று பாருங்கள். அங்கே போலீஸ்காரர்களும் பொது மக்களும் நண்பர்களாக இருக்கிறார்கள். இங்கே போலீஸ்காரர்கள் பொதுமக்களை எதிரிகளாக நடத்துகிறார்கள், பார்க்கிறார்கள். அது மிகவும் தவறு. போலீஸ்காரர்கள் பொதுமக்களுக்கு உதவியாக இருக்கவேண்டுமே தவிர அதற்கு நேர்விரோதமாக செய்யக்கூடாது என்பதை நான் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

ஊராட்சி ஒன்றியங்கள், நகராட்சிகளுக்கு தேர்தல் பற்றி சொல்லியிருக்கிறீர்கள். வருகின்ற ஏப்ரல் கடைசியிலாவது தேர்தல்கள் நடக்க வேண்டும் என்று நான் பிரார்த்திக்கிறேன். காரணம் வேலைகள் எல்லாம் அவ்வளவு மோசமாக இருக்கின்றன. என்னுடைய நண்பர் அமைச்சர் அவர்கள் சிரிக்கிறார்கள். அவசியம் தேர்தல்களை நடத்துவார்கள் என்று எனக்கு நம்பிக்கை இருக்கிறது.

What about th Corporation? Why have you left the Corporation? You do not have consideration for Madras City.

சிட்டி பற்றி உங்களுக்கு எந்தவிதமான நல்ல அபிப்பிராயமும் இல்லையா? முதலமைச்சர் அவர்கள் சென்ற வாரம் ஏற்பட்ட மழையின் காரணமாக அந்த இடங்களை பார்வையிட சென்றிருந்தார்கள் என்றும், முழங்கால்வரை தண்ணீர் உள்ள இடங்களில் நடந்து சென்று பார்வையிட்டார்கள் என்றும் போட்டோக்கள் எல்லாம் வந்து இருந்தன. நான் அவைகளைப் பார்த்தேன். ரொம்ப மகிழ்ச்சி அடைந்தேன். நான் பல முறை அவரை வேண்டி விரும்புகிறேன் என்னுடன் வாருங்கள் ஒரு நாளைக்கு, இரண்டு டிவிஷன்களை ஜீப்பிலாவது நடந்தாவது போய்ப் பார்க்கலாம். அப்படிப் பார்த்தால் என்ன மாதிரி இந்த சிட்டி இருக்கிறது என்பதை நீங்கள் அறிவீர்கள் என்று நான் சொன்னேன். நான் ஒரு தடவை பேசும்போது சிட்டி நகரமாக

இல்லாமல் நரகமாக இருக்கிறது என்று சொன்னேன். அதற்கு அவர்கள் வருத்தப்பட்டார்கள் என்று நான் நினைக்கிறேன். நான் சொன்னதற்குக் காரணம் அந்த மாதிரிதான் சிட்டி இருக்கிறது என்பது என்னுடைய தொகுதியில் மட்டும் அல்ல பல தொகுதிகளுக்கு நான் சென்று பார்த்து இருக்கிறேன். 10 நாட்கள் 15 நாட்கள் வரையில்கூட அங்கே சுத்தம் செய்வது கிடையாது. தெருக்களில் லைட்டுகள் எரிவது கிடையாது. ரோடுகள் உடைந்தால் அதை உடனடியாக சரி செய்வது கிடையாது. கக்கூஸை சரியாக வாருவது இல்லை. சுத்தம் இல்லை. இந்த மாதிரி இருந்தால் எப்படி இந்த நகரம் நல்ல நிலைமையில் இருக்கும்.

உலக வங்கி அதிகாரிகளைப் பார்த்து பேசும்போது நான் கேட்டேன். டெல்லி மாநகரம் இருப்பது போல் இந்த சென்னை மாநகரம் இருக்க வேண்டும். அதற்காக நீங்கள் எங்களுக்கு 100 கோடி ரூபாய் பணம் கொடுங்கள் என்று நான் ஒரு மகஜர் கொடுத்து இருக்கிறேன். அவர்கள் சிரித்தார்கள். ஏன் சிரிக்கிறீர்கள் என்று கேட்டேன். உங்களிடம் பட்ஜெட்டே 1,700 கோடிக்கு மேல் இருக்கிறது என்பது எங்களுக்குத் தெரியும். அதில் நீங்கள் செய்யாமல் எங்களிடம் கேட்கிறீர்களே என்றார்கள். அதற்கு நான் சொன்னேன், நீங்கள் கொடுங்கள் பின்னால் நாங்கள் வருவாயை பெற்று கொடுத்து விடுகிறோம் என்று சொன்னேன். 22 கோடி ரூபாய் வருவாய் வருகிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆக்ட்சுவலாக கார்ப்பரேஷன் மூலம் 22 கோடி ரூபாய் வருவாயாக இருக்கலாம். ஆனால் உங்களுடைய மோட்டார் வெகிகல்ஸ் மூலம் வருவாய் 83 கோடி ரூபாய் என்று போன வருடம் பட்ஜெட் எஸ்ட்டிமேட்டில் கொடுத்து இருக்கிறீர்கள். அது இந்த வருடம் சற்று ஏறக்குறைய 100 கோடிக்கு போய் இருக்கும் என்று நினைக்கிறேன். அந்த மோட்டார்கள் எல்லாம் இந்த சிட்டி ரோடுகளை உபயோகப்படுத்தவில்லையா? ஏன் அதிலிருந்து 10 கோடி ரூபாயை அரசு கொடுக்கக்கூடாது. இந்த மாதிரி பல கோடி ரூபாய் கொடுத்தால் அவசியம் இந்த சிட்டியை மேன்மை உடைய சிட்டியாக, அழகான சிட்டியாக, நல்ல சுகாதாரமுள்ள சிட்டியாக கொண்டுவர முடியும் என்பதை நான் சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். நான் கூட இதற்கு ஒரு நாவல் ஸ்கீமை தீட்டி வைத்து இருக்கிறேன். 150 டிவிஷன்கள் இருக்கின்றன இந்த சிட்டியில். இப்போது இருக்கும் ஸ்டாப்புகளுக்கு மேல் மேற்கொண்டு ஒவ்வொரு டிவிஷனுக்கும் 100 பேர்களை ரெக்ரூட் செய்தால் 15 ஆயிரம் பேர் வரும். காலையில் 4 மணி நேரம் மாலையில் 4 மணி நேரம் அவர்கள் வேலை செய்தால் எந்தவிதமான பாகுபாடும் இல்லாமல் தொடர்ந்து அவர்கள் வேலை செய்ய வேண்டும்.

They must have dignity in labour. I do not think they will try to say that it is below their dignity to sweep or to remove the garbages and put it into the cart.



நான் சில வாரங்களுக்கு முன்பு வெளி தேசங்களுக்குச் சென்று இருந்தபோது அங்கே காலை 6 மணிக்கே வந்து வெளியே என்ன என்ன அசுத்தங்கள் இருக்கிறதோ அவைகளை எல்லாம் பெருக்கிவிட்டு போய்விடுகிறார்கள்.

(முற்பகல் 10-40)

அங்கே இம்மாதிரி இல்லை, வீட்டிலேயே என்னென்ன அசுத்தங்கள் இருந்தாலும் அவற்றை பிளாஸ்டிக் பைகளில் போட்டு வெளியே வைத்து விட்டுப் போய்விடுகிறார்கள். அதை இவர்கள் வந்து எடுத்துச் செல்கிறார்கள். இருந்தாலும் வெளியிலே உள்ள அசுத்தங்களையும் சுத்தம் செய்து விடுகிறார்கள். இங்கேயும் அதே மாதிரி செய்யலாம். இதற்கெல்லாம் டிரஸ் கொடுத்து, சைக்கிள் போன்ற வாகனங்களைக் கொடுத்துச் செய்தாலும்கூட ஒரு கோடி ரூபாய் வருஷத்திற்குள் வருவது இல்லை. எனவே, இதை அவசியம் செய்யலாம்.

It is one crore for a year, not two crores. You can give me the authority and I will do it. I want the city to be the most beautiful city in the whole country.

நீங்கள் பீச்சை மட்டும் சுத்தம் செய்தால் போதாது. ஒரு நாளைக்கு மூன்று மைல்கள் நடக்கிறேன். அங்கே மட்டும் துப்புரவைச் செய்து விட்டால் போதாது, அங்கே மட்டும் அதிகமான ஆட்களைப் போட்டுச் செய்து விட்டால் போதாது. அங்கிருந்து கால் பர்லாங் தூரம் உள்ளே சென்று நடுக்குப்பம் போன்ற இடங்களுக்குச் சென்று பார்த்தால் ஒரே துர் வாடை வீசும். அங்கே சுகாதாரம் எப்படியிருக்க முடியும்? இப்படி யிருந்தால் சுகாதாரம் வரவே வராது. சத்துணவு திட்டத்திற்குப் போட்டிருப்பதைப்போல இதற்கும் ஒரு ஸ்கீமைப் போட முடியாதா? அரசாங்கம் போடலாம் என்று நினைத்தால் அந்த ஸ்கீமை அவசியம் போட முடியும். எப்பொழுது தேர்தலை வைக்கப் போகிறீர்கள்? அதையும் சொல்லவில்லை. இந்த வருடத்திற்கு முன் இது வராது என்றுதான் தெரிகிறது. எனவே, அதற்காக இம்மாதிரி ஒரு ஸ்கீமைப் போடுங்கள். அதற்கு ஒரு கோடி ரூபாய்க்கு மேல் ஆகாது. கேபிடல் எக்ஸ்பெண்டிச்சர் கொஞ்சம் இருக்கலாம். மாடுகள் வாங்குவது வண்டிகள் வாங்குவது, லாரிகள் வாங்குவது போன்ற இதற்காகச் செலவுகள் இருக்கலாம். இதையெல்லாம் செய்யாமல் இருந்தால் நிலைமை மிகவும் மோசமாகப் போய்விடும்.

அமைச்சரவர்கள் வேண்டுகோளுக்கிணங்கி வந்தார்கள். நேராகத் திருவல்லிக்கேணி மார்க்கெட்டிலே போய் இருக்கிறேன். கேட்டுப் பாருங்கள். எத்தனை நாட்கள் மூக்கைத் துடைத்துக் கொண்டிருந்தார்கள் என்று தெரியும். அதே மார்க்கெட்டில்தான் எல்லாக் காய்கறிகளையும் வாங்க வேண்டும். பதார்த்தங்களை வாங்க வேண்டும், நான்-வெஜிடேரியன் ஃபுட் வாங்க வேண்டும். அந்த மார்க்கெட்டிற்குள்ளே போக முடியவில்லை, கால் வைக்க முடியவில்லை.

அமைச்சரவர்கள் 15, 20 தெருக்களுக்கு ஒன்றரை மணி நேரம், இரண்டு மணி நேரம் நடந்து வந்தார்கள். ஆபீசர்களும் வந்தார்கள். ஆனால் பலன் என்ன? கண்ட பலன் ஒன்றுமில்லை. வந்தார்கள், போனார்கள். தீர்ந்து போய் விட்டது. ஏழெட்டு முறை கரஸ்பான்டென்ஸ் செய்தேன். கவனிக்கிறோம். சீக்கிரத்தில் அதைக் கவனிக்கிறோம் என்று பதில் சொன்னார்களே தவிர, கவனித்தோம், இந்த நடவடிக்கையை முடித்தோம் என்று பதில் வரவில்லை.

ஆனால் ஒன்றே ஒன்றைச் சொல்ல வேண்டும். இந்த வறட்சிக் காலத்தில் கடலோரத்தில் நிறையக் கிணறுகளைப் போட்டோம். அதற்கு அப்பொழுது மெட்ரோபாலிட்டன் தலைவராக இருந்த மிஸ்டர் திவான் முகமது அவர்கள் மிகவும் உதவியாக இருந்தார்கள். இங்கே மட்டுமல்ல, சிட்டி முழுவதும் எங்கெங்கே இம்மாதிரி கோரிக்கைகள் வந்தனவோ அங்கெல்லாம் செய்தார்கள். கடலுக்கு 15 அடிக்குப் பக்கத்தில் எட்டு அடிக்குக் கீழே நல்ல தண்ணீர் கிடைத்தது. அதனால் கிட்டத்தட்ட 20 கிணறுகளைப் போட்டோம், எட்டு அடிக்குக் கீழே ஒன்பது அடி, பத்து அடி என்று போனால் அங்கே உப்பு தண்ணீர் வருகிறது. இம்மாதிரி கிணறுகளைக் கண்ணகி சிலையிலிருந்து லைட்ஹவுஸ் வரையில் 20, 26 கிணறுகளைத் தோண்டி, கட்டிடம் கட்டினார்கள். லைட்கூட போட்டார்கள். அதுதான் எவ்வளவோ தண்ணீர்ப் பஞ்சம் வந்தாலும்கூட அந்தப் பகுதியில் இருந்தவர்களுக்கு அனுசரணையாக இருந்தது. இம்மாதிரி நடக்கக் கூடிய ஆபீசர்கள் நிறைய இருக்கிறார்கள். அவர்களைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமே தவிர, பயன்படுத்தாமல் இருந்தால். ஸ்கீமைக் கொடுக்காமல் இருந்தால், உதவி கொடுக்காமல் இருந்தால் அது நம்முடைய குறைபாடு என்றுதான் சொல்ல வேண்டும்.

இந்த சிட்டி டிவிஷனை அவசியம் எடுத்துச் செய்ய வேண்டும். ஒரு கமிட்டி போடுங்கள். சிட்டியில் உள்ள எம்.எல். ஏக்களையும் பழைய எஞ்சினியர்களையும், டாக்டர்களையும், சோஷியல் ஒர்க்கர்களையும் அந்தக் கமிட்டியில் போடுங்கள். இம்மாதிரி 50, 60 பேர்களைக் கொண்ட கமிட்டியைப் போட்டு அதிகாரத்தையும் கொடுத்து, இம்மாதிரி செய்தால் அவசியம் இதைச் செய்ய முடியும்.

60 இலட்சம் குழந்தைகளுக்காக மையங்களை வைத்து சோறு போடுகிறீர்கள். ஆகவே இது ஒன்றும் பிரமாதமான காரியம் இல்லை. எனவே இதையும் நீங்கள் செய்ய முடியும். ஆனால் செய்வீர்களா என்பதைத்தான் என்னாலே புரிந்து கொள்ள முடியவில்லை.

அடுத்து விட்டர் ஃப்ரீ சோன் ஏற்படுத்தப் போகிறோம் என்று சொல்லி இருக்கிறீர்கள். அதை நான் வரவேற்கிறேன். ஆனால் அதற்கு துரிதமாக நடவடிக்கை எடுக்க வேண்டும். எங்கே விட்டர் ஃப்ரீ சோன் இருந்தாலும் துரிதமான நடவடிக்கைகள் எடுக்காததன் காரணத்தால் அவை சரியான பயனைத் தரவில்லை. புதிதாக வந்திருக்கின்ற அமைச்சர் அவர்களுக்கு அதைப்பற்றி நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதற்கு நிறைய ஃபெசிலிட்டிஸ் வேண்டும்.





You must give all the infra-structural facilities.

அப்படி இருந்தால்தான் அது மிகவும் வெற்றிகரமாக நடக்கும். அப்போதுதான் அது நல்ல பலனாக இருக்கும் என்று நான் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்து ட்ரிங்கிங் வாட்டர் பெசிலிட்டிஸ் நிறைய அமைத்திருக்கிறோம் என்று சொல்லி இருக்கிறீர்கள்.

I come from a Village. I go to my village as and when necessary.

அது ஒரு ஊராட்சி. அங்கே எந்த பெசிலிட்டிசும் இல்லை. இதுவரை செய்யப்படவில்லை. 10, 12 வருஷமாக அந்த ஊராட்சி கூட சரிவர நடப்பது இல்லை. இம்மாதிரி எங்கெங்கே டிரிங்க்கிங் வாட்டர் ஃபெசிலிட்டிஸ் இல்லையோ அவற்றை அந்தந்த டிஸ்ட்ரிக்ட் கலெக்டர் மூலம் நீங்கள் கண்காணித்து அவசியம் அதற்கு வேண்டியதைச் செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்,

ஆளுநர் உரையிலே இதுவரை வந்த வருவாய் எவ்வளவு என்பதுபற்றிச் சொல்லி இருக்கவேண்டும். அதுபற்றிச் சொல்லாதது குறித்து நான் வருத்தப்படுகிறேன். முக்கியமாக நமக்குக் கிடைக்கக் கூடிய வருமாய் சேல்ஸ் டாக்ஸ் தான். அது சென்ற வருஷம் 200 கோடிக்கு மேல் வந்திருக்கின்றது என்று மதிப்பீடு செய்திருக்கிறோம். இப்போது அதற்குப் பிறகு கிட்டத்தட்ட 10 மாதங்களுக்கு மேல் ஆகி விட்டது. எனவே இப்போதுள்ள நிலைமையையும் நமக்கு நன்கு விளக்கமாகத் தெரிந்திருக்க வேண்டும். அப்படித் தெரிந்தால்தான் ஃபார் தி ஹோல் ஸ்டேட் என்னென்ன பெரிய பணிகளை நாம் செய்ய வேண்டும் என்பதை உணர முடியும். எனவே 10 மாதங்கள் ஆகிவிட்டதன் காரணத்தால் அதைப்பற்றி இப்போது ஆளுநர் உரையிலே சொல்லி இருக்கலாம். அவ்வாறு சொல்லாமல் பட்ஜெட் உரையிலே அதைப்பற்றிச் சொல்லலாம் என்று இருந்து விட்டு வெறும் கஷ்டம், நஷ்டம் ஏற்பட்டதை மட்டும் அவர்கள் சொல்வார்களானால் அது தவறு. மக்கள் அதைத் தவறாக எடுத்துக் கொள்வார்கள். எனவே எந்தெந்த இலாக்காவில் எவ்வளவு வருமானம் சற்றேறக்குறைய வந்திருக்கின்றது; எவ்வளவு வரப்போகின்றது என்பதைப் பற்றியும் அவர்கள் சொன்னால்தான் மிகவும் நன்றாக இருக்கும்.

அடுத்து டிரேடர்ஸ் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். டெக்ஸ்டைல் ட்ரேடர்ஸ் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். கோல் விலை ஏறிவிட்டதன் காரணத்தால் மேலும் விலை ஏறும் என்று சொல்கிறார்கள். இப்போது மூன்று இடங்களிலிருந்து அதாவது கல்கத்தா, ஹால்டியா, ஒரிசா மாநிலத்திலுள்ள பரதிப் போன்ற இடங்களிலிருந்து மாதம் ஒன்றுக்கு 2 இலட்சம் டன் கொண்டு வருவதற்கு ஏற்பாடு செய்து கொண்டு வந்திருக்கிறேன் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதற்காக ரொம்பவும் மகிழ்ச்சி. இந்த இடங்களிலிருந்து குறைந்தது 5 இலட்சம் டன் மாதம் ஒன்றுக்கு வந்துகொண்டே இருக்கின்ற வகையில் ஏற்பாடு செய்து இருக்க வேண்டும். அதற்காகவென்றே ஒரு கப்பலை நீங்கள் வாங்கப் போகிறீர்களோ அல்லது வாங்கிவிட்டீர்களோ தெரியவில்லை. அதுபற்றி பத்திரிகையிலே பார்த்தேன் ஜப்பான் கப்பலை 31 கோடி ரூபாயில் வாங்குவதாக முதலிலே எஸ்ட்டிமேட் போட்டிருந்தீர்கள். இப்போது 21 கோடி ரூபாய்க்கு நீங்கள் வாங்கியிருக்கிறீர்கள் என்று தெரிந்து மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். காரணம் 10 கோடியினை சேமித்து இருக்கிறீர்கள். ஆனால் ஒரு கப்பல், 2 கப்பல் என்று வைத்து நடத்தினால்—

I wish you all success. I know something of this shipping industry with which I am connected for the last 35 to 40 years– அதை நன்றாக நடத்த வேண்டும். அதைவிட நீங்கள் சார்டர் பண்ணி நடத்துவீர்களானால் அதில் ஒரு முழு வெற்றி அடையலாம். 50 கப்பல்கள், 60 கப்பல்கள் வைத்திருப்பவர்கள் எல்லாம் இப்பொழுது அவற்றை எல்லாம் விற்றுவிட்டு, வியாபாரத்திற்கு சார்டர் செய்துகொள்கிறார்கள். அதாவது வாயேஜ் சார்டர்—இங்கேயிருந்து இந்தத் துறைமுகத்திற்கு என்று டைம் சார்டர், 3 மாதத்திற்கு, 6 மாதத்திற்கு என்று சார்டர் செய்து கொள்கிறார்கள். அதைவிட்டுவிட்டு நீங்கள் இந்த மாதிரி பூம்புகார் ஷிப்பிங் கார்ப்பரேஷன் ஆரம்பித்தால், அது ரொம்பவும் ரிஸ்க்—100%, 120% திறமை உள்ளவர் அதை நடத்தினாலொழிய அது சரியாக வராது என்பதை நான் முன்கூட்டியே உங்களுக்குச் சொல்லிக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

(முற்பகல் 10-50)

ஒரு வீட்டிற்கு ஒருவருக்கு வேலை என்று திட்டம் கொண்டு வந்தீர்கள். நான் இப்பொழுது மெட்ராஸ் சிட்டியை கிளீன் செய்வதற்காக கொடுத்த ஸ்கீம்படி, கிட்டத்தட்ட 16,000, 17,000 பேர்கள் மாதந்திற்கு எம்ப்ளாய்மென்ட் பெறலாம். இங்கே ஆரம்பித்து, அது சரிவர செய்வதைப் பார்த்துவிட்டு, எல்லா கார்ப்பரேஷன்களுக்கும் அதை நீங்கள் கொண்டு போவீர்களேயானால் இலட்சக்கணக்கான படித்தவர்களுக்கும், படிக்காதவர்களுக்கும் வேலை தரலாம். என்னுடைய அபிப்பிராயப்படி நபர் ஒன்றுக்கு ரூ. 400 தரவேண்டும். அப்பொழுது தான் அந்த ஆள் நம்மிடத்திலே தங்கி இருப்பான். அதை விட்டுவிட்டு, ரூ. 150, ரூ. 200 என்று வைத்தால், இதை "பேசிக்காக வைத்துக் கொண்டு எல்லா இடங்களுக்கும் ரோகப



அவன் பார்த்துக் கொண்டே இருப்பான். இதை நீங்கள் ஆரம்பியுங்கள். அப்படியென்றால் இலட்சக்கணக்கான மக்களுக்கு ஊதியம் கிடைக்கும்போது எவ்வளவு பொருளாதார நிலை உயருகிறது? வாழ்க்கைக்கு வேண்டியதை எல்லாம் அவர்கள் வாங்கிக் கொள்கிறார்கள். புரடக்ஷன் அதிகமாகிறது. ரா மெட்டீரியல்ஸ் அதிகமாகிறது. இந்த மாதிரிதான் ஒவ்வொரு விஷயத்திலும் பொருளாதார அபிவிருத்தியை நாம் பெறுவோம். முக்கியமாக இதை அரசாங்கம் அவசியம் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அரிசி கொள்முதலை சிவில் சப்ளைஸ் மூலமாக நீங்கள் நடத்துகிறீர்கள். இலட்சக்கணக்கான டன் அரிசியை வாங்குகிறீர்கள். அதில் நீங்கள் வெற்றிகண்டிருந்தாலும்கூட பல கம்ப்ளெயின்ட்ஸ் வந்து கொண்டே இருக்கின்றன. நேற்றுகூட மாண்புமிகு திரு. உடையநாத் அவர்கள் பேசும்பொழுது, ரூ.1–¾-க்கு எனக்கு எங்குமே அரிசி கிடைக்கவில்லை என்று சொன்னார்கள். சில சமயங்களில் பழுப்பு நிற அரிசி விற்கிறது என்று சொல்கிறார்கள். அதைக் கண்காணிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

ரூ. 120 கோடிக்கு மேல் நீங்கள் ஓவர் டிராப்ட் வாங்கியிருப்பதாக பேப்பரில் பார்த்து

I am concerned about it. I have no regret for It: இந்த நிலை வரும் என்று 8 மாதங்களுக்கு முன்னாலேயே எனக்குத் தெரியும். நீங்கள் போகிற போக்கில் அவசியம் ஓவர்டிராப்ட் வாங்கித்தான் நீங்கள் ஆட்சியைக் கொண்டு செல்ல முடியும் என்று எனக்குத் தெரியும்.

I would like to suggest that there should be a complete re–organisation of the financial position of our State.

மத்திய அரசாங்கம் கொடுக்கும் பணமும் நம்முடைய பணமும் சேர்த்து கிட்டத்தட்ட 1,900 கோடி ருபாயை நாம் கையாள்கிறோம். நான் வெளிநாடுகளுக்குப் போகும்போதெல்லாம் என்னுடைய பிஸினஸ் பிரண்ட்ஸிடம் எல்லாம் பெருமையாகச் சொல்லிக் கொண்டு வந்தேன். நாங்கள் ஓவர்டிராப்ட் வாங்குவதே இல்லை. வாங்க மாட்டோம் என்று சொன்னேன். இப்பொழுது என்னை ஒரு பெரிய தொழில் அதிபர் டெல்லியில் கேட்டார், என்ன, ரூ. 120 கோடிக்குமேல் வாங்கியிருக்கிறீர்களே, என்று. அதற்கு மேல் போனாலும் ஆச்சரியப் படுவதகில்லை என்று நான் சொன்னேன். என்ன காரணம் என்றால், தாங்கமுடியாத வறட்சி, தாங்க முடியாத வெள்ளம், மத்திய அரசாங்கத்திடமிருந்து பணம் வருவதற்கு முன்னால் நாங்கள் பணம் போட வேண்டியிருந்தது. அதனால் அரசு வாங்கினால் உடனே கொடுத்துவிடுவார்கள் ஓவர்டிராப்ட் என்பது நிலையானது அல்ல, பணம் வாங்குகிறோம், திருப்பிக்

கொடுக்கிறோம், என்று சொன்னேன் நீங்கள் பட்ஜெட்டை பினான்ஷியல் எக்ஸ்ர்பட்லை லவத்து, கம்ப்ளீட்டாக ஸ்டடி பண்ணி, எந்த எந்த இலாகாவிற்கு எவ்வளவு கொடுக்கவேண்டும் என்பதைப் பார்ப்பீர்களானால், அவசியம் ஓவர் டிராப்டை அவாய்ட் பண்ணலாம். நான் சேர்மன் ஆப் திபினான்ஸ கமிட்டி என்ற நிலையில் சில விஷயங்களை அறிந்து மிகவும் திடுக்கிட்டேன் பட்ஜெட் லேப்ஸ் ஆகுமோ என்று எண்ணி சில டிபார்ட்மெண்ட்களில் லட்சக்கணக்கான பணத்தை வாங்கி வைத்துக் கொள்கிறார்கள். இதுஒரு தவறான முறை. நான் ஏன் அந்த மாதிரி வாங்கி வைத்துக் கொள்கிறீர்கள் என்று கேட்டேன். ஒர்க் இஸ் இன் புராக்ரஸ், ஆகவே லாப்ஸ் ஆகிவிட்டால் பணம் திரும்பவும் வராது என்று சொன்னார்கள். அது சரியான கொள்கை அல்ல. லட்சக்கணக்கான ரூபாயை வாங்கி வைத்துக் கொள்வது சரியான முறை அல்ல. அதை மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் கவனித்து சரியான முறையைக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். யாரும் அப்படி பணத்தை வாங்கி வைத்துக் கொள்ளக் கூடாது. அந்தமாதிரி போட்ட எஸ்டிமேட்களைப் பார்த்தால் குறைந்தது கோடிக்கணக்கான ரூபாய் வரும் என்று நான் நினைக்கிறேன். அதுபற்றி கூட ஒரு குறிப்பை கேட்டிருக்கிறேன். அது இன்னும் எனக்கு வரவில்லை. இது குறித்து அரசு சரியான முறையைக் கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அன்பிற்குரிய எதிர்கட்சித் தலைவர் அவர்கள் மேதகு ஆளுநர் உரையின்மீது தங்களது பயன்மிகு கருத்துக்களைச் சொல்கிற நேரத்திலே இந்த அரசைப் பற்றி, அரசு சிறுபான்மை இனத்தற்குச் செய்து வருகிற பணிகளைப் பற்றி தங்களது ஒரு கருத்தை எடுத்துச் சொன்னார்கள். அந்த வகையிலே என்னுடைய ஒரு நிலையையும் விளக்கத்தையும் இந்த மேலான சபைக்கும், அதன் வாயிலாக தமிழக மக்களுக்கும் தெரிவிக்க வேண்டியது எனது கடப்பாடு என்று கருதுகிறேன். எங்கள் இனிய தலைவர் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு சிறுபான்மை மக்களுக்கு குறிப்பாக இஸ்லாமிய பெருமக்களுக்கு எதுவுமே செய்யவில்லை என்றும், இன்று அவர்கள் புறக்கணிக்கப்படுகிறார்களோ என்ற உணர்வுகளை அந்தப் பொருள்படும்படி, அந்த வகையில் மக்கள் எண்ணும்படியாக அவர்கள் சில உணர்வுகளை வெளியிட்டார்கள்.

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் மிகுந்த அனுபவம் படைத்தவர்கள். பொது வாழ்க்கையில் நீண்ட நெடுநாட்களாக நின்று, நிலைத்த பெருமைக்குச் சொந்தக்காரர். அதுமட்டுமல்ல. சென்னை திருநகரத்தில் நீண்ட நெடுநாட்களாக இருந்த பொதுப்பணி ஆற்றி வருகிற நல்ல இதயம் படைத்தவர்கள்,



அவர்களிடமிருந்து இந்தக் கருத்தை நான் எதிர்பார்க்கவில்லை. குறிப்பாக அவர்கள் இஸ்லாமிய மக்களுக்கு எங்கள் இனிய தலைவர் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் எதுவுமே செய்யவில்லை என்று சொன்னார்கள். இதற்கு உரிய நேரத்திலே எங்களுடைய மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் அவர்கள் தக்க விளக்கத்தை அளிக்க இருக்கிறார்கள். ஒரே ஒரு கருத்தை மட்டும் என்னைப் பொறுத்தவரையில் நான் சொல்ல வேண்டிய கடப்பாடு இருக்கிறதாலே இந்த கண்ணியமிக்க சபைக்கும், அதன் வழியாக நாட்டு மக்களுக்கும் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(முற்பகல் 11-00)

இங்கே பணியாற்றுவதற்கு என்னைத் தேர்ந்தெடுத்து அனுப்பியிருக்கும் ஆயிரம் விளக்குத் தொகுதியில் கணிசமான அளவில் பாசம் மிக்க இஸ்லாமிய மக்கள் வாழ்கிறார்கள் என்ற மெய்யான உண்மையை உலகமெல்லாம் அறிந்து இருக்கிறது. அந்த இஸ்லாமிய மக்களுக்கு கடந்த நான்காண்டுகளில் என்னென்ன வகைகளில் நாங்கள் உதவி செய்து இருக்கிறோம் என்பதை மாண்புமிகு எதிர்கட்சித் தலைவர் அவர்களும் என்னுடைய தொகுதிக்குப் பக்கத்து தொகுதியில் இருப்பதால் நன்றாக அறிவார்கள்.

சென்னைத் திருநகரில் அமீர்மகால் என்ற இடத்திற்கு அருகில் உசேன் நகர் என்ற ஒரு இடம் இருக்கிறது. அங்கே இஸ்லாமிய மக்கள் வாழ்ந்து கொண்டு இருக்கிறார்கள். அதிலே 115 குடும்பங்கள் பல ஆண்டுக் காலமாக குடிசைகளைப் போட்டுக்கொண்டு அவர்களுக்கு அந்த நிலம் உரிமையில்லாமலும், ஒரு பாதுகாப்பற்ற நிலையிலும் வாழ்ந்து கொண்டு வந்தார்கள். கடந்த ஒரு மாதத்திற்கு முன்பாகத் தான் அந்த 115 இஸ்லாமிய ஏழை எளிய மக்களுக்கு அந்த நிலத்தைப் பட்டா செய்து உரிமையாக்கி, சொந்தமாக்கி, அவர்களுக்கு சொந்த வீடுகள் அங்கே கட்டிக்கொடுப்பதற்கு உலக வங்கியிடமிருந்து பெற்ற நிதி வசதியைக் கொண்டு ஒவ்வொரு குடும்பத்திற்கும் 3,500 ரூபாய் என்ற வகையில் ஏறத்தாழ 4 லட்சம் ரூபாய் ஒரு குறிப்பிட்ட பகுதிக்கு மட்டும், அந்த உசேன் நகர் பகுதியில் உள்ள 115 இஸ்லாமியக் குடும்பத்தினருக்கு மட்டும் உதவி கிடைக்கின்ற வகையில் அந்த மக்கள் தங்கள் சொந்த நிலங்களிலேயே வாழும் அற்புதமான காரியத்தை எங்களுடைய புரட்சித் தலைவர் அவர்கள் நிறைவேற்றித் தந்து இருக்கிறார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இரண்டாவதாக, தமிழ்நாட்டில் உள்ள உலாமாக்களுக்கு பென்ஷன் அளிக்கும் திட்டத்தை இந்த அரசு கொண்டு வந்து, அதன் மூலம் இஸ்லாமிய சமுதாயப் பணிக்காக தங்களை அர்ப்பணித்துக் கொண்டவர்களுக்கு ஓய்வு பெற்ற பின்பு வாழ வழி வேண்டும். அவர்கள் 60-70 ஆண்டு காலம் சமயப் பணி செய்து விட்ட பிறகு, அவர்களுடைய வாழ்க்கை ஒரு சூதாட்டமாக ஆகிவிடக்கூடாது, பற்றுக் கோடாக இருக்க வேண்டும் என்பதற்

காக மாதம் தோறும் ரூ. 250 என்ற வகையில் தமிழ்நாட்டில் ஏறத்தாழ 15 லட்ச ரூபாய் அளவிற்கு இதற்காக செலவு செய்யும் அளவிற்கு நாங்கள் உலாமாக்களுக்கு ஓய்வூதியத் திட்டம் கொண்டு வந்து இருக்கிறோம். (குறுக்கீடு) என்னுடைய கருத்துக்களை நான் சொல்லி முடித்தபின் விளக்கம் கேட்கலாம். (குறுக்கீடு).

திரு. அ. ரகுமான்கான் : ஒரு கிளாரிபிகேஷன் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; மாண்புமிகு அமைச்சர் பேசிக்கொண்டிருக்கும் போது கிளாரிபிகேஷன்கேட்பது அனுமதிப்பதற்கு இல்லை. மாண்புமிகு அமைச்சர் பேசி முடித்த பிறகு வேண்டுமானால் கேட்டுக் கொள்ளலாம்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி ; அந்த ஓய்வூதியத் திட்டத்தின் அடிப்படையில் 7 மௌலானாக்கள் அந்த வசதியை, அந்த வாய்ப்பை, அந்தப் பயனை ஆயிரம் விளக்குத் தொகுதியில் உள்ளவர்களுக்கு மட்டும் அளிக்கப்பட்டு இருக்கிறது. இப்படி தமிழ் நாட்டில் உள்ள 234 தொகுதிகளிலும் உள்ள மௌலானாக்களுக்கு இந்த வசதி வாய்ப்புக் கிடைக்கிறது. இங்கே நானும் ஒரு தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் என்ற காரணத்தால் எனக்குத் தெரிந்த தகவலை இந்தச் சபையில் தெரிவிக்க வேண்டும் என்ற அடிப்படையில் 7 மௌலானாக்கள் ஆயிரம் விளக்குத் தொகுதியில் மட்டும் அந்தப் பயனைப் பெற்றிருக்கிறார்கள் என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். இப்படி ஏழை எளிய முஸ்லீம்கள் நல்வாழ்வு வாழவேண்டும் என்பதற்காக இந்த அரசு பல்வேறு நன்மைகளை கடந்த நான்காண்டுகாலமாக சிந்தித்து செயல்படுத்தி வருகிறது என்று சொன்னால் அதற்குக் காரணம் எங்களுடைய இதய தெய்வம் புரட்சித் தலைவர் அன்பும் அருளும் தான் காரணம் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். (குறுக்கீடு).

திரு. கே. எஸ். ஜி. ஹாஜா ஷரீப் : மிஸ்டர் ஸ்பீக்கர் சார், நான் பேசும்போது சொன்னது தமிழகம் முழுவதையும் எடுத்துக் கொண்டு சொன்னேன். தமிழ்நாட்டில் 18-19 டிஸ்டிரிக்ட்ஸ் இருக்கின்றன. ஒரு டிஸ்டிரிக்டிற்கு கூட முஸ்லீம் கலெக்டர் இல்லை. ஒரு டிஸ்டிரிக்டிற்குக் கூட எஸ். பி. இல்லை என்று சொன்னேன். அதைச் சரிசெய்யவேண்டும். அப்படி இல்லாததை என்னிடத்தில் பலபேர் சொல்லியிருக்கிறார்கள். ஏன் அந்த சமுதாயத்தில் தகுந்த திறமையுள்ள சுறுசுறுப்பான ஆபீசர்ஸ் இல்லையா? ஏன் போடவில்லை? ஏன் செய்யவில்லை? என்றுதான் கேட்டுக்கொள்கிறேன்.

ஹஜ் கமிட்டிக்கு ஒரு இடம் வழங்கப்பட்டது. அந்தக் கட்டிடம் ஆரம்பம் செய்வதற்கு முன்பு அதை ஏதோ சில பேர் அதைப் பற்றி புகார் செய்த காரணத்தால் நிறுத்திவிட்டதாகச் சொல்கிறார்கள். அதற்கு உடனே அரசாங்கம் மாற்று இடம் கொடுத்திருக்க வேண்டும். அதைக் கொடுப்பதில் தாமதம்



ஏற்படுகிறது. இந்த வருஷம் ஹஜ் யாத்திரை போகிறவர்கள் சென்னையிலிருந்து போவதற்கு எல்லாவிதமான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு, சென்னையிலிருந்து போகப்போகிறார்கள். அதற்குத் தகுந்த வகையில் ஏற்பாடு செய்து கொடுத்தால் மிகவும் நன்மையாக இருக்கும்.

எனது அருமை நண்பர் மாண்புமிகு கே.ஏ.கே. அவர்கள் உலாமாக்களுக்கு பென்ஷன் கொடுக்கிறோம், முஸ்லீம்களுக்கு நிறையச் செய்கிறோம் என்று சொன்னார்கள், மிகவும் நன்றி.

I am indebted to this Government. I am one of those who appreciate what this Government has done. But at the same time I will certainly say what this Governmeni has not done and what are all the things to be done by the Government.

என்னுடைய தொகுதியில் 4, 5 மாதங்களுக்கு முன்பு தீவிபத்து ஏற்பட்டது. ஒரு மணி நேரத்திற்குள் 375 குடிசைகள் எரிந்து சாம்பலாகி, கரியாகி, நாசமாகிவிட்டன. பலமுறை நான் அது பற்றி சொல்லி வந்தும்கூட இன்று வரையில் ஒன்றும் நடக்கவில்லை. ஆனால் உடனடியாக குடிசைக்கு 200 ரூபாயோ, 250 ரூபாயோ கொடுத்தார்கள். அதை இல்லை என்று நான் சொல்லவில்லை. அவர்களுக்கு மாற்று இடம் கொடுக்க வேண்டுமென்று குடிசைமாற்று வாரியத் தலைவரைக் கேட்டிருக்கிறேன். அவரிடமிருந்து இன்னும் எனக்கு பதில் வரவில்லை. என்னுடைய கஷ்டம் எல்லாம் நான் கடிதம் எழுதினால் யாரும் பதில் எழுதமாட்டேன் என்கிறார்கள். ஒரே ஒருவர் மட்டும், அதாவது டி.ஜி.பி. மட்டும் பதில் எழுதுகிறார். மற்ற அதிகாரிகள் யாரும் பதில் எழுதமாட்டேன் என்கிறார்கள். இப்படிப்பட்ட நிலையில் 900 குடும்பங்கள் தெருவில் நிற்கிறார்கள். அவர்களுடைய கஷ்டத்தை நிவர்த்தி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இப்படிப்பட்டவர்களுடைய கஷ்டத்தைத்தான் நான் இங்கே எடுத்துச் சொன்னேன். அது அல்லாமல் இந்த சர்க்கார் ஒன்றுமே செய்யவில்லை என்று நான் சொல்லவில்லை. நீங்கள் செய்ததற்கு, கொடுத்ததற்கு நன்றி. மேலும் செய்யாதவைகளை எல்லாம் செய்ய வேண்டுமென்று கேட்டு, அமர்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன் : மாண்புமிகு அவைத் தலைவரவர்களே, ஆளுநர் அவர்களுடைய உரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின் பேரில் இந்த மாமன்றத்திலே உள்ள பொறுப்புமிக்க உறுப்பினர்கள் தங்கள் நாட்டுக் கடமையை நிறைவேற்றும் வகையில் பல கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அது மாற்றுக் கருத்தானாலும் சரி, எதிர் கருத்தானாலும் சரி, பாராட்டுக் கருத்தானாலும் சரி, கருத்துக்களைத் தெரிவித்த அத்தனை பேர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இதுவரையில் ஆளுநர் உரையைப்பற்றிப் பேசுகின்றவர்கள் ''ஏதோ உப்பும் இல்லை, சப்பும் இல்லை'' என்பார்கள், எதற்காக இந்த அறிக்கை என்பார்கள், ஏதோ அரசு எழுதிக் கொடுத்ததை படித்துவிட்டுப் போகிறார் என்பார்கள். அது எல்லாம் இல்லாமல் சிலர் வேறு மாதிரியான கருத்துக்களை முதலிலே வைத்து, மிகவும் ஒரு முக்கியமான இடத்தைக் குறிப்பிட்டு, அந்த இடத்தை திரும்பத் திரும்பப் பேசவேண்டிய வகையிலே எடுத்து வைத்திருக்கிற அந்த இடத்தை நான் நினைத்துப் பார்க்கிறேன். அப்படி தகுதியான ஒரு இடத்தை இந்த ஆளுநர் உரையில் அளித்திருக்கிறார்கள் என்பதைச் சொல்லும்போது எனக்கு மன நிறைவு ஏற்படுகிறது என்பதை முதலிலே தெரிவித்துக் கொள்வது என் கடமை என்று கருதுகிறேன்.

ஒருவர் சொல்லியிருக்கிறார், 'ஒப்பாரி வைத்திருக்கிறது' என்று. ஒருவர் சொல்லியிருக்கிறார், 'இது தேர்தல் அறிக்கையாக இருக்கிறது' என்று. இந்த இரண்டும் போதும் அங்கும் இங்கும் என்ற முறையில். ஒரு அரசினுடைய பொறுப்பிலே இருக்கின்றவர்களுக்கு, தேர்தல் அறிக்கை போல் ஒரு ஆளுநர் உரையை அளித்திருக்கிறார்கள் என்றால் அது உச்சக்கட்டம். ஒப்பாரி மாதிரி இருக்கிறது என்று சொன்னால் ரொம்ப துக்ககரமான கட்டம். அந்த இரண்டு கட்டத்திற்கும் இடையே எத்தனையோ கருத்துக்கள் இருக்கின்றன. குறைகளைச் சொல்வதற்கு ஒரு காரணத்தை சிருஷ்டித்துக் கொண்டு அதற்கு விளக்கத்தையும் ஆதாரத்தையும் தேடியிருக்கிறார்கள் சிலர். இந்த அரசைப் பொறுத்த வரையில் தேர்தலிலே என்னென்ன சொன்னோமோ அதை நிறைவேற்றுவதற்கு என்னென்ன வழி என்பதை வைத்துக்கொண்டுதான் திட்டத்தைத் தீட்டி, அதை நிறைவேற்றுவதற்கு ஆளுநர் மூலமாக கொள்கையைச் சொல்லி, அதை நிதிநிலை அறிக்கை மூலம் நடைமுறைப் படுத்துவதற்கு நாங்கள் முயற்சி செய்து கொண்டிருக்கிறோம். எல்லோரும் அப்படித்தான் செய்வார்கள். இது இயற்கை.

(முற்பகல் 11–10)

நாங்கள் புதுமையாகச் செய்வதில்லை. இதை நான் சொல்வது—என்ன காரணத்தாலோ எல்லோருக்கும் இருக்கிறது என்று சொல்லவில்லை சில உறுப்பினர்களுக்கு, மாண்புமிகு உறுப்பினர்களுக்கு. ஒப்பாரியாகவும் இருந்திருக்கிறது, அறிவார்ந்த அறிக்கையாகவும் இருந்திருக்கிறது. ஒப்பாரி வைப்பவர்கள் எங்கே போனாலும் ஒப்பாரி வைப்பார்கள். சாவு வீட்டிற்குப் போனாலும் ஒப்பாரி வைப்பார்கள், கல்யாண வீட்டிற்குப் போனா ஒப்பாரி வைப்பார்கள். சாவு வீட்டிற்குப் போனாலும் கஞுடைய கஷ்டத்தை யெல்லாம் நினைத்துக்கொண்டு, மார் தட்டி, ஒப்பாரி வைப்பார்கள்—அவர்களுடைய வீட்டில் அப்படி இருந்தது, இப்படி இருந்தது என்று—கல்யாண வீட்டிற்குப் போனால், உங்க அப்பா இல்லையே, உங்க தாத்தா இல்லையே



என்று ஒப்பாரி வைப்பார்கள். இப்படி சில குணங்கள்—அதைத் தவிர்க்க முடியாது. இந்த ஒப்பாரி வைப்பவர்கள் பற்றி நான் உங்களுக்கு சொல்கிறேன்—பெத்தடின் போட்டவர்கள் எப்படியோ இருப்பார்கள். அப்படிப்பட்டவர்களுக்குத் தான் இந்த ஒப்பாரி ஞாபகம் வரும். அப்படிப்பட்டவர்கள் என்று நான் சொல்லவில்லை. அதுமாதிரி ஒரு எண்ணம் வருகிறது. அதற்கு அனுதாபப்படுகிறேன். தொடர்ந்து பத்திரிகையிலே போட்டால், பிறகு அதை வாசித்தால் நன்றாக இருக்காது. தொடர்ந்து நண்பர்கள் ஒப்பாரி வைக்கக் கூடாது. இங்கே எடுத்துச் சொன்னதைப்போல, குற்றங்குறைகளை தாட்சண்யம் இன்றி, எந்தக் கவலையும் இன்றி, வேண்டுமென்றே ஒரு உணர்ச்சி கொண்டு வந்து, குற்றங்குறைகளைச் சொன்னார்களே, அப்படிப்பட்ட நிலையிலே அனைவரும் இருக்க வேண்டுமென்பதுதான் என்னுடைய விருப்பமும், வேண்டுகோளும் ஆகும் இப்போது தேர்தல் அறிக்கையைப் போன்று 'இருக்கிறது என்று கூறும்போது, தேர்தல் அறிக்கையில் சொன்ன விஷயங்கள் இல்லாமல் சொல்லப்பட்டவைகள் புதியதாக இதில் சொல்லப்பட்டிருக்கிறது என்று தான் நாங்கள் இதை எடுத்துக் கொள்கிறோம். தேர்தல் அறிக்கையிலே சொன்னவைகளை நிறைவேற்றவில்லை என்று சொன்னவர்கள், தேர்தல் அறிக்கையிலே சொல்லாததை செய்யப் போகிறோம் என்று சொன்னதனால், இதுவும் ஒரு தேர்தல் அறிக்கையாக வந்திருக்கிறது. என்றார்கள் இதற்கு நான் மகிழ்ச்சியடைகிறேன். இதைத் தேர்தல் அறிக்கையாக எடுத்துக்கொண்டாலும் இது மக்களுக்காகப் பயன்படுமானால், இது மக்களுக்குத் தேவையான ஒன்று என்று கருதினால், நான் மிக மகிழ்ச்சி அடைந்து, இந்தத் திறன் ஆய்வு விளக்கத்தை ஏற்றுக் கொள்கிறேன்.

முதலில் மாவட்டப் பிரிவினைகளைப் பற்றி நான் சொல்ல வேண்டும். மாவட்டங்களைப் பிரிப்பதற்குக் காரணம்—ஒன்று—நாம் மதிக்கிற தலைவர்களை எப்போதும் மக்கள் நினைவிலே வைப்பதற்காக—இதைப் பிரிக்க காரணத்தை சிருஷ்டிக்கவில்லை—பிரிக்கின்ற காரணத்தை உண்டாக்கவும் இல்லை—காரணங்கள் இருப்பதால், அந்தக் காரணங்களைப் பயன்படுத்தி அவைகளை நினைவுபடுத்துவதற்காக, அவர்களின் பெயரை வைப்பது—இரண்டு—மிகப் பெரிய மாவட்டங்களாக இருப்பதால், பஞ்சாப் போல—ஹரியானா போல—வடக்கே இருக்கின்ற மாநிலங்களைப் போல—நம்முடைய மாவட்டங்களுக்குத் தேவையான உதவியை மத்திய அரசிடமிருந்து பெறமுடியவில்லை. இங்கே ஒரு தொழில் இருக்கிறது என்றால், அந்த மாவட்டத்தைப் பிற்பட்ட மாவட்டமாகக் கருதி உதவி செய்யுங்கள் என்று கேட்கிறபோது, அங்கே தொழில் இருக்கிறது. ஆகவே அதைப் பட்டியலில் சேர்க்க முடியாது என்று சொல்கிறார்கள். அதையும் மீறி, நியாயமான எண்ணம் அவர்களுடைய உள்ளத்திலே ஏற்ற வசதியாக இருப்பதற்காக இந்த மாவட்டங்களின் பிரிவினை. அதுவும் நிர்வாகம் இன்னும் கூடுதலாக ஆகும்பொழுது, அவர்களுக்கு அதிகாரம் கொடுக்கப்படுகின்றபோது; எவ்வளவு சீக்கிரமாக மக்கள் அதிகாரிகளோடு நெருங்கிய உறவு கொண்டு, சந்தித்து காரியங்களை

நிறைவேற்ற முடியுமோ, அவைகளை நிறைவேற்றிக் கொடுப்பதற்காக, இந்த மாவட்டங்களைப் பிரித்தோமே தவிர, ஏதோ எங்கள் ஆசைகளுக்காக எந்தெந்த மாவட்டங்களைப் பிரிக்க வேண்டுமென்றோ, எதை எதை யார் தலையிலே சுமத்த வேண்டுமென்ற எண்ணத்திலோ நாங்கள் இந்த மாவட்டங்களைப் பிரிக்கவில்லை என்பதைத் தெளிவுபடுத்த வேண்டியது என்னுடைய பொறுப்பு என்று நான் கருதுகின்றேன். பெயர்களை நாங்கள் தேர்ந்தெடுத்து சூட்டியபோது, கட்சி அரசியல், ஜாதி அரசியல்—மத அரசியலுக்குள் நாங்கள் போகவில்லை—நமது தாயகத்திற்கு விடுதலை வாங்கித் தந்தவர்கள், விடுதலைக்காக, உழைத்தவர்கள், விடுதலைக்குப் பிறகு இந்த நாட்டைக் கட்டிக் காக்கத் தகுந்தவர்களாக இருந்தவர்கள், இந்த நாட்டிற்காக தியாகம் செய்தவர்கள், மொழிக்காக, இனத்திற்காக-நான் முதலிலே சொல்லிவிட்டேன், மதத்திற்காக அல்ல-எப்படியும் மக்கள் வாழ வேண்டும் என்பதற்காக எதையும் தாங்கிக் கொண்டு இந்த நாட்டு மக்களுக்கு நன்மைகள் செய்யவேண்டும் என்ற ஒரே குறிக்கோளோடு இருந்து பல துன்பங்களை ஏற்ற பெரியவர்களுக்கு நினைவு இருக்கக்கூடிய நிலைமையில் அவர்களைப் பற்றி மக்களுக்குத் தெரிவிக்கக்கூடிய நிலைமையில் அந்தப் பெரியவர்களுடைய பெயர்களை, தியாகிகளுடைய பெயர்களை நாம் சூட்டினோம். இருக்கின்ற மாவட்டங்களின் பெயர்களை நாங்கள் மாற்றவில்லை. நெல்லை மாவட்டம் என்றால் நெல்லை மாவட்டம் இருக்கிறது. மதுரை மாவட்டம் என்றால், மதுரை மாவட்டம் இருக்கிறது. திருச்சி மாவட்டம் என்றால் திருச்சி மாவட்டம் அதுபோல் எந்தெந்த மாவட்டங்களை நாங்கள் பிரித்தாலும், முன்னால் சொல்லப்பட்ட அந்த மாவட்டங்களின் பெயர்கள் அப்படியே இருக்கும்படியாக நாங்கள் மிக எச்சரிக்கையாக இருந்தோம் என்பதை, இருக்கமுனைகிறோம் என்பதை இந்த நேரத்திலே தெளிவுபடுத்தக் கடமைப் பட்டிருக்கிறேன்.

நெல்லையை எடுத்துக் கொண்டபோது, வ. உ. சிதம்பரம் பிள்ளை அவர்கள் நினைவு நமக்கு வருகிறது. சிதம்பரம் பிள்ளை என்று சொல்வதா? பிள்ளை வகுப்பாருடைய ஞாபகத்திற்காகச் சொல்கிறேன் என்று யாரும் கற்பனை செய்வார்களேயானால், அவர்களுடைய தியாக உணர்வு ஏதோ கிணற்றில் இட்ட தீபம் போல் இருந்துவிடும், குடத்தில் இட்டது போல் அல்ல. கிணற்றிலிட்ட தீபம் போல்தான் இருக்கிறது என்று நான் சொல்வேன். அவர்கள் பிறந்தது அந்த ஜாதியில் என்று அந்தக் காரணம் சொல்லிவிட்டதே தவிர, அவர் பிறந்தது இந்த இந்திய துணைக் கண்டத்தின் விடுதலைக்காக, வாழ்வுக்காக, என்பதை நாம் எண்ணும்போது, வ. உ. சிதம்பரம் என்று பெயர் வைக்கிறோம் என்றால், எங்களில் யாருக்கும் இதிலே பங்கு இல்லை என்பதை இங்கே நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். பங்கு பெறவும் நாங்கள் ஆசைப்படவில்லை. அவர் நாட்டுக்குத் தொண்டு செய்தார். கப்பலோட்டிய தமிழன் என்ற பெயரை அவர் பெற்றார். மக்கள் அப்படிச் சொல்வதிலே பெருமை பெற்றார்கள். அவர், ஒருவரும் வேலைக்குப்





போகக்கூடாது என்று சொன்ன வார்த்தையையேற்று முடிதிருத்துபவர்கள் கூட போகாமல் அந்த ஆங்கில அரசுக்காக அங்கே வேலை செய்து கொண்டு இருந்த அதிகாரிகள் இதைப் புரிந்து கொள்ளும்படியான நிலைமையை ஏற்படுத்தச் செய்தார்கள் என்பதை எண்ணிப் பார்க்கும்போது, அப்படிப்பட்ட தலைவர் பெயரிலே ஒரு துறைமுகம் இருக்கவேண்டும் என்று நாம் கேட்டபோது நம்மால் அதைச்செய்து முடித்துக் கொள்ள முடியவில்லை. ஆகவே அந்த மாவட்டத்திற்கு சிதம்பரம் என்ற அவர் பெயரை வைக்கவேண்டும் என்று நான் விரும்பினேன். (மேசையைத் தட்டும் ஒலி) எந்தத் தூத்துக்குடி துறைமுகத்திலே, எந்த தூத்துக்குடியிலே அவர் கப்பல் ஒட்டிய தமிழன் 'என்ற பெயருக்குச் சொந்தக்காரரானாரோ, அந்தப் பெயரை வைக்கச் சொல்லும்போது, முடியவில்லை. அவர் காங்கிரஸ்காரர் என்பது மட்டுமல்ல, இந்த நாட்டுக்காக எவ்வளவு உழைத்து, வசதியிருந்தும் அவர் ஆங்கிலேயருக்கு அடிமையாகாமல் அவர் தன்னுடைய தியாகத்தின் மூலமாக உழைத்து, சிறை சென்று, செக்கிழுத்து இவ்வளவும் கஷ்டப்பட்டார் என்றால் அவர்களுடைய பெயரில் அதை வைத்து இருக்கின்றோமே தவிர, இது எந்த ஊருக்குச் சொந்தம், எங்கே வைக்க வேண்டும் என்ற நேரம் காலம் இவைகளைப் பார்த்து அல்ல.

அதுபோலவே இராமநாதபுரம் மாவட்டம், சிலர் சொல்கிறார்கள். இராமநாதபுரம் மாவட்டத்திற்குச் சேதுபதி மாவட்டம் என்று வைக்கக்கூடாதா என்று விவரம் தெரிதவர்கள் சொல்கிறார்கள். இராமநாதபுரம் மாவட்டத்தைப் பிரித்து—பிரிக்கவேண்டும் இரண்டாக என்று முதலில் சொன்னபோது, இராமநாதபுரம் மாவட்டத்தில் இருந்து முஸ்லிம்களும், ஆதி திராவிடர்களும் மற்றவர்களும் வந்து இது வரலாற்று சிறப்பு மிக்க பெயர், நீங்கள் எந்தப் பெயரை எங்கே வைத்தாலும் சரி, இராமநாதபுரம் மாவட்டம் என்ற பெயர் மாற்றப்படக்கூடாது என்று 2, 3 ஆண்டுகளுக்கு முன்னாலேயே-நாங்கள் டிஸ்மிஸ் செய்யப்பட்டோமே அதற்கு முன்னாலேயே-ஆட்சி இருந்தபோது வந்து சொல்லி, வற்புறுத்தியிருக்கிறார்கள் என்பதை இந்த மாமன்றத்திற்குச் சொல்லவேண்டியது என்னுடைய கடமை. ஆகவே, இராமநாதபுரம் மாவட்டம் என்ற பெயரை நம்மால் மாற்ற இயலவில்லை, மக்களுடைய தீர்ப்புக்காக, ஆகவே மற்ற இரு தியாகிகளுடைய பெயர்களை, தலைவர்களுடைய பெயர்களைச் சேர்த்து 3 மாவட்டங்களாகப் பிரித்து இருக்கிறோம்.

திண்டுக்கல்லுக்கு அண்ணா பெயரை வைக்கலாமா என்ற பிரச்சனை இருக்கிறது. அதைப் பிரச்சினையாகச் சொல்கிறார்கள் வெளியில். இங்கே இந்த மாமன்றத்திலே யாரும் சொல்லவில்லை, நன்றி. ஆனால் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். எப்படி மகாத்மா காந்தி இந்தியாவிற்குச் சொந்தமோ அது போலவே, அண்ணாவும் இந்தியாவிற்குச் சொந்தம் என்பதை இங்கே சொல்லிக்கொள்ள விழைகிறேன்.

(டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன்) [1984 பிப்ரவரி 21
(முற்பகல் 11-20)

அண்ணா அமெரிக்காவுக்குப் போனபோது அங்கே அவர்கள் இந்தியாவைப்பற்றி ஒரு கேள்வி கேட்டார்கள். இந்தியாவிலே உங்களிடையே போராட்டம் இருக்கின்றதாமே என்று கேட்ட போது, அது எங்கள் சொந்த விஷயம், அதில் உங்களுக்கு அக்கறை இருக்கத் தேவையில்லை, நாங்கள் தீர்மானித்துக் கொள்வோம் என்று பதில் சொன்னார்கள் அறிஞர் அண்ணா அவர்கள் என்பதை இங்கே நான் தெளிவாகச் சொல்லவிரும்புகிறேன். அப்படிப்பட்ட வருடைய பெயரைத்தான் இங்கே வைத்திருக்கிறோம். அதை மாற்றவேண்டும் என்று சொன்னால், அதற்குரிய காரணம் என்ன என்பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை.

காஞ்சிபுரத்திலே அந்தப் பெயரை வைக்கலாம். வைத்தால் நீங்கள் எல்லோரும் ஒத்துக் கொள்வீர்கள்: வெளியிலேயும் ஒத்துக் கொள்வார்கள். அதை மறுக்கப் போவதில்லை. எப்படி காமராசர் பெயரை வைத்தால் ஒத்துக் கொண்டோமோ, எப்படி பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் பெயரை வைத்தால் ஒத்துக் கொண்டோமோ, அது போல, ஒத்துக் கொள்வார்கள். ஆனாலும், திண்டுக்கல்லிலே வைத்தோம் என்றால், தலைவர் களின் பெயர்களில் வரிசையாக வந்திருப்பதால் அதுவும் இருக்கட்டும் என்ற எண்ணம் தானே தவிர, வேண்டும் என்றே இங்கே வைக்கக் கூடாது என்ற எண்ணம் இல்லை.

சிலர் கற்பனை செய்கிறார்கள், நேற்றுக்கூட கேள்விப் பட்டேன். எங்கேயோ ஒருவன் பேசினாராம் சங்கராச்சாரி யார் சொல்லி— பெரியவர்-நான் அந்தப் பெயரை, அண்ணாவின் பெயரை காஞ்சிபுரத்திற்கு வைக்கவில்லையாம். கற்பனைக்கும் ஒரு எல்லை உண்டு. இப்படி கற்பனை செய்து கொண்டு போனால் நான் வருத்தப்படுகிறேன். பெத்தடினைப் பற்றி சொன்னேனே அந்தக் கதிதான் வந்துவிடும். அப்படி இருக்கக் கூடாது கற்பனையை ஓரளவிற்கு ஒழுங்காக வைத்துக் கொள்ளுங்கள். என்மேல் குறை சொல்பவர்களுக்கு வேறு காரணம் இருக்குமானால் சொல்லுங்கள், சங்கராச்சாரி யார் அவர்களைக் கேட்டு, நான் ஏதாவது செய்தேன் என்பதற்கு ஏதாவது ஆதாரம் இருக்குமானால் சொல்லுங்கள், நான் செய்திருந்தால் செய்தேன் என்று ஒத்துக் கொள்கின்றேன். இல்லை என்றால், இல்லை என்று ஒத்துக் கொள்கின்றேன். இதற்கெல்லாம் போய், அந்தப் பெயரை எல்லாம் இழுத்து இங்கே கொண்டு வருவது அவ்வளவு நியாயம் அல்ல.

ஏன் காயிதே மில்லத் பெயரை வைக்கவில்லை என்று எதிர்க் கட்சி தலைவர் அவர்கள் கேட்டார்கள். ராஜாஜி பெயரை ஏன் வைக்கவில்லை என்று கேட்டார்கள். (குறுக்கீடு) அதுவே நாங்கள்தான் வைத்தோம். இதற்கு முன்னாடி இருந்தவர்கள் வைக்கவில்லை. அதற்கும் முன்னாடி இருந்தவர்களும் வைக்க வில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு) ஆகவே அந்த உரிமை எங்களுக்கு இருக்கிறது. நீங்கள் ஆரம்பிக்கவே இல்லை அதுதான் கதை.



டாக்டர் கே. சௌரிராஜன்: நாங்கள் விளம்பரப்படுத்துவது இல்லை.

மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன்: இதுவே ஒரு விளம்பரம்தான். பத்திரிகையிலே என் பெயரைச் சேர்த்துப் போடுங்கள் என்று பேசினாலும், அதுவும் விளம்பரம்தான்.

டாக்டர் கே. சௌரிராஜன்: பத்திரிகையில் போடாமல் செய்ய லாம்.

மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன்; கண்டிப்பாக உங்களைப் போடுவார்கள். ஏன் என்றால் அவர்களோடு நீங்கள் தொடர்பு வைத்திருக்கிறீர்கள். சட்டசபையில் நான் இந்தக் கேள்வியைக் கேட்கிறேன், போடுங்கள் என்று சொல்லி விட்டு வந்தால் போடுவார்கள். அப்படி எத்தனையோ பேர் இருக்கிறார்கள். நான் கூட இருக்கிறேன். என்னைப் போல நீங்களும் ஒருவர். அதைப்பற்றி பிரச்னை இல்லை.

பிரச்னை எங்கே இருக்கிறது என்றால், தமிழ்நாட்டிலே அரிஜன் என்று அழைக்கப்படுகிற ஆதிதிராவிடர்களில் ஒருவர் பெயரை ஒரு மாவட்டத்திற்குக் கொடுக்கலாம் என்றால், என் உள்ளத்திலே நான் இன்னமும் தெளிவாக பேசுகிறேன். மகாத்மா காந்தி தென் ஆப்பிரிக்காவில் இருந்தபோது, சிறு பிள்ளையாக இருந்த பெண்—அந்தப் பெண்ணினுடைய பெயரை மாவட்டத்திற்குச் சிறப்பாக வைப்பதும், அதிலும் ஆதிதிராவிட பெண்ணாக இருப்பதும், அதுவும் சுதந்திரத்திற்காக பாடுபட்டவ ராக இருப்பதும், அதுவும் இந்தியாவில் சுதந்திரம் கேட்பதற்கு முன்பு தென் ஆப்பிரிக்காவில் இருக்கிற கறுப்பர்களுக்காக, அதே சமயத்தில் இந்தியர்களுக்காகவும் போராடிய, இறந்த அந்தப் பெண்ணைப் பார்த்து, மகாத்மாகாந்தி என்ன சொன்னார் என்பதை நினைவில் வைத்துக் கொண்டால், அந்த தில்லையாடி வள்ளியம்மை பெயர் ஒரு மாவட்டத்திற்கு அல்ல, இந்தியா விற்கே கூட வைத்தால், அது தவறு அல்ல. (மேசையைத் தட்டும் ஒலி).

அப்படிப்பட்ட ஆதிதிராவிட சமூகத்தைச் சேர்ந்த ஒரு சகோதரியினுடைய, அவர்களுக்கு நாம் வணங்கக் கூடிய அளவுக்கு, வயது இருக்குமானால் அப்படிப்பட்டவர்களுடைய பெயரை ஒரு மாவட்டத்திற்குச் சூட்டினால், அதைத் தலைவர் களாக இருப்பவர்கள் வெளியிலே அரசியலாக்கி. அம்பேத்கார் பெயரை வைக்கவில்லையே, ஏன் என்று கேட்டால், நான் வருத்தத்தோடு சொல்கிறேன் ஒரு பெண்ணினுடைய பெயர் ஒரு மாவட்டத்திற்கே வந்திருக்கிறது. அந்தப் பெண், மகாத்மா காந்திக்கே கூட, சுதந்திர உணர்ச்சியை, தியாகத்தை அதிகப் படுத்திய பெண், அதுவும் அவர்கள் சிறுமியாக இருந்தபோது என்பதை எண்ணிப் பார்க்கும்போது, எவ்வளவு மகிழ்ச்சி அடைய வேண்டும் என்பதை நினைவிலே வைத்துக் கொண் டாலும், நினைவிலே இருந்தாலும் அதை விட்டுவிட்டு, அதைப் பற்றிச் சொல்வது சரியல்ல, நியாயம் அல்ல என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு கே. எஸ். ஜி. ஹாஜா செரிப்: காயிதே மில்லத் பெயர் . . . .

மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன்: சென்னையை மூன்றாகப் பிரிக்கும்படியான நிலைமை ஏற்பட்டால் அதைப்பற்றி யோசிக்கலாம், சென்னை இருக்க வேண்டும், இங்கே நமக்கு. அதையும் பார்த்துக்கொள்ளவேண்டும் இல்லாவிட்டால் தலை நகர் இருக்காது.

(முற்பகல் 11-30)

அதேபோல் இன்னமும் கட்டபொம்மனைத் தெரியும், வெள்ளைத்துரையைத் தெரியும் ஆனால் சுந்தரலிங்கம் என்ற ஒரு வீரன் உலகத்தில் இருந்து எவ்வளவு சாகசம் செய்தான் என்பது வரலாற்றில் இடம் பெறவில்லை. ஆனால் இருக்கிறான். அவன செய்த சாகசம் மிகப் பெரியது. வீரம் மிகப் பெரியது. அவனைப் பற்றிய வரலாறு இருக்கிறது. சொல்வதற்கு முகவரி இல்லை.

நேரு அவர்கள் சொன்னார்கள் என்று நான் முன்பு—ஒரு கூட்டத்தில் பேசும்போது—நேரு அவர்களைப் பற்றி கோட்டேஷன் கொடுத்து நேரு அவர்கள் என்ன சொன்னார்கள் என்பதைச் சொல்லாமல் விட்டுவிட்டேன் ஒரு கூட்டத்தில். அதைச் சொல்ல விரும்புகிறேன். எல்லோரும் கைது செய்யப்பட்டு, காங்கிரஸ் காரர்கள் உள்ளே இருக்கும்போது எல்லா வன்முறைகளும் நடந்த பிறகு மகாத்மா காந்தி வெளியே வந்த பிறகு இந்த வன்முறைக்கும் காங்கிரசுக்கும் எனக்கும் சம்மந்தம் இல்லை என்று சொன்ன போது நேரு அவர்கள் பம்பாயில் விளக்கு அடியில் நின்று கொண்டு பேசிய பொதுக்கூட்டத்தில் சொன்னது எனக்கு நினைவுக்கு வருகிறது. இந்த வன்முறைச் செயல்களுக்கு எல்லாம் நான் பொறுப்பு ஏற்றுக்கொள்கிறேன் என்று சொன்னவர் அந்த கட்சியில் முதல் மனிதராக இருந்தவர் நேரு அவர்கள். அதைப்போல் நான் இப்போது ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். தவறுகள் எங்கு இருந்தாலும் சரி அது வேறு. நல்ல உணர்வின் மீது தவறு நடந்தால் அந்த உணர்வுக்கு மதிப்பு அளித்து அதைப் பற்றி சிந்திக்க வேண்டும் ஆகவே அப்போது நேரு அவர்கள் சொன்னார்கள் விலாசம் தெரியாத எத்தனை பேர் களுடைய துயரங்கள் மூலம் இன்று இந்த நிலைக்கு வந்து இருக்கிறது. அவர்களுக்கு எல்லாம் நான் மரியாதை சொல்லிக்கொள்கிறேன் எங்களுக்கு எல்லாம் மாலை விழுகிறது. அவர்களுடைய அடையாளம் தெரியாத குடும்பங்கள் எப்படி இருக்கின்றன என்பது யாருக்குத் தெரியும் என்று கேட்டார்கள். அதேபோல் சுந்தரலிங்கம் என்ற வீரனை உலகமே மறந்து இருக்கிறது. அவன் மிகப் பெரிய வீரன். நாட்டு விடுதலைக்கு எவ்வளவு துணையாக இருந்தான் என்பது வரலாற்றைப் படித்தவர்களுக்கு எல்லாம் தெரியும். ஆகவே அந்த மாதிரி பெயர்களை வைக்கவேண்டும் என்ற ஆசை இருக்கிறது. அது விரைவில் நிறைவேறும் என்று நம்புகிறேன். எல்லாம் சொல்லி, விட்டு கரூரில் ஏன் அந்தத் தலைமை இடத்தை வைக்கக்கூடாது —என்று கேட்கிறார்கள் கரூருக்குப் பக்கத்தில் எவ்வளவு தொழிற்



சாலைகள் இருக்கின்றன, அது எவ்வளவு வளர்ந்து இருக்கிறது என்பதைப் பார்க்கவேண்டும். நாம் இப்போது தேர்ந்தெடுத்து இருக்கிற பெரம்பலூர் எவ்வளவு பின்தங்கியிருக்கிறது என்று பாருங்கள். சரியான வீடுகள் கூட அங்கே கிடையாது. அங்கே போய் பார்த்தால்தான் தெரியும். தேர்தல் காலத்தில் போகிறவர்களுக்காவது தெரியும். அப்படிப்பட்ட இடத்தைத் தேர்ந்தெடுத்து அந்த மாவட்டத்தின் மத்திய பகுதி ஓரளவுக்கு 20, 30, 40 மைல் என்கிற அளவுக்கு இடத்தை தேர்ந்தெடுத்து, —அங்கே இருக்கிற எம்.எல்.ஏ. எங்கள் கட்சி எம்.எல்.ஏ. அல்ல. திராவிட முன்னேற்றக் கழக எம்.எல்.ஏ. அங்கே இருக்கிறார். நாங்கள் அந்த இடத்தை தேர்ந்தெடுத்து இருக்கிறோம் என்றால் அவர் சொல்லி சிபாரிசு செய்து வந்தது என்று அவர் அங்கே சொல்லி பெயர் எடுத்தாலும் எங்களுக்குக் கவலை இல்லை. ஆனால் உண்மையிலேயே இப்படிப்பட்ட இடங்கள் வளர்ச்சி அடையவேண்டும் என்றால் இப்படிப்பட்ட நிலைமைகள் உருவாக்கப்படவேண்டும்.

அதேபோல் தஞ்சாவூர். மேல் தஞ்சை கீழ் தஞ்சை (குறுக்கீடு) சொல்லிவிட்டேன் இருந்தாலும் கீழ் தஞ்சை வேண்டும் என்று சொல்கிறார்கள். அதற்குக் கரிகாலனை கொண்டு வா என்று சொல்கிறார்கள். கரிகாலன் வேஷத்தை நானே போட்டு நடித்து இருக்கிறேன் (குறுக்கீடு) சினிமாவில் அல்ல; நாடகத்தில். அப்போது நான் இருந்த கட்சிக்கு வேலை செய்தேன். பணம் சம்பாதிப்பதற்காக செய்தேன். இதை எல்லாம் மறந்துவிட்டு எங்களுக்கு நினைவுபடுத்தும்போது கொஞ்சம் கஷ்டமாக இருக்கிறது. மறந்து போகிறவர்கள் எங்களுக்கு நினைவுபடுத்தினால் கொஞ்சம் சங்கடமான விஷயம். மக்களுக்கு நினைவுபடுத்த வேண்டும் என்று விரும்பினால் நியாயமான முறையில் சொல்ல வேண்டும். நாகப்பட்டிணத்தைச் சேர்ந்தவர் பேசாமல் இருக்கிறார்.

திருவாரூர், கலைஞர் கருணாநிதி அவர்கள் சொந்த ஊர் என்று சொல்கிறார்கள். அதை நாங்கள் தலைமையிடமாக வைத்தோம் என்றால் அவருடைய நட்பு வேண்டுமென்பதற்காகவா அல்லது நமது மாண்புமிகு திரு. சௌரிராஜன் சொன்னதைப்போல் கருணாநிதியைப் பார்த்து நாங்கள் பயப்படுகிறோம் என்பதற்காகவா?

டாக்டர் கே. சௌரிராஜன்: எங்கள் ஊரும் அதுதான்.

மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன்: தயவு செய்து அவர்கள் பயப்பட வேண்டாமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். அதற்காக அப்படிச் சொல்லிப் பயத்தைப் போக்கிக் கொள்ள வேண்டாம்—எங்களுக்குப் பயமில்லை. பயம் இருந்தால் இந்த இராமச்சந்திரன் இன்று இந்த நிலைமைக்கு வந்திருக்க மாட்டான். அங்கேயே இருந்திருப்பேன். ஒரு சிறு மன்னிப்புக் கடிதம் எழுதிக் கொடுத்து விட்டு வந்து விடுங்கள் என்று சொன்னபொழுதே போயிருப்பேன். இன்றுவரை நான் தாக்குப் பிடிக்கிறேன்

என்றால், இன்னமும் தாக்குப் பிடிக்கிறேன் என்றால், "அச்ச
மில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே" என்ப தப்போல,
"அச்சம் என்பது மடமையடா" என்கிற பாட்டை நானே
பாடினேன். அதனாலே, நான் சினிமாவிலே பாடிய பாட்டுக்களின்
கருத்துக்கள் என் வாழ்க்கையிலே ஒட்டியவை; என் உள்ளத்தோடு
ஒன்றுபட்டுப் போனவை. அதைத்தான் தேர்தல் அறிக்கையாக
வைத்தோம். தேர்தல் அறிக்கையிலே இல்லாததை நாங்கள்
சொல்லுகிறோம் என்றால் அந்த உணர்வுதான் இதைச் செய்ய
சொல்கிறது. நாட்டின் நன்மையை நினைத்துச் செய்கின்றோம்.

நாகப்பட்டிணத்தில் துறைமுகம் இருக்கிறது; ஓரளவிற்கு
அது வளர்ந்த நகரம். ஆனால் அந்தக் கடலையும், அதையும்
ஒப்பிட்டுப் பார்க்கின்றபொழுது திருவாரூர் அதைவிட நாற்பது
அடி உயரத்தில் இருக்கிறது என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.
இந்த மாதிரி நிலைமைகளில் பல்வேறு பிரச்னைகளையெல்லாம்
எண்ணிப்பார்த்து நாங்கள் முடிவெடுக்க வேண்டியுள்ளது. இவை
களையெல்லாம் வைத்து நான் கணக்கிட்டு செய்ய வேண்டி
யுள்ளது. திருவாரூரில் மக்கள் அதிகம் இருக்கின்றார்கள். ஆனால்
வசதி இல்லை. அங்கே வளர்ச்சியை இன்னு அதிகப்படுத்தினால்
அது மத்தியப் பகுதியாக இருக்கும் என்ற எண்ணத்தில் நாங்கள்
செய்கிறோமே தவிர வேறு யாருக்காகவும் நாங்கள் செய்ய
வில்லை.

வேண்டுமென்றால், கருணாநிதி பிறந்த ஊரா, அங்கே
வேண்டாம்; நாகப்பட்டிணத்திற்குக் கொடுக்கலாம் என்றால்
எங்களுக்கு மிக எளிது, உடனே செய்துவிடலாம். இந்த
எண்ணத்தைச் சொல்லுகின்ற நண்பர்கள் என்னைச் சந்திக்க
இருக்கின்றார்கள், அந்த நண்பர்களுக்கெல்லாம் இப்பொழுது
கூறிக் கொள்கிறேன். நேரிலும் சொல்லியிருக்கிறேன்,
திருவாரூரைத் தேர்ந்தெடுத்தது வேறு எந்தக் காரணத்திற்காகவும்
இல்லை; வரலாறு இருக்கின்றது. அது வேறு; ஆனால் நாகப்
பட்டிணத்திற்கு வரலாறு இல்லையா என்று கேட்டால் நிச்சயமாக
இருக்கிறது. அதைத் தொட்டு அப்படியே போனோமானால் அது
மிகப்பெரிய லெமூரியா கண்டத்திற்குச் செல்லும் அளவிற்கு
இருக்கும். அதையெல்லாம் நாம் மறந்துவிடவில்லை.
மாவட்டத்தைப் பிரித்தது தமிழ் நாட்டின் நன்மைகளை முன்னிட்டு
தமிழ்நாட்டிற்கு மிகப்பெரிய வசதிகளைப் பெறுவதற்காக;
உரிமைகளோடு பெறுவதற்காக. எந்தக் காரணங்களைச் சொல்
கிறார்களோ அந்தக் காரணங்கள் நியாயமானவை என்பதை
நிரூபித்துக் காட்டுகின்ற வகையில் பிரித்திருக்கிறோம். தலைவர்
களின் பெயர்களை வைத்திருக்கிறோம்.

காமராஜரை எதிர்த்துப் பேசியவன் நான். அவரைப் பெருந்
தலைவர் காமராஜர் என்று பாராட்டுகின்றவனும் நான்தான்

முத்துராமலிங்கத் தேவர் இருக்கும்பொழுது அண்ணாவை
எதிர்த்தவர் அவர். ஆனால் முத்துராமலிங்கத் தேவர் என்பதை
எண்ணிப்பார்க்கும் பொழுது அவரும் சாதனைகளைச் செய்தவர்



என்று எண்ணினால் அதற்குரிய தகுதியும், மதிப்பும், வரலாறும் இருக்கிறது. ஆகவே, அதையும் நாம் போற்றியாக வேண்டும். அண்ணா அவர்கள் இருக்கும்பொழுது ஒரு காலத்தில் அவர்களுக்கு வாழ்க்கை நடத்தவேண்டுமென்ற நிலைமை ஏற்பட்டபொழுது ஒரு சிறிய தொகையைக் கொடுத்தவன் இந்த எம். ஜி. இராமச்சந்திரன்; அதுவும் அண்ணாவின் அனுமதியோடுதான்.

அண்ணா அவர்களின் கொள்கை கருத்து வேறுபாடு என்பதற்காக மனித எண்ணத்தில், மனித அன்பில் வேறுபாடு வரக்கூடாது என்பது. ஆதலால் நான் எப்பொழுதும் ஒன்றைப் பற்றி நிச்சயம் செய்யும்பொழுது, முடிவு செய்யும்பொழுது அந்த நடுநிலையோடு பார்க்கிறேனே தவிர, எனக்கு எது இலாபம், எதைச் சொன்னால் மக்கள் அதிகமாக எனக்கு ஆதரவு தருவார்கள் என்ற எண்ணத்தோடு நான் செய்யவில்லை என்பதை மாமன்ற உறுப்பினர்கள் நிச்சயமாக ஏற்றுக்கொள்வார்கள் என்று எண்ணுகிறேன்.

இங்கே எதிர்க்கட்சித் தலைவரவர்கள் பேசும்பொழுது தொழிலே இல்லை என்று சொன்னார்கள். 31 இலட்சம் பேர்களுக்குத் தொழில் இல்லாமலா வேலை கிடைத்தது? (குறுக்கீடு) அதிக வளர்ச்சி என்றால் அதனுடைய கட்டுப்பாடு அங்கே இருக்கிறது. இப்படி நான் சொல்லவேண்டிய நிலையை யாரும் ஏற்படுத்திவிடக்கூடாது என்று எண்ணினேன். (குறுக்கீடு)

(முற்பகல் 11-40)

உண்மையை நான் எப்பொழுதும் மறைக்க மாட்டேன் (குறுக்கீடு) உண்மையிலேயே நான் எத்தனை முறை சில விஷயங்களுக்காகக் கடிதம் எழுதி இருக்கிறேன் என்பதைப் பார்த்தால் தெரியும். 1981, 1982, 1983 ஆகிய ஆண்டுகளில் கடிதங்கள் பல எழுதி இருக்கிறோம். 1984-ல் ஒன்றாவது மாதத்திலே கூட சில விஷயங்களைப் பற்றி கடிதம் எழுதி இருக்கிறோம்.

திரு. கே. எஸ். ஜி. ஹாஜா செரீப்: தலைவர் அவர்களே அவைகள் எல்லாம் பெரிய தொழிற்சாலைகள் பற்றியதுதான். ஆனால் நான் கேட்பது எல்லாம் சிறிய தொழிற்சாலைகளை, ஆயிரக்கணக்கான தொழிற்சாலைகளை ஏற்படுத்தினால்தான் வேலைவாய்ப்பினைப் பெருக்குகின்ற வகையிலே அனுகூலமாக இருக்கும். அதைப்பற்றி எல்லாம் கவர்னர் உரையிலே சொல்லி இருந்தால், என்னென்ன துறைகளில் எவ்வளவு வரவு வந்திருக்கின்றது என்பதை எல்லாம் அதன்மூலம் அறிந்து கொள்வதற்கு அனுகூலமாக இருக்கும். இந்த வருஷத்தில் எவ்வளவு வரவு வந்திருக்கின்றது, சேல்ஸ் டாக்ஸ் எவ்வளவு; மோட்டார் டாக்ஸ் எவ்வளவு என்பதைப்பற்றி எல்லாம் அறிந்து கொள்கின்ற வகையிலே அனுகூலமாக இருக்கும்.

மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன் : நாங்கள் ஆட்சிக்கு வந்தபோது 18 ஆயிரம் சிறுதொழில்கள் என்று இருந்தது இப்போது 40 ஆயிரம் ஆக மாறி இருக்கிறது. எனவே 22 ஆயிரம சிறு தொழில்களை அதிகப்படியாக ஏற்படுத்தி இருக்கிறோம். பெரிய தொழில்கள் எத்தனை என்றால் 27–க்கு மேல் வளர்ந்திருக்கின்றன. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் புள்ளிவிவரம் இதிலே இல்லை என்று சொன்னார்கள். இப்போதே சொல்கிறார்கள், இவ்வளவு விளக்கம் எதற்கு என்று. அதாவது இதுவே தேர்தல் அறிக்கைபோல் இருக்கின்றது என்று சொல்கிறார்கள். ஆனால் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் எத்தனை ரூபாய் வரவு வந்திருக்கின்றது என்ற விவரங்களைக் கேட்டார்கள். அதற்குத்தான் பட்ஜெட் வரப்போகின்றதே. பட்ஜெட்டிலே அந்த விளக்கங்கள் எல்லாம் வரும். அப்போது கேளுங்கள். மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் பதில் சொல்வார்கள். வேண்டும் என்றால் நானும் பதில் சொல்கிறேன். அப்படிப்பட்ட தேவை வராது என்று கருதுகிறேன். வந்தால் சொல்கிறேன். ஆகவே அந்த விவரங்களை எல்லாம் சொல்வதற்காகத்தான் பட்ஜெட் இருக்கின்றது. அதிலே எவ்வளவு பணம் வருகின்றது, எவ்வளவு செலவு என்பதைப்பற்றி எல்லாம் தெரிந்து கொள்ள முடியும்.

அடுத்து, ஓவர் ட்ராஃப்ட் பற்றிச் சொன்னார்கள். அதாவது அதிகப் பற்று பற்றிச் சொன்னார்கள். அதிகப்பற்றினை இந்த அரசு வாங்குகின்றது என்று சொல்லும்போது நல்லவேளையாக அதற்கு விளக்கமும் சொன்னார்கள். அவர்களுடைய நண்பர்களுக்கு அவ்வாறு விளக்கம் சொன்னதற்காக நன்றி. வறுமை வந்தது என்று சொல்லி, இப்படி வாங்கக்கூடிய நிலைமை வந்திருக்கக்கூடாது என்று சொல்லி இப்படி கேட்டார்கள் என்று சொல்லி பின்னர் விளக்கமும் சொன்னார்கள். அதற்காக நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். இங்கே நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். வறுமை வந்தால் நாங்கள் யாரிடம் போய் கேட்பது? இங்கே இருந்து வசூல் செய்துகொண்டு போய் வைத்திருப்பவர்களிடத்திலே தானே கேட்கவேண்டும்; வேறு யாரிடம் போய் கேட்பது?

இங்கே பேசுகின்றபோது கேட்டார்கள் ஏன் கெஞ்சுகிறீர்கள் என்று. எப்படிக் கேட்கவேண்டுமோ அப்படித்தான் கேட்க வேண்டும். அடித்துக் கறக்க வேண்டியதை அடித்துக் கறக்க வேண்டும்; பாடிக் கறக்க வேண்டியதை பாடிக் கறக்க வேண்டும்; (குறுக்கீடு) ஆடிக் கறக்கவேண்டியதை ஆடிக் கறக்க வேண்டும்; அனுபவம் பேசுகின்றது. (குறுக்கீடு) எங்களைப் பொறுத்த வரையில் அதாவது அண்ணாவின் வழியினைப் பொறுத்த வரையில் எல்லாவற்றையுமே போராடித்தான் பெறவேண்டும் என்பதல்ல. நியாயமான உரிமைகளை எடுத்துச் சொல்லி, [illegible]மைகளை எடுத்துச் சொல்லி, விவாதங்கள், அதற்குரிய [illegible]க்கங்கள் ஆகியவற்றை எடுத்து வைக்கவேண்டும். இவ்வளவு [illegible]த்ததற்குப் பிறகும் வேறு வழியே இல்லை என்றால்



அதற்காகப் போராடுவது என்பதும் அப்படிப் போராட முனைந்து விட்டால் அது இறுதிப் போராக இருக்கவேண்டும் என்பதும் தான் எங்களுடைய கொள்கை என்பதை இந்த நேரத்தில் நான் சொல்லிக்கொள்கிறேன். (கரவொலி)

இதேநேரத்தில் நான் இன்னொன்றையும் சொல்கிறேன். பஞ்சாபிலே எப்படி இருக்கின்றது; ஹரியானாவிலே நிலைமை எந்த அளவுக்குப் போய் இருக்கின்றது என்றெல்லாம் இங்கே எடுத்துச் சொன்னார்கள். அந்தமாதிரி நிலைமை தமிழகத்தில் வராமல் இருக்கவேண்டும் என்றுதான் நாங்களும் விரும்புகிறோம். இந்தத் தமிழகத்தில் உள்ள ஒவ்வொரு குடும்பமும் அப்படித்தான் விரும்புகின்றது என்பதைத் தெள்ளத் தெளிவாகச் சொல்கிறேன். அதனால்தான் எவ்வளவு துன்பங்கள் ஏற்பட்டாலும் கூட அதற்குரிய நியாயமான காரணத்தைக் கண்டுபிடித்துக் கொண்டு அடக்கமாக இருக்கிறார்களே தவிர, விவரம் தெரியாதவர்கள் அல்ல தமிழர்கள். அவர்கள் பொறுத்து இருக்கிறார்கள். இருக்கின்ற நிலைமைகளை உணர்ந்து அதைப்பற்றி உள்ளத்திலேயே விவாதித்து, வேறு என்ன செய்வது என்று எண்ணிப் பொறுத்துக் கொள்கிறார்கள்.

அடுத்து இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். யார் திட்டம் போடுகிறார்களோ, யார் யோசனை சொல்கிறார்களோ அவர்களுடைய பெயர் வெளியே தெரிவதில்லை. திரு. திவான் முகமது அவர்கள் முஸ்லிம் என்பதற்காக அவர்களை இன்னொரு முஸ்லிம் பாராட்டினார் என்று நான் சொல்ல மாட்டேன். அந்த அதிகாரி நல்லவர்தான். ஆனால் இந்த கடலோரப் பகுதியிலே எல்லாம் கிணறு வெட்டச் சொன்னவன் இந்த எம். ஜி. இராமச்சந்திரன் தான். நான்தான் அந்தத் திட்டத்தைக் கொடுத்தேன். ஏரிகள் எல்லாம் காய்கின்றன என்று தெரிந்தவுடன் பெரிய அளவிலே அதாவது இராட்சஸக் கிணறு என்று சொல்வார்களே அவற்றை உடனடியாக ஆரம்பிக்க வேண்டும் என்றும் அந்த வேலைகளைப் பொறுத்தவரையில் வெள்ளம் வருகின்றதா, மழை பெய்கின்றதா என்றெல்லாம் கவலைப்படாமல் உடனடியாக அவற்றை ஆரம்பிக்க வேண்டும் என்றும் அதற்கான திட்டத்தைத் தயாரிக்கவேண்டும் என்றும் சொல்லி உத்தரவு போடச் சொன்னவன் இந்த எம். ஜி. இராமச்சந்திரன்தான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே அக்கறை இல்லாமல் இல்லை. மாநகராட்சியைப் பற்றி அக்கறை இல்லாமல் இல்லை, அலட்சியமும் இல்லை, நாங்கள் அக்கறை கொண்டுள்ளோம் அதை எப்படிச் செயல்படுத்துவது, ஏன் செயல்படுத்தவில்லை யென்பதுதான் குறை என்று சொல்லி வருகிறார்கள். செயல் படுத்துவதற்கு அவர்கள் ஒரு வழி சொன்னார்கள். துப்புரவுத் தொழிலாளர்களை அதிகமாகச் சேர்த்து வைத்து செய்தால் எவ்வளவோ நல்லது செய்யலாம் என்றார். ஏன் செய்யலாமே? அவர்களுக்கு வேலையும் கிடைக்கும். கொடுத்தால் என்ன? ஏறத்தாழ ரூ. 32 கோடி வருமானம் மாநகராட்சிக்கு. ரூ. 29 கோடி சம்பளம். மிச்சமிருக்கிற 3 கோடியை வைத்துதான், இவ்வளவு பெரிய—மாநிலம் என்று அழைக்கும் அளவிற்கு உள்ள—

மாநகராட்சியை இவ்வளவு மாபெரும் பணிகளைச் செய்ய வைக்க முயன்று கொண்டிருக்கிறது ஒரு அரசு. அந்த மாநகராட்சியை நடத்துகின்ற அதிகாரிகள் இந்த 3 கோடியில் எவ்வளவு வசதிகளைச் செய்ய வேண்டியிருக்கிறது. இதற்கு அரசு கடன் கொடுக்கிறது. அரசு கடன் கொடுத்து, அதை எங்கே இருந்து திரும்பி வாங்குவது என்பது வேறு கேள்வி. இதைச் செய்து கொடுக்கின்றோம். வரியை அதிகப்படுத்தினால்—வீட்டு வரியை அதிகப்படுத்தி விட்டார்கள் என்ற பிரச்னையை முதலிலே வைக்கின்றவர்கள் இதுபோன்ற யோசனையைச் சொல்கின்றவர்கள்தான். வரியை உயர்த்தாதே ஆனால் வசதியைக் கொடு என்கிறார்கள்.

கொள்கையைச் சொல்கிறேன். சில விஷயங்களில் கண்ணால் பார்ப்பதை விட; கருத்தால் அதை அளந்து பார்ப்பது நல்லது என்று வேண்டி கேட்டுக் கொள்கிறேன். இந்த மாநகராட்சியில் இப்பொழுது சாலை வசதி, குடிநீர் வசதி, மின்சார வசதி, விளக்குகள் இல்லாத இடங்களுக்கு விளக்குகள் பொருத்துவது, வேறு மருத்துவ வசதிகள், போக்குவரத்து வசதிகள், இவற்றையெல்லாம் சரிவர நிறைவேற்ற வேண்டுமானால் சுமார் ரூ. 1,000 கோடிக்கு மேல் தேவைப்படும் என்பதை இங்கே நான் சொல்கிறேன். அதிர்ச்சி அடையாதீர்கள். முன்னால் ரூ. 50 கோடியிலிருந்து, ரூ. 250 கோடியாக ஆகி, இப்பொழுது பெருநகரமாக இருக்கிற காரணத்தால், அதைச் சீர்படுத்த வேண்டுமென்றால் பல கட்டிடங்களை இடித்து, அவர்களுக்கு வேறு கட்டிடங்கள், வசதியாக நாம் கட்டிக் கொடுக்க வேண்டும் பாதையை அகலப்படுத்திக் கொடுக்கவேண்டும், அண்ணாசாலையை ஒரு வழிப்பாதையாக ஆக்க வேண்டுமென்றால், இன்னொரு இடத்தை. மறுவழிப் பாதையாக ஆக்க வேண்டும். அது சுற்றி வரவேண்டும். அதற்கு இடம் இல்லை. அதற்கு எவ்வளவு செலவு ஆகும் என்பதை எல்லாம் கணக்கிட்டுப் பார்க்க வேண்டும். இதையெல்லாம் திட்டம் போட்டு சில காரியங்களைச் செய்ய வேண்டியிருக்கிறது. நான் உத்தரவு போட்டிருக்கிறேன், இங்கே எதிர்க்கட்சித் தலைவர் ஹாஜா செரீப் அவர்கள் சொன்னார்களே, அதற்குக் கொஞ்சம் முன்னால் போகிறேன். பகலிலே துப்புரவு செய்வதை, இரவிலே துப்புரவு செய்யவேண்டுமென்ற உத்தரவை நான் சொல்லி, அவர்கள் அதற்கு முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறார்கள், தமிழ்நாடு முழுவதும். தமிழ்நாடு முழுவதுமுள்ள மாநகராட்சி இருக்கிற—மாநகராட்சி ஆக்கப்படுகின்ற, நகராட்சிகள்—முனிசிபாலிட்டிகள் என்று அழைக்கப்படுகின்ற அந்த இடங்களிலே எல்லாம் அதைச் செய்ய வேண்டுமென்று விரும்புகின்றோம். வெளிநாடுகளிலே பாலித்தீன் பைகளிலே கொண்டு போய் குறிப்பிட்ட இடத்தில் வெளியே போடுகிறார்கள் என்று அவர்கள் சொல்கிறார்கள். அங்கே காகிதம் கிழித்துப் போட்டால், எச்சில் துப்பினால் 500 டாலர் அபராதம். இங்கே 5 பைசா கூடக் கேட்கக் கூடாது. உடனே மறியல், உடனே போராட்டம். உடனே பஸ்ஸோ, லாரியோ, ஆட்டோ ரிக்‌ஷாவோ எதுவாக இருந்தாலும் வண்டியை நிறுத்தி விடுகிறார்கள். அதை அதிகாரிகள், போலீஸ்காரர்கள் போய் பார்க்க வேண்டும். எடுக்க



வேண்டும். எடுக்கும்போது தகராறு வந்தால் போலீஸ்காரர்கள் அடி வாங்க வேண்டும், திருப்பி அடிக்கக் கூடாது. இதற்கு இயந்திரத்தினால் ஆன காவலர்களை வைத்தால்தான் சௌகரியமாக இருக்குமே தவிர, மனிதனைக் காவலர்களாக்கி, நீ அடி வாங்கிக் கொள், ஆனால் அடிக்காதே என்ற தத்துவம் எங்கும் நிறைவேறாது, சரிப்படாது என்பதை நான் பணிவன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன். காவலர்களுக்காகப் பரிந்து பேசுகிறேன் என்பது அல்ல.

(முற்பகல் 11-50)

அண்மையிலே ஒரு தகராறு மதுரையிலே நடந்தது—கேட்கின்றார்கள். அதிலே அடிபட்ட மாணவர்கள் எத்தனை பேர்கள்? அடிபட்ட காவலர்கள் எத்தனை பேர்கள் என்றால், காவலர்களுடைய எண்ணிக்கை அதிகம். ஆனால் அடிபட்டவர்கள் நிலைமை என்னவென்றால் இவர்களுக்கு அதிகமான அடி இருக்கிறது என்று அங்கே சொல்கிறார்கள். நான் இன்னும் அங்கே போகவில்லை. நான் ஏற்றுக் கொள்கிறேன், அதற்காக நீதிவிசாரணை தேவை. நீதி விசாரணைக்கு மாவட்ட நீதிபதியை நியமிக்கலாம் என்று சொன்னால் உயர்நீதி மன்ற நீதிபதி வேண்டுமென்று சொல்கிறார்கள். சரி, அப்படி வைத்துக் கொள்வோம் என்று நான் தலைமை நீதிபதி அவர்களை கேட்டேன். ?9 நீதிபதிகள் சிட்டிங் ஜட்ஜ்கள் இருக்கிறார்கள்; அவர்களில் யாரையும் இப்போது கொடுக்க முடியாது என்று அவர்கள் சொல்லி விட்டார்கள். அதற்கு என்ன செய்யலாம் என்று நான் கேட்டேன். ஓய்வு பெற்ற நீதிபதியை நியமிக்கலாம் என்று சொன்னார்கள். ஓய்வு பெற்ற நீதிபதியை நான் நியமித்தால், உடனே சொல்வார்கள் நான் நியமித்த நீதிபதி எம்.ஜி.ஆர் பையிலே இருக்கிற நீதிபதி, எம். ஜி. ஆர். பாக்கெட்டிலே இருக்கிற நீதிபதி, எம்.ஜி.ஆர். கைக்குள்ளே இருக்கிற நீதிபதி என்று. அதையும் உங்களிடமே கேட்கலாமா என்று நினைத்துக் கொண்டிருக்கிறேன். ஆனால் நீங்கள் ஒரு பத்து பேர், 20 பேரைச் சொன்னால் நான் ஆபத்திலே மாட்டிக் கொள்வேன். அது வரக்கூடாது. ஓய்வு பெற்ற நீதிபதியை நியமிப்பதா, இல்லை மாவட்ட நீதிபதியை நியமிப்பதா என்ற நிலையில் தான் இப்போது இருக்கிறோம். அதற்கு எங்களைப் பொறுத்தவரையில் மாவட்ட நீதிபதியை—அவர் அங்கே வழக்கு நடத்துபவர்—நியமிக்கலாம்; இல்லை, வேண்டாம் என்றால் ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி யாராவது இருந்தால் அவர்களை நியமிக்கலாம். யாரையாவது சொல்லப் போகிறீர்களா?, இல்லை நாங்களே நியமிக்கலாமா? நானே சொல்லி விடட்டுமா? சொல்வதை யோசனை செய்து சொல்ல வேண்டும்.

திரு. என். சங்கரய்யா : உயர்மட்ட நீதி விசாரணை தேவை என்று தான் கேட்கப்பட்டது. நீங்கள் அதை கொள்கை அளவிலே ஏற்றுக் கொண்டு, மற்றவை பொறுத்தவரையில் கலந்து கொள்ள வேண்டுமென்றால் நாங்கள் யோசனை சொல்லத் தயார்.

மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் யோசனை செய்கிறோம் என்று சொன்னார்கள். (திரு. ப. நெடுமாறன்—குறுக்கீடு) சரி, மாவட்ட நீதிபதி விசாரணை செய்யலாம்; பிரச்சினை தீர்ந்துவிட்ட . நேற்று சிம்சன் பிரச்னை தீர்ந்தது போல இந்தப் பிரச்னை இன்றைக்குத் தீர்ந்தது.

எங்கே தேர்தல் என்று கேட்டார்கள்; முதலில் படிப்பதற்கு முன்னால் நீங்கள் படித்திருந்தால் வெளியே போயிருக்க மாட்டீர்கள்.

திரு. என். சங்கரய்யா : நடத்தவில்லை என்பதை எடுத்துக் காட்டுவதற்காக அப்போது வெளிநடப்பு செய்யப்பட்டது.

மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன் : மகிழ்ச்சி; இதை ஏற்றுக் கொண்டார்கள் என்று பொருள்; நிச்சயமாக ஒத்துழைப்பீர்கள் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது. மாநகராட்சிக்கு எப்போது தேர்தல் என்று மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் கேட்டார்கள். இவைகள் இரண்டும் நடந்து முடிந்த பிறகு இரண்டொரு வாரங்களிலோ, அல்லது ஒரு மாதத்திலோ வேண்டிய வசதிகளைச் செய்து மாநகராட்சிக்கு நடத்தப்படும் என்பதை இங்கே நான் தெரிவித்துக் கொள்கிறேன். சிலருக்கு சந்தேகம் வருகிறது. எனக்குக் கூட சந்தேகம் வரும். சிறு குழந்தைகளுக்கு சந்தேகம் வந்தால் அது அறிவு முதிர்ச்சி அடைகிறது; விளக்கம் தெரிந்து கொள்ள முயல்கிறது என்று பொருள். அறிவு முதிர்ச்சி அடைந்தவர்கள் கேள்வி கேட்டால் அல்லல் உண்டாக்குகிறார்கள், சிக்கல் உண்டாக்குகிறார்கள் என்று பொருள். அறிவு முதிர்ச்சி அடைந்தவர்களுக்கு சந்தேகம் ஜாஸ்தி வரக்கூடாது. நான் அறிவு முதிர்ச்சி அடையாதவன்; எனக்குச் சந்தேகம் வரும். அதையும் சொல்லிவிடுகிறேன். இந்தத் தேர்தல் நடக்குமா என்று சிலருக்கு சந்தேகம் வருகிறது. தேர்தல் நடக்குமா என்று கேட்டுவிட்டு நடப்பதற்கு வேண்டிய வேலைகளை ஆங்காங்கே செய்து கொண்டிருப்பதை நான் கவனிக்கிறேன். ஆகவே நாங்கள் ஒன்றும் ஏமாளிகள் அல்ல; அரசியல்கட்சிகளில் யாரும் ஏமாறக்கூடியவர்கள் இல்லை, என்பதை சொல்லி எல்லோரும் தயாராக இருக்கிறோம்; மக்கள் தயாராக இருக்கிறார்கள்; ஆகவே மக்களைச் சந்திப்பதற்கு நாங்கள் எந்த நேரத்திலும் அச்சப்படவில்லை என்பதைச் சொல்வதற்காக இதை நான் சொல்கிறேன். தேர்தலைப் பற்றி எனக்கு நிச்சயமாகத் தெரியும்; இந்திரா காந்தி தோற்க முடியுமானால், அண்ணா தோற்க முடியுமானால், காமராஜர் தோற்க முடியுமானால், ஏன் இராமச்சந்திரன் தோற்க முடியாது? என்னுடைய எண்ணத்தைச் சொல்கிறேன். ஆகவே வெற்றி, தோல்வி என்பது நமது கையில் இல்லை. தன்னை நம்பிக்கொண்டு ஒரு குஸ்திக்கோ, குத்துச் சண்டைக்கோ போகிறவன் கூட முடிவிலே யாருக்கு வெற்றி என்பதை அவனால் நிர்ணயிக்க முடியவில்லை. சந்தர்ப்பம்



சூழ்நிலை அதை நிர்ணயிக்கிறது. அதேபோல மக்கள் தீர்ப்பு எங்கே யாருக்கு என்பதை நாமே பேசிக்கொண்டு, நாங்கள்தான் வெல்வோம், நாங்கள்தான் வெல்வோம் என்று சொன்னால் அதை நான் எப்போதும் சொல்லத் தயாராக இல்லை. ஆனால் சொல்லும்போது சொல்வேன்; எங்கள் மீது மக்களுக்கு நம்பிக்கை இல்லையென்று யாராவது சொன்னால், இல்லை எங்கள் மீது மக்களுக்கு நம்பிக்கை இருக்கிறது; ஆகவே எங்களுக்குத்தான் வெற்றி என்று சொல்லத் தவறமாட்டேன். ஆனால் சிலர் சொல்கிறார்கள் எங்களை மக்கள் புரிந்து கொண்டார்களாம். ஆகவே எங்களுக்கு வாய்ப்பு இருக்காது என்று சொல்கிறார்கள். எந்த வாய்ப்பு இருக்காது தெரியுமா? இவர்களை எதிர்த்து நிற்க வேண்டிய அவசியம்; இவர்கள் அடுத்த தேர்தலுக்கு நிற்க முடியாமல் போகும்; அந்த வாய்ப்பு. வேறு புதிய கட்சிகள், வேறு புதிய ஆட்கள் வந்தால் தான் பிரச்சினை. அதுதான் நான் சொன்ன அந்த வாய்ப்பு. (கைதட்டல்). ஆகவே தேர்தலிலே நிற்கும் வாய்ப்பு, ஆட்சிக்கு வரும் வாய்ப்பு, மக்கள் கையிலே இருக்கிறது. ஆகவே, இது வரையில் நாங்கள் எதைப்பற்றியும் கவலைப்படப் போவது இல்லை. எங்களை நம்பி இருக்கின்றவர்களை, எங்கள் செய்கைகளை மதிக்கின்றவர்களை வைத்து நாங்கள் செயல்படுகிறோம்.

இங்கே பல பிரச்சினைகளைப் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். அதற்கு எல்லாம் பதில் சொல்ல வேண்டுமானால் 3 நாட்கள் தொடர்கதைபோல் ஆகிவிடும். ஆகவே, அவைகளுக்கு எல்லாம் கொள்கை அளவிலே மட்டும் நான் சொல்கிறேன். ஸ்பீக்கரே, என்னை அப்படித்தான் சொல்லச் சொன்னார், நாவலர் அவர்களிடத்தில் யாரும் வெல்ல முடியாது. புள்ளி விவரத்தை எடுத்துக்கொண்டு விட்டால் அப்புறம் 10 மணி நேரம் தான். அவருக்கு இப்போது சிஷ்யனாக நான் ஆகமுடியவில்லை. ஆகவே, நான் கருத்தை மட்டும் சொல்லிக்கொள்கிறேன்.

சென்னை மாநகராட்சியில் உள்ள மொத்த துப்புரவுப் பணியாளர்கள் 6,500. அவர்களுக்கு அடிப்படைச் சம்பளம் ரூ. 250–300. ஒருவருக்குச் சராசரி சம்பளம் ரூ. 554 நீங்களே சொல்லுங்கள், தண்ணீரில் இறங்குகிறவன் சராசரி அளவை பார்த்துக் கொண்டு இறங்கினால் என்ன முடிவு ஏற்படும்? அப்படிப்பட்ட சராசரிதான் இதுவும். மொத்த செலவு 4 கோடி ரூபாய் என்றால், இன்னும் ஒரு கோடிதானே செலவாகும் என்கிறார்கள். நான் இன்னொன்றைச் சொல்கிறேன். இங்கே இருப்பவர்கள் எல்லோரும் புரிந்து கொள்ளவேண்டும். இந்த 6,500 நபர்களும் எல்லா நாட்களிலும் வேலை செய்வது இல்லை. ஏறக்குறைய 150 பேர்கள் விடுமுறையில் இருக்கிறார்கள். 3000–4000 பேர்கள்தான் வேலை செய்கிறார்கள். இது உண்மை. ஒருவர் வீவில் போய் திரும்பி வந்தால், மற்றொருவர் லீவில் சென்று விடுகிறார். ஆகவே அப்படி சராசரி வேலைக்கு வருபவர்களை பார்த்தால் 5,000 அல்லது 4,500 பேர்கள்தான் இருக்கும். அவர்களை நான் குறை சொல்லவில்லை. அவர்களுக்கு எவ்வளவோ சங்கடங்கள்; துன்பங்கள் இருக்கின்றன. அவர்கள்

செய்கின்ற வேலைக்கு உரிய உறைகள் கூட இல்லை. நாங்கள் எழுதியிருக்கிறோம். திட்டம் தீட்டி இருக்கிறோம். பணத்திற்காகக் காத்து இருக்கிறோம். நான் ரஷ்யாவில் எதைப் பார்த்தேனோ, அந்தத் துப்புறவுப் பணியாளர்கள் எப்படி கால் உறைகளை, கையுறைகளைப் போட்டுக் கொண்டு, நல்ல வெள்ளை ஆடைகளை அணிந்து கொண்டு அழுக்காகாமல் அவர்களுடைய கையிலும் அழுக்குப் படாமல் அந்தப் பணியை இயந்திரக் கருவிகளைக் கொண்டு செய்கிறார்களோ அது போன்று செய்யவேண்டும் என்று எனக்குப் பேராசை இருக்கிறது.

மருத்துவத்தைப் பற்றிச் சொன்னார்கள். நான் சமீபத்தில் கேள்விப் பட்டேன். ஒரு குழந்தை ஒரு இயந்திரத்தை வேடிக்கைப் பார்க்கச் சென்ற போது இரண்டு கால்களும் வெட்டப்பட்டு விட்டது. பக்கத்தில் இருந்த மருத்துவ மனைக்குக் கொண்டு போனார்கள். அங்கே வசதி இல்லை என்று சொல்லப்பட்டது. பின்னர் அதிக வசதியுள்ள மருத்துவ மனைக்குப் போனார்கள். அங்கேயும் முடியாது என்று சொன்னார்கள். அது உடனே பேரரசுக்குத் தெரிந்து, மேலிடத்திற்குச் சென்று அதற்காக ஆகாய விமானம் அனுப்பி, அந்தக் குழந்தையின் கால்களைத் தேடி எடுத்து, அதற்காக மருத்துவ சிகிச்சை செய்து, அந்தக் குழந்தை இன்றைக்கு நன்றாக இருக்கிறது என்று கேள்விப்படுகிற போது, அந்த நிலை இந்தியாவுக்கு வரவேண்டும். தமிழ்நாட்டிற்கு வர வேண்டும் என்று விரும்புகிறேன். அதைச் செய்வதற்கு ஆசை இருக்கிறது. (குறுக்கீடு)

இதைப் போன்று சில காரியங்களைப் பற்றி நான் சொல்கிற போது இரட்டை ஆட்சி என்று சொல்கிறார்கள். அதற்காக வெளியே பேசுகிறார்கள். இங்கே பேசினார்களா இல்லையா தெரியாது. நான் வேறு வேலையில் இருந்ததால் கவனிக்க முடியவில்லை. என்னுடைய நண்பர் அல்லவா அவர் என்னைப் பற்றி பேசியதில் எனக்கு மகிழ்ச்சி. அதற்கு பதில் சொல்வதில் எனக்கும் மகிழ்ச்சி. இரட்டை ஆட்சி எப்படி ஏற்படுகிறது? நாம் இங்கேயும் மருத்துவத் துறை வைத்து இருக்கிறோம். மத்தியிலும் மருத்துவத் துறை வைத்து இருக்கிறார்கள். நாம் இங்கே திட்டத்தைத் தீட்டிக் நடத்திக்கொண்டு வருகிறோம். அவர்கள் இன்னொரு திட்டத்தை அங்கேயிருந்து சொல்கிறார்கள். ஆகவே, திட்டம் தீட்டி அனுப்புவது எப்படி இருக்கிறது என்றால், நான் முன்னாலே சொன்னேனே, வாய்க்கால் வழியே போன ஒருவன் இந்த வாய்க்காலில் சராசரி ஆழம் எத்தனை அடி என்று கேட்டானாம். 3 அடி என்றார்கள். அவன் உடனே இறங்கிப் போனால், நடுவில் போகிறபோது 13 அடி இருந்ததாம். என்ன இப்படி இருக்கிறதே என்று கேட்டபோது, ஒரு இடத்தில் விரல் நனையும், ஒரு இடத்தில் கணுக்கால் நனையும், இதையெல்லாம் கணக்குப்போட்டு சராசரி பார்த்தால் 3 அடி வரும் என்று சொன்னார்களாம். நாம் எவ்வளவு ஆழம் எங்கே இருக்கிறது, எந்த இடத்தில் பாதுகாப்புத் தேவை என்றுபார்த்துச் சொல்லுகிறோம். அவர்கள் சராசரி கணக்குப் போட்டுச்





இதைத்தான் நான் இரட்டை ஆட்சி என்று சொல்கிறார்கள் இதுபோன்று வரும்போது தேவையில்லாமல் சொன்னேன். இவைகள் எல்லாம் நீக்கப்பட நாட்கள் வீணாகிவிடுகிறது. இதற்கு ஒரு முடிவான கருத்து வரவேண்டும் என்பதை வேண்டும். இதற்கு ஒரு முடிவான கருத்து வரவேண்டும் என்பதை நாம் யோசிக்க வேண்டும் என்று சொல்கிறேன்

மாநில சுயாட்சி பற்றி இந்த அறிக்கையில் ஒன்றுமே சொல்ல வில்லை என்று சொல்கிறார்கள். மாநில சுயாட்சி என்பதற்கு மாநிலத்திற்கு அதிக அதிகாரம் என்ற வார்த்தையை நாம் பயன் படுத்துகிறோம். மாநிலத்திற்கு முக்கியமான தேவை என்ன என்பதை யோசித்துப் பார்த்து, நியாயமான அதிகாரங்கள் எவ்வளவு தேவையோ அவ்வளவையும் பெறவேண்டும் என்பது தான் இந்த அரசின், எங்கள் ஆட்சியின உயிர்மூச்சுக் கொள்கை என்பதை இங்கே தரிவித்துக்கொள்கிறேன். (கைதட்டல்).

(நண்பகல் 12—00)

அதில் சந்தேகம் வேண்டாம். போன ஆளுநர் உரையிலே அப்போது சொல்லியிருக்கிறோம். அதை இப்போதும் சொல் கிறோம். அதைத் திரும்பத் திரும்பச் சொல்ல வேண்டாம் என்று விட்டிருக்கிறோமே தவிர ஒரு அறிக்கையிலே சொல்லிவிட்டு இன்னொரு அறிக்கையில் சொல்லவில்லை என்றால் அதை விட்டு விட்டோம் என்று பொருள் அல்ல. அந்த இடத்தில் புதிய ஒன்றைச் சொல்வதற்கான வாய்ப்பைஏற்படுத்திக் கொள்கிறோம். இதையே கொஞ்சம் நேரம் அதிகமாகத்தான் படிக்க வேண்டியிருந்தது. அவ்வளவு விஷயம் இதில் இருக்கிறது ஆக, இதைப்போன்ற விஷயங்களில் நாம் ஒரே கருத்தை உடையவர்களாக இருக்கிறோம் என்று நான் கருதுகிறேன்.

மாநிலத்திற்கு அதிக அதிகாரம் வேண்டும். மாகாண சுயாட்சித் திட்டம் 1935-ல் அறிமுகப்படுத்தப்பட்டபோது 93 வது சரத்தில் கவர்னருக்கு விசேஷ அதிகாரம் இருந்தது. எந்த நேரத்திலும் அமைச்சரவையை டிஸ்மிஸ் செய்யலாம் என்று இருந்தது. அதை ஏற்றுக்கொள்ள முடியாது என்று சொல்லி இரண்டு வருஷத்திற்கு மேல் பதவி ஏற்றுக்கொள்ளாமல் இருந்தார். பிறகு இராஜாஜி அவர்களுடைய யோசனைப்படி அன்றாடப் பணிகளில். அன்றாட உரிமைகளில் கவர்னர் தலையிடவில்லை என்று உத்தரவாதம் கொடுத்தப்பிறகுதான் 1937-ல் அவர் பதவிக்கு வந்தார். இதை நினைத்துப் பார்த்தால் இதைப் போன்ற நிலைமை இருக்கக் கூடாது என்பதை நான் வெளியே இருந்தோ உள்ளே இருந்தோ கவனித்துப் பார்த்து அனுபவித்தவன் என்ற நிலையில் சொல் கிறேன்.

எந்தக் காரியத்தை முன்னிட்டும் மாநிலத்திற்கு அதிக உரிமை வேண்டும். பொருளாதாரம் அதாவது எக்கனாமிக்ஸ் என்கிறார்களே, அந்த வகையில் அதிக உரிமை வேண்டும். எதற்கெடுத்தாலும் அங்கே போய் கேட்க வேண்டுமா? போய் கேட்க வேண்டுமென்று சொன்னார்கள், இங்கே இருந்து கடிதம் எழுதினால் போதாது. அங்கே போய். இருந்து, பேசி வரவேண்டும்

என்று சொன்னார்கள். கடிதத்திற்கு இல்லாத மதிப்பு நேரில் போய் பார்த்து காக்காய் பிடித்தால் கிடைக்கும் என்கிறார்களா? நேரில் போய் பேச வேண்டுமா? கடிதம் எழுதினால் போதாதா? எங்கள் தேவை என்ன என்று கடிதம் எழுதுகிறோம். ஒன்றல்ல இரண்டல்ல, 18 முறை எழுதுகிறோம் என்று வைத்துக் கொள்ளுங்கள். அதன் பிறகு இங்கே இருந்து ஒரு அமைச்சர் போய், அங்கே சொல்லி, அது வரவேண்டுமா? அவர்களே கொடுக்க வேண்டாமா? அல்லது உங்கள் அமைச்சர்களிலே ஒருவரை அனுப்பி வையுங்கள், இது சம்பந்தமாகப் பேசுகிறோம் என்று கேட்டால், அனுப்பி வைக்கிறோம், முடிந்துவிடுகிறது.

இந்த அதிகப்பற்றைப் பற்றிப் பேசும்போது அதுதான் நிலைமை, நிதியமைச்சரை அனுப்பி, அவர் போய் பேசிய பின்னால் முடிந்துவிட்டது. எந்த நேரத்திலும் மத்திய அரசோடு முரண்பாடாக இருக்க வேண்டுமென்ற கொள்கை இல்லை. ஆனால் அடிமையாக இருக்க வேண்டுமென்ற நிலை இருந்தால் ஏற்றுக்கொள்ளவும் தயாராக இல்லை (மேசையைத் தட்டும் ஒலி). தமிழ் நாட்டுக்காக சுமுகமான முறையில் எவ்வளவு தூரம் விட்டுக் கொடுக்க முடியுமோ அந்த அளவுக்கு விட்டுக்கொடுத்து நல்லதைச் செய்ய வேண்டுமென்று நினைக்கிறோம்; அதைச் செய்கிறோம்.

இப்போது சில திட்டங்களை மத்திய அரசிலிருந்து அனுப்புகிறார்கள். அவை உண்மையிலேயே நாம் எடுக்கிற நடவடிக்கைகளுக்கு மிகப்பெரும் உதவியாக அமைகின்றன. அண்மையில் ஒரு திட்டம் வந்திருக்கிறது. படித்து வேலையில்லாமல் இருக்கிறவர்களுக்கு கொடுக்கின்ற உதவித் தொகை இந்தியாவிலேயே அதிகமாக குறுகிய காலத்தில் கொடுக்கப்பட்ட இடம் தமிழ்நாடு தான் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இது எப்படி முடிந்தது என்பதைப் பார்ப்பதற்காக ஒரு அமைச்சர் டெல்லியிலே இருந்து வந்து, இங்கே குழுவைக் கூட்டி, அதிகாரிகளோடு பேசித் தெரிந்து கொண்டு போயிருக்கிறார் என்றால் நாம் எவ்வளவு எச்சரிக்கையாக இருந்து சரிவர அதிகாரிகளைப் பயன்படுத்துகிறோம். அதிகாரிகள் எப்படி பயன்படுகிறார்கள், எப்படி திறமையாகச் செயல்படுகிறார்கள் என்பதை எல்லோரும் எண்ணிப்பார்க்க வேண்டும். இந்தியாவிலேயே தலைசிறந்த நிர்வாகிகள் நம்முடைய அதிகாரிகள் என்பதை இங்கே சொல்வதில் நான் பெருமைப்படுகிறேன்.

போலீஸ் இலாகாவைப் பொறுத்தமட்டில் எல்லோருக்கும் வேறுபாடு இருக்கும். நாங்கள் எதிர்க்கட்சியாக இருக்கும்போதும் சொன்னார்கள். நான் வந்தவுடனே ஒரு வாய்பாடான அறிக்கை வாசித்தேன். அது எல்லோருக்கும் நினைவு இருக்கும் என்று கருதுகிறேன். எங்களை ஆட்சியை விட்டு விலக்கிய பிறகு எல்லாக் கட்சிகளும் சேர்ந்து,—14, 15 கட்சிகள் கூட்டணி என்று சொல்கிறார்களே, அந்தமாதிரி அப்போது நாங்கள்—ஊர்வலம் நடத்தினோம். தலையிலே அடி. அடித்தான் அடி, சொல்ல





முடியாத அடி. மாவீரன் முத்து ஓடினார். விஸ்வநாதன் நம் எம்.பி. ஓடினார். மாவீரன் ஒருவரைக் கூட காணோம். முதுகிலே எல்லாம் அடித்தார்கள். நாங்கள் போய்க்கொண்டிருந்தோம். இதோ பாருங்கள், மண்டையை உடைத்துவிட்டார்கள் என்று ஒருவர் வந்தார். போய் கேட்போம் என்றேன். அண்ணன் கல்யாணசுந்தரம் சொன்னார், இப்போது போனால் விபரீதம், நாம் காவல்துறைக்குச் சொல்லிவிட்டுப் போவோம் என்று சொன்னார். சரி என்றேன். அங்கே, நாங்கள் குற்றச்சாட்டைச் சொன்னோம். எனக்கு எழுதிக் கொடுத்தார்கள் அதற்கு நேர் மாறாக. நான் அதை இங்கே வாசித்தேன். வாசித்த பிறகு இது அதிகாரிகள் கொடுத்த அறிக்கை, என்னுடைய அறிக்கை வேறு, என்னுடைய எண்ணம் வேறு, முதலமைச்சராக இருக்கிற காரணத்தால் அதை இங்கே படிக்கிறேன் என்று சொன்னேன், நான் மறுக்கவில்லை.

திரு. ரா. உமாநாத்: தலைவரவர்களே, கரக்ட். மாண்புமிகு முதலமைச்சர் சொன்னார் என்னுடைய கருத்து வேறு; அந்த சம்பவம் சம்பந்தமாக போலீஸார் 'ப்ரீஃப்' என்ற முறையிலே எழுதிக் கொடுத்தது வேறு. இங்கு படிக்கும்பொழுது சீஃப் மினிஸ்டருடைய கருத்துதான் படிக்கப்பட்டது. ஆகவே டிபார்ட்மெண்டிலே வேறு கருத்து சொன்னால், சீஃப் மினிஸ்டருடைய கருத்து தான் அந்த ஸ்டேட்மெண்டிலே வரவேண்டுமென்று எதிர் பார்க்கப்படுகிறது.

மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன்: அதைத்தான் சொன்னேன். என்னுடைய கருத்து வேறு என்று. (குறுக்கீடு) நான் ஆட்சியிலே இல்லாதபோது தயாரிக்கப்பட்ட அறிக்கை அங்கே ரெக்கார்டு ஆகிவிட்டது. அதை நான் மறைக்கக்கூடாது. ரெக்கார்டிலே இருக்கிறதை நான் வந்த பிறகு என்னுடைய இஷ்டப்படி செய்வது என்றால், அதை நான் வந்தவுடன் மறைக்க வேண்டுமென்றால், அதை இராமச்சந்திரன் செய்யமுடியாது. அனுபவம் இருந்தாலும், அது ரெக்கார்டு ஆகி, அதன்மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கும்போது, அதைப் படித்தாக வேண்டும். ஆனால் என்னுடைய அனுபவம், எண்ணம் வேறு. அதைச் சொல்லிவிட்டேன். அதையும் மறைக்கத் தயாராக இல்லை. காவலர்கள் செய்தாலும் மற்றவர்கள் செய்தாலும், எனக்கு நேரடியாக கருத்துக்கள் சொல்லப்பட்டிருந்தாலும், ஏற்றுக்கொள்ள மாட்டேன். அதை நான் ஆதரித்துச் சொன்னாலும் ஏற்றுக் கொள்ள மாட்டேன். ஓட்டு போடுவதற்காகச் சொல்லவில்லை. மக்கள் எல்லோரும் என்னை நம்பவேண்டும். நீங்கள் எனக்கு ஓட்டுப் போடமாட்டீர்கள். எதிர்த்துத் தான் ஓட்டுப் போடுவீர்கள். ஆனால் இன்னும் கொஞ்ச நாள் போனால் நாம் ஒன்றாக இருப்போம். அது என்னுடைய நம்பிக்கை. நியாயம் எந்தப் பக்கம் இருக்கிறதோ, அந்தப் பக்கம் நீங்கள் வந்து சேர்வீர்கள் என்பது எனக்குத் தெரியும். (சிரிப்பு)......

[டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன்] [1984 பிப்ரவரி 21]

அதுமட்டுமல்ல. இப்போது தவறு எது, நியாயம் எது என்று எல்லோருக்கும் தெரியும். நியாயம் தெரிந்தால், நியாயத்திற்கு வந்துவிடுவார்கள். நாங்கள் எப்படி நியாயத்தைத் தெரிந்து ஒன்றாக இருக்கிறோமோ அப்படி இருப்பார்கள். நாட்டின் நலன்தான் முக்கியம். நாட்டின் நலனை எண்ணி, உண்மையிலேயே சொல்கிறேன். இப்போதுதான் என்னுடைய உண்மையான நண்பர் மதிப்பிற்குரிய மாண்புமிகு நெடுமாறன் கொஞ்சம் கொஞ்சமாகப் புரிந்துகொண்டு வருகிறார் என்று நினைக்கிறேன். என்னைப் பற்றி புரிந்துகொள்வது எல்லோருக்கும் தாமதம் ஆகும். புரிந்தவர்கள் என்னை விட்டுப் போக மாட்டார்கள். அது மாதிரிதான் இருந்தோம். இனிமேலும் அப்படித்தான் இருப்போம். இனி எங்கும் போக முடியாது. உங்களுடைய வாதம் எல்லாம் என்னுடைய கொள்கையிலே நியாயம் இருக்கிறதா என்று சிந்தியுங்கள். நடைமுறையிலே குறை இருந்தால், கண்டியுங்கள். திருத்திக்கொள்வதில் தப்பு இல்லை. ஆகவே சொல்கிறார்கள் என்பதற்காக எதிரி என்று அர்த்தம் அல்ல. வேறு வகையிலே கற்பனை செய்கிறவர்கள் தான் எதிரிகளே தவிர, நீங்கள் எதிர்க்கட்சி, நாங்கள் ஆளும் கட்சி. உங்களுக்கு நாங்கள் எதிர்க்கட்சி, எங்களுக்கு நீங்கள் எதிர்க்கட்சி. நாங்கள் அதிக எண்ணிக்கையில் இருப்பதால், ஆளுங்கட்சி. எனவே இதில் கருத்து வேறுபாடு இல்லை. அந்த வகையில் இந்த அறிக்கையை சமர்ப்பித்துஇருக்கிறோம். இதிலேஒவ்வொருவருக்கும் விளக்கம் சொல்ல வேண்டுமென்றால், மறுபடியும் சொல்கிறேன், மிகவும் காலதாமதம் ஆகும். கொள்கை அளவிலே தேர்தல் இல்லாமல் இருக்கக்கூடாது. 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை தேர்தல் வந்தே தீரவேண்டும்.

அதிகாரிகள் தங்கள் சொந்த ஊர்களிலே இருக்கக்கூடிய நிலைமைகள் இருக்கக்கூடாது என்பது இந்த அரசின் கொள்கை. காவல் துறையைச் சேர்ந்த அதிகாரிகளாக இருந்தாலும் சரி, வேறு அதிகாரிகளாக இருந்தாலும் சரி, அவர்கள் தங்கள் சொந்த ஊர்களிலே இருக்கும் நிலைமை இருந்தால், அவர்களுக்கு சில சங்கடங்கள், நஷ்டங்கள் வரும். அவர்கள் வேண்டாத குற்றச்சாட்டுகளுக்கு ஆளாவார்கள். எனவே அவர்கள் வேறு இடங்களில் இருந்தால் சரியாக இருக்கும். ஆனால் கணவன் ஒரு இடம், மனைவி ஒரு இடம் என்று பிரித்து துன்புறுத்துவது இந்த ஆட்சியின் கொள்கையல்ல. எங்கு இருந்தாலும் மாற்றி, ஒருமித்த இடத்தில் இருப்பதற்கான வசதி செய்து கொடுக்கப்படும்.

திரு. ரா. உமாநாத் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், கணவன் ஒரு இடம், மனைவி இன்னொரு இடம் என்று பிரிப்பது இந்த அரசாங்கத்தின் கொள்கையல்ல என்று சொன்னார்கள். அதை நான் வரவேற்கிறேன். அதுதான் கரெக்ட்—ஆக இருக்கும். ஆனால் சமீபத்திலே, எலக்ட்ரிசிடி போர்டு சேர்மன் ஆபிஸிலே இப்படி பலர் பிரிக்கப்பட்டு, அப்படி பிரிக்கப்பட்ட சில பெண்கள் அவரை அணுகியபோது அவர் சொன்ன பதில்—அப்படி நீங்கள் குடும்பத்தோடு இருக்க வேண்டுமென்றால், உங்கள் வேலையை



1984 பிப்ரவரி 21] [திரு. ரா. உமாநாத்]

ராஜினாமா செய்துவிட்டு, ஹஸ்பெண்டு, குடும்பத்தோடு, இருங்கள்—என்று சொல்லியிருக்கிறார். அப்படிச் சொன்னால் எப்படி முறையாக இருக்கும்? நியாயத்தைச் சொல்லவேண்டும்.

(பிற்பகல் 12–10)

மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன் : எந்தச் சூழ்நிலையில், எந்தச் சந்தர்ப்பத்தில் எத்தகைய போராட்டங்களில் ஈடுபட்டு (குறுக்கீடு) எதற்காக மாற்றினார்கள் என்பதை நம் கவனிக்கவேண்டும். இதை முன்னதாக சொல்லியிருக்கிறார்கள். நான் அதைப்பற்றி அவரிடம் பேசுவேன். இது ஒரு தனி பாடி. அவர்கள் சுதந்திரம் உள்ளவர்கள். இவருக்குக் கூட அதிகாரம் கிடையாது. இவர் கேட்கலாம் கூப்பிட்டு. ஆளை மாத்தத்தான் உரிமை இருக்கிறதே தவிர, ஆளை உட்கார வைத்தால் அவர் செய்ததுதான் சட்டம். (குறுக்கீடு). இருங்கள். முதல் அமைச்சர் அப்படி சொல்லிவிடலாமா? அதற்கு விளக்கம் சொல்லித்தானே ஆகவேண்டும். இருந்தாலும் அந்த அதிகாரியிடம் நான் பேசுவேன் என்பதையும், பெண்களை அந்த இடத்திற்கு மாற்றவோ அல்லது ஆண்களை இங்கே மாற்றவோ ஆவன செய்வதற்கு இந்த அரசு உடன்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் நெடுமாறன் அவர்கள் ஏதோ பேச வேண்டும் என்று விரும்புகிறார்கள். கேள்வி கேட்டால் பதில் சொல்கிறேன். ஆகவே இந்த ஆளுநர் உரையை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும், திருத்தங்களை எல்லாம் வாபஸ் பெற்றுக் கொண்டு ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. அன்பில் தர்மலிங்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, சுந்தரலிங்கத்தைப் பற்றி இங்கே சொன்னார்கள். கட்ட பொம்மனையே வைத்து காப்பாற்றி அவருக்கு எல்லா வசதியையும் செய்து கொடுத்த புலித்தேவன் விவரம் பற்றி இது வரையில் எதுவுமே வரவில்லை. அது உண்மையா? என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன்: அப்படிப் பார்க்கப் போனால் தேவர் வகுப்பாரிலே தர்மலிங்கம் கூட ஒருதியாகிதான். (குறுக்கீடு) அதுதான். அந்தப் பிரச்சனை வந்துவிடும். ஒரு தேவருக்கு கொடுத்தது போதாது, இன்னொரு தேவருக்கு வேண்டும் என்று கேட்பார்கள். ஆகவே அந்த நிலைமைக்கு, மேலும் தொல்லைக்கு என்னுடைய அன்பில் தர்மலிங்கம் செய்ய மாட்டார்கள் என்று நான் கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விவாதம் முடிவுற்றது.

திருவாளர்கள் பெ. சு. திருவேங்கடம், பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், இரா. கருப்பையா, சு. பாலன், ஜே. ஹேமச்சந்திரன் ஆகியவர்களுடைய திருத்தங்கள் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று தோல்வியுற்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி : "ஆளுநர் அவர்களுக்குக் கீழ்க்கண்ட நன்றியுரை அளிக்கப்பெற வேண்டும்"

"1984 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 13 ஆம் தேதியன்று இரு அவைகளும் சேர்ந்த சட்டமன்றக் கூட்டத்தில் ஆளுநர் அவர்கள் உவந்தளித்த பேருரைக்கு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பெரிதும் நன்றி உடையவர்களாவர்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, 22–2–1984 காலை 9 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 12–14 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது

5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும்—ஆணைகளும்.
எதுவுமில்லை

(ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

16. வறட்சி மற்றும் வெள்ள நிவாரணம் பற்றிய வெள்ளை அறிக்கை.

## இணைப்பு

(328-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண். 107 (15203)க்கான விடையைக் காண்க.)

புற்றுநோய் உண்டாவதற்கான தெளிந்த காரணங்கள் (Etiology) எதுவும் திட்டவட்டமாக கண்டுபிடிக்கப்படவில்லை. ஆனால் மனித உடலில் பலவித புற்றுநோய் பல உறுப்புகளில் தோன்றுகின்றன. புற்றுநோய் உற்பத்திக்கு கீழ் கண்ட காரணங்கள் கூறப்படுகின்றன :—

புகையிலை, சுண்ணாம்பு போடுதல், பயோரியா என்று சொல்லப்படும் ஈறு நோய், பீடி, சிகரெட் உபயோகித்தல், கள், சாராயம் குடித்தல், சாப்பாட்டில் அதிக காரம், வைட்டமின் சத்துக் குறைவு இவைகளால் வாய் புற்றுநோய் ஏற்படும்.

பிள்ளைகளுக்கு தாய்ப்பால் கொடுக்காதவர்களுக்கு மார்பகத்தில் புற்றுநோய் ஏற்படுகிறது. குழந்தைகள் அதிகம் பெறுபவர்களுக்கும், மிக இளம் வயதில் திருமணம் செய்பவர்களுக்கும் பிறப்பு உறுப்புகளை சுத்தமாக வைக்காதவர்களுக்கும் கருப்பையில் புற்றுநோய் ஏற்படுகின்றது. இரசாயனச் சேர்க்கை



1984 பிப்ரவரி 21]

யாலும் புற்றுநோய் ஏற்படுகிறது. கார்சினோசென்ஸ் (Carcinogens) என்ற ஒரு வகை நச்சு புகையாலும் புற்றுநோய் ஏற்படுகிறது. கீழ்க்கண்ட அரசு தனியார் மருத்துவமனைகளில் புற்றுநோய்க்கான சிகிச்சை வசதிகள் உள்ளன.

அரசு மருத்துவ மனைகள் :

1. அரசு பொது மருத்துவமனை, சென்னை.
2. அரசு இராயப்பேட்டை மருத்துவமனை, சென்னை.
3. அரசு ஸ்டான்லி மருத்துவமனை, சென்னை.
4. அரசு தாய்சேய் நல மருத்துவமனை, எழும்பூர், சென்னை.
5. அறிஞர் அண்ணா நினைவு புற்றுநோய் நிலையம் மற்றும் புற்றுநோய் மருத்துவமனை, காஞ்சிபுரம்.
6. அரசு இராசாசி மருத்துவமனை, மதுரை.

தனியார் மருத்துவ மனைகள் :

1. புற்றுநோய்க்கழகம், அடையாறு.
2. டாக்டர் ராய்ஸ் தனியார் புற்றுநோய் மருத்துவமனை.
3. டாக்டர் துரைசாமி புற்றுநோய் மருத்துவமனை.
4. வேலூர் மிஷன் மருத்துவமனை.
5. ஓட்டன் சத்திரம் புற்றுநோய் மருத்துவமனை, மதுரை.
6. இன்டர்நேஷனல் புற்றுநோய் மையம், நெய்யூர்.
7. டாக்டர் குப்புசாமி நாயுடு புற்றுநோய் மருத்துவமனை, கோவை.

136215
சென்னை-600 009